வெளியீடு 25-02-2000 Issued 25-02-2000

59/2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 23, 1999 - தொகுதி 75 - எண் 2

Friday, 23rd April, 1999—Volume 75 - No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V211,31'N99
N99 · 75 · 2
221195

ஐ௦

## 23-4-1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 321 - 358 |
| 2. சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் காவல் நிலையத்தில் சித்திரவதை செய்யப்பட்டது | 358 - 365 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 359 - 361, 365 |
| * மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 362 - 364 |
| மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் | 365 |
| 3. கவன ஈர்ப்பு— | |
| வைகை ஆற்றில் உடைப்பு ஏற்பட்ட பகுதிகளில் தடுப்புச் சுவர் கட்டுதல் | 365 - 367 |
| 4. அறிக்கை அளித்தல்— | |
| பொதுக் கணக்குக் குழு | 367 - 368 |
| 5. விதி 111-ன்கீழ் மீன் வளத் துறை அமைச்சரின் அறிக்கை— | |
| 20-3-1999 அன்று வினா எண் 120-ன்கீழ் திரு. மு. அப்பாவு கேட்ட துணை வினாவிற்கு அளித்த விடைக்குத் திருத்தம். | 368 |

பக்கங்கள்

6. அரசினர் தீர்மானங்கள்—

(அ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் 368 - 369

(ஆ) பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் 369 - 370

(இ) பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் 370

(ஈ) உரிமைக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் 370 - 371

7. அறிவிப்புகள்—

(அ) பேரவைக் குழுக்களுக்கான தேர்தல் கால அட்டவணை 371

(ஆ) உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி ஏற்பாடு 400

8. தகவல் கோரல்—

(அ) சத்துணவுப் பணியாளர்களின் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் 372 - 374

(ஆ) ஏரிகள் மற்றும் கண்மாய்கள் சிலவற்றை குடியிருப்புப் பகுதிகளாக மாற்றுவதற்கு பொதுப்பணித் துறை முயற்சிப்பதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி 374 - 380

221195



D
V211,31'N99
N99.75:2.

பக்கங்கள்

9. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 32—வீட்டுவசதி 380 - 461

(ஆ) கோரிக்கை எண் 33—நகர்ப்பகுதி வளர்ச்சி

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி 386, 389, 391, 392, 394, 396, 401, 404, 405, 413, 417, 441, 442, 443 - 456

* திரு. வி. கே. லட்சுமணன் 390 - 395, 399

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி 396 - 398

திரு. சீ. வெ. கிருஷ்ணன் 400 - 403

திரு. சி. ஞானசேகரன் 404, 409

திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் 403 - 409

* திரு. கே. தங்கமணி 409 - 413

* திரு. செங்கை சிவம் 413 - 418, 427, 428

திரு. அ. ல. தங்கவேல் 418 - 422

திரு. பி. வெங்கடசாமி 422 - 425

திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில் 425 - 429

திரு. ந. பூ. இராமஜெயம் 430 - 432

திரு. இரா. மூக்கப்பன் 433 - 436

திரு. சோ. பாலகிருஷ்ணன் 436 - 443

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 462 - 463

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 10, பிரமாதி—திருவள்ளுவர் ஆண்டு 2030

## 1999 ஏப்ரல் 23, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு*
*ஐந்துடன் மாண்டது அமைச்சு."*

அமைச்சரவை என்பது, துணிவுடன் செயல்படுதல், குடிகளைப் பாதுகாத்தல், அறநூல்களைக் கற்றல், ஆவன செய்திட அறிதல், அயராத முயற்சி ஆகிய ஐந்தும் கொண்டதாக விளங்க வேண்டும்.

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 501, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**501—**

**காவல் நிலையத்திற்குக் கட்டடம்**

***16809—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் நீண்டகாலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் காவல் நிலையக் கட்டடத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா

[1999 ஏப்ரல் 23

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு அந்தப் பணி மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு காவல் நிலையம் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாட்டிலே இயங்கி வருகிற காவல் நிலையக் கட்டடம் பல ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்ட கட்டடம். பழுதுபட்ட நிலையில் அது உள்ளது. அது முத்தம்மாள் சத்திரத்திற்குச் சொந்தமான கட்டடம். பழுதடைந்த நிலையில் உள்ள அந்தக் கட்டடத்திற்குப் பதிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு, மறுபரிசீலனை செய்து நிரந்தரக் கட்டடம் கட்டித் தர ஆவன செய்ய முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய மூலக் கேள்வியில், இந்தக் காவல் நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதாக குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அவரே இப்போது குறிப்பிட்டதைப்போல முத்தம்மாள் சத்திரத்திற்குச் சொந்தமான கட்டடம் என்றாலும்கூட, அந்தச் சத்திரம் மாவட்ட ஆட்சியருடைய கட்டுப்பாட்டில்தான், அரசுக் கட்டடமாக இப்போது இயங்கி வருகின்றது. இது 1951 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கட்டடமாகும். இதில் அடிப்படை வசதி மற்றும் போதுமான வசதிகள் இல்லை. பழுதடைந்த நிலையிலே உள்ளது. இவைகளையெல்லாம் எண்ணிப்பார்த்து, இதை இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்டலாமா அல்லது பழுது பார்க்கலாமா என்பது குறித்து பொதுப் பணித் துறை ஆய்வு செய்து கொண்டிருக்கின்றது. அந்த ஆய்வு முடிந்த பிறகு மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(திரு. மா. இராமச்சந்திரன் இருக்கையில் இருந்தபடியே கையை உயர்த்திக் கொண்டிருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரத்தநாடா? மற்றவை பற்றிக் கேட்கக் கூடாது. திரு. பி. இராசமாணிக்கம்.



1999 ஏப்ரல் 23]

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய காவல் நிலையம் கட்டுவதற்கு ஓர் ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவாய்க் கணக்கில் உள்ளது. எனவே விரைவில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, முத்தம்மாள் சத்திரத்திலேயுள்ள கட்டடமே அரசுக்குச் சொந்தமான நிரந்தரக் கட்டடம்தான். அதிலே பழுது ஏற்பட்டிருப்பதைப் புதுப்பிப்பதா அல்லது புதிதாகக் கட்டடம் கட்டுவதா என்பதைப் பற்றிப் பொதுப் பணித் துறையினரிடத்திலே அறிக்கை கேட்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை வந்த பிறகு இந்தக் கட்டடத்தை நிரந்தரமாக நல்ல முறையிலே கட்டலாமா என்பதைப் பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

(சில உறுப்பினர்கள் இருக்கையிலிருந்து கொண்டு கையை உயர்த்திக் கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10, 15 உறுப்பினர்கள் துணை வினா கேட்க வேண்டுமென்றால், அவரவர் தொகுதியைப்பற்றி துணைக் கேள்வி கேட்கப் போகிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து எப்படிப் பதிலை எதிர்பார்க்க முடியும்?

வினா எண் 502, திரு. பி. என். வல்லரசு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**502—**

**பெண்கள் கல்லூரி தொடங்குதல்**

***16058—திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதியில் பெண்கள் கல்லூரி நிறுவிடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1999 ஏப்ரல் 23

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. அதுவும் மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வாழ்கின்ற பகுதி. நேற்றைக்குக்கூட நமது அமைச்சர் அவர்கள், மருத்துவத் துறை மானியத்திற்குப் பதில் அளிக்கின்றபோது, "அங்கு பெண் குழந்தைகளையெல்லாம் கொல்லுகின்ற வழக்கமிருக்கிறது; அதைத் தடுப்பதற்கு இந்த அரசு மிகுந்த நிதியை ஒதுக்கி செலவு செய்துகொண்டிருக்கிறது; ஏறத்தாழ 30 கோடி ரூபாய் வரையில் ஒதுக்கியிருக்கிறது" என்று கூறினார்கள். எனவே அந்தப் பகுதியிலே இருக்கின்ற பெண்கள் படித்து முன்னுக்கு வருவார்களேயானால், இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம், அதாவது' பெண் சிசு கொல்லப்படுகின்ற நிலைகளெல்லாம் மாற்றப்படும் என்கின்ற காரணத்தினால், இவ்வளவு பெரிய தொகையை இதற்காகச் செலவழிக்கின்ற இந்த அரசு அந்தப் பகுதியிலே ஒரு பெண்கள் கல்லூரியை—அதைக் காட்டிலும் குறைந்த தொகைதான் அதற்காகச் செலவிட வேண்டிய நிலை இருக்கும்—ஏற்படுத்திக் கொடுத்து அந்தப் பெண் சிசு வதையையெல்லாம் தடுக்கின்ற நிலையிலே அரசு அதற்கு ஆவன செய்யுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணைக் கேள்வியில் பல்வேறு பிரச்சினைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இணைத்து இருக்கிறார்கள். சிசுக் கொலை நடப்பது என்பது, கண்மூடித்தனமாக சமுதாயத்திலே ஏற்பட்டுவிட்ட வருந்தத்தக்க ஒரு நிலை. அந்தக் கண்மூடித்தனத்திற்குக் காரணம், தொடர்ந்து சமுதாயத்திலே பெண்கள் வாழ முடியாத இக்கட்டான நிலை நீடிப்பதும், வறுமையில் வாடுகிற மகளிர் பெற்றெடுத்த குழந்தையைக்கூட வளர்ப்பதற்கு அக்கறை காட்ட முடியாத அளவுக்கான ஒரு நிலையும் உள்ளதுதான் காரணம். அந்த அறியாமையைப் போக்க ஏராளமான தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கலாம் என்று முடிவு செய்து, அந்தத் தொடக்கப் பள்ளிகளைத் தொடங்குவதற்குரிய முயற்சியிலே இந்த அரசு இருக்கிறது. கல்லூரி தொடங்க வேண்டுமானால் குறைந்தது 10 கோடி ரூபாய் இல்லாமல் கல்லூரி தொடங்குவதிலே அர்த்தமில்லை என்பதை, திருமதி பொன்னம்மாள் அவர்கள் தொடங்கிய கல்லூரியின் மூலமாக நான் அறிந்துகொண்டேன். (சிரிப்பு) அவர்கள் வேண்டுகோளை ஏற்று இப்பொழுது போதுமான நிதியை ஒதுக்க முடியாத அளவுக்குத் தேவை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் வீராசாமி அவர்களுக்கு 30 கோடி கிடைத்த பாதையிலே 10 கோடி வருமானால் அதுபற்றி ஆலோசிக்கலாம்.



1999 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 503, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**503—**

### குடிநீர் வழங்கும் திட்டம்

***1190—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் தொகுதி, வடவூர், கருவேலங்கடை பஞ்சாயத்துக்களுக்கு வடுகச்சேரியிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 504, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 23

**504—**

**திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குக் குடிநீர்**

***2924—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ரூ. 98 கோடியே • 75 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்ற உத்தேசித்துள்ள வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் செயலுக்கு வரும்போது திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க இயலும். இந்தக் கேள்வி 1997-ல் போடப்பட்டது. அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்களையும்—இந்தத் திட்டம் குறித்து காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையில் நான் அனைத்து வழியோர கிராமங்களையும் ஒரே நேரத்தில்—மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினரையும் அழைத்துக் காட்டியிருக்கிறேன். திட்டத்தில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. நிச்சயமாக இந்தத் திட்டம் பலன் பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 505, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**505—**

**பணி நியமனம்**

***18606—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 ஏப்ரல் 23]

தமிழகத்தில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டயப் படிப்பு படித்த வயது வரம்பு கடக்கும் நிலையில் உள்ளவர்களுக்கு உடனே பணி நியமனம் செய்ய அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண்மை உதவி அலுவலர் பதவிக்கு நேரடி நியமனம் செய்ய தற்போது உள்ள சிறப்பு விதிகளில் இடமில்லை என்பதால் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டயம் படித்து வயது வரம்பு கடக்கும் நிலையில் உள்ளவர்களுக்குப் பணி நியமனம் செய்ய வாய்ப்பில்லை.

**திரு. ஜி.கே.மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் வேளாண்மைத் துறையிலே, தோட்டக்கலைத் துறையிலே இ.டி.சி. மற்றும் டிப்ளமா (அக்ரி) போன்ற பல்வேறு நிலைகளில் படித்துவிட்டு நீண்டகாலமாக வேலைவாய்ப்பில் நியமனம் செய்யப்படாத காரணத்தாலே அவர்கள் வயது வரம்பைக் கடக்கக்கூடிய நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவ்வாறு படித்து வேலை கிடைக்காதா என்று ஏங்கிக்கொண்டு வயது வரம்பைக் கடக்கக்கூடிய நிலையிலே உள்ளவர்களுக்கு இந்த ஆண்டு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புவதோடு, வயது வரம்பைக் கடந்த நிலையில் இருக்கக்கூடியவர்களுக்கு வயது வரம்பைத் தளர்த்துவதற்கு அரசு முன்வருமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, தோட்டக்கலைத் துறையில் பட்டயப்படிப்பு படித்த வயது வரம்பைக் கடக்கும் நிலையில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுமா என்பதுதான். பட்டயப் படிப்பு படித்தவர்களைப் பொறுத்தவரையில் 1992 ஆம் ஆண்டு முதல் ஒரு வரைமுறை செய்து, அந்தப் பட்டயப் படிப்பு படித்து அந்தப் பணியில் சேர்ந்தவர்களுக்கு உதவி வேளாண்மை அலுவலர்களாகப் பதவி உயர்வு தந்து அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், இருக்கின்ற அந்தப் பதவிகளின் எண்ணிக்கை 6,295 என்பதை 4,500 என்ற அளவுக்குத்தான் நிர்ணயிக்க வேண்டுமென்றும் அரசு முடிவு எடுத்தது. அந்த முடிவை அறிவித்து, அந்த அடிப்படையிலே புதிதாக யாரையும் பதவியில் நியமிக்கின்ற வாய்ப்பு

இல்லை. இதுபோல பட்டயப் படிப்பு படித்தவர்கள் சுமார் 1,200 பேர் இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் அரசாங்கமே வேலை கொடுப்பது என்பது இயலாது. தனிப்பட்ட முறையிலேகூட, அவர்கள் படித்த அந்தப் படிப்பைப் பயன்படுத்தி, வேறு தொழிலிலே ஈடுபடுவதற்குத்தான் வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் அந்த முயற்சியிலே ஈடுபடலாம்.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 506, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**506—**

**பிளாஸ்டிக் கூடைகளைச் சலுகை விலையில் வழங்குதல்**

***22078—திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தக்காளி மற்றும் பிற பழங்களை விற்பனை அங்காடிக்கு எடுத்துச் செல்வதற்காகப் plastic கூடைகளைச் சலுகை விலையில் வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்காளி மற்றும் பிற பழங்களை அங்காடிகளுக்கு எடுத்துச் செல்லும்போது, கோணிப் பைகளிலும், கூடைகளிலும் எடுத்துக்கொண்டு போகும்போது பத்திலிருந்து பதினைந்து சதவிகிதம் வரை கெட்டுப்போகின்றன. ஆகையினால் அவர்களுக்குப் plastic கூடைகள் கொடுத்தால், அவை சுலபமாகப் போய்ச் சேரும். Government of India-விலேயிருந்து subsidy கொடுப்பதாகத் தெரியவருகிறது. ஆகையால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து இதைப் பரிசீலனை செய்து, 10 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதம் அளவிற்குக் கெட்டுப்போகின்ற பழங்களைப் பராமரிக்க, plastic கூடை கொடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, plastic கூடைகளை மானிய விலையில் வழங்குவதற்கு தேசிய தோட்டக்கலை வாரியம் முன்வந்திருக்கிறது. ஒரு plastic கூடை 50 சதவிகித மானிய விலையில், அதிகபட்சமாக ஒரு கூடைக்கு 70 ரூபாய் வரையில் மானியம் வழங்கப்படுகிறது. இந்த மானியத்தின் அடிப்படையிலே plastic கூடை வாங்குவதற்கு TANHOPE மூலமாக விண்ணப்பித்தால், அந்த விண்ணப்பத்தைத் தேசிய தோட்டக்கலை வாரியத்திற்கு அனுப்பினால், எவ்வளவு பேருக்கு வேண்டுமானாலும் மானிய விலையிலே plastic கூடை வழங்குவதற்கு இன்றைக்கும் திட்டமிருக்கிறது. இதுவரை 5 தனியார் நிறுவனங்கள் இதைப் பயன்படுத்திக்கொண்டு, ரூ.4,30,000 மானியம்கூடப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் 50 சதவிகித மானியம், அதிகபட்சமாக 70 ரூபாய் ஒரு plastic கூடைக்கு TANHOPE மூலமாகத் தருவதற்கு, நாங்கள் இரண்டு நபர்களுக்குப் பரிந்துரை செய்தோம். அந்த இரண்டு நபர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்ட பிறகு, மீதமுள்ள பணத்தை செலுத்தி, அந்த plastic கூடையைப் பெற அவர்கள் முன்வரவில்லை என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்காளி வியாபாரம் செய்கின்றவர்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலைமையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். இன்றைக்கும் பத்து கிலோ கூடையின் விலை ஐந்து ரூபாய்தான். ஆகையினாலே அரசாங்கமே அதை வாங்கி அளிக்கலாம். ஏழையெளிய, சாதாரண நடுத்தர விவசாயிகளுக்கு நல்லமுறையிலே விலை கிடைப்பதற்கும்—இப்பொழுது கூடைகளிலே போட்டு தூக்கித் தூக்கி எறிகின்ற காரணத்தினால், மிகவும் சிரமமான சூழ்நிலையாக இருப்பதால்—plastic கூடைகளை இலவசமாக வாங்கிக் கொடுப்பதற்கு மீண்டும் மறுபரிசீலனை செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியத்திலே இப்பொழுதும் plastic கூடையை அரசு தருகிறது. எல்லாமே இலவசம் என்றால், அது இயலாது. ஆனால் மானியத்திலே இந்த plastic கூடையை வாங்குவதற்கு விவசாயிகள் முன்வருவார்களேயானால், எவ்வளவு பேருக்கு

[1999 ஏப்ரல் 23

வேண்டுமானாலும், TANHOPE மூலமாக விண்ணப்பங்களை அந்த விவசாயிகள் தந்தால், அவர்களுக்கு subsidy-யில் plastic கூடைகளைப் பெற்றுத் தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்காளிப் பழங்களை அனுப்புவதற்கு plastic கூடைகள் வழங்குவது பற்றிய கேள்வியை நாம் கேட்டுக்கொண்டிருக்கிற இந்த வேளையிலே, தமிழகத்திலே வெங்காய உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிற விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்த வெங்காயத்திற்குச் சரியான விலை கிடைக்கவில்லை என்று நேற்றையதினம் சாலையிலே கொட்டி போராட்டம் நடத்தி இருக்கிறார்களே, அதுபற்றி தமிழக அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது? அந்த விலை வீழ்ச்சியைச் சரிக்கட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்காளி, வெங்காயம் மற்றும் காய்கறிகளின் விலை உயர்வும், விலை இறக்கமும் உற்பத்தியைப் பொறுத்து ஏற்படுகின்ற ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது. இதுபோன்ற உணவுப் பொருட்களுக்கு ஏதாவது விலை நிர்ணயிக்க வேண்டும் என்ற ஒரு நிலை வருகின்றபோது மத்திய அரசாங்கத்திற்கு ஆதரவு விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று நாம் பரிந்துரை செய்கிறோம். மத்திய அரசாங்கம்தான் அதன்மீது ஆதரவு விலையை நிர்ணயிக்க வேண்டும். இதிலே இரண்டு விஷயங்களைப் பார்க்க வேண்டும். உற்பத்தி செய்யக் கூடிய விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டும் என்பது இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற ஒரு கொள்கை. அதேநேரத்தில் அதைப் பயன்படுத்தக்கூடிய பொதுமக்களும் அதிக விலை உயர்வினால் சிரமத்திற்கு ஆளாகாமல் அவர்களைப் பாதுகாக்க வேண்டிய ஒரு கடமையும் நமக்கு இருக்கிறது. இப்போது பெரிய வெங்காயத்தின் குறைந்தபட்ச விலை ஒரு கிலோவிற்கு 4 ரூபாயாகவும், அதிகபட்சமாக 5 ரூபாயாகவும் இருக்கிறது. சாம்பார் வெங்காயம் குறைந்தபட்சமாக 7 ரூபாய், அதிகபட்சமாக 9 ரூபாய் என்ற அளவில் இருக்கிறது. நீங்கள் சொல்வது பற்றி நாங்கள் நேற்று இரவுகூட



1999 ஏப்ரல் 23]

தொலைபேசியிலே கேட்டு விவரத்தைச் சேகரித்து வருகிறோம். ஆகவே போராட்டம் நடத்தக்கூடியவர்கள் எப்படி வேண்டுமானாலும் சொல்லி அறிவிப்பார்கள். அதையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொள்ளக்கூடாது. ஆகவே வெங்காயம் ஒரு கிலோவிற்கு இந்த விலையை விட குறைந்திருந்த காலமும் உண்டு. ஆகவே இப்போது ஏற்பட்டிருக்கிற இந்த வெங்காய விலை குறைவு, தக்காளி விலை குறைவு எல்லாம் தற்காலிகமானதுதான். வெங்காயம் விலை உயர்ந்த காரணத்தினால் 4 வட மாநிலங்களில் ஆட்சி மாற்றமே ஏற்பட்டதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 507, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**507—**

**பாசிமுத்தான் ஓடை**

***17283—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பாசிமுத்தான் ஓடையில் ஆம்பூபட்டி பாளையம் அருகிலுள்ள அணையில் ஷட்டர்கள் பொருத்தப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பாசிமுத்தான் ஓடையின் குறுக்கே ஆம்பூபட்டிபாளையம் அருகே உள்ள ரெகுலேட்டர், கடற்கரைக்குப் பக்கமாக இருப்பதால் தேக்கு மரத்தில் ஷட்டர்கள் அமைப்பதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன. இதற்கான ஒப்புதல் ஆணை வழங்கப்பட்டபின் ஷட்டர்கள் தயாரிக்கப்பட்டு பாசிமுத்தான் ஓடை ரெகுலேட்டரில் பொருத்தப்படும்.

[1999 ஏப்ரல் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில், நீங்கள் கேட்ட கேள்விக்கு "ஆமாம்" என்று சொல்லிவிட்டார்கள். பிறகு என்ன இதில் துணைக் கேள்வி? சரி, கேளுங்கள்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்பொழுது வேலை தொடங்கப்படும் என்பதை அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்ன கேள்வி தெரியுமா? இது புவனகிரி தொகுதியில் பாசிமுத்தான் ஓடையில் ஷட்டர்கள் அமைப்பது பற்றியதாகும். நீங்கள் அரவக்குறிச்சியில் இருக்கிறீர்கள். இதைப் பார்த்துக்கூட இருக்க மாட்டீர்கள்; பரவாயில்லை. ஏற்கெனவே அது கடற்கரை ஓரமாக இருக்கின்ற காரணத்தால் தேக்குமரத்தில் ஷட்டர்கள் போட வேண்டும் என்று ஒரு tender வைத்தோம். ஆனால் குறைந்த ஒப்பந்தப் புள்ளி பெற்றவர்கள் மறுபடியும் அந்த வேலையைச் செய்ய வராமல் போய்விட்டார்கள். இரண்டாவது ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அது இப்போது பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்தவுடன் உடனடியாக ஷட்டர்கள் போடுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 508, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**508—**

**மகளிர் பேருந்து இயக்குதல்**

***8836—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், இரத்தினகிரியிலிருந்து காட்பாடிக்கு பள்ளி, கல்லூரி நேரங்களில் மகளிர் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இரத்தினகிரியிலிருந்து காட்பாடி வரை போதிய பெண் பயணிகள் போக்குவரத்து இல்லாமையால் இரத்தினகிரி-காட்பாடி வழித் தடத்தில் மகளிருக்காக தனியாகப் பேருந்து இயக்க வேண்டிய நிலைமை நிலவவில்லை.



1999 ஏப்ரல் 23]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரத்தினகிரியிலிருந்து வேலூருக்குப் போவதற்காக நிறைய பெண் பயணிகள் பேருந்து நிறுத்தத்தில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சருக்குத் தவறான தகவல் வந்திருக்கிறது. அடர்வு இல்லை, அடர்வு இல்லை என்று அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் எப்பொழுதுமே அமைச்சருக்கும் மற்றவர்களுக்கும் பதில் சொல்லியே பழக்கப்பட்டவர்கள். அதனால்தான் அமைச்சருக்கும் அவர்கள் அப்படிச் சொல்லி இருக்கிறார்கள் என்று கருதுகின்றேன். அடர்வு நிறைய இருக்கிறது. அந்தப் பகுதியிலேயிருந்து பெண்கள் நிறைய படிப்பதற்காக பள்ளிக்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப் பொதுப் பணித் துறை அமைச்சர் சொன்னால் நான் ஏற்றுக்கொள்வேன். ஏனென்றால் அது அவர் தொகுதி. நீங்கள் இங்கேயிருந்து இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அவர் தொகுதி இல்லை, காந்தி அவர்களுடைய தொகுதியில் வருகிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் மறுபரிசீலனை செய்து அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய பெண்கள் ஆக்ஸீலியம் பெண்கள் கல்லூரிக்கும், தனபாக்கியம் கிருஷ்ணசாமி பெண்கள் கல்லூரிக்கும் மற்றும் ஈ.வே.ரா. நாகம்மை பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கும் போக வேண்டியிருக்கின்ற காரணத்தாலே அமைச்சர் அவர்கள் பெண்களுக்காகத் தனிப் பேருந்து ஒன்று விடுவதற்கு ஆவன செய்வாரா என அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அந்தப் பகுதியிலே பத்து நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் இயங்கிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக நெருக்கடி நேரப் பேருந்தாக, 3-11-1997 முதல் நான்கு நெருக்கடி நேரப் பேருந்துகள் தனியாக விடப்பட்டிருக்கின்றன. ஆகவே பெண்களிடமிருந்து இதுபோன்ற கோரிக்கைகள் எதுவும் வரவில்லை. பெண்களே அந்தக் கோரிக்கையை வைக்காதபோது மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் அதுபற்றிக் கவலைப்படாமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

[1999 ஏப்ரல் 23

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே கட்டாயமாக இரண்டு துணைக் கேள்விகளுக்கு நான் அனுமதிக்க வேண்டும் என்பது கிடையாது. நீங்கள் விவரமான எம்.எல்.ஏ. அமைச்சர் அவர்களின் பதிலைப் பார்த்துவிட்டு, தேவைப்பட்டால் இரண்டாவது துணை வினாவை நான் அனுமதிக்கலாம். இதில் அது தேவையில்லை என்பது மாண்புமிகு உறுப்பினருக்கே நன்றாகத் தெளிவாகத் தெரியும். உட்காருங்கள்.

அடுத்து வினா எண் 509, திரு. கு. மனோகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**509—**

**இரயில் பாதை அமைத்தல்**

***13583—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெங்களூரிலிருந்து ஓசூர், கிருஷ்ணகிரி, பர்கூர் வழியாக ஜோலார்பேட்டையை இணைத்து புதிய இரயில் பாதை அமைத்திட மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இத்திட்டம் குறித்து புலத் தணிக்கை முடிவடைந்து உள்ளதாக தென்னக இரயில்வே தெரிவித்துள்ளது.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் ஓசூர், கிருஷ்ணகிரி, பர்கூர் ஆகிய பகுதிகள் வளர்ந்து வருகின்ற பகுதிகளாகும். தொழிற்சாலைகளும், வியாபாரப் பெருமக்களும் மிகுதியாக இருக்கும் இடங்களாகும். அந்தப் பகுதியிலே உள்ள வியாபாரிகளும், பொதுமக்களும் சென்னை மற்றும் பெங்களூர் செல்ல இது ஓர் இடைப்பட்ட முக்கியமான பகுதி என்பதாலும்,



1999 ஏப்ரல் 23]

அங்கே காய்கறிகளும், மா, வாழை, தென்னை என பல்வேறு பொருட்களும் எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதாலும், சென்னை மற்றும் பெங்களூர் செல்ல ஓர் அவசியமான பாதை என்பதாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசை மீண்டும் வலியுறுத்தி கூடிய விரைவில் இத்திட்டப் பணிகளைத் தொடங்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய முயற்சியால்தான் இந்தப் பாதையே முதலில் கொண்டு வரப்பட்டது என்பதை உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். 1998-99 ஆம் ஆண்டுக்கான இரயில்வே வரவு-செலவுத் திட்டத்தில் ஜோலார்பேட்டை, ஓசூர் வழியாக கிருஷ்ணகிரிக்கு புதிய அகல இரயில் பாதைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு புலத் தணிக்கை முடிந்திருப்பதாகத் தென்னக இரயில்வே குறிப்பிட்டிருக்கின்றது. இப்பணியை விரைவுபடுத்துவதற்காகத் தமிழக அரசும் மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெங்களூரிலிருந்து ஓசூர், கிருஷ்ணகிரி வழியாக ஜோலார்பேட்டைக்குப் புதிய அகல இரயில் பாதை அமைக்கும் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்திலே இப்போது தமிழ்நாடு முழுவதும் அகல இரயில் பாதைகள் அமைக்கக்கூடிய நேரத்திலே தருமபுரி, மாவட்டத்தின் தலைநகராக இருப்பதால்—சென்னையிலிருந்து தருமபுரிக்குச் செல்வதற்கு என்று இரயில்பாதை வசதியில்லாமல் இருப்பதால், இதற்கு முன்பு இருந்த பாதை அழிக்கப்பட்டுவிட்டதால்—மாவட்டத் தலைநகரமான தருமபுரியைத் தொடர்பு கொள்வதற்கும், பெங்களூரிலிருந்து ஓசூர், கிருஷ்ணகிரி, தருமபுரி வழியாகச் சென்னை வருவதற்கும் ஜோலார்பேட்டையை இணைக்கக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிற இரயில்வே பாதைகளை அகல இரயில் பாதைகளாக விரிவாக்குவதற்குத்தான் மத்திய அரசு முன்னுரிமை

கொடுத்து இப்பணிகளைத் தொடங்கியிருக்கின்றது. புதிய இரயில் பாதைத் திட்டங்கள் அவ்வப்போது ஒன்றிரண்டு அறிவிக்கப்பட்டாலும் அதற்கான முன்னுரிமை தமிழகத்திற்கு இதுவரை கிடைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சித்தால் நல்லது. இந்த அரசும் முயற்சித்து புதிய இரயில் பாதைகளுக்கான புதிய வழிகளையும் பெறுவதற்கு வருங்காலத்தில் முயற்சிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ.ஜி. சுகவனம்.

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு நிறுத்தப்பட்ட திட்டம். ஐக்கிய முன்னணி மத்தியில் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபிறகு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சேலம்-பெங்களூர் அகல இரயில் பாதைத் திட்டத்தைத் தொடங்கி வைக்க வந்தபோது அன்றைக்கு மத்திய இரயில்வே அமைச்சராக இருந்த மாண்புமிகு ராம் விலாஸ் பாஸ்வான் அவர்களும் வந்திருந்தார். அவரிடத்திலே நான் நேரடியாகக் கடிதம் கொடுத்து இத்திட்டத்தைப் பற்றிச் சொன்னேன். அவரும் அதற்கான ஆய்வுப் பணிகளைச் செய்வதாகச் சொன்னார். அதற்குப் பிறகு அந்தத் திட்டப் பணிகளைத் தொடங்குவதாக அந்தத் துறையிலிருந்தும் எனக்குக் கடிதமும் வந்தது. ஐக்கிய முன்னணி ஆட்சியில் அதற்கான ஆய்வுப் பணிகளும் நடைபெற்றன. பின்னர் ஐக்கிய முன்னணி ஆட்சி மத்தியிலிருந்து நீக்கப்பட்ட பிறகு அந்தப் பணிகள் எல்லாம் இன்றைக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. ஆய்வுப் பணிகள் நடைபெறவில்லை. ஆகவே உடனடியாக அந்த ஆய்வுப் பணிகள் எல்லாம் நடைபெற்று மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த அந்தப் பகுதி மக்களுக்கு, அங்கே உள்ள ஏழை எளிய மக்களுக்குத் தேவைப்படுகின்ற அந்த இரயில் பாதையை உடனடியாக மீண்டும் அமைத்துத்தர மத்திய அரசிடம் பரிந்துரை செய்து உடனடியாக அமைத்துத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker, Sir, it is a long felt need. Hosur is an industrial area, where industries have been situated in about 3000 acres of land. Industrialists are finding it very difficult to come to





Chennai via Bangalore. May I know from the Hon. Minister for Transport whether the State Government would press the Government of India and see that the project is immediately completed, Sir?

முற்பகல் 9-55

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது யாரை press செய்வது என்றுதான் தெரியவில்லை. இரயில்வே எஞ்ஜினே தடம் புரண்டுகொண்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில் பழைய திட்டங்களை நிச்சயமாகத் தொடர்ந்து நாங்கள் வலியுறுத்துவோம் என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகரிலிருந்து சென்னைக்கு வர வேண்டுமென்றால் நேரடி இரயில் பாதை வசதி கிடையாது. அதேபோல் சென்னையிலிருந்து தருமபுரிக்குச் செல்ல வேண்டுமென்றால் மொரப்பூர் சென்றுதான் தருமபுரிக்கு வர வேண்டிய நிலை இருக்கிறது. தருமபுரிக்கும் மொரப்பூருக்கும் இடையே 28 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதி ஆண்டில் மத்திய அரசை வலியுறுத்தி மொரப்பூருக்கும் தருமபுரிக்கும் இடையிலே உள்ள அந்த 28 கிலோ மீட்டர் தூரத்தை இணைத்து சென்னையோடு நேரடி இரயில் தொடர்பை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நாடாளுமன்றமாக இதை எண்ணிக்கொண்டு கேள்விகளைத் தொடுத்துக்கொண்டிருக்கிறார் என்று கருதுகிறேன். முடிந்த வரை, தமிழக அரசு தொடர்ந்து மத்திய அரசை இதுபோன்ற புதிய திட்டங்களுக்காகவும், புதிய அகல இரயில் பாதைகளை உருவாக்குவதற்காகவும் வலியுறுத்திக்கொண்டிருக்கிறது. அவ்வப்போது மத்திய அரசுக்கு நாம் கொடுத்து வருகின்ற நிர்பந்தத்தின் காரணமாகத்தான் கிடைக்கின்ற திட்டங்களும் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 510, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 23

**510—**

**தமிழ் இலக்கிய ஆய்வு**

***21487—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் இலக்கிய ஆய்வுகளையும், தமிழரின் தத்துவக் கோட்பாடுகளையும் தரப்படுத்தி மேற்கத்திய நாடுகளின் தத்துவக் கோட்பாட்டு ஆய்வுக்கு இணையான முறையில் உருவாக்க அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

இல்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்ற ஒரு வரியிலே இந்தப் பிரச்சினையை முடித்துவிடக்கூடாது. (குறுக்கீடு) ஒரு வார்த்தையிலே முடித்துவிடக்கூடாது. தாயினுடைய கருப்பையிலே வளருகின்ற சிசுவிற்கு தாயிடமிருந்து உணவு செல்வதற்காக தாயின் நாபிக்கொடி குழந்தையின் நாபிக்கொடியோடு இணைக்கப்பட்டிருப்பதைப்போல கடந்த கால தலைமுறையினுடைய நிலைத்த கூறுகளை நிகழ்காலத் தலைமுறையோடு இணைத்தால்தான் இந்தச் சமுதாயம் ஆரோக்கியமான சமுதாயமாக இருக்கும். இவற்றை இணைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவதுதான் இலக்கிய ஆய்வாகும். எனவே இலக்கிய ஆய்வு என்பது ஏதோ ஒரு பட்டப்படிப்பிற்குரிய ஒன்றாக மட்டும் எண்ணி எல்லையை சுருக்கிப் பார்க்கக்கூடாது என்பதால் இப்போது தமிழ் இலக்கியத்தில் நிலவுகின்ற பல்வேறு தத்துவப் போக்குகளைப் பற்றியும் கொள்கை நிலைகளைப் பற்றியும் ஆராய்வதிலே பின்தங்கிய நிலை இருக்கிறது. ஆனால் மேற்கத்திய நாடுகளின் ஆய்வு முறைகள் மிகவும் வளர்ந்துவிட்டன. எனவே நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புவது, மாண்புமிகு தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் இப்படி ஒரு



1999 ஏப்ரல் 23]

சொல்லுக்குள் தன்னை நிறுத்திக்கொள்ளாமல் அங்கிருந்து விடுபட்டு வெளியே வந்து, பிறகு உண்மையிலேயே மேற்கத்திய நாடுகளில் அறிவியல்பூர்வமான, விஞ்ஞான ஆய்வுகளை தமிழ்நாட்டின் ஆய்வுகளுடன் இணைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடை 'இல்லை' என்று சொன்னாலும், அதற்குள்ளே நிறைய இருக்கிறது. காரணம் தமிழ்நாட்டில் இதுபோன்ற தத்துவங்களைப் பயில்வதற்காக பல கல்லூரிகளிலே தத்துவத் துறைகள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் இருக்கின்ற 16 பல்கலைக்கழகங்களில் தத்துவத் துறைகள் இருக்கின்றன. அவர்கள் தமிழோடு தொடர்புடைய தத்துவங்களையும், பிற மொழி இலக்கியங்களோடு இருப்பதையும் இணைத்து பல ஆய்வு நூல்களை வெளியிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. தமிழ்ப் பல்கலைக்கழகம் மட்டுமே 300-க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டிருப்பதிலே தத்துவப் பகுதிகள் அடங்கியிருக்கின்றன. அதைப்போல உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் Cultural Heritage of Tamils என்ற பெயரில் ஆங்கிலத்தில் பல்வேறு நூல்களை வெளியிட்டிருக்கிறது. அப்படி வருகின்றபோது பல்வேறு வகையான உலகக் கூறுபாடுகளை, குறிப்பாக வால்டேர், ரூசோ, சாக்ரடீஸ் போன்றவர்களின் கருத்துக்களை இங்கே கொண்டுவருவதற்கும், நம்முடைய கருத்துக்களைப் பிற மொழிகளுக்குக் கொண்டுபோவதற்குமான முயற்சிகளை பல்வேறு அமைப்புகள் மேற்கொண்டு வருகின்றன. அதுவும் செம்மனாஞ்சேரியில் இருக்கிற இந்திய ஆசியவியல் நிறுவனம், Asian Studies என்ற அமைப்பு பல்வேறு ஒப்பீட்டு இலக்கியங்களைச் செய்வது மட்டுமல்லாமல், ஜப்பான் நாட்டினுடைய முழுமையான தத்துவங்களையும் தமிழிலே கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு நூல்களை உருவாக்கி வருகிறது. எனவே 'இல்லை' என்று நான் விடைக்காகச் சொன்னாலும் இத்தனைப் பணிகளும் பல்வேறு இடங்களில் பல்வேறு நிறுவனங்கள் வாயிலாக நடைபெறுகின்றன. அவற்றையெல்லாம் ஒரு முறை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள்—உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், ஆசியவியல் நிறுவனம், தமிழ்ப் பல்கலைக்கழகம் இவற்றையெல்லாம்—சென்று பார்த்து அதற்குப் பிறகு மீண்டும் இந்தக் கேள்வியை வைத்தால் இன்னும் விடை சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

[*1999 ஏப்ரல் 23*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

*முற்பகல் 10-00*

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் இலக்கிய ஆய்விலே தலைசிறந்து விளங்கியவரும், தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு சமயத்தவர்கள்—குறிப்பாக, சைவர்கள், வைணவர்கள், இசுலாமியர்கள், கிருத்துவர்கள், சமணர்கள், பௌத்தர்கள் ஆகியோர்களுடைய தத்துவக் கோட்பாடுகளையும், அவர்கள் தமிழ் இலக்கியத்திற்குச் செய்த ஆய்வுகளையும், மிக அருமையான ஆய்வியல் கண்ணோட்டத்தோடு நூல்கள் பலவற்றை எழுதியவர், மயிலை சீனி வேங்கடசாமி என்ற அறிஞர். எனவே அந்த அறிஞருடைய நூல்களை அரசுடைமையாக்க, அதன்மூலம் அந்தத் தத்துவக் கோட்பாடுகளை வளர்த்தெடுக்க, அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுக்கு, நம்முடைய உறுப்பினர் திரு. தீரன் அவர்களே விடை சொல்லியிருக்கிறார். மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் அனைத்துச் சமுதாயங்களினுடைய தத்துவங்களையும், இலக்கியங்களையும் படப்பிடிப்பாகத் தரும் வகையில் கிருத்துவமும்-தமிழும், இசுலாமியமும்-தமிழும், சைவமும்-தமிழும், வைணவமும்-தமிழும் என்று தொடர்ந்து நூல்களை எழுதியிருக்கிறார்கள். அவற்றையும் அவருடைய தகவலுக்காகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உலகம் முழுவதும் விரவிக் கிடக்கின்ற தமிழ் அறிஞர்களின் கருத்துக்களை ஒருங்கிணைப்பது என்பது சீரிய முயற்சி. அந்த முயற்சியிலே நாம் ஈடுபடுவதற்கு முன்னால், தமிழ்நாட்டிலே, ஐந்தாவது வகுப்புவரை முழுமையாக தமிழிலே பயிற்றுவிக்கப்பட வேண்டுமென்று தமிழ்ச் சான்றோர் பேரவை, வருகிற 25 ஆம் தேதி முதல் சாகும்வரை உண்ணாவிரதம் என அறிவித்திருக்கிறார்களே, அது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா என்பதையும் அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



*1999 ஏப்ரல் 23*]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ச் சான்றோர் கொள்கை என்பது, பேரறிஞர் அண்ணா அவர்களாலும், இப்போது முதலமைச்சராக இருக்கிற கலைஞர் அவர்களாலும், அந்த இயக்கத்திலே இருக்கும் எங்களைப் போன்ற முன்னணித் தோழர்களாலும் பல ஆண்டுகளாக எடுத்துச் சொல்லப்பட்டு வந்த அடிப்படையான கொள்கைதான். அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு, நான் அமைச்சராக உள்ள இந்தக் காலகட்டத்திலே அமைச்சராக ஆனதிலிருந்தே—மழலையர் பள்ளிகளிலே தமிழைப் புகுத்துவதற்கு, தகுந்த அளவுக்குத் தமிழ் இடம் பெறுவதற்கு, ஒரு நடவடிக்கை எடுத்து, அவர்களை ஒப்புக்கொள்ள வைத்து, முதலாண்டிலேயே ஒரு பாடமாவது தமிழிலே நடத்த வேண்டுமென்று கேட்டு, இரண்டாவது ஆண்டு அளவில், மறுபடியும் அதுபற்றிக் கலந்து பேசி, முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அதற்காக ஓர் ஆலோசனைக் குழுவினைக் கலந்து பேசி அதுபற்றி சட்ட அடிப்படையிலேயும் ஆய்வு நடத்தி, அவர்கள்—3 பாடங்களை ஆங்கிலத்தில் நடத்துவதாகச் சொன்னதால் இரண்டு பாடங்களைத் தமிழில் நடத்த ஆணையிடப்பட்டுள்ளது. அந்த 3 பாடங்களிலே–2 பாடங்களையாவது தமிழிலே நடத்த வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது. மேலும் ஒரு பாடத்தையும் தமிழிலே நடத்துவதற்கு, படிப்படியாக வழிகாணப்படும். ஏனென்றால், ஆசிரியர்கள் பலபேர், ஆங்கிலத்திலே பாடம் நடத்துவதற்காக அந்த வேலையிலே சேர்ந்திருக்கிறார்கள். பெற்றோர்கள் குழந்தைகளைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறபோது, நீங்கள் ஆங்கிலத்திலே நடத்துகிறீர்களா என்று கேட்டு சேர்க்கிறார்கள். பணக்காரர்கள், ஏற்கெனவே படித்தவர்கள், ஆங்கிலத்தால் முன்னேறிவிட்டார்கள்; எங்களுடைய குழந்தைகள் 3 வயதிலேயே ஆங்கிலத்திலே பேச ஆரம்பித்தால்தான் எங்கள் பிள்ளைகளும் தப்பும், முன்னேற முடியும் என்கிற தவறான கண்ணோட்டத்திலே கிராமத்திலே உள்ள ஏழைகள் இருக்கிறார்கள். எனவே இது வெறும் சான்றோர் பிரச்சினையும் அல்ல; தமிழக அரசினுடைய பிரச்சினையும் அல்ல; சமுதாய உணர்வுப் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலக்கியம் என்பது எது என்பதே இன்னும் பெரும் பிரச்சினையாக

[1999 ஏப்ரல் 23

இருந்து கொண்டிருக்கிறது. இலக்கியம் எது என்பதே தீர்மானிக்க முடியாமல், முடிவற்ற தொடர் விவாதம் நடந்து கொண்டிருக்கிற நிலையில், நான் இங்கே குறிப்பிட விரும்புவது, இலக்கியம் குறித்து ஆய்வு; இலக்கியத்திற்குள் புதைக்கப்பட்டிருக்கிற தத்துவக் கருத்துக்களை ஆய்கிற முறையிலே பல்வேறு வேறுபாடுகள் இருக்கின்றன. மேற்கத்திய ஆய்வு முறைகள், தமிழகத்தின் ஆய்வு முறைகளைக் காட்டிலும் மிக முன்னேறி இருக்கின்றன. அதுவும் ஆய்வு என்பது, விருப்பு, வெறுப்பு நிலையிலிருந்து ஆய்வு செய்கின்ற ஒரு போக்கு இருந்து வருகிறது. இலக்கியங்களிலே ஒருவன் தான் என்ன விரும்புகிறானோ, அந்த நோக்கில் இருந்து ஆய்வுகள் எழுதுகிற போக்கு அபாயகரமானது. விருப்பு வெறுப்பற்று எழுதப்பட வேண்டும். இதிலே எல்லாம் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதனால், நான் இங்கே தெரிந்துகொள்ள விரும்புவது, மேற்கத்திய நாடுகளில் பழைய இலக்கியங்களைக் குறித்த ஆய்வு முறைகளுக்குப் புதிய கோட்பாட்டு எல்லைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அது என்ன என்பதைக் கண்டறிவதற்கு, தமிழ்நாட்டு ஆய்வாளர்களை அழைத்துப் பேசி, புதிய ஆய்வு முறைகளை உருவாக்குவது குறித்தும் அரசு பரிசீலிக்குமா என்பதோடு, ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நான் மாநில அரசிடமிருந்தும், தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சரிடமிருந்தும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இளங்கோவடிகள் குறித்து இதுவரை தமிழ் இலக்கியத்தில் சொல்லப்பட்டவற்றை முற்றிலும் மறுத்து, இளங்கோவடிகள் யார் என்று ஓர் ஆயிரம் பக்கம் கொண்ட மிகப் பெரிய ஆய்வு நூலை மிகச் சிறந்த ஆய்வாளர் திரு. தொ.மு.சி. ரகுநாதன் அவர்கள் எழுதியிருக்கின்றார்கள். அதில் கோவலனைப் பற்றி, கண்ணகியைப் பற்றி, அதேபோல் இளங்கோவைப் பற்றி இதுவரையிலேயும் சொல்லப்பட்ட கருத்துக்களை முற்றிலும் ஆதாரப்பூர்வமாக சங்க இலக்கியங்களின் ஆதாரங்களிலிருந்தும், வரலாற்று ரீதியான ஆதாரங்களிலிருந்தும் நிராகரித்து எழுதி இருக்கிறாரே, அந்த ஆய்வு நூலை தமிழக அரசு அறியுமா என்பதையும் அதுகுறித்து அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பதையும் அறிய விருமபுகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...



1999 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன், இதனை அந்தத் துறையினுடைய மானியக் கோரிக்கையிலே பேசினால் நல்லது. வினா நேரத்திலே நீங்கள் 5 நிமிடத்திற்கு துணை வினாவையே கேட்டீர்கள் என்றால் நான் எப்படி அனுமதிக்க முடியும்?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சுப்பராயன் அவர்களே, இந்த நூலைப் படித்திருக்கின்றபோது, தமிழ்க்குடிமகன் படிக்காமல் இருக்க முடியாது. எனவே ஏற்கெனவே படித்து, அதனுடைய திறனாய்வுக் கருத்துக்களையும் சேர்த்து 23 ஆண்டுகள் வகுப்பில் பாடமாக நடத்திவிட்டு வந்தவனிடத்தில் கேட்கின்றார், இந்தக் கேள்வியை. அதேநேரத்தில் இலக்கியம் என்றால் என்னவென்றே முடிவு செய்யவில்லை, இன்னும் குழப்பமாக இருக்கிறது என்று சொன்னார்கள். குழப்பம் உங்களுக்குத்தானே தவிர, இலக்கியவாதிகளுக்கு அல்ல. Literature is the best record of human thoughts என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுவதையும் இலக்கியம் என்பது இலக்குகளை நோக்கி வரையறுக்கப்பட்டு தேவைப்பட்டால் வடிவங்களையும், தேவைப்பட்டால் உணர்ச்சியையும், தேவைப்பட்டால் கற்பனையையும், தேவைப்பட்டால் அவர்களுடைய கருத்தையும் உள்ளடக்கி வருவதுதான் இலக்கியம் என்றும், இந்த இலக்கியத்திற்கு எத்தனையோ வகையான இலக்கணம் தருகின்ற நூல்களை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்—178 நூல்களை—எழுதி உணர்த்தியிருக்கிறார் என்பதையும், நம்முடைய சுப்பராயன் அவர்கள் அவற்றை முழுமையாகப் படித்து உணர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இரண்டு பேரும் தனியாக விவாதம் வைத்துக்கொள்ளுங்கள். நான் அவையை நடத்த வேண்டும். முதலமைச்சருக்கு எப்போது நேரம் இருக்கும் என்று நீங்கள் இரண்டு பேரும் போய் அனுமதி கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். நான் இனிமேல் அனுமதிக்க முடியாது.

**திரு. கே. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, ஒரு Point of Order-ம் இருக்கிறது. ஏனென்றால் (குறுக்கீடுகள்) தலைவர் அவர்களே, நான் அமைச்சர் அவர்களைப் படிக்க வேண்டும் என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்திலே Point of Order எழுப்ப முடியாது.

**திரு. கே. சுப்பராயன்:** Point of Order எழுப்பவில்லை. தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை, படிக்கவில்லை என்று சொல்லவில்லை. எனவே அதை நான் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். படிக்கவேண்டுமென்று சொல்லவில்லை. அப்படிப்பட்ட நூலை அறிவார்களா என்றுதான் நான் கேட்டேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** படிக்காமலே, பார்த்தால்கூடப் போதும்.

**திரு. கே. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, நான் என்ன சொன்னேன் என்பதைத் தெரிவித்தேன். இலக்கியம் பற்றி அவர்கள் சொன்னார்கள். இலக்கியம் பற்றி பலரும் பலவாறு சொல்கிறார்கள். ஒன்றே ஒன்றை சொல்லிக்கொள்கிறேன். மனித மனதிற்குள் புரிந்துகொள்ள முடியாத, புதைந்து கிடக்கின்ற சூட்சுமங்களைக் கண்டறிய முயன்ற முயற்சியின் விளைவுதான் இலக்கியம் என்று மேற்கத்திய ஞானி சொன்னார். அவ்வாறு அதை எடுத்துக்கொள்ளலாமா? எனவே இதைப்பற்றி ஒவ்வொருவரும் ஒரு கண்ணோட்டத்தில் சொல்கிறார்கள். என்னுடைய கருத்து, இலக்கியம் என்பது, மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கு உரம்தான்-உரமாக அமைவதே இலக்கியம். மற்றவைகள் வெறும் குப்பைகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 511, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**511—**

**கூட்டுறவுத் துறையில் இட ஒதுக்கீடு**

***6382—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுத் துறையில் இட ஒதுக்கீடு அடிப்படையில் பணியாளர்கள் பணியமர்த்தப்படுகிறார்களா?



(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். தற்போது நடைமுறையில் உள்ள பதவி இடத்திற்கிணங்க இட ஒதுக்கீடு அடிப்படையில் கூட்டுறவுத் துறையில் பணியாளர்கள் பணியமர்த்தப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் இட ஒதுக்கீட்டு முறையில் பணியாளர்கள் பணியமர்த்தப்படுவதில்லை என்ற நிலையை மாற்றி ஆதிதிராவிடர் நலனில் அக்கறை கொண்டுள்ள நமது அரசு கூட்டுறவுத் துறையிலும் இட ஒதுக்கீடு வழங்க முன் வந்தமைக்காக நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். இராமநாதபுரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலே சுமார் 120 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். ஆனால் இரண்டு பேர்தான் அட்டவணை இனத்தவர். எனவே பணியாளர்களை பணியமர்த்தும்போது Backlog vacancy-களில் முதலில் பணியமர்த்திவிட்டு பிறகு இருக்கின்ற இடங்களிலும் இட ஒதுக்கீட்டு முறையில் பணியமர்த்தப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் ஆட்கள் நியமிக்கப்படுகின்றபோது, இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றாமல் கூட்டுறவுத் துறையிலே பணியமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். அதிலே இருக்கின்ற Backlog vacancies முழுவதும் இப்போது நிறைவு செய்யப்படுமா என்றால் நிச்சயமாக இயலாது. இப்போது எடுக்கின்ற நியாயவிலைக் கடைப் பணியாளர்களிலிருந்து தலைமைப் பதவி வரையில் கண்டிப்பாக இட ஒதுக்கீட்டு முறை கூட்டுறவுத் துறையிலே அமல்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை. கடந்த காலத்திலேயிருந்த தலைவர்களுக்கு அவர்களாகவே நியமித்துக்கொள்ளும் அதிகாரம் இருந்ததால் அவர்கள் பணியாளர்களை அந்தந்தப் பகுதியில் நியமித்திருக்கிறார்கள். இப்போது அதை நிறைவு செய்ய இயலாது.

[1999 ஏப்ரல் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 512, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**512—**

**சட்டக் கல்லூரிகளில் தமிழ்வழிப் புத்தகங்கள்**

***17336—திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள சட்டக் கல்லூரிகளில் போதுமான அளவு தமிழ்வழிப் புத்தகங்கள் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 513, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**513—**

**கைத்தறித் துணிகள் தேக்கம்**

***17297—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலத்தில் கைத்தறித் துணிகள் விற்காமல் தேங்கிக் கிடப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.



1999 ஏப்ரல் 23]

(ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலத்தில் இயங்கி வரும் மூன்று நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 31-3-1998-ல் மொத்த ஜவுளி இருப்பு ரூ. 3.19 இலட்சம் ஆகும். மேலும் 30-4-1998 அன்று சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ள 30% சிறப்புத் தள்ளுபடியைத் தொடர்ந்து, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனை அதிகரித்து வருகிறது. எனவே தாரமங்கலம் பகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தற்பொழுது விற்பனையாகாமல் ஜவுளி இருப்பு அதிக அளவில் இல்லை.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலத்திலே அண்ணா கூட்டுறவு கைத்தறிச் சங்கம், பெரியார் கூட்டுறவு கைத்தறிச் சங்கம், என இரண்டு கூட்டுறவு கைத்தறிச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. அந்த இரண்டு கைத்தறிச் சங்கங்களிலே இருக்கின்ற நெசவாளர்கள் மிகவும் மோசமான நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் போதுமான நூல்கள் வழங்கப்பட்டு, அவர்களுக்கு போதுமான பணிகள் கொடுக்கப்படவில்லை. அதற்குக் காரணம், ஜவுளிகள் தேக்கம் இருக்கின்ற காரணத்தினால் அந்த நிலைப்பாடு இருக்கிறது. இன்னமும் அந்த நிலைப்பாட்டில்தான் அந்தக் கிராமங்களில் உள்ள மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா? அதைச் சரி செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 1998 ஆம் ஆண்டு மே மாதம் போடப்பட்ட கேள்வி. அடுத்து, ஜூன் மாதத்திலே அங்கே சுமார் 1 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிகள் விற்கப்பட்டு, 3.19 இலட்சத்திலிருந்து 2.70 இலட்சத்திற்கு அந்த 1 மாத காலத்தில் அங்கே தேக்கம் நீக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து அளிக்கப்பட்டுவந்த 30 சதவிகிதத் தள்ளுபடியினால் ஓரளவிற்கு இன்று தேக்கம் குறைந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் விளக்கமாக இப்போது இருக்கின்ற நிலையைத் தெரிவிக்கச் சொன்னார். அதை எப்படிக் கொள்முதல் செய்வது என்ற அடிப்படையிலே அரசு சிந்தித்துச் செயலாற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 514, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 23

**514—**

**பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்குக் கட்டடம்**

***20669—திரு ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, பாபநாசம் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்கு நிரந்தரக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பாபநாசம் தொகுதி, பாபநாசத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி இயங்கவில்லை. இருப்பினும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி ஒன்று அங்கு இயங்கி வருகிறது. அவ்விடுதிக்கு அரசு சொந்தக் கட்டடம் கட்டித் தருவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், கொஞ்சம் அமைதியாக இருக்க வேண்டும். இது சட்டமன்றம். திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, பாபநாசத்தில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி, வாடகைக் கட்டடத்திலே இயங்கிக் கொண்டு வருகின்றது. அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படுமா என்பதையும் அய்யம்பேட்டை, சுவாமிமலை, சோழபுரம் போன்ற நகரப் பேரூராட்சிகளில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டு பகுதி 2 திட்டத்தில் விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவது குறித்த திட்டம் இடம் பெறவில்லை. அதேபோல புதிய விடுதிகள் தொடங்குவதற்கும் வாய்ப்பில்லை.



1999 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 515, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**515—**

**குறுந்தொழிற்பேட்டை அமைத்தல்**

***15056—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், பாலவாக்கம் பகுதியில் குறுந்தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில். அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், பாலவாக்கம் பகுதியில் குறுந்தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலவாக்கத்தை ஒட்டிய பெருங்குடி, துரைப்பாக்கம் பகுதிகளில் தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. அந்த இடத்திலே தொழிற்பேட்டைகள் இருக்கின்ற காரணத்தினாலே அங்கே ஒரு குறுந்தொழிற்பேட்டை தொடங்கினால் பட்டதாரிகள் மட்டுமல்ல, தொழிலில் அனுபவம் பெற்றிருப்பவர்களும் சுய வேலை வாய்ப்பு பெறுவதற்கு வசதியாக இருக்கும்; பல்லாயிரக் கணக்கானவர்களிடையே வேலைவாய்ப்பு இல்லை என்ற நிலையைப் போக்கும் என்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அங்கே ஒரு குறுந்தொழிற்பேட்டையை உருவாக்க ஆவன செய்வாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காஞ்சிபுரம்

[1999 ஏப்ரல் 23

மாவட்டத்திலே, ஆலத்தூர், திருமுடிவாக்கம், இருங்காட்டுக்கோட்டை, மெய்யூர் கிராமம், ஒரகடம் கிராமம் மற்றும் புதுப்பாக்கம் கிராமம், சிறுவேடல் கிராமம், புள்ளேரி கிராமம் போன்ற பகுதிகளிலே இருக்கின்ற அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களையும், புறம்போக்கு நிலங்களையும் கையகப்படுத்துவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதப்பட்டு, அவற்றிலே இரண்டு, மூன்று இடங்களிலே—இருங்காட்டுக்கோட்டையிலே—4.15 கோடி ரூபாயிலே இடம் வாங்கப்பட்டிருக்கிறது. இன்னும் பல இடங்கள் பெறுகின்ற நிலைலே இருக்கின்றது. எனவே காஞ்சிபுரம் மாவட்டத்திலே பல தொழிற்பேட்டைகள் அமைவதற்கு உரிய வாய்ப்புக்களை இந்த அரசு உருவாக்கி இருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாம்பரம் பகுதியிலே உருவாக்க வேண்டும் என்றால் அதற்குரிய வாய்ப்பு இருக்குமானால் அரசு தரிசு நிலமோ, புறம்போக்கு நிலமோ இருந்தால், அதைப்பற்றித் தெரிவித்தால் அதுகுறித்து உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

முற்பகல் 10-15

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் என்ன, காஞ்சிபுரம் மாவட்டமா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை, பொதுவாகக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, கேளுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கேள்வி பதில் நிகழ்ச்சியிலே கிட்டத்தட்ட மூன்று அமைச்சர்கள், இது 1997 ஆம் ஆண்டு கேட்கப்பட்ட வினா, 1997ஆம் ஆண்டு கேட்கப்பட்ட வினா என்று கூறியிருக்கிறார்கள். இப்போது நடப்பது 1999 ஆம் ஆண்டு. இரண்டு ஆண்டுகளாக ஒரு வினாவிற்கு பதிலைக் கொடுக்க முடியவில்லை என்றால் நாம் எப்படி சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்ற முடியும்? ஆகவே, தாங்கள் இதுபற்றி துறைக்கு ஒரு குறிப்பிட்ட கால அளவில்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஏற்கெனவே இதுபற்றிச் சொல்லியிருக்கிறேன்.



1999 ஏப்ரல் 23]

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நீங்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இது 1997 ஆம் வருடம் கேட்டகேள்வி என, 3 அமைச்சர்கள் சொல்லியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் ஆகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப்பற்றி நான் ஏற்கெனவே அறிவித்து விட்டேன், நீங்கள் உட்காருங்கள்.

அடுத்து, வினா எண் 516, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**516—**

**குழந்தைகள் காப்பகம்**

***22609—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடியில் புதிதாகக் குழந்தைகள் காப்பகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி மிகமிகப் பின்தங்கிய மக்கள் வாழக்கூடிய பகுதி. ஆதிதிராவிடர், அருந்ததி மக்கள் பெரும்பகுதி வாழுகின்ற இடம். அங்கே தாயை இழந்த சிறார்கள், குழந்தைகள் மி அதிகமாக இருப்பதாலும், அவர்களுடைய வறுமையைக் கருத்தில் கொண்டும் புதிதாக ஒரு குழந்தைகள் காப்பகம் தொடங்க தமிழ அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் தற்போது சேலம் மற்றும் ஆத்தூர் ஆகிய இரண்டு இடங்களிலும் அரசு குழந்தைகள் காப்பகங்கள் இயங்கி வருகின்றன. இதில் 250 மாணவியர் தங்குவதற்கு வாய்ப்புண்டு. அதைப்போல ஆத்தூர் அரசு குழந்தைகள் காப்பகத்தில் 100 குழந்தைகள் அனுமதிக்கப்பட இருக்கிறார்கள். எனவே மாவட்டத்தில் இரண்டு

[1999 ஏப்ரல் 23

காப்பகங்கள் இருக்கின்ற காரணத்தினாலும் மாணவர்கள் சேர்க்கைக்கு அதில் இடவசதி இருக்கிற காரணத்தினாலும், புதியதாக எடப்பாடியிலே அரசு காப்பகம் தொடங்குவதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடியிலேயிருந்து ஆத்தூர் கிட்டத்தட்ட 100 கிலோமீட்டர். எடப்பாடியிலேயிருந்து சேலம் 40 கிலோமீட்டர். நான் கேட்பது சேலத்தினுடைய கடைக்கோடியிலே இருக்கக்கூடிய எடப்பாடிப் பகுதிக்கு. அது மிகமிகப் பின்தங்கிய பகுதி. ஆகையால் அமைச்சர் அவர்கள் அதன்மீது தனிக் கவனம் செலுத்தி ஏழைக் குழந்தைகளைக் காப்பாற்ற முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன், அதுவும் தாயுள்ளத்தோடு.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாகத் தொடங்கப்பட்ட 7 மாவட்டங்களிலே இன்னும் அரசு காப்பகங்கள் அமைக்கப்படாத நிலை உள்ளது. ஏற்கெனவே இரண்டு காப்பகங்கள் இந்த மாவட்டத்தில் இயங்கி வருகிற காரணத்தினால் புதியதாக அரசின் சார்பில் மற்றொரு காப்பகம் தொடங்குவதற்கு வாய்ப்பில்லை என்றுதான் அவருக்கு நான் தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதரவற்ற குழந்தைகள் நிறையபேர் இருக்கிறார்கள், அவர்களைக் காப்பகத்தில் சேர்க்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாகக் குழந்தைகளைச் சேர்ப்பதற்கு அங்கு வாய்ப்புண்டு. யார் யாரைச் சேர்க்க வேண்டும் எனக் குறிப்பிட்டுச் சொன்னால் அருகிலேயுள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் அந்தக் குழந்தைகளைச் சேர்ப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 517, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

**517—**

### ஆதிதிராவிடர் நல மாணவியர் தங்கும் விடுதி

***11741—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 ஏப்ரல் 23]

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், பொன்னூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் நல மாணவியர் தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பொன்னூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி இதுவரை தொடங்கப்படவில்லை. தொடங்கப்பட்ட பின்னர்தான் விடுதி கட்டுவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் அங்கு மாணவியர் விடுதி இன்னும் தொடங்கப்படவில்லை என்பது உண்மைதான். பொன்னூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலேயிருந்து ஆதிதிராவிட மாணவியர் நீண்டதூரம் பயணித்து நடந்து சென்றுதான் பொன்னூர் உயர்நிலைப் பள்ளியிலே கல்வி பயில்கின்றார்கள். எனவே அங்கு ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி தொடங்குவது சாத்தியமாக இருக்கும். இந்த நிதியாண்டிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி தொடங்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னூர் கிராமத்தில் புதியதாக மாணவியர் விடுதி தொடங்குவதற்கு அரசுக்கு முன்மொழிவு வந்திருக்கிறது. அவசியம், தேவையிருப்பின், தகுதியிருப்பின் முன்னுரிமை அடிப்படையில் விடுதி தொடங்கப்படும். விடுதி தொடங்கிய பிறகு நிதிநிலைமைக்கேற்ப முடிவு எடுத்து விடுதி கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 518, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

518—

**ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு விடுதிகள்**

***16203—திரு. இரா. மகேந்திரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளி, கந்திலி, புதுப்பேட்டை ஆகிய கிராமங்களில் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு விடுதிகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை. வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 519, திரு. செங்கை சிவம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

519—

**படகு இல்லத்தை விரிவுபடுத்துதல்**

***14749—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் படகு இல்லத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் படகு இல்லத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஏரியைச் சுற்றி நடைபாதை அமைக்கும் திட்டம் உள்ளதா? 1998-99 ஆம் ஆண்டு மலைப் பகுதி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சுற்றுலாப் பயணிகளைக் கவர திட்டம் தீட்டப்பட்டுள்ளதா? சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய அளவில் என்னென்ன விழாக்கள் நடைபெறுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் படகு வளாகத்திற்கு நடைபாதை அமைப்பதற்காக 9 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் மிக விரைவிலே தொடங்கப்படவிருக்கின்றன. அதுபோல், நீலகிரி மாவட்டத்தில் பல விழாக்கள் சுற்றுலாத் துறை மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜனவரி மாதம் தேயிலை மற்றும் சுற்றுலா தின விழா; மே மாதம் கோடை விழா; ஜூன் மாதம் உலகச் சுற்றுலா மற்றும் பாதுகாப்பு நாள்; செப்டம்பர் 27 உலகச் சுற்றுலா தின விழா என்று பல வகைகளிலே விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டு மலைப் பகுதி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூபாய் 73 இலட்சத்திற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ரங்கநாதன்.

**திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகையிலே உள்ள படகு இல்லம் பழமை வாய்ந்தது. அது 40 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டது. 10 ஆண்டுகளுக்கு முன்பு வரையிலே படகு இல்லம் விஸ்தரிப்பு செய்யப்படவில்லை. சுற்றுலாப் பயணிகள் மிக அதிக அளவிற்கு வந்து போகிற ஒரு முக்கியமான இடமாக உதகை உள்ளதால் அங்குள்ள படகு இல்லத்தை விஸ்தரிக்க அவசர அவசியம் கருதிச் செய்ய, இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1999 ஏப்ரல் 23

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலையைப் பொறுத்து வருங்காலத்திலே விரிவுபடுத்துவதற்கான திட்டங்கள் பற்றி பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக மக்களைக் கவருகிற சுற்றுலாத் தலமான உதகை படகு இல்லத்தில் தற்போது ஆகாயத் தாமரை என்னும் ஒரு செடி படர்ந்துள்ளதால் ஏரியில் படகு சவாரி செய்வதற்குத் தடையாக இருக்கிறது. பல கட்டங்களிலே அந்த ஆகாயத் தாமரைச் செடியை அகற்றி எடுத்தாலும் தொடர்ந்து வளர்ந்துகொண்டே வருகிறது. விவசாயத் துறையில் பார்த்தீனியம் செடியை ஒழிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையைப்போல், விவசாயத் துறையோடு சேர்ந்து இந்த ஆகாயத் தாமரைச் செடியை அடியோடு அகற்றி அது மேலும் வளராமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படகுத் துறையைப் பொறுத்தமட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கட்டளைக்கிணங்க, அவர்கள் அறிவுறுத்தியபடி இந்த ஆண்டு 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு அந்த ஆகாயத் தாமரைச் செடியை அகற்றுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஆகாயத் தாமரைச் செடியை வேறு மருந்துகள் மூலமாக ஒழிக்க முடியுமா என்று கேட்டார்கள். மருந்துகள் மூலமாக ஒழிக்கின்றபோது அதன் மூலமாக பக்க விளைவுகள் ஏற்படக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது என்று துறை கருதுகின்ற காரணத்தால், மாண்புமிகு விவசாயத் துறையினுடைய அமைச்சர் அவர்களிடமும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும் கலந்துபேசி, மேற்கொண்டு என்ன பணிகள் செய்யப்படும் என்பது பின்னால் தெரிவிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 520, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 23]

**520—**

**மீனவர்களுக்குச் சமுதாயக் கூடம்**

***14947—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சரபேந்திரராஜபட்டினம் ஊராட்சியில் மீனவர்களுக்குச் சமுதாயக் கூடம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சரபேந்திரராஜபட்டினம் முற்றிலும் மீனவர்கள் உள்ள கிராமம். அங்கே அதிகப்படியான மீன்பிடித் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். அங்கேயிருக்கின்ற இடமெல்லாம் ஏறக்குறைய 70 சதவீதம் வேதாரண்யம் தேவஸ்தானத்திற்குச் சொந்தமாக இருக்கின்ற காரணத்தினாலே அங்கே வீடுகள்கூடக் கட்ட முடியாமல் குடிசைகளிலே வாழ்கின்றார்கள். அவர்கள் இல்லங்களிலே நடைபெறுகின்ற திருமணம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் மற்றும் மழை, புயல் காலங்களிலே தங்குவதற்கும் வசதியாக, மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்து அங்கே சமுதாயக் கூடம் அமைக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த மீனவ கிராமத்தை மாதிரி கிராமமாகத் தேர்வு செய்த பின்தான் அங்கே ஒன்றேகால் இலட்சம் ரூபாயில் 200 சதுர மீட்டரில் சமுதாயக் கூடம் அமைத்துத் தர முடியும். இதற்கு மத்திய அரசும், மாநில அரசும் 50 சதவீதம், 50 சதவீதம் என்ற வீதத்தில் நிதி ஒதுக்கீடு செய்து பணி செய்யப்படுகிறது. இப்படி மாதிரி கிராமமாக ஒரு மீனவ கிராமம் தேர்வு செய்யப்பட வேண்டுமென்றால் சற்றேறக்குறைய 75 தொகுப்பு வீடுகள், 35 சதுர மீட்டர் அளவில் இருக்க வேண்டும். அதன் அடிப்படையில்தான்

[1999 ஏப்ரல் 23

மாதிரி கிராமம் தேர்ந்தெடுக்கப்பட முடியும். மேலும் கலைஞர் ஆட்சியில் 4000 வீடுகள் ஆண்டொன்றுக்குக் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் மீனவர்கள் நிலங்களை எங்களுக்கு ஒப்படைக்க வேண்டும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரவர்கள் அந்த மீனவ கிராமத்திற்கு இடங்களைத் தேர்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகினால் நிச்சயமாக வறுமைக் கோட்டின்கீழ் வாழ்பவர்களுக்கு நிலங்களெல்லாம் ஒதுக்கீடு செய்வார்கள். நடப்பு நிதியாண்டில் அவர்களுக்கு நாங்கள் 75 வீடுகள் ஒதுக்கீடு செய்து, பின்னர் அதை மாதிரி கிராமமாகத் தேர்வு செய்து, 20 வீடுகளுக்கு 25 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு குடிநீர் ஆழ்குழாய் வீதம் 75 வீடுகளுக்கும், மேலும் அங்கே சமுதாயக் கூடத்திற்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் தனித்தனியாக இரண்டு கழிப்பறைகளும் ஓர் ஆழ்குழாயும் கட்டித் தருவதையும் அந்தத் திட்டத்தில் நாங்கள் சேர்த்துக்கொள்வோம். அல்லது மாண்புமிகு முதல்வரவர்கள் நமக்கெல்லாம் சட்டமன்ற உறுப்பினர் நிதி என்று 50 இலட்சம் ரூபாய் தந்திருக்கிறார்கள். அதில்கூட தாங்கள் அருள்கூர்ந்து அந்த மீனவ கிராமத்திற்கு சமுதாய நலக் கூடம் கட்டிக் கொடுக்கலாமே என்ற எனது எளிமையான கருத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் காவல் நிலையத்தில் சித்திரவதை செய்யப்பட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு . . .

**திரு. கே. சுப்பராயன்:** தலைவரவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான், order of business படி எடுத்துக்கொண்டிருக்கும் பொழுது...(குறுக்கீடு) Agenda-விலே இருக்கிறது. Agenda-விலே இல்லாததை raise பண்ணுவது பற்றி பின்னாலேதான் நான் அனுமதிக்க வேண்டும். இதெல்லாம் மூத்த உறுப்பினராகிய உங்களுக்குத் தெரிய வேண்டாமா?

மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் அண்ணாதுரை, அந்தோணிசாமி ஆகியோர் காவல் நிலையத்தில் அடைத்து வைத்து



1999 ஏப்ரல் 23] [பேரவைத் தலைவர்]

சித்திரவதை செய்யப்பட்டது குறித்து டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கின்றார்கள். டாக்டர் கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆகஸ்ட் மாதம் 20ஆம் தேதியிலிருந்து ஏறக்குறைய 5 மாதங்களுக்கும் மேலாகப் பல்லாயிரம் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி, அதற்குப் பிறகு கடந்த ஜனவரி மாதம் 11ஆம் தேதியிலேயிருந்து தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் வேலைக்குத் திரும்பி, தங்களுடைய பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், மாஞ்சோலைப் பகுதியில் அவர்கள் கடந்த ஆகஸ்ட் மாதத்திலேயிருந்து 5 மாதங்களுக்கும் மேலாகப் போராட்டம் நடத்தியதன் காரணமாக, அந்தத் தொழிலாளர்களை எப்படியாவது பழி வாங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு B.B.T.C. நிருவாகம், வேலைக்குத் தொழிலாளர்கள் திரும்பியிருந்தாலும்கூட, அவர்கள்மீது பல்வேறு பழி வாங்கும் நடவடிக்கைகளை கடந்த 3 மாதங்களாக எடுத்துக்கொண்டே வந்திருக்கின்றது. குறிப்பாக அங்கிருக்கக்கூடிய காவல் துறையைப் பயன்படுத்தி, அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்கள் வேலைக்குப் போவதைத் தடுத்தார்கள் அல்லது சண்டைக்கு வந்தார்கள் என்றெல்லாம் வேலைக்குச் சென்று கொண்டிருக்கக்கூடிய தொழிலாளர்கள்மீதே தொடர்ச்சியாகப் பல பொய் வழக்குகளைப் பதிவு செய்து, அவர்கள்மீது, பழி வாங்கும் நடவடிக்கையை எடுத்துக் கொண்டு வந்தது. இன்னும் சொல்லப்போனால் ஒரு காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கையைப்போல, மாலை 6 மணிக்கு மேலே தொழிலாளர்கள் மளிகை சாமான்கள் வாங்கக் கடைக்கு வந்தாலும்கூட, அங்கு இருந்த காவல் துறை சார் ஆய்வாளர் ** அடித்து விரட்டுகின்ற நடவடிக்கைகளை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெயர் சொல்லாதீர்கள் நான் பெயரை அனுமதிக்க மாட்டேன். நீங்கள், சார் ஆய்வாளர் என்றால் முதலமைச்சருக்குத் தெரியும் யார் என்று. (குறுக்கீடு) அதைச் சொல்லக்கூடாது. நீங்கள் ஏற்கெனவே சொல்லியிருந்தால் தப்பு. யார் சொன்னாலும் அது தப்பு. (குறுக்கீடு) நான் ஏற்கெனவே தப்பு பண்ணியிருந்தாலும் அதைத் திருத்திக்கொள்கிறேன். நீங்கள் இப்பொழுது பேசுங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1999 ஏப்ரல் 23

முற்பகல் 10-30

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அந்த சார் ஆய்வாளர் மாலை 6 மணிக்குப் பிறகு கடைக்குச் செல்லக்கூடிய அத்தனை தொழிலாளர்களையும் அடிப்பது, உதைப்பது, இதுபோன்ற மிரட்டுகின்ற நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார். அதனுடைய உச்சகட்டமாகக் கடந்த 18ஆம் தேதியன்று எந்தத் தவறும் செய்யாமல் இருந்த இரண்டு தொழிலாளர்கள் - அண்ணாதுரை, அந்தோணிசாமி ஆகியோரை, சாதாரணமாக எந்த வழக்குமே இல்லாமல் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, அவர்களை லாடம் கட்டி அடித்து இப்பொழுது அவர்கள் ஆபத்தான நிலையிலே இருக்கிறார்கள். குறிப்பாக அண்ணாதுரை பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்; அந்தோணிசாமி தனியார் மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகிறார். இப்படிப்பட்ட கொடுமைகளெல்லாம் நடந்து வருகின்றன. இப்போது மாஞ்சோலையில் இருக்கிற காவல் துறை, B.B.T.C நிருவாகமாகவே மாறி, தொழிலாளர்களுக்கு எதிராக இந்தக் கொடுமையைச் செய்து வருகிறது என்பதை இந்த மாமன்றத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல இந்தக் காரியத்தை எதற்காகச் செய்கிறார்கள் என்றால்—இது முன்கூட்டியே திட்டமிட்ட செயல்—அவர்கள் கடந்த ஐந்து மாதங்களாகப் போராட்டம் நடத்தியதற்காகப் பழிவாங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அங்கே இருக்கிற தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்வதற்கு திட்டமிட்டு, இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அதன தொடர்பாகக் கடந்த 20ஆம் தேதியிலிருந்து 600-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களை திடீர் என்று வேலைநீக்கம் செய்திருக்கிறார்கள். எனவே இது ஒரு மிகக் கொடுமையான செயல். ஒரு வாரத்திற்கு முன்பு சட்டமன்றத்திலே 8 மணிநேர வேலையைப் பற்றி நான் பேசினேன். இது சம்பந்தமாக நான் அமைச்சரோடு கலந்து பேசினேன். இரண்டு முறை பேச்சுவார்த்தை நடந்திருக்கிறது. கடந்த 21ஆம் தேதி அன்றுகூட பேச்சுவார்த்தைக்கு முடிவு செய்யப்பட்டது. ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் யாரோ இரண்டு பேரைக் காவல் துறை சித்திரவதை பண்ணினார்கள் என்று அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் இந்த ஒரு மாதமாக சட்டமன்றத்தில் பேசியது பூராவையும் இதில் இணைத்துச் சொல்வதை எல்லாம் நான் எப்படி அனுமதிக்க முடியும்? இந்த 8 மணி நேரம் வேலை 600 பேரை வேலையிலிருந்து அனுப்பிவிட்டார்கள் என்பதையெல்லாம் எப்படி இந்த இரண்டு பேரை சித்திரவதை பண்ணியதற்குத் தொடர்பாகக் கொள்ள முடியும்? ஆகையினாலே நீங்கள் சுருக்கமாகப் பேசுங்கள் என்று ஏற்கெனவே உங்களிடம் சொல்லிவிட்டேன்.



1999 ஏப்ரல் 23]

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பிரச்சினைக்குக் காரணமே அதுதானே. அதாவது தொழிலாளர்கள் காலையில் ஆறரை மணிக்கு வேலைக்குப் போய்விடுகிறார்கள். மூன்றரை மணிக்கு இறங்கி வந்துவிடுகிறார்கள். இதை எப்படியாவது கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக தொழிலாளர்களைக் கொடுமைப்படுத்தி, அடக்கி, ஒடுக்கி, நிருவாகத்தினுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்பதற்காக இப்படிப் பயமுறுத்துகிறார்கள். ஆகவே இதற்கும் அதற்கும் சம்பந்தம் இருக்கிறது என்பதற்காக நான் சொல்கிறேன். பேச்சுவார்த்தைக்கு அமைச்சரே அழைத்திருக்கிறார். 21ஆம் தேதி பேச்சுவார்த்தை என்று சொல்லியும்கூட நிருவாகம் வரவில்லை என்றால் தமிழ்நாட்டில் உழைத்துப் பிழைக்கக்கூட தொழிலாளர்களுக்கு உரிமை இல்லாவிட்டால், இதை எப்படி ஏற்றுக்கொள்வது? காவல் துறையை வைத்து தொழிலாளர்களைக் கொடுமைப்படுத்த அனுமதிக்கலாமா? ஏறத்தாழ 300-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள்மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. ஆனால் பேச்சுவார்த்தைக்கு நிருவாகம் வரவில்லை. அதற்கு மாறாக தொழிலாளர்களைக் கொடுமைப்படுத்தக்கூடிய செயல் நடக்கிறது. கொடுமைப்படுத்தி உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிற, இந்த அண்ணாதுரையைத் தாக்கிய காவல் துறையினர்மீது நீங்கள் சட்டபூர்வமான கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த S.I., suspend செய்யப்பட வேண்டும். பேச்சுவார்த்தைக்கு நிருவாகம் 21ஆம் தேதி வரவில்லை. கர்நாடகத்தில் பேச்சுவார்த்தைக்கு வரவில்லையென்றால் அவர்களைச் சட்டபூர்வமாகக் கைது செய்து கொண்டு வந்து பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள வைக்கக்கூடிய அளவுக்குச் சட்டத்தில் இடம் இருக்கிறது. தொழிலாளர்கள் 600 பேர் நேற்றிலிருந்து வேலைக்குச் செல்லாமல், வேலையில்லாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை, வீட்டைக் காலி செய்ய வேண்டுமென்று காவல் துறை துன்புறுத்தி வருவதாகக் கேள்விப்படுகிறேன். எனவே தொழிலாளர்கள் யாரும் வேலையிழந்துவிடக் கூடாது. அவர்கள் அந்த வீட்டிலேயே இருக்க வேண்டும். உடனடியாக வேலை கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளாததற்கு நிருவாகத்தினரைக் கைது செய்தாவது பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளச் செய்ய வேண்டும். குற்றம் புரிந்த சார் ஆய்வாளர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*[1999 ஏப்ரல் 23*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே கொடுத்துள்ள சிறப்புக் கவன ஈர்ப்பின் பேரில் எடுத்துரைத்த கருத்துக்களையொட்டி சிலவற்றை நான் விளக்க விரும்புகின்றேன். இதுபற்றி காவல் துறையின் சார்பாக எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்கள் என் கையிலே இருக்கின்றன. நான், அதனைத் தொடர்ந்து மேற்கொண்டு நடத்திய விசாரணை பற்றிய விளக்கங்களும் என்னுடைய கையிலே இருக்கின்றன. இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பற்றியும் கூற விரும்புகின்றேன்.

பேரவைத் தலைவராகிய தாங்கள் குறிப்பிட்டதைப்போல, திரு. கிருஷ்ணசாமியால் கொடுக்கப்பட்டுள்ள சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பில் "அம்பை தாலூகா, மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் அண்ணாதுரை, அந்தோணிசாமி ஆகியோரை *18-4-1999* அன்று சட்டவிரோதமாக மாஞ்சோலை காவல் நிலையத்தில் அடைத்துவைத்து, சித்திரவதை செய்யப்பட்டது குறித்து" என்றுதான் குறிப்பிட்டிருக்கின்றார். அதையொட்டி அதனுடைய பின்னணியாக உள்ள தோட்டத் தொழிலாளர்களுடைய கோரிக்கைகள், அதன் தொடர்பாக எழுந்த கிளர்ச்சிகள், நிருவாகம் நடந்துகொண்ட முறை, அதற்குக் காவல் துறை துணை போனதாக ஒரு புகார் இத்தனையும் அவருடைய பேச்சிலே இடம்பெற்றது.

திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் வட்டம், மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினை, கடந்த சில மாதங்களுக்கு முன்பு உருவாகி, பிறகு அமைதி ஏற்பட்டு, தொழிலாளர் ஊதிய விகிதம் குறித்து முத்தரப்புப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. அவர்கள் குறிப்பிட்ட இந்தப் பிரச்சினையிலேகூட, அண்மையிலே இரண்டொரு நாட்களுக்கு முன்பு நிருவாகத்தின் மூலமாகத் தரப்பட்டுள்ள notice, தொழிலாளர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விதத்திலே வழங்கப்பட்டுள்ள மிரட்டல் இவைகள் அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்றன. நேற்றையதினம் தொழிலாளர் நலத் துறை அமைச்சரை அழைத்து அதுபற்றி நான் பேசியிருக்கின்றேன். வருகின்ற 24ஆம் தேதியன்று பேச்சுவார்த்தையில் இரு தரப்பினரும் கலந்துகொள்ள இருக்கின்றார்கள் என்று தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்கள் என்னிடத்திலே தெரிவித்திருக்கின்றார்.



*1999 ஏப்ரல் 23]* [கலைஞர் மு. கருணாநிதி]

வேண்டுமென்றே நிருவாகம் இந்தப் பேச்சுவார்த்தையைப் புறக்கணிக்குமேயானால் தொழிலாளர்களுக்கு ஏதுவாக உள்ள சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது என்பதை நான் முதலிலேயே தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10-35*

இந்தச் சூழ்நிலையில் மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்களான அந்தோணிசாமி, அண்ணாதுரை ஆகியோர் — இது காவல் துறை தந்த குறிப்பு — *18* ஆம் தேதியன்று காலை சுமார் *10-30* மணியளவில் மாஞ்சோலை பேருந்து நிறுத்தம் அருகில் நின்றுகொண்டு, தொழிலாளர் நல ஆணையர் *19* ஆம் தேதியன்று நடத்தும் கூட்டத்தில் B.B.T.C. நிருவாகம் தொழிலாளர்களுக்குச் சாதகமாக இல்லையென்றால், தொழிலாளர்கள் யாரும் வேலைக்குப் போகக்கூடாது என்றும், அப்படி யாராவது போனால், அவரது மனைவியை நடுவீதியில் கற்பழிக்க வேண்டுமென்றும் அவதூறாகப் பேசி, பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்க முயன்றதாகவும், எனவே, அவர்களைக் கைது செய்து, காவல் நிலையத்தில் இரண்டு வழக்குகளைப் பதிவு செய்ததாகவும், அன்றையதினம் பிற்பகல் *1-00* மணியளவில் அவர்கள் ஜாமீனில் விடுவிக்கப்பட்டுவிட்டார்கள் என்றும், காவல் துறை சார்பில் கூறப்பட்டுள்ளது.

இவர்களில் அண்ணாதுரை மறுநாள் *19-4-1999* அன்று மதியம் சுமார் *3-00* மணியளவில் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் சென்று, மாஞ்சோலை காவல் நிலையத்தில் *18* ஆம் தேதியன்று, மூன்று அடையாளம் தெரிந்த காவலர்களால், தான், பிரம்பு, கம்பு மற்றும் பூட்ஸ் காலால் தாக்கப்பட்டதாகக் கூறி, உள்நோயாளியாகச் சேர்ந்துள்ளார். அவர் உடலில் இடது பின்பக்கம் மற்றும் இடது விலாவில் வீக்கமும், இடது கன்னம் மற்றும் இடது மார்பில் வலியும் உள்ளதாக மருத்துவமனைப் பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து *21* ஆம் தேதி காலையில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்தவுடன், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு இதுகுறித்து உண்மை நிலவரங்களை அறிந்து எனக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டேன். அதே *21* ஆம் தேதி காலையில் புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த நெல்லை மாவட்டப் பொறுப்பாளர் திரு. அருள்ராஜ் என்பவர், தோட்டத்

[கலைஞர் மு. கருணாநிதி] [1999 ஏப்ரல் 23

தொழிலாளி அண்ணாதுரையின் மனைவி திருமதி குளோரி என்பவரோடு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சென்று புகார் மனு ஒன்றைக் கொடுத்துள்ளார். அந்தப் புகார் மனுவில் தொழிலாளி அண்ணாதுரையை மாஞ்சோலை காவல் நிலைய உதவி ஆய்வாளர் ஒருவரும் — நான் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை, இங்கே தாங்களே தடுத்து இருக்கின்றீர்கள்— அவரோடு இருந்த இரண்டு காவலர்களும், காவல் நிலையத்தில் அடித்துத் துன்புறுத்தியதாகவும், எனவே, காவல் துறையினர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். இதிலே வருந்தத்தக்க சம்பவம் என்னவென்றால், தாக்கப்பட்டதாகக் கூறப்படும் அண்ணாதுரையும், தாக்கியதாகக் கூறப்படும் காவல் துறை உதவி ஆய்வாளரும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுதான். இந்தச் சம்பவம் குறித்து உண்மை நிலையை அறிந்து கூற வேண்டுமென்ற எனது ஆணையின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர் 21 ஆம் தேதியன்றே பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருந்த அண்ணாதுரையை, வட்ட ஆட்சியரை அனுப்பி நேரில் பார்த்து வரச் செய்திருக்கிறார். அண்ணாதுரைக்கு இடது பக்க புட்டத்தில் ஊமைச் காயமும், இடது விலாப் புறத்தில் ஓர் ஊமைக் காயமும் ஏற்பட்டுள்ளது. வேறு இரத்தக் காயம் எதுவும் இல்லை. வட்ட ஆட்சியர் அவரை விசாரித்தபோது, காவல் நிலையத்தில் தன்னை உதவி ஆய்வாளர் மற்றும் இரண்டு காவலர்கள் அடித்துத் துன்புறுத்தியதாகவும் அதனால்தான் ஊமைக் காயங்கள் ஏற்பட்டன என்றும் கூறியிருக்கிறார். இந்த விசாரணையின் அடிப்படையில் இந்தச் சம்பவம் குறித்த முழு உண்மை நிலையை மேலும் அறிய, மாவட்ட ஆட்சித் தலைவர் சேரன்மகாதேவி கோட்ட ஆட்சியரைக் கொண்டு நீதி விசாரணை நடத்துவதற்கு உத்தரவிட்டுள்ளார். அவரது விசாரணை முடிவுற்றதும், விரிவான அறிக்கையை உடனடியாக எனக்கு அனுப்பும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். தற்போது அந்தப் பகுதியிலே எந்தவிதமான பதட்டமான நிலையும் இல்லை. எனவே இச்சம்பவத்தில் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கோட்ட ஆட்சியரின் அறிக்கை கிடைத்ததும், தொடர் நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும் என்ற உறுதியை இந்த அவைக்கு அளித்து, அமைகின்றேன்.

*முற்பகல் 10-40*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ..........



1999 ஏப்ரல் 23]

**HON. SPEAKER:** இதிலே clarification-க்கே இடம் கிடையாது. (Interruption) No. You are disturbing the proceedings of the House. I am repeatedly warning you. Every time you raise a motion and after a reply is given, you stand up. (Interruption) No. I do not give you permission.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுபோக வேண்டுமென்பதற்காக ஒன்றைச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னவென்று சொல்லுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 21 ஆம் தேதி சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுக்கிறபோது தொழிலாளர்கள் suspend பண்ணப்படவில்லை. இப்போது 600 தொழிலாளர்கள் கடந்த 21 ஆம் தேதி மதியத்திற்குப் பிறகு வேலையில்லாமல் இருக்கிறார்கள். அன்றிலிருந்து கடந்த 3 நாட்களாக அவர்கள் வேலைக்குப் போகவில்லை. அதனால்தான் இதை முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பினேன். காவல் துறை போய் அவர்களையெல்லாம் வீட்டை விட்டு வெளியேற்றுகிறார்கள். இப்படி திடீரென்று 600 பேர்களை வேலையை விட்டுப் போகச் சொன்னால் அவர்கள் எப்படிப் போக முடியும்? இது சட்ட விரோதமானது; பேச்சுவார்த்தை நடக்கிறபோது செய்யக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் அனுமதித்த 8 மணி நேரத்திற்குட்பட்டு அவர்கள் வேலை செய்யவில்லை என்று நிருவாகம் ஒருபுறத்திலே கூறினாலும், தொழிலாளர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டிருப்பது, unfair labour practice. ஆகையினால் இதுகுறித்து நாளை இருதரப்பாரையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறார்கள். இதை ஏற்று மாண்புமிகு உறுப்பினர் அமைதிகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

•

## 3. கவன ஈர்ப்பு

### வைகை ஆற்றில் உடைப்பு ஏற்பட்ட பகுதிகளில் தடுப்புச் சுவர் கட்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு

பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. திசைவீரன் அவர்கள் கொண்டு வருவார்.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பரமக்குடி தொகுதியில் வைகை ஆற்றில் வெள்ளப் பெருக்கால் உடைப்பு ஏற்பட்டுள்ள பகுதிகளில் தடுப்புச் சுவர் கட்டவேண்டிய அவசியம் குறித்த, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதிக்குட்பட்ட பகுதியில் சமீபத்தில் வைகை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கத்தால் உடைப்பு ஏற்பட்ட பகுதிகளை நிரந்தரமாக அடைப்பதற்கு மதிப்பீடுகள், செயற் பொறியாளர், பரமக்குடி அவர்களால் ரூ. 66,02,000-க்கு தயாரிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களின் ஒத்திசைவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீடு தொடர்பாக அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட உள்ளது என்றும் இதுகுறித்து அரசின் உத்தரவும், நிதி ஒதுக்கீடும் பெற்றபின் வைகை ஆற்றில் ஏற்பட்ட உடைப்புகள் நிரந்தரமாக அடைக்கப்படும் என மாவட்ட வருவாய் அலுவலர், இராமநாதபுரம் அவர்கள் தெரிவித்துள்ளார். இம்முன்மொழிவு குறித்து விரைந்து அரசுக்கு கருத்துரு அனுப்புமாறு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். மேற்கண்ட கருத்துரு கிடைக்கப்பெற்ற பின்னர் அரசு இதுகுறித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். ரூ. 66,02,000 மதிப்பீட்டில் திட்டம் உள்ளதாகவும், அரசு நிதியை எதிர்நோக்கி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு எனது சார்பாகவும் எனது தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். வெள்ளப் பெருக்கு ஏற்பட்டவுடன், நமது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்,





அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், நமது தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து அந்தப் பகுதிகளைப் பார்வையிட்டார்கள். பரமக்குடி நகரில் ஆரம்பித்து ஏறக்குறைய 40 கிலோமீட்டர் தூரத்திற்கு வைகை ஆற்றினுடைய இரண்டு புறங்களிலும் அதிகமான உடைப்பு ஏற்பட்டு கண்மாய்கள், கால்வாய்கள், சாலைகள் மிக அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே பரமக்குடி நகரில் அரசு மேல்நிலைப் பள்ளி, நேரு நகர், இலட்சுமணன் குடியிருப்பு, கங்கைகொண்டான், பகைவென்றி ஆகிய பகுதிகளிலே தடுப்புச் சுவர் கட்டியும், மீதமுள்ள பகுதிகளிலே தடுப்புக் கரை ஏற்படுத்தித் தரவும் கேட்டுக் கொள்கிறேன். எனவே உடைப்பு ஏற்பட்ட கண்மாய்கள் கால்வாய்களைச் சீர்படுத்தித் தர அரசு முன்வருமா? மழைக்காலம் வருமுன் கூடுதல் நிதி ஒதுக்கி பணி முடிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை பெய்த பெருமழையால் வைகையிலே கால்வாய்கள் உடைப்பு அல்ல, வைகையினுடைய கரையே உடைந்து, ஆற்றின் போக்கையே சில இடங்களில் மாற்றிவிட்டது. ஆக மாற்றப்பட்ட இடங்களிலே, இலட்சுமணன் குடியிருப்பு, பகைவென்றி, கங்கைகொண்டான், செவ்வூர், முதலூர் ஆகிய இடங்களில் பெரும் உடைப்பு ஏற்பட்டதை நானும் மற்ற அமைச்சர்களும் சென்று பார்த்தோம். அதற்கு நிரந்தரமான தீர்வை உருவாக்குவதற்கு 66 இலட்ச ரூபாய்க்கு மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒத்திசைவை எதிர்பார்த்தோம். ஆனாலும் உடனடியாக இதை வருகின்ற மழைக்காலத்திற்குள்ளாக செய்ய வேண்டுமென்ற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவிக்கிறேன். உலக வங்கி நிதியிலிருந்து அவற்றையெல்லாம் செப்பனிட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. விரைவில் அந்த வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

## 4. அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை குழுவின் தலைவர் திரு. ப. ரங்கநாதன் பேரவைக்கு அளிப்பார்.

[1999 ஏப்ரல் 23

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக, குழுவின் 174 முதல் 178 வரையிலான 5 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. விதி 111-ன்கீழ் மீன் வளத் துறை அமைச்சரின் அறிக்கை

### 20-3-1999 அன்று வினா எண் 120-ன்கீழ் திரு. மு. அப்பாவு கேட்ட துணை வினாவிற்கு அளித்த விடைக்குத் திருத்தம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 111-ன்கீழ் திருத்த அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 111-ன்கீழ், 20-3-1999 ஆம் நாளன்று வினா எண் 120-ன்கீழ் ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. அப்பாவு அவர்கள் கேட்ட துணை வினாவிற்கு அளித்த விடைக்கு கீழ்க்காணும் திருத்திய விடையை அளிக்க விழைகிறேன்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உவரி கிராமத்தில் கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதியில் தற்காலிகமாக தடுப்புப் பணிகளை மேற்கொள்ள திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர், 26-10-1997 அன்று ரூ. 2.00 இலட்சம் அளிக்க ஒப்பளிப்பு வழங்கியுள்ளார். இப்பணியை முடிக்க ரூ. 20 இலட்சம் செலவாகக்கூடும் என்று மதிப்பீடு செய்ததன் காரணமாக மாவட்ட ஆட்சியரால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரூ. 2 இலட்சத்தைப் பயன்படுத்தி பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும் ராதாபுரம் வருவாய் வட்டாட்சியரால் தற்காலிகப் பாதுகாப்பாக 2,000 மணல் மூட்டைகள் போட்டு தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

*முற்பகல் 10-45*

## 6. அரசினர் தீர்மானங்கள்

### (அ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து அரசினர் தீர்மானங்கள். மதிப்பீட்டுக் குழுவிற்குப் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர்.



1999 ஏப்ரல் 23]

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 195-ன்கீழ், 1999-2000 ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொதுக் கணக்குக் குழுவிற்குப் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 203-ன்கீழ், 1999-2000 ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

[பேரவைத் தலைவர்] [1999 ஏப்ரல் 23

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

### (இ) பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொது நிறுவனங்கள் குழுவிற்குப் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 211-ன்கீழ், 1999-2000 ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

### (ஈ) உரிமைக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, உரிமைக் குழுவிற்குப் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 227-ன்கீழ், 1999-2000 ஆண்டிற்கான உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி,



1999 ஏப்ரல் 23] [பேராசிரியர் க. அன்பழகன்]

பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 7. அறிவிப்புகள்

### (அ) பேரவைக் குழுக்களுக்கான தேர்தல் கால அட்டவணை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், மதிப்பீட்டுக் குழு (Estimates Committee), பொதுக் கணக்குக் குழு (Public Accounts Committee), பொது நிறுவனங்கள் குழு (Public Undertakings Committee), உரிமைக் குழு (Committee on Privileges) ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத்தாள்களை 1999-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30-ஆம் நாள் வெள்ளிக்கிழமை, பிற்பகல் 3-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாள்களை செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேட்புத்தாள்கள் 1999 ஆம் ஆண்டு மே திங்கள் 3 ஆம் நாள் திங்கட்கிழமை, மாலை 3-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1999 ஆம் ஆண்டு மே திங்கள் 4 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை, பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

[1999 ஏப்ரல் 23

## 8. தகவல் கோரல்

### (அ) சத்துணவுப் பணியாளர்களின் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் துறையில் பட்டதாரி சத்துணவுப் பணியாளர்கள் கடந்த 19 ஆம் தேதியிலிருந்து காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். அதிலே கிட்டத்தட்ட 300 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பலபேர் காலவரையற்ற உண்ணாவிரதம் காரணமாக மயங்கி மருத்துவமனையில் இருக்கிறார்கள். எனவே இவர்கள் முன்வைத்திருக்கிற கோரிக்கைகளில் அரசுப் பணியிடங்களில் காலியாகின்ற இடங்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலும், B.Ed. படித்தவர்களுக்கு ஆசிரியர் பணியிலேயும் இடம் பெற வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். நான் மாநில அரசிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது அவர்கள் போராட்டத்தைக் கைவிட்டு உடனடியாக பேச்சுவார்த்தைக்கு வரவேண்டுமென்று அழைத்து ஒரு சௌஜன்யமான சூழ்நிலையை உருவாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-50*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் அவர்கள் இதிலே அறிவிப்புக் கொடுத்ததாகச் சொல்கின்றார்கள். மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தெரிவித்தபடி, சத்துணவுப் பணியாளர்களில் பட்டதாரி ஆசிரியர் பயிற்சி முடித்தவர்கள், அரசு வேலைவாய்ப்பிலே முன்னுரிமை வழங்கி எங்களுக்கு அந்த வாய்ப்பை அளிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். இது சம்பந்தமாக அவர்கள் வைத்த கோரிக்கையை நாங்கள் ஏற்கெனவே, கல்வித் துறைக்கு அனுப்பி, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களிடத்திலே அவர்களே நேரடியாகச் சென்று இதுகுறித்து விளக்கத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஆசிரியர் தேர்வு என்பது, ஆசிரியர் தேர்வு வாரியத்தால் ஆசிரியர் பயிற்சி முடித்தவர்கள்



மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்து வைத்திருக்கின்ற மூப்பின் அடிப்படையிலேதான் தேர்வு செய்யப்பட முடியும் என்பதை நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், அவர்களிடத்திலே நேரடியாகத் தெரிவித்திருக்கிறார்கள். இதிலே இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. ஒன்று: பட்டதாரி ஆசிரியர்கள் என்பவர்கள் தாங்கள் சத்துணவு அமைப்பாளர்களாக சேர்ந்ததற்குப் பின்னால், அஞ்சல் வழிக் கல்வித் துறை மூலமாகப் பட்டம் பெற்றவர்கள் நிறைய இருக்கிறார்கள். இதிலே ஆசிரியர் பயிற்சி முடித்தவர்கள், B.Ed., பட்டம் முடித்தவர்கள் சுமார் 300-லிருந்து 400 பேர்வரை இருக்கிறார்கள். B.Ed., பட்டம் முடித்தவர்கள் எங்களுக்கு ஆசிரியர் வேலை கொடுத்தால் போதும் என்று கேட்கிறார்கள். அதேசமயத்திலே சத்துணவுப் பணியாளர்களாகத் தங்களை இணைத்துக்கொண்டு, பிறகு அஞ்சல் வழிக் கல்வி மூலமாகப் பட்டம் பெற்றவர்கள் அரசு வேலைவாய்ப்பிலேயே வெவ்வேறு துறைகளிலே இருக்கக்கூடிய Junior Assistant மற்றும் பல்வேறுவிதமான பணிகளிலே எங்களுக்கு வாய்ப்புத் தர வேண்டுமென்று கேட்டார்கள். 19 ஆம் தேதி உண்ணாவிரதம் இருந்தபோது அவர்களைப் பேசுவதற்காக அழைத்த நேரத்திலே அன்றைக்கு வரவில்லை. 20 ஆம் தேதி நான் அழைத்துப் பேசியபோது அவர்களிடத்திலே விளக்கமாகத் தெரிவித்தேன். நீங்கள் வைத்திருக்கின்ற கோரிக்கையை மற்ற துறைகளிலே தற்காலிகமாக இருக்கின்றவர்கள் வைத்தால் அதை எப்படி அரசு நிறைவேற்ற முடியும் என்பதை சிந்தித்துத்தான் இதில் முடிவு எடுக்க முடியும். அதேசமயத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான், தலைவர் கலைஞர் அரசுதான் உங்களுக்குப் பகுதிநேர நிரந்தர ஊழியர் என்பதையே 1989ஆம் ஆண்டிலே வழங்கியது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது என்பதை அவர்களிடத்திலே திட்டவட்டமாகத் தெரிவித்தேன். மீண்டும் உங்களுடைய கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கலந்து பேசி வருகின்ற காலகட்டத்திலே அதற்கு வாய்ப்பு இருந்தால் பரிசீலிக்க முடியும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்த உடனே, சமாதானம் அடைந்தார்கள். நாங்கள் விலக்கிக்கொள்கிறோம் என்ற அளவுக்குத்தான் 20 ஆம் தேதி நான் நடத்திய பேச்சுவார்த்தையிலே சமாதானம் அடைந்து சென்றார்கள். ஆனால் அப்படிச் சென்றதற்குப் பின்னால், மீண்டும் அவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட முடியாது, எங்கள்மீது ஏதாவது வழக்குப் போட்டுகூட நீங்கள் அழைத்துச் செல்லுங்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலேதான் அவர்களை

[திரு. இ. பெரியசாமி] [1999 ஏப்ரல் 23

இராஜரத்தினம் ஸ்டேடியத்திற்கு அழைத்துச் சென்று விடுவிப்பதற்கு அரசு முயற்சித்தாலும், அவர்கள் தங்களை விடுவித்துக்கொள்வதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. நாங்கள் சிறைக்குக்கூடச் செல்கிறோம் என்று சொல்கின்றார்கள். இந்த அரசைப் பொறுத்தவரை அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலிக்கிறோம் என்று சொன்னதற்குப் பின்னாலும் தொடர்ந்து அவர்கள் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டுச் செல்வதுதான் நல்லது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து உரிய விளக்கத்தை அமைச்சர் அவர்கள் இங்கே தந்திருக்கிறார்கள். ஆனாலும் திரு. சுப்பராயன் இங்கே பேசும்போது குறிப்பிட்ட ஒன்று—அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலே வைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதாகும். அதற்கு நான் பதில் அளிக்க வேண்டிய கடமை இருக்கிறது. நேற்றையதினம் மாலையிலே அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டார்கள். ஆனால், விடுவிக்கப்பட்டபோது, ‘எங்களை நீங்கள் விடுதலை செய்தால் சாலையின் குறுக்கே படுத்து மறியல் செய்வோம்’, ஆகவே, நாங்கள் வெளியே போகமாட்டோம், வெளியே அனுப்பினால், சாலையின் குறுக்கே படுத்துக்கொண்டு மறியல் செய்வோம்’ என்று சொன்னார்கள். அதை இந்த அரசு எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை சுப்பராயன் போன்றவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் அவர்கள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை.

**(ஆ) ஏரிகள் மற்றும் கண்மாய்கள் சிலவற்றைக் குடியிருப்புப் பகுதிகளாக மாற்றுவதற்கு பொதுப் பணித் துறை முயற்சிப்பதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி**

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சத்துணவுப் பணியாளர்கள் பிரச்சினையில் நான் அனுமதிக்கமாட்டேன்.

**திரு. ஆர். சொக்கர்:** இந்தப் பிரச்சினையில் இல்லை. அடுத்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.



1999 ஏப்ரல் 23]

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்து பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. அதாவது சில ஏரிகளை, சில கண்மாய்களை மூடிவிட்டு அங்கே குடியிருப்புப் பகுதிகளைக் கட்டுவதற்குப் பொதுப் பணித் துறை சில முயற்சிகளை மேற்கொண்டு இருப்பதாக அந்தச் செய்தி சொல்கின்றது. அந்த முயற்சி மேற்கொள்ளப்படுமானால், அதனால் பல மோசமான பக்க விளைவுகள் ஏற்படும். இது அதிர்ச்சி தரக்கூடிய செய்தியாக இருக்கிறது. ஆகவே விதி எண் 55-ன்கீழ் அரசினுடைய கவனத்தை ஈர்த்து இதனை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் ஏற்கெனவே முறையிட்டிருக்கின்றேன். ஆகவே அதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று நான் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு சந்தேகம். பொதுவாக கவன ஈர்ப்புத் தீர்மானம் என்றால், அதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்துவிடுவார்கள். அதன் நகல் எங்களுக்கு வரும். நாங்கள் பதில் சொல்லுவோம். ஆனால் விதி 55-ன்கீழ், இப்படிப்பட்ட பொருளை எடுத்துக்கொள்ளப் போகிறேன்; அதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்பதே சட்டமன்ற வரலாற்றிலே ஒரு விந்தையாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருக்கு உரிமை உண்டு. அவர் விதி 55-ன்கீழே அறிவிப்புத் தரலாம். அதை நீங்கள் எங்களுக்குத் தர வேண்டும்; நாங்கள் பதில் சொல்ல வேண்டும். ஆனால் இப்படிப்பட்ட ஒன்றை எடுத்துக்கொள்ள, அது என்ன பொருள் என்பதைச் சொல்லி, அதனாலே என்ன விளைவு ஏற்படும் என்ற கருத்தையும் சொல்லி, அதற்குப் பிறகு இப்படி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்பது, இந்த அவையிலே புதியதொரு முன்மாதிரியை உருவாக்குவதாக இருக்கிறது. இது என்னைப் பொறுத்தவரையிலே ஆச்சரியமாக இருக்கிறது. இருக்கட்டும். இரண்டாவது பிரச்சினை, (குறுக்கீடு) இப்பொழுதே நான் பதில் சொல்லிவிடுகிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதில் ஏற்படுகிற சிக்கல் என்னவென்றால், பொதுப் பணித் துறை அமைச்சரைப் பொறுத்தவரைக்கும், இந்த அவையில் இருக்கிற எந்த உறுப்பினர் வந்து கேட்டாலும், அது உண்மையான தகவலா, இல்லையா என்பதை இனிமேல்தான் நான் விசாரிக்க வேண்டும் என்கிறார். ஆனால்

உறுப்பினர், நான் மாண்புமிகு அமைச்சரிடம் கேட்டேன், அதற்கு அமைச்சர் துறையைக் கேட்காமல்கூட உடனே பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன் என்கிறார், அதனால் அனுமதி கொடுங்கள் என்று கேட்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மன்னிக்க வேண்டும். அதாவது ஒரு கருத்தை திடீரென்று என்னிடம் Special mention என்று கேட்டால், இப்போதுகூட நான் பதில் சொல்லத் தயார். இப்படி ஒரு செய்தி வந்து இருக்கிறது, அதை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அறிவாரா என்று கேட்டு இருந்தால், நான் பதில் சொல்ல இப்போதுகூடத் தயாராக இருக்கிறேன். ஆனால் அவர் எப்படிக் கேட்கிறார் என்றால், இப்படிப்பட்ட பொருளைக் குறித்து விதி 55-ன்கீழ் உங்களுக்கு கவன ஈர்ப்பு அறிவிப்பை நான் தரப் போகிறேன்; அதற்கு நீங்கள் அனுமதி தர வேண்டுமென்று இவ்வளவு பெரிய அவையில் Open notice தருவது முறைதானா என்பதுதான் என்னுடைய பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது முறையில்லை. அடுத்த வாரம் எடுத்துக்கொள்ளலாம். அதிலே இப்போது ஒன்றுமில்லை.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அது வந்துவிட்டதால் அதுபற்றி நான் சொல்லிவிடுகிறேன்....(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்)

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி, எல்லோரும் வரிசையாக எழுந்து நின்றால், நான் சபையை எப்படி நடத்துவது? எல்லோரும் உட்காருங்கள். நான் ஓர் உறுப்பினரைக் கூப்பிட்டு இருக்கிறேன். அதற்குப் பிறகு நீங்கள் எழுந்து நின்றால் எப்படி? உட்காருங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அறிவிப்புக் கொடுக்கும்போது, அமைச்சர் அனுமதி கொடுத்தால் தாங்கள் எடுத்துக்கொள்வதாகத் தெரிவித்தீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, நீங்கள் மூத்த உறுப்பினர். விதி 55-ன்கீழ் அமைச்சரிடமிருந்து பதில் வருவதற்கு ஒரு



வாரம் அவகாசம் வேண்டும். அப்புறம்தான் பிரச்சினை எடுத்துக்கொள்ளப்படும்....(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** உறுப்பினர்கள் இந்தப் பொருளை எடுத்துக் கொள்ளலாமா என்று கேட்கும்போது, நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். (குறுக்கீடு) அதை நான் ஒத்துக்கொள்கிறேன். மறுக்கவில்லை. இந்தப் பொருள் குறித்து விதி 55-ன்கீழ் நான் அறிவிப்பு கொடுக்கட்டுமா என்றால், அதற்கு ஒத்துக்கொள்கிறேன். உதாரணத்திற்கு இப்போது திரு. அழகிரி ஒரு விஷயத்தை என்னிடம் சொன்னார். அதுபற்றி அறிவிப்பு கொடுக்கட்டுமா என்று கேட்டார். கொடுங்கள், நான் தயாராக இருக்கிறேன் என்றேன். நான் இப்போது தயாராக இருக்கிறேன். ஆனால், அவர் வரவில்லை. அதுமாதிரி, இதைக் கேட்டு இருந்தால் பரவாயில்லை. என்னுடைய நிலை என்னவென்று கேட்டால், மாண்புமிகு பேரவைத் தலைவரைப் பார்த்து, இப்படிப்பட்ட ஓர் அறிவிப்பை நான் உங்களுக்குப் தரப் போகிறேன்; நீங்கள் எனக்கு அனுமதி தர வேண்டும் என்று முன்னரே கேட்பது எந்த விதியின்கீழ் வருகிறது என்பதுதான்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூத்த உறுப்பினர் திரு. பழனிசாமி இப்படி எல்லாம் திசை திருப்பிப் பேசக்கூடாது. விதி 55-ன்கீழ் மாண்புமிகு அமைச்சர்களுக்கு ஒரு வார காலம் அவகாசம் பதில் கொடுப்பதற்கு உண்டு என்பது உங்களுக்குத் தெரியும். (குறுக்கீடுகள்)

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் மட்டும் சொல்லிவிடுகிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** I cannot allow any clarification. Sit down; I called the other Member.

**திரு. ஆர். சொக்கர்:** ஒரு விளக்கம் மட்டும் சொல்ல அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர்

[திரு. ஆர். சொக்கர்] [1999 ஏப்ரல் 23

அவர்களே, விதிமுறைகளைப் பின்பற்றுவதில் நான் செய்த அணுகுமுறை தவறாக இருக்கலாம். அப்படி இருந்தால், அதற்காக நான் வருத்தம் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால் இது பொதுவான பிரச்சினை; முக்கியமான பிரச்சினை. விதி எண் 55-ன்கீழ் தனிப்பட்ட முறையில் 1989-லிருந்து இதுநாள் வரையிலும் நான் ஒன்றுகூடக் கேட்டதில்லை. இது பொதுவான பிரச்சினை என்ற முக்கியத்துவத்தின் அடிப்படையில் நான் கேட்டேன். உங்களிடம் கேட்டேன்; மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் news-ஐப் பாருங்கள், இது ஒரு முக்கியமான செய்தியாக இருக்கிறது என்று சொன்னேன். பொதுப் பணித் துறை அமைச்சரிடமும் சொன்னேன். அதற்கு அவர்....(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொக்கர் உட்காருங்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், நீங்கள் என்னிடம் வந்து என்ன சொன்னீர்கள் என்பதை அவைக்குச் சொல்ல வேண்டும். 'நான் எழுதிக் கொடுக்கிறேன்; அடுத்த வாரம் பதில் கிடைத்தால் போதும்; நான் பெயரளவுக்கு சொல்லிவிட்டு உட்கார்ந்துவிடுகிறேன்' என்று சொன்னீர்கள். அப்புறம் வந்து அதற்கு மேல் என்ன விளக்கம் வேண்டும்?

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொல்வது, ஏதோ நான் திசை திருப்பிச் சொல்லிவிட்டதுபோலத் தோன்றுகிறது; அதுதான் எனக்கு வருத்தம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் ஒரு சமரசமாகப் போகலாம் என்று கருதுகிறேன். எப்படியென்றால், திரு. சொக்கர் அவர்களுக்கு அதைக் கேட்க வேண்டுமென்று ஆசை; மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கும் சொல்ல வேண்டுமென்று ஆசை, (சிரிப்பு) இடையிலே சட்டம் குறுக்கிட்டு, சட்டம் தனக்குத் தெரியும் என்பதை அவரும், தான் எப்படியோ அதை மறந்துவிட்டேன் என்பதை இவரும் இங்கே ஒத்துக்கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், ஒரு சமரசமாக விளக்கமளித்தால், இன்றைக்கு வந்துள்ள செய்திக்கு மக்களுக்கு ஒரு விளக்கம் கிடைக்கும். ஆகவே, தாங்கள் அருள்கூர்ந்து அதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்தியிலே என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், இப்போது நாம் சென்னையிலே இருக்கின்ற நீர்வழிப்



1999 ஏப்ரல் 23] [திரு. துரைமுருகன்]

பாதைகளையெல்லாம் தூர் வாரி, ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, அழகுபடுத்தப்போகிறோம். அந்தக் கரையோரங்களில் பலர் குடியேறி இருக்கிறார்கள். அப்படிக் குடியேறி இருப்பவர்களையெல்லாம், வேறு இடத்திலே குடியமர்த்த வேண்டும். அதுவும் அந்தத் திட்டத்தினுடைய நோக்கத்திலே ஒன்று. அவர்களை எங்கு கொண்டுபோய் குடியமர்த்துவது என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. இதற்காக தலைமைச் செயலாளர் அவர்களுடைய தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படி அமைக்கப்பட்ட குழுவிலேதான், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஏரிகள் ஏதாவது பாசனத்திற்குத் தேவையில்லாமல் போய், அந்த ஏரியினுடைய பாசனப் பகுதிகள் எல்லாம் வீடுகளாக மாற்றப்பட்டிருக்குமானால், இப்போது அந்த ஏரி பாசனத்திற்கு உபயோகப்படாமல் இருக்குமானால், அந்த ஏரிப் பகுதிகளில் இவர்களைக் கொண்டுபோய் குடியேற்றலாம் என்று ஒரு யோசனை தெரிவிக்கப்பட்டது. ஆகையினால் இதே மாதிரியான நிலைமை எல்லா இடங்களிலும் உள்ளது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். அம்பத்தூரிலே ஓர் ஏரி பாசனப் பகுதியாக இல்லை. அந்த இடத்திலே எங்களுக்கு குப்பையைக் கொட்ட அனுமதிக்க வேண்டுமென்று அம்பத்தூர் Municipality கேட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே பல ஏரிகள் பாசனத்திற்கு ஏற்றதாக இல்லாமல் உள்ளதால் அங்கேயெல்லாம் பலர் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். பலர் அப்படி ஆக்கிரமித்துக்கொள்வதைவிட, இப்படிப்பட்ட பொதுக் காரியத்திற்கு அது பயன்பட வேண்டாமா? அது எது எது என்று கேட்டிருக்கிறார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் எந்தெந்த ஏரிகள் இப்படிப் பாசனத்திற்கு உபயோகமில்லாமல் இருக்கின்றன என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்றுதான் மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டிருக்கிறார்கள். எனவே அவர்களுடைய அறிக்கை கிடைத்த பிறகு, பாசனப் பகுதியாக இல்லாமல், வெறுமனே இருக்குமானால், அதைச் சமூக விரோதிகள் ஆக்கிரமிப்பதைவிட, இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்துவது சாலச்சிறந்தது என்ற யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர, பாசனப் பகுதிக்குள்ள ஏரிகளை எடுத்து நாங்கள் குடியிருப்பிற்குத் தரவில்லை.

**திரு. ஆர். சொக்கர்:** இதை விவாதத்திற்கு ஒருவேளை அடுத்த வாரத்தில் எடுத்துக்கொள்வதாக இருந்தால் அடுத்த வாரம் பேசிக் கொள்கிறேன். இல்லையென்றால் கருத்தைச் சொல்வதற்கு அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லா நடைமுறைகளுக்கும் மாறாகப் போகிறீர்கள். அவையை நடத்த அனுமதியுங்கள். நீங்கள் உட்காருங்கள்.

## 9. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 32—வீட்டு வசதி**

**(ஆ) கோரிக்கை எண் 33—நகர்ப்பகுதி வளர்ச்சி**

### (அ) கோரிக்கை எண் 32—வீட்டு வசதி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1999-2000 ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும் - தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 32 - வீட்டு வசதி. மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 104,35,36,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4692, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,35,36,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2034, திரு. ஐ. கணேசன்.



**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி, தாலுகாவின் தலைநகராக உள்ளதால் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அரசு ஊழியர்களுக்கு வாடகை வீடுகள் கட்டி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,35,36,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4313, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊத்துக்குளியில் மகளிர் பள்ளி அமைக்க வீட்டு வசதி வாரியம் வீடுகள் கட்டக் கோரியுள்ள நிலத்திலிருந்து விலக்களித்து ஒதுக்கித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,35,36,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3998, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையில் நடுத்தர வகுப்பு மக்கள் பயன்பெறும் வகையில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குறைந்த விலையில் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,35,36,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3373, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் ஓர் அரசு அலுவலர் குடியிருப்பு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,35,36,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3547, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வட்ட அளவிலான வீடு கட்டும் சங்கங்கள் கிராமப்புறங்களில் உள்ள நலிவடைந்தவர்களுக்கு வீடு கட்ட வழங்கும் கடன் அளவை ரூ. 12,000-லிருந்து குறைந்தபட்சம் "இருபது ஆயிரமாக" உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,35,36,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2379, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி நகரில் வசிக்கும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் ஆகியோருக்கு வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டி, இலவசமாகக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,35,36,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3959, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் நகராட்சிப் பகுதியில் அரசினர் குடியிருப்பு கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,35,36,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4417, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,35,36,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2992, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கிராமப்புறங்களில் அரசு ஊழியர்களுக்கும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,35,36,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2224, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நந்தனம் பகுதி, சி.ஐ.டி. நகரில் மாடல் அவுஸ் ரோடு, மாடல் அவுஸ் லேன் ஆகியவற்றில் கட்டப்பட்டுள்ள அரசு வாடகைக் குடியிருப்பு வீடுகளை குடியிருப்பவர்களுக்கே உரிமையாக்கித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,35,36,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3892, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,35,36,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2536, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்படும் வீடுகளின் மதிப்பீட்டைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,35,36,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3697, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**Dr. E.S.S. RAMAN:** Hon. Speaker Sir, "To discuss the need to construct a Housing unit by Tamil Nadu Housing Board at Podhattoorpet in Pallipattu Taluk", I move —

"That the sum of Rs. 104,35,36,000/- allocated under Demand No.32 - Housing be reduced by Rs. 100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 685, திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. VENKATASAMY:** Hon. Speaker Sir, "To discuss the need to allot the houses constructed in unobjectionable poramboke lands to the people without houses in Hosur Town", I move —

"That the sum of Rs. 104,35,36,000/- allocated under Demand No.32 - Housing be reduced by Rs.100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4280, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.



**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அரசு அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,35,36,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3968, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நகரங்களில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் செயல்படுவதை கிராமப்புறங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,35,36,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3960, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி, தாலுகா தலைநகரமாக உள்ளதால் அங்கு அரசு அலுவலர்களின் நலன் கருதி வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வாடகை வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,35,36,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

*முற்பகல் 11-05*

### (ஆ) கோரிக்கை எண் 33—நகர்ப்பகுதி வளர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 33—நகர்ப்பகுதி வளர்ச்சி, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 10,65,62,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4687, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் வீட்டு வசதி வாரியம் மூலம் கூடுதல் 'விருந்தினர் மாளிகையும்', 'மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகமும்' கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,65,62,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2048, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சியின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலம் நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,65,62,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4346, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அங்கீகாரம் பெறாமல் அமைந்துவிட்ட குடியிருப்புகளை



முறைப்படுத்தும் வழிவகை காண வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,65,62,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4002, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையில் முக்கிய சந்திப்புகளில் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,65,62,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3385, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பேரூராட்சியின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலம் நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,65,62,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2381, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி நகரம் மிகச் சிறந்த சுற்றுலா மையமாக இருப்பதால், அங்கு பழுதடைந்துள்ள சாலைகளைச்

சிறப்பு நிதி ஒதுக்கி செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,65,62,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3956, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி, கூத்தாநல்லூர் நகராட்சிகளில் நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டங்களை இவ்வாண்டே நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,65,62,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4416, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,65,62,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2223, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் ஜீவா காலனியில் தொழிலாளர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திற்கு உரிய காலி இடத்தில் சமுதாயக் கூடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,65,62,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3893, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,65,62,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3696, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**Dr. E.S.S. RAMAN:** Hon. Speaker Sir, "To discuss the need to establish a separate satelite town by name 'New Chennai' near Chennai", I move—

"That the sum of Rs. 10,65,62,000/- allocated under Demand No.33 - Urban Development be reduced by Rs. 100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த அவையிலே படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பிறகு, என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 465 முதல் 525 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர் பேச இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஏழு நிமிடங்களுக்கு மேல் பேசக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். தங்கள் பேச்சை அதற்குள்ளாக முடித்துக்கொள்ளவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் முதலில் விவாதத்தைத் தொடங்கி வைப்பார்கள். அவருக்கு மட்டும் 10 நிமிடங்கள் கொடுக்கப்படும்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் தலைமை)**

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உழவுத் தொழிலுக்கு அடுத்தபடியாக அதிகமாக மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளிப்பது வீட்டு வசதித் துறையாகும். இதைக் கருத்தில் கொண்டுதான் தமிழக அரசு இந்தத் துறைக்கு மூன்று அமைச்சர்களைப் பொறுப்பாக்கி இருக்கிறது. வீட்டு வசதித் துறைக்கு மாண்புமிகு பிச்சாண்டி அவர்களும், குடிசை மாற்று வாரியத்திற்கு மாண்புமிகு சுந்தரம் அவர்களும், C.M.D.A. அதாவது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு டாக்டர் பொன்முடி அவர்களும் இன்றைக்குப் பொறுப்பேற்று, இந்த வீட்டு வசதியைச் செய்து தருமாறு தமிழக அரசு பணித்திருக்கிறது.

இந்தியா கிராமங்களில் வாழ்கிறது என்று காந்தியடிகள் சொன்னாலும், வேலையின்மை காரணமாகவும், விவசாயம் பொய்த்து விட்டதன் காரணமாகவும், ஏழ்மையின் காரணமாகவும், 'கெட்டும் பட்டணம் போய்ச் சேர்' என்ற பழமொழிக்கேற்ப ஏராளமான மக்கள் நாள்தோறும் நகரங்களை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். 2011 ஆம் ஆண்டை இலக்காக நிர்ணயித்து, அந்த ஆண்டுக்குள்ளாக 175 இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டுமென்று அரசு எண்ணியிருக்கிறது. அந்த இலக்கு நிறைவேற வேண்டுமென்று சொன்னால், ஆண்டு ஒன்றுக்குக் குறைந்தது 2½ இலட்சம் வீடுகளைக் கட்டியாக வேண்டும். இந்தக் காரியத்தை அரசே செய்ய முடியுமா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இதைக் கருத்தில் கொண்டுதான் National Housing Policy- தேசிய வீட்டு வசதிக் கொள்கையில் "The Government have to create a facilitating environment for the growth of housing activity rather than itself taking up the task of building." என்று சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கமே இதை எடுத்துக்கொள்ளாது, தனியாருக்கும் இதை ஒதுக்கித் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு கர்நாடக மாநிலத்திலே BOOT-



Build, Operate, Own and Transfer, என்ற முறையிலே வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இங்கேயும் நாம் நீலம்பூர் சாலையை அந்த முறையில் எடுத்து இருக்கிறோம். அதேபோன்று, வீட்டு வசதி வாரியமும் அந்த முறையைக் கையாண்டு தனியார் துறைக்கு அதை ஒப்படைத்து நல்லமுறையிலே வீடுகளைக் கட்டித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தனியார் துறை முன்வந்தால் அவற்றுடன் வீட்டு வசதி வாரியம் இணைந்து செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. தனியார்கள் யாரும் முன்வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** L & T போன்ற தனியார் நிறுவனங்கள் முன்வந்தால் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வீட்டு வசதித் துறையைப் பொறுத்தவரையில் பல இடங்களில் நில ஆர்ஜித நடவடிக்கை மூலமாக ஒரு ஏக்கர் நிலத்தை 80 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கி பிறகு ஒரு செண்ட் நிலத்தை 40 ஆயிரம் ரூபாய்க்கு விற்கின்ற ஒரு நிலையைப் பார்க்கிறோம். இதிலே நிர்வாகச் செலவு ஏறத்தாழ 50 சதவிகிதத்திற்கு ஆகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதற்குப் பதிலாக நிலத்தைத் தனியாரிடமிருந்து பேச்சு வார்த்தை மூலமாகக் கையகப்படுத்தி, வாங்கி தனியாரிடம் கட்டடம் கட்டுவதற்கு ஒப்படைப்போம் என்று சொன்னால் அவை தரமான கட்டடங்களாகவும், நவீன கட்டடங்களாகவும் இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக 207 கோடி ரூபாயில் 15,500 வீடுகள் இந்த ஆண்டு கட்டப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் கொள்கை விளக்கக் குறிப்பிலே பார்த்தால் அதிகமான வீடுகள் உயர் வருவாய்ப் பிரிவினருக்குத்தான் செல்லுகின்றன என்பதை நான் வருத்தத்துடன் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீட்டு மனைகளும்,

வீடுகளும் கட்டி வழங்கப்படுகின்றன. குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு கட்டப்படுகின்ற வீடுகளுக்குத்தான் அதிக அளவு வரவேற்பு இல்லாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** தேவை என்று பார்த்தால் 90 சதவிகிதம் நலிந்த பிரிவினருக்குத்தான் வீடுகள் பற்றாக்குறை என்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே அவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க அரசு முன்வர வேண்டும்.

சென்னை போன்ற நகரங்கள் மட்டுமல்லாமல் புறநகர்ப் பகுதிளையும் நாம் சிறப்பு வாய்ந்த நகரங்களாக ஆக்க வேண்டும். குறிப்பாக நாம் மறைமலை நகரை உருவாக்கினோம்; மணலியை உருவாக்கினோம். ஆனால் அவற்றின் வளர்ச்சிக்கு வேண்டிய பணிகளை விரைவாகச் செய்யாமல் அதிக நாட்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. எனவே விரைவாக அந்த நகரங்களுக்கு சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. மறைமலை நகரிலே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட்ட வீடுகளுக்கு பத்திரங்கள் கொடுக்கின்றபோது பத்திரப் பதிவுக் கட்டணமாக 2,000 ரூபாய் மட்டும்தான் வாங்கப்படுகிறது. ஆனால் C.M.D.A.-விலே அது 40,000 ரூபாயாக இருக்கிறது. எனவே அதைக் குறைத்து 2,000 ரூபாய் என்று பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகரங்களிலே நெரிசல் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்று சொன்னால்—ஒரு காலத்திலே தலை நகரையே திருச்சிக்கு மாற்றலாம் என்ற திட்டம்கூட இருந்தது—சில தலைமை அலுவலகங்களை, தலைமைச் செயலகங்களை புறநகரங்களுக்கு மாற்றலாம். சான்றாக கைத்தறிக்கு இருக்கின்ற தலைமைச் செயலகம் சேலத்தில் இருந்தால் தப்பில்லை. அதேபோல வேறு சில முக்கியமான அலுவலகங்களையும் புறநகரங்களுக்கு மாற்றலாம் என்று நான் கருதுகிறேன். அப்படிச் செய்வதன் மூலமாக இங்கே நெரிசலை நாம் தவிர்க்க முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. வீட்டு வசதித் துறைக்குப் பெரிய இடையூறாக இருப்பது நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டமாகும். மைய அரசு இந்தச் சட்டத்தை எடுத்துவிட்டது. வீடு கட்டும் பணிகள் விரைவாக நடைபெற வேண்டுமென்று சொன்னால் இந்தச் சட்டம் எடுக்கப்பட வேண்டும்



என்று சொல்லித்தான் அவர்கள் அதை இரத்து செய்திருக்கிறார்கள். அதேபோல தமிழக அரசும் நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தை இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

இந்த அரசால் உருவாக்கப்பட்ட இரண்டு சட்டங்களைப் பற்றி மக்களுக்கு என்னவென்றே புரியவில்லை. அதில் யாருக்கும் இதுவரையில் தெளிவே இல்லை. அந்த இரண்டு சட்டங்களில் ஒன்று, Lift Act, மின் தூக்கிச் சட்டம்; பல பேருக்கு அது இருப்பதே தெரியாது. இன்னொன்று, Apartment Ownership Act. அது இருப்பதும் யாருக்கும் தெரியாது. மேலும் Ownership Flat Act என்ற ஒரு சட்டமும் இருக்கிறது. இந்தச் சட்டத்தையும் Apartment Ownership Act சட்டத்தையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு Comprehensive Act-ஆகச் செய்தோம் என்று சொன்னால், அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் (Rent Control Act). இதை முறைப்படுத்தினால்தான் தனியார் துறை வீடு கட்டும் பணியில் முதலீடு செய்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் வாரியத்தின் மூலமாகக் கட்டி வாடகைக்கு விடுகின்ற வீடுகளிலே, 57 சதவிகிதம் பொது ஒதுக்கீடாகத்தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே அந்தப் பொது ஒதுக்கீட்டில் கொடுக்கப்படுகிற வாடகை வீடுகளை சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

இன்றைக்கு அங்கீகரிக்கப்படாத மனைகளிலே கட்டப்படுகின்ற வீடுகளுக்கு மாநகராட்சி எந்த வசதியையும் செய்து கொடுப்பதில்லை. அவர்கள் வளர்ச்சிக் கட்டணத்தைக் கட்டினாலும்கூட வசதிகள் செய்து கொடுக்கக்கூடாது என்று அண்மையிலே சட்டம் போடப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தச் சட்டத்தை இரத்து செய்து, வளர்ச்சிக் கட்டணம் கட்டினால் அவர்களுக்கு எல்லா அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை நகரைப் பொறுத்தவரையில், சித்தாபுதூர், Race Course Colony ஆகிய இடங்களிலே இருக்கின்ற வீட்டுவசதி வாரிய வீடுகள் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. அவற்றைச் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது தவிர, சென்னைப் பெருநகர வளர்ச்சிக்

குழுமத்தைப் பொறுத்தவரையில், Town and Country Planning Act 1972-லே வந்தது. வந்து 28 ஆண்டுகள் ஆகிவிட்டன. 469 நகர மையங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று முடிவு செய்து, இன்றுவரை 110 நகர மையங்கள்தான் முழுமைத் திட்டத்தில்—Master Plan-ல் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இது 23 சதவிகிதம்தான் வருகிறது. இந்த முழுமைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமானால், குறைந்தது இன்னும் 100 ஆண்டுகளாவது ஆகும் என்று நான் நினைக்கிறேன். இதை மீதமுள்ள நகரங்களுக்கும் விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று L.P.A. உள்ளூர் திட்டக் குழுமம். இந்தத் திட்டக் குழுமத்திற்கு நாம் உறுப்பினர்களை நியமிக்கிறோம். அந்த உறுப்பினர்களுக்கு ஏதேனும் தகுதிகள் இருக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) அவர்கள் கட்டடக் கலைஞர்களாக அல்லது பல்வேறு துறைகளிலே அனுபவம் உள்ளவர்களாக இருந்தால்தான், இந்த உள்ளூர் திட்டக் குழுமத்திலே அவர்கள் பணியாற்ற முடியும்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த உள்ளூர் திட்டக் குழுமத்திலே உள்ளாட்சி மன்றத்தினுடைய உறுப்பினர்களாக, நகர்மன்றத் தலைவர்களாக, உறுப்பினர்களாக, சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரை, மூன்றில் ஒரு பகுதி மக்கள் நகர்ப்புறங்களிலேதான் வாழ்கிறார்கள். ஆகவே, நகர்ப்புற வாழ்க்கையானது நெரிசல் இல்லாமல் இருக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு சரியான திட்டங்களை நாம் கொடுக்க வேண்டும். அண்மையிலே சென்னை மாநகராட்சி இரண்டு திட்டங்களை அறிவித்து இருக்கிறது. எனக்கு உண்மையிலேயே சந்தேகமாக இருக்கிறது. இந்த இரண்டு திட்டங்களும் மக்களுக்கு எப்படிப் பயனளிக்கும் என்றுதான் எனக்குப் புரியவில்லை. ஒன்று. Mini Fly Over கட்டுவது. அவை கட்டப்படுகின்ற இடங்களை நாம் எண்ணிப்பார்த்தால், அதன் அகலம் மிகமிகக் குறுகலாக இருக்கின்றது. இந்த Mini Fly Over கட்டுவதன் மூலமாக நெரிசல் அதிகமாகத்தான் ஆகுமேயொழிய குறையும் என்று எனக்குத் தோன்றவில்லை. அது மட்டுமல்லாமல் பல பூங்காக்களை வணிக வளாகங்களாக, கேளிக்கைப் பூங்காக்களாக, வருவாய் ஈட்டக்கூடிய இடங்களாக மாற்றுவதாக



அறிவிக்கப்பட்டிருக்கிறது. சான்றாக, ஸ்ரீராமுலு பூங்கா My Ladies Garden, விஸ்வேஸ்வரய்யா பூங்கா பனகல் பூங்கா. பனகல் பூங்காவை பாலிகா பஜார் போலச் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் சென்னை போன்ற பெரு நகரங்களிலே Lung space நிறைய இருக்க வேண்டும். இப்படிப்பட்ட பூங்காக்களையெல்லாம் அதிகமாக உருவாக்குவதற்குப் பதிலாக நாமே அழித்துவிட்டோம் என்று சொன்னால், Lung space-க்கு எங்கே போவது என்று எனக்குத் தெரியவில்லை. அதை Car Parking-கிற்காகவோ அல்லது வேறு எந்தக் காரணத்திற்காகவோ அதை மாற்றக்கூடாது என்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் சுருக்கமாகச் சொல்கிறேன். சென்னையிலே ஆச்சரியம் என்ன என்று சொன்னால், C.M.D.A-வால் கட்டட விதிகட்கு முரணாக மூன்று இலட்சம் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அது டி.சி.ஆர். விதிகளுக்கு விரோதமாக இருக்கிறது. இன்றைக்கு அதை Regularise செய்வதற்கு ஒரு திட்டம் கொண்டு வந்து, அதை மக்கள் மத்தியிலே கூட்டம் போட்டுச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதைச் சொல்வதற்கு எந்த இடத்திலே கூட்டம் போடுகிறோமோ, சர்.சி.பி. இராமசாமி சாலையிலே, Community Centre-லே, அந்த இடமே கட்டட விதிகளுக்கு முரணான இடம். அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. C.M.D.A. அலுவலகம் இருக்கின்ற இடம் Egmore Fly Overஇல் இருந்து போகக்கூடிய அந்த அலுவலகம்; Fly Overஇல் இருந்து ஒரு தனிப்பட்ட இடத்திற்குப் போவதற்கு, பாதை போடுவதற்கு அனுமதியே கிடையாது. அப்படி C.M.D.A. அதை ஒத்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது எப்படியென்று நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

முற்பகல் 11-20

அது மட்டுமல்லாமல் (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். இப்போது C.M.D.A. 7,000 வீடுகளை notify செய்திருக்கிறது. அதாவது அவர்கள் விண்ணப்பம் போட்டு மே 29 ஆம் தேதிக்குள்ளாக தங்களுடைய கட்டடங்கள் விதிகளை மீறி கட்டப்பட்டிருப்பதை ஒத்துக்கொண்டால் அதற்கு Penalty, அபராதம் விதித்து, அந்த அபராதத்தைக் கட்டினால் அதை முறைப்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறது. எனவே இந்தச் சட்டம் சரியான சட்டம்தானா என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் ஆந்திராவிலே சிறப்பாக நிறைவேற்றப்பட்டு, கர்நாடகத்திலேயும் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு, இப்போது தமிழகத்திலும் அது கொண்டுவரப்பட்டிருக்கிறது. உறுப்பினர்களுடைய ஒத்துழைப்போடு கண்டிப்பாக, சிறப்பாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் அவருக்குப் பதில் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில், கட்டடங்களை வரன்முறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டிருக்கிற திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக இந்த அரசு இதுவரை கிட்டத்தட்ட 6740 பேர்களுக்கு Notice கொடுத்திருக்கிறது. Demolition Notice கொடுக்கப்பட்டிருந்தது. அவற்றை மீண்டும் வரன்முறைப்படுத்த வேண்டுமென்று அவர்கள் விண்ணப்பம் செய்திருந்தார்கள். அவற்றை வரன்முறைப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் தமிழக அரசு அனைத்தையும் ஆலோசித்து பெங்களூரிலே கொடுக்கப்பட்டு இருப்பதைப்போல, அபராதத் தொகை விதித்து ஒரு குறிப்பிட்ட தேதிக்குள்ளாக அவர்கள் விண்ணப்பித்து இதை வரன்முறைப்படுத்திக்கொள்ளலாம் என்று சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து அறிவித்திருந்தது. 29-5-1999 ஆம் தேதிக்குள்ளாக அவர்கள் விண்ணப்பித்து அதை வரன்முறைப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் அவர்கள் அதற்கான விண்ணப்பங்களை இன்னும் முழுமையாகக் கொடுக்காமல் இருக்கிறார்கள். C.M.D.A.-விலே 35 பேரும் சென்னை மாநகராட்சியிலே 7 பேரும் மற்ற உள்ளாட்சித் துறை ஸ்தாபனங்களிலே 14 பேரும் விண்ணப்பித்திருக்கிறார்கள் வரன்முறைப்படுத்துவதற்காக. இவ்வாறு வரன்முறைப்படுத்துவதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தேதி 29-5-1999 வரைதான். அதற்குள்ளாக அவர்கள் விண்ணப்பித்தால் அது வரன்முறைப்படுத்திக் கொடுக்கப்படும். எந்த அளவிற்குக் கட்டடங்கள் வரன்முறையை மீறிக் கட்டப்பட்டிருக்கிறதோ, அந்த அளவிற்கு மட்டும்தான் அதிலே தண்டனைத் தொகையும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. முழுக் கட்டடத்திற்கும் இல்லை. ஆகவே அதற்குரிய தொகையைக் கட்டி விட்டு கட்டடதாரர்கள் இந்த உரிமையைப் பெறுவதற்கு இது மிகப் பெரிய அரிய சலுகையாகும். ஆனால் பல பேர் இன்னும் குறையும்; காலம் நீட்டிக்கப்படும் என்றெல்லாம் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.



அவர்களுக்கெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு இந்தச் சட்டமன்றத்தின் வாயிலாக ஓர் எச்சரிக்கையாகக் கொடுக்க விரும்புகிறேன். 29-5-1999 ஆம் தேதிக்குள் சென்னை மாநகரத்தில் இருக்கின்றவர்கள் எல்லாம் விண்ணப்பித்துக் கொண்டு, அதற்கான அபராதத் தொகையைக் கட்டி, அதற்கான முடிவுகளைப் பெறாவிட்டால் 29-5-1999-க்கு பிறகு அந்தக் கட்டடங்கள் எல்லாம் எந்த தயவுதாட்சண்யமும் இன்றி சட்டப்படி இடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இதை வரன்முறைப்படுத்தும்போது ஒருவேளை சாலைப் போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கக்கூடிய கட்டடங்கள், தொலைபேசிக் கம்பிகளைக் கொண்டு போகமுடியாமல் இடையூறாக இருக்கக்கூடியவை அல்லது Electric Cable, Water Supply Line கொண்டு போவதற்கு இடையூறாக இருக்கக்கூடிய கட்டடங்கள் இருந்தால், எந்தக் காரணத்தைக் கொண்டும் அதை வரன்முறைப்படுத்தக்கூடாது என்ற தகுந்த முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை நீங்கள் செய்துகொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது சென்னையில் இருக்கக்கூடிய கட்டடங்கள் வரன்முறைக்கு அப்பாற்பட்டிருந்தாலும் அபராதத் தொகையோடு அனுமதிக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். இதேபோல் பல நகராட்சிகளிலே இருக்கக்கூடிய Lay-out-களுக்கும் இவ்வாறு சட்டம் போடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இதுகூட 1-3-1999-க்குள் கட்டப்பட்ட கட்டடங்களுக்குத்தான். அதற்குப் பிறகு இப்போது கட்டடங்கள் கட்டுவார்கள் என்று சொன்னால், அவற்றிற்கு இந்தச் சலுகை அளிக்கப்படாது. இது ஒருகாலத்தில் அவர்கள் செய்துவிட்ட தவறுக்காக நீதிமன்றங்களிலே

சென்று அனுமதியும் பெறமுடியாமல், அபராதமும் கட்டமுடியாமல், வரன்முறைப்படுத்த முடியாமல் இருந்த காரணத்தால் அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு 1-3-1999 வரை கட்டப்பட்ட கட்டடங்களுக்கு 29-5-1999-க்குள் அவர்கள் விண்ணப்பித்துக் கொண்டால் அவை வரன்முறைப்படுத்தப்படும் என்று அறிவித்திருந்தது. இந்தத் திட்டம் இப்போது முதன்முதலாக சென்னை மாநகரத்தில் மட்டும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. வருங்காலத்தில் இதுபற்றி அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது சென்னையிலே பல இடங்களில் குடியிருப்புகளுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடங்களிலே தொழில்கள் நடத்துகின்றார்கள். அதேபோல் தொழில் நடத்துகிறவர்களும், இந்த வரைமுறைப்படுத்தப்படுகிற சட்டத்தின்கீழ் பாதுகாப்புப் பெறுவார்களா? அல்லது அவர்களுடைய கட்டடங்கள் இடிக்கப்பட்டு அங்கு குடியிருப்புகள் மட்டும்தான் இருக்க வேண்டுமென்ற சட்டத்தை நிலைநாட்டுவார்களா என்பதை அரசின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒவ்வொன்றிற்கும் re-classification என்று விதியிலே வகுக்கப்பட்டிருக்கிறது. குடியிருப்புகள் என்ற இடத்திலேயிருந்து தொழில் செய்கிற இடமாக மாற்ற வேண்டுமென்று சொன்னால், முன்பே அவர்கள் re-classification செய்து கொண்டு, அதைத் தொடங்கியிருக்க வேண்டும். அவ்வாறு செய்துகொள்ளாமல், தொழில் நடத்துகிறவர்களுக்கும், இதிலே விண்ணப்பித்தால், re-classification பெறாமல் செய்தவர்கள் அல்லது F.S.I. மீறியவர்களுக்கும் என்று ஒவ்வொன்றிற்கும் ஒரு வரம்பு நிர்ணயிக்கப்பட்டு, அந்தச் சட்டவிதி மீறல்களுக்கான அபராதத் தொகையும், அதற்கேற்றவாறு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதுவரை அவ்வாறு கட்டியிருந்தால், இனிமேல் அது கிடையாது; 31-3-1999 வரை அதுபோன்று விதிமீறல்களின்படி கட்டியிருப்பார்களானால், அந்த விதிமீறல்களுக்கு உரிய கட்டணத்தை அளித்துவிட்டு, அவர்கள் அதை ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம்.



**திரு. வி.கே. லட்சுமணன்:** ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

குடிசைப் பகுதி மக்களுக்கு, கல்நார் தகடுகளாலான கூரைகளை அமைத்துக் கொடுக்க அரசு முன்வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் கோவை, வாலாங்குளத்தின் கரையோரங்களில் வாழ்கிற மக்களுக்கு, அம்மன்குளத்திலே அடுக்குமாடி வீடுகள் கட்டிக் கொடுப்பதாக அரசு முடிவெடுத்து 140 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அந்த வீடுகள் அவர்களுக்கு ஒப்படைக்கப்படவில்லை. அரசு விரைவிலே அவற்றை ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பல இடங்களில் வீடுகள் கட்டி முடித்தவர்களுக்கு பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது; அதையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோவையிலுள்ள ஹோசிமின் நகர், நிர்மலா கல்லூரிக்கு எதிரேயுள்ள கல்லுக்குழி ஆகிய இடங்களில், தனியார் இடத்திலே 50 ஆண்டுகளாக ஏழை மக்கள் குடியிருந்து வருகிறார்கள். அந்த நிலத்தை அரசு கையகப்படுத்தி, குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, கோவை நகரின் மையப் பகுதியிலே வருகின்ற ஆயக்கட்டு இல்லாத கால்வாய்களை...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** திரு. சி.வெ. கிருஷ்ணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** ஒரே ஒரு நிமிடத்தில் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** சரி, பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** கோவை நகரின் மையப் பகுதியிலே செல்கின்ற ஆயக்கட்டு இல்லாத கால்வாய்களை, பொதுப் பணித் துறையால் கைவிடப்பட்டதாக அறிவித்து, அவற்றை மாநகராட்சியிடம் ஒப்படைத்து, அவர்கள் பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்களுக்குச் சிற்றுண்டி ஏற்பாடு

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் துறையின் சார்பாக சிற்றுண்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

## 9. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 32 - வீட்டு வசதி—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 33 - நகர்ப்பகுதி வளர்ச்சி—தொடர்ச்சி

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** அடுத்து, 1999-2000 ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம்-தொடர்ச்சி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு இந்த ஆண்டு கிடைத்திருக்கிற பெருமையை இங்கே அவைமுன் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு, வீட்டுவசதி மற்றும் நகர வளர்ச்சிக் கழகத்தின் தேசிய விருது, நகர உள்கட்டமைப்பு முகமைகளில் வெகுசிறப்பாகப் பணியாற்றியமைக்காக, 1998-99ஆம் ஆண்டிற்கான தேசிய விருது வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** திரு. சி.வெ. கிருஷ்ணன்.

**திரு. சி.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதலமைச்சர், எங்களுடைய கழகத் தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, வீட்டுவசதித் துறை மானியத்தின்மீது, இந்த மாமன்றத்தில் ஓரிரு கருத்துக்களை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய வேடசந்தூர் தொகுதியிலே, கிராம வீடுகட்டும் சங்கம், நகர வீடு கட்டும் சங்கங்களின் மூலமாக — என்னுடைய தொகுதியிலே, வேடசந்தூர் ஒன்றியம், வடமதுரை ஒன்றியம், குஜிலியம்பாறை ஒன்றியம்

D V211,31'N99 N99.75.2



என்ற 3 ஒன்றியங்கள் உள்ளடங்கி இருந்தாலும், 5 பேரூராட்சிகள், வேடசந்தூர் பேரூராட்சி, வடமதுரை பேரூராட்சி, அய்யலூர் பேரூராட்சி, எரியோடு பேரூராட்சி, பாளையம் பேரூராட்சி ஆகிய 5 பேரூராட்சிகள் இருந்தாலும், 3 ஆண்டுகளிலே, நகர வீடு கட்டும் சங்கங்களின் மூலமாக, கிராம வீடு கட்டும் சங்கங்களின் மூலமாக—3 கோடி ரூபாய் அளித்திருக்கிற தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் நம்முடைய கிராம வீடு கட்டும் சங்கங்கள் மூலமாக வீடுகட்ட 12 ஆயிரம் ரூபாய் கடனாக அளிக்கிறீர்கள். அதனை ரூ. 25,000-ஆக உயர்த்திட வேண்டும். ஏனென்று சொன்னால், வீடு கட்டுகின்ற பணியில் ஈடுபடுகின்றபோது கருங்கல், செங்கல், சிமெண்ட், கொத்தனார் கூலி, சித்தாள் கூலி போன்றவை எல்லாம் உயர்ந்துவிட்ட காரணத்தினால், 12,000 ரூபாயாக இருப்பதை 25,000 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மானியத்தோடு உள்ள கடனுக்குத்தான் 12,000 ரூபாய் வழங்கப்படுகிறது. மானியம் இல்லாமல் இன்றைக்கும் 25,000 ரூபாய் கிராமப்புறப் பகுதியிலே தேவையான அத்தனை நபர்களுக்கும் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி.வெ. கிருஷ்ணன்:** அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அதேபோல வருவாய் அடிப்படையிலே வீட்டு வசதிச் சங்கத்தின் மூலமாக வீடு கட்டுவதற்கு வழங்கப்படும் பணத்தையும் ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று இந்தநேரத்தில் அமைச்சர் அவர்களைக் கனிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வேடசந்தூரில் அரசுப் புறம்போக்கு நிலங்கள் நிறைய உள்ளன. வேடசந்தூர் நகரத்திலிருந்து வடமதுரைக்குச் செல்ல வேண்டுமானாலும், குஜிலியம்பாறைக்குச் செல்ல வேண்டுமானாலும் அரசுப் பேருந்து இருக்கிறது, தனியார் பேருந்து இருக்கிறது. அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வாடகை வீடு கிடைக்கின்ற அளவிற்கு அங்கு வீடுகளைக் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களைக் கனிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி, என்னுடைய தொகுதியிலே 9 நாட்களாக 400 சிற்றூர்களுக்கும் மேலாக நான் சுற்றுப்பயணம் மேற்கொண்ட நேரத்தில் வேடசந்தூர் தொகுதியில் உள்ள விவசாயிகள் 50 ஊர்களில் உள்ளவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். வெங்காயத்தை உற்பத்தி செய்கிறபோது அதன் உற்பத்திச் செலவு ஒரு கிலோவுக்கு 10 ரூபாய் ஆகிறது. ஆனால் சாகுபடி செய்து, பராமரிப்பு செய்து எடுத்து, பிறகு market-ற்குக் கொண்டு போகின்றபோது கேட்பதற்கே ஆள் இல்லாத நிலை ஏற்படுகிறது.

என்னுடைய தொகுதியிலே எரியோட்டிற்கு அருகில் பூத்தாம்பட்டிக்குப் பக்கத்தில் பழனி சாலையிலே ஒரு கோடி ரூபாயிலே 15 கிடங்குகள் அமைக்கப்பட்டு அவை பராமரிக்கப்படாத நிலையிலே இருக்கின்றன. எனவே அரசு இதில் தலையிட்டு விவசாயிகள் வெங்காயம், தக்காளி போன்றவற்றை அந்த இடத்திலே கொண்டு வந்து கொடுத்து, கட்டுப்படியாகும் விலைகள் அவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தநேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வேடசந்தூரிலிருந்து அழகாபுரி வழியாக கூம்பூருக்கு தென்புறம் வள்ளிவெட்டி ஓடை என்று இருக்கிறது. அந்தச் சாலைகளிலே மழைக்காலங்களில் பேருந்துகளை இயக்க முடியாமல் இருக்கிறது. விவசாயிகள் பயன்படுத்தும் பொருட்களில் எந்தப் பொருட்களையும் கொண்டு செல்ல முடியவில்லை. எனவே அங்கு ஒரு பாலத்தை அமைத்துத் தர வேண்டுமென்று இந்தநேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கரூர்-திண்டுக்கல் சாலையில் கோவிலூரிலிருந்து வேடசந்தூர் வரையுள்ள அந்தச் சாலையினை அகலப்படுத்தித் தரவேண்டுமென்று நான் இந்தநேரத்திலே அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எரியோட்டிலிருந்து பூத்தாம்பட்டி வழியாக வேடசந்தூர் செல்லும் சாலையையும் அகலப்படுத்திட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எரியோட்டிலிருந்து அய்யனூர் வரையுள்ள சாலையையும் அகலப்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

அதேபோல பாளையத்திலிருந்து அரவக்குறிச்சி வரையுள்ள அந்தச் சாலையையும் அகலப்படுத்தித் தர வேண்டுமென்று இந்தநேரத்திலே



அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல பாளையத்திலிருந்து திருச்சி சாலை வரை இருக்கிற, பாளையத்தின் அருகிலே இருக்கிற, அந்தப் பாலத்தைப் பெரிய பாலமாக அமைத்துத் தர வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். வீட்டு வசதித் துறையினுடைய அலுவலகங்கள் - மதுரை தலைநகருக்கு நாங்கள் செல்ல வேண்டியிருக்கிறது - திண்டுக்கல் தலைநகருக்கு வர வேண்டும். நம்முடைய வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று இந்தநேரத்திலே அன்போடு கேட்டு, நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த 20 ஆண்டுகாலமாக தமிழகத்திலே, குறிப்பாக சென்னை நகரத்திலே இருக்கின்ற வளசரவாக்கம் பகுதியிலே 1978 ஆம் ஆண்டு, G.O. 837-ன்படி வீட்டு வசதி வாரியத்திற்காக 240 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதிலே 100 ஏக்கர் ஆர்ஜிதப்படுத்தப்பட்டு விட்டது. 140 ஏக்கர் இன்னும் நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. அந்த இடங்களையெல்லாம் நடுத்தர வர்க்க மக்களுக்காக 1 Ground, ½ Ground என்று Plot போட்டு விற்பதற்காக வீட்டு வசதி வாரியம் நில ஆர்ஜிதம் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். அந்த இடத்திலே இப்போது ஏறத்தாழ 7,000 வீடுகள் இருக்கின்றன. சென்னை மாநகராட்சியிலே பணி புரிபவர்களும், தமிழக அரசின் தலைமைச் செயலகத்திலே பணி புரிபவர்களும், இன்னும் அரசு அதிகாரிகளும் நிறைய பேர் அங்கே இருக்கின்றார்கள். இதுவரையிலே அந்த இடத்தை proper-ஆக acquisition செய்யாமல் திடீரென்று இப்போது வந்து notice கொடுக்கின்றார்கள். அங்கே இருக்கின்ற அத்தனை பேரும் இதனாலே மிகப் பெரிய மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கின்றார்கள். அதைத் தடுக்கின்ற வகையிலே உடனடியாக அந்த இடங்களையெல்லாம் அரசு அங்கே குடியிருக்கின்றவர்களுக்கே தர வேண்டுமென்று இந்த நல்லநேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன். காரணம் அங்கு இருக்கின்றவர்கள் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள். அவர்களை திடீரென்று நீங்கள் வீட்டை காலி செய்யச் சொன்னால் அவர்கள் எங்கே செல்வார்கள்? அதனாலே அந்த இடத்தை அவர்களுக்கே கொடுக்க வேண்டும். அதிலே பல பேர் exemption வாங்கிக்

கொண்டிருக்கிறார்கள். Influence உள்ள மக்கள் எல்லாம், they have got exemption. ஆனால் influence இல்லாத பாமர மக்கள் exemption வாங்க முடியவில்லை. இதனால் influence உள்ளவர்களுக்கு ஒரு சட்டம்; influence இல்லாதவர்களுக்கு ஒரு சட்டம் என்கின்ற மாதிரி நிலைமை வந்துவிடும். மக்கள் நலனில் அக்கறை கொண்ட அரசு நம்முடைய அரசு என்பதை நிரூபிக்கின்ற வகையிலே நாம் நிச்சயமாக அந்த இடங்களை...

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த இடங்களை நாங்கள் தேவை என்று சொன்ன பிறகு, வருவாய்த் துறைதான் எடுத்துக் கொடுக்கிறது. Exemption வாங்கியிருந்தால் அந்த exemption-ஐ வருவாய்த் துறையிலே கடந்த காலங்களிலே வாங்கி இருக்கலாம் என்பதை நான் உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய கூற்றை ஒத்துக்கொள்கிறோம். ஆனால் கடந்த கால ஆட்சியிலேதான் நிறைய பேர்—பல ஆண்டுகளுக்கு முன்னாலே 1933, 1986 போன்ற ஆண்டுகளில் நிலத்தை கையகப்படுத்துவதற்காக 4(1)-ல் அறிவிப்பு கொடுத்து, பிறகு 6(1)-ல் அறிவிப்பு கொடுத்து நீதிமன்றத்திற்குப் போய் இருக்கிறீர்கள். ஆனால் இடைப்பட்ட காலத்தில் சில பேர்—நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஆரூண் ரஷீத் அவர்கள் சொன்னதுபோல, சக்தி படைத்தவர்கள் சில பேர்—அந்தக் காலத்திலே exemption வாங்கிவிட்டார்கள். ஆனால் இப்பொழுது 13 ஆண்டுகள் கழித்து ஓர் ஏக்கருக்கு 90 ஆயிரம், 96 ஆயிரம் என்று கொடுக்கிறீர்கள். ஆனால் இன்று அந்த Plot Rate-க்குப் பார்த்தால் கிரவுண்டே இன்றைக்கு 6, 7 இலட்சம் என்று போகிறது. அதை விற்க அடிமாட்டு விலைக்கு நம்முடைய வீட்டு வசதி வாரியமோ அல்லது வருவாய்த் துறையோ நிலத்திற்குப் பணத்தைக் கொடுக்கிறபோது, இன்று நிலச் சொந்தக்காரர்கள் எல்லாம் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். ஒருவேளை இன்னொன்று செய்யலாம். நம்முடைய வீட்டு வசதி வாரியமாக இருந்தாலும் சரி, அல்லது அரசாக இருந்தாலும் சரி, இப்போது இருக்கக்கூடிய சந்தை விலைக்குக் கொடுத்தீர்கள் என்று சொன்னால், கொடுக்கிறவர்கள்கூட நிலத்தைக் கொடுப்பார்கள். மேலும் நீதிமன்றத்திற்கு அவர்கள் போகவே மாட்டார்கள். ஆகவே இதற்கும் நீங்கள் விலக்கு அளித்துவிட்டு, வேறு area-க்களில் வீட்டுவசதி வாரியம் Plot போடுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர், மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் அடங்கிய குழுவினர் அதற்கான விலையை நிர்ணயம் செய்கிறார்கள். எப்பொழுது தேவை என்று கணக்கிடப்படுகிறதோ, அன்றைக்கு இருக்கின்ற அந்த நிலையை அவர்கள் முடிவு டுக்கிறார்கள். ஆகவே அதற்கு நாங்கள் பொறுப்பு அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள், இதற்காக வழக்குமன்றத்திற்கு அவர்கள் சென்று, வழக்கு- ன்றத்திலே ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. அதிலே, "It is made clear that he writ-petitioners are entitled to the benefit of the Resolution-7 of 1986 ated 2-7-1986 passed by the Housing Board. It is open to them to make pplication for re-conveyance" என்று கொடுத்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11-40*

ஆகவே இதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு நம்முடைய ாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்தை ஏழை மக்களுக்கு, டுத்தர மக்களுக்குத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் அறிவித்த காலத்திலேயிருந்து, அவர்கள் அத்துணைபேரும் கிகவும் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் அவர்களெல்லாம் திடீரென்று வழக்கு மன்றத்திற்குச் செல்ல முடியாத ஒரு சூழ்நிலையும், தேக்கமும் ஏற்பட்டிருக்கிறது.

அதேபோன்று மதுரையைச் சேர்ந்த எல்லீஸ் நகரிலே கடந்த 20 ஆண்டு காலத்திற்கு மேலாக வாழ்கின்ற மக்கள் முழுப் பணமும் செலுத்திய பின்பும்கூட அவர்களுக்கு இன்னும் பத்திரம் தரப்படவில்லை. திடீரென்று அவர்கள் திருமணம் செய்ய வேண்டும், அல்லது வங்கிகளிலே கடன் பெற வேண்டுமென்றால் அவர்கள் எங்கே செல்வார்கள்? இதைப்போன்ற ஒரு நிலை இருப்பதால் அவர்களெல்லாம் மிகவும் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இப்போதுகூட notice கொடுத்ததனுடைய நகலை நான் இந்த அவையிலே காண்பிக்க விரும்புகிறேன். இப்போது Notice under Act I of 1894 என்று கொடுத்திருக்கிறார்கள். அதிலே, 'as per the notification in the Fort St. George Gazette, dated 11-6-1975 and 9-6-1978, you should

vacate and deliver the vacant possession of it before the evening of 31-3-1999 to the Revenue Inspector who has received necessary instructions in the matter. If you fail to do so, Tahsildar, Ambathur will be addressed to enforce the surrender of the property to this Department under Section 47 of the Land Acquisition Act என்று சொல்லியிருக்கின்றார்கள். உண்மையிலேயே அந்த மக்கள் அத்துணைபேரும் மிகவும் பெரிய துன்பத்திற்கு ஆளாகியிருக்கின்றார்கள். இதற்கு உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து அந்த நிலம் அத்தனையும்—ஏறத்தாழ 7000 வீடுகள் அதிலே பாதிக்கப்படுகின்றன. அதிலே குறிப்பாக போரூர், இராமாவரம், லட்சுமி நகர்ப் பகுதி, செந்தில் நகர்ப் பகுதிகளில் எல்லாம் இருப்பவர்களுக்கு நீங்கள் ஒரு நல்ல நிலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய அம்பத்தூர் பகுதியிலே, வீட்டு வசதி வாரியத்தின் தன்னிறைவு வீட்டுமனைத் திட்டத்தின்கீழ் 9,756 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த வீட்டுமனைகளிலே இப்போது 240 பேர்கள் வீடுகள் கட்டிக் குடியேறியிருக்கிறார்கள். சென்ற ஆண்டுகூட, அக்டோபர் 28 ஆம் தேதி இரண்டு முறை அங்கே முகமூடிக் கொள்ளைகள் நடந்திருக்கின்றன. காரணம் 50 சதவீத மனைகள் இன்னும் proper-ஆக ஒதுக்கப்படவில்லை. அங்கே குடிநீருக்கான வசதி செய்யப்பட்டிருக்கின்றது, பாதாள சாக்கடை வசதி செய்யப்பட்டிருக்கின்றது, அங்கே Police Station– கட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் அத்தனையும் செயல்பாடற்ற நிலையிலே மூடிக் கிடக்கின்றன. ஆகவே அங்கே இருக்கின்ற ஜன்னல்களைக்கூடச் சேர்த்து திருடிக் கொண்டு செல்வார்களோ என்று மக்கள் அஞ்சுகின்றார்கள். அந்தத் திட்டப் பகுதிக்கான பண வசூல் செய்கின்ற அலுவலகம் இப்போது அந்தப் பகுதியிலேயிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவிலே சென்னை, அண்ணா நகரிலே இருக்கின்றது. இந்தப் பகுதியிலே செயற் பொறியாளர் அலுவலகத்தை (Executive Engineer Office) நீங்கள் கொண்டுவந்து வைத்தால், திட்டப் பணிக்காக அவர்கள் பணம் செலுத்த வருகின்றபோதெல்லாம் அவர்களுடைய இடத்தைப் பார்ப்பார்கள், எந்த இடத்திலே அந்த மனை இருக்கிறது என்று பார்ப்பார்கள். அந்த மனையைப் பார்க்கும்போது வீடு கட்ட வேண்டுமென்று ஓர் அவா அவர்களுக்கு ஏற்படும். அப்போது உடனடியாக அங்கே வீடுகள் வரும். அப்படி வீடுகள் வருமானால் நிச்சயமாக இந்தமாதிரி முகமூடிக் கொள்ளைகளெல்லாம் ஏற்படாது. மேலும் அங்கே இருக்கின்ற மக்களுக்கு அம்பத்தூர் பகுதியிலே தன்னிறைவு வீட்டுமனைத்



திட்டத்தின்கீழ் நிச்சயமாக மனைகளும் உடனடியாக ஒதுக்கப்பட வேண்டும். அங்கே இருக்கின்ற பள்ளிக்கூடம், காவல் நிலையம் போன்றவற்றையெல்லாம் திட்டப் பகுதியிலேயே திறந்து செயல்படுத்த வேண்டும். அதேபோன்று இந்தப் பகுதிக்குப் பேருந்து வசதியும் செய்து தர வேண்டும். அங்கே பேருந்து வசதி இல்லாத நிலை இருக்கின்றது. அதேபோன்று EWS-A, EWS-B, LIG-I, LIG-II, MIG, HIG என்று இதுவரையிலும் நிறைய இடங்கள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடம், Sir.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** ஒரு நிமிடத்தில் உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** நிறைய மனைகள் ஒதுக்கப்பட்டிருந்தும்கூட அந்த மனைகள் எல்லாம் முறையாக அவர்களுக்கு வந்து சேராததனால் அவர்கள் வீடு கட்டாமல் இருக்கின்றார்கள்.

தமிழகத்தின் அண்டை மாநிலங்களான ஆந்திரத்திலுள்ள ஹைதராபாத், கேரளா போன்ற இடங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 2 Ground நிலமும், 5 இலட்சம் ரூபாய் வட்டியில்லாத கடனும் நகரத்திலே தருகிறார்கள். எத்தனையோ சட்டமன்ற உறுப்பினர்கள் சொந்த வீடுகூட இல்லாமல் கஷ்டப்படுகிற நிலையிலே இருப்பதை கனிவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களும், எங்களைப் போன்ற சாதாரண பாமர மக்களுக்கு (சிரிப்பு)...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** மாண்புமிகு உறுப்பினர் ஆரூண் ரஷீத்துக்கு அல்ல. அவர் மற்றவர்களுக்காகத்தான் கேட்கிறார்.

முற்பகல் 11-45

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** எல்லோருக்கும் இதுபோன்ற வீட்டு வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும். 15 ஆண்டுகளுக்கு முன்பு மறைமலைநகரில் Tamil Nadu Housing Board, M.M.D.A. பகுதியில் LIG வீடுகள் பலருக்கு ஒதுக்கப்பட்டன. தற்போது M.M.D.A. ஒதுக்கிய வீடுகளுக்கு Stamp duty 40 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டுமென்று சொல்கின்றார்கள்.வீட்டு வசதி வாரிய வீடுகளுக்கு Document-க்கு 2 ஆயிரம் ரூபாய் கொடுத்தால் —Stamp duty-க்கு போதும் என்று

சொன்னார்கள். ஆனால், இப்போது திடீரென்று M.M.D.A-விலே Stamp Duty 40 ஆயிரம் ரூபாய் கேட்கிறார்கள். இதை உடனடியாகக் கவனிக்க வேண்டும். அதேமாதிரி என்னுடைய தொகுதியான அம்பத்தூரிலே, கோயம்பேடு பகுதியிலே இருக்கின்ற சிறுசிறு வியாபாரிகள், பூ வியாபாரிகள், ஜடை தைக்கும் வியாபாரிகள் எல்லாம் தினமும் காவல் துறையினரால் அடித்து விரட்டப்படுகிறார்கள். அவர்கள் எல்லாம் ஏழைகள். அவர்களுக்கும் அங்கே நிரந்தரமாகக் கடைகளைக் கட்டித் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம்.

அதேபோல பத்திரிகைத் துறையைச் சார்ந்த நிருபர்களுக்கும் வீட்டு வசதிக்கு ஏற்பாடு செய்து தரவேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** திரு. கே. தங்கமணி.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** ஒரே நிமிடம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** ஒரே நிமிடத்தில் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** என்னுடைய தொகுதியில் உள்ள லட்சுமிபுரத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களும், வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களும் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் வெறும் ஏழைகள்; 500 வீடுகள் அங்கே உள்ளன. அவர்களுக்கு நாங்கள் பாதை வசதி, விளக்கு வசதி, தண்ணீர் வசதி எல்லாம் செய்து தந்திருக்கிறோம். ஆனால் அவர்களுக்கு proper allotment கிடையாது. அவர்கள் வீடுகளை அங்கே கட்டியிருக்கிறார்கள். உடனடியாக அந்த இடத்தை குடிசை மாற்று வாரியத்தின் சார்பிலே அவர்களுக்கே allotment செய்து அதற்கான தொகையை அரசு வாங்கிக்கொள்ள வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். நீண்ட நாட்களாக தினக் கூலிகளாக இருக்கின்ற Pump Operaters, Sweepers, Watchmen, Electrician போன்றவர்கள், 200 நாட்கள் வேலை செய்தாலே அவர்களை confirm செய்ய வேண்டும். ஏழை எளிய மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு—வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்—அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல ஆண்டுகளாக வேலை செய்திருக்கின்ற அவர்களின் வீட்டிலே நீங்கள்



விளக்கேற்றி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு Clarification.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** சரி, கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆரூண் ரஷீத் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். மறைமலை நகரிலே Tamil Nadu Housing Board, வீட்டுவசதி வாரியம் 15 ஆண்டுகளுக்கு முன்னாலே L.I.G. வீடுகளைக் கட்டிக் கொடுத்தபோது அதனுடைய Value 36 ஆயிரம் ரூபாய். அங்கேயே பக்கத்திலே M.M.D.A-வும் கட்டிக் கொடுத்திருக்கிறது, அதேபோல் சில பேருக்கு. அப்போது அதனுடைய Value-அதுவும் L.I.G. 36,000 ரூபாய். ஆனால் வீட்டுவசதி வாரியம் மட்டும், ஏற்கெனவே 2,000 ரூபாய் Stamp duty-க்கு வாங்கி Sale deed-ஐ release பண்ணிவிட்டார்கள். ஆனால் M.M.D.A-வைப் பொறுத்தளவிலே தரை வாடகை கட்டடம் இவை எல்லாவற்றையும் சேர்த்து 36,000 ரூபாய் வீட்டுக்கு 40,000 ரூபாய் Stamp Duty கட்டினால்தான் Sale deed கொடுப்போம் என்று சொல்லி எல்லாவற்றையும் நிறுத்தி வைத்து விட்டார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு வேண்டியதைச் செய்து M.M.D.A allot செய்த வீட்டிற்கும் Stamp Duty-க்கு 2,000 ரூபாய் வாங்கி Sale deed-களைக் கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** திரு. கே. தங்கமணி.

***திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி என்னும் மிக முக்கியமான மானியக் கோரிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். வீட்டுவசதித் துறையின் கொள்கைக் குறிப்பில் 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு' என்ற குறிக்கோளை எய்த புதிய திட்டங்கள் தீட்டப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் கடந்தும்கூட இந்தியக் குடிமகனுக்கு குடியிருக்க குடியிருப்புகளை உருவாக்க

திட்டங்களைத் தீட்டுவதிலேதான் நாடு இன்னமும் இருக்கிறது. எனவே குடும்பத்திற்கு ஒரு வீடு என்றால் அந்த இலட்சியம் எந்த ஆண்டிற்குள் நிறைவேற்றப்படும்; அதற்கு மாநில அரசு முன்வைத்துள்ள திட்டங்கள் என்ன என்பது பற்றி தெளிவாக்கப்பட வேண்டும். மாநில அரசு ஒவ்வொரு ஆண்டும்—அறிவிப்புகளாக இல்லாமல்—மாநிலம் தழுவிய முறையில் வீடு கட்டும் திட்டத்தை அமல்படுத்த ஒரு Master Plan-ஐ உருவாக்க வேண்டும். அதற்கு ஒரு குறைந்தபட்ச காலகட்டத்தையும் நிர்ணயிக்க வேண்டும் என்று இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல வீடு கட்டுவதற்கு இட வசதியே இல்லாமல் கிராம மக்களும் நகர மக்களும் வாழுகின்றனர். வீடு கட்டுவதற்குப் பட்டா கோரும் நிலைமையும், பட்டா வழங்குவதில் அதிகாரிகள் காலதாமதப்படுத்துவதும் நிலைமை தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. அதுவல்லாமல் தமிழ்நாட்டில் இந்த ஆண்டு முடிவடைவதற்குள் அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுப்பதற்கு இடத்தைச் சொந்தமாக்கக்கூடிய ஒரு நடவடிக்கையை தமிழக அரசு எடுக்க வேண்டும். வீடு கட்டுவதற்கு இடத்தைத் தேர்வு செய்வதில் கடந்த காலத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற சட்ட நெறிமுறைகளைத் தகர்த்து, பொருத்தமான அரசாணைகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

அடுத்து கிராமப்புறங்களிலே வீடு கட்டுவதற்கு, வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 12 ஆயிரம் ரூபாய் கடன் வழங்குகின்ற முறை இன்றைக்கு இருக்கிறது. சாதாரணமாக தொகுப்பு வீடுகளுக்குக்கூட அரசாங்கம் 34 ஆயிரம் ரூபாய் வழங்குகிறது. 12 ஆயிரம் ரூபாயை வைத்து அடித்தளத்தைக்கூட ஒழுங்காகச் செய்ய முடியாத நிலை இருக்கிறது. எனவே அரசும், துறையும் இதுசம்பந்தமாக மறுபரிசீலனை செய்து குறைந்தபட்சம் 20 ஆயிரம் ரூபாயாக அதை உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமச் சங்கங்கள் மூலமாக வழங்கப்படும் கடன் தொகையைப் பொறுத்தவரையில் வீடு கட்டி ஓராண்டு முடிந்தும்கூட கடைசித் தவணை கிடைப்பதில் காலதாமதம் இருக்கிறது என்பதையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.



கிராமப்புறங்களில் கட்டப்படும் வீடுகளைப் பொறுத்தவரையில் வட்ட சங்கங்களுக்குக் குறைந்தது 500 வீதமாவது எண்ணிக்கையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தொழிலாளர்கள் என்பவர்கள் weaker section பொருளாதார ரீதியில் பலவீனமாக உள்ளவர்களுக்கு மலிவு வாடகை வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 1999-2000 ஆண்டுக்கு ஒன்றரை கோடி ரூபாய் வீடு கட்ட முன்பணம் வழங்க ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் விழுப்புரம் மாவட்டத்திற்கு 90 ஆயிரம் ரூபாயும், தூத்துக்குடி மாவட்டத்திற்கு 1 இலட்சமும் ஒதுக்கப்பட்டது. இதை வைத்து எத்தனை ஆசிரியர்கள் வீடு கட்ட முன்பணம் பெறுவார்கள் என்பது ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. எனவே இதுசம்பந்தமாகவும் அரசு மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை குடிசை மாற்று வாரியத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்களாக, துப்புரவுத் தொழிலாளர்கள் 500 பேர் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. ஆதலால் 13 வருடங்களாக துப்புரவுப் பணியாளர்களாகப் பணிபுரிந்து வருபவர்களை நிரந்தரம் செய்ய, துறையும், மாநில அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு வீட்டுவசதித் துறை, அரசுக் குடியிருப்பில் பல மாதங்களாக காலியாக உள்ள வீட்டை முறையாகப் பதிவு செய்தவர்களுக்குத் தாமதமாக அரசு ஒதுக்கீடு செய்வதால் காலியாக இருந்த காலத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களிடமிருந்து நிலுவையிலுள்ள வாடகை, மொத்தமாக வசூல் செய்யப்படுகிறது. இதுபோன்று அரசாங்கம் காலதாமதம் செய்து வீடுகளை ஒதுக்கீடு செய்வதால் புதிதாகக் குடி வருபவர்கள் பெரும் தொகையைச் செலுத்த வேண்டியிருக்கிறது. ஆகவே இனிவரும் காலங்களில் அரசு, குடியேறிய அல்லது உத்தரவு அளிக்கும் நாள் முதல் வாடகை வசூல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம், வெள்ளக்குட்டை ஏரி குடிசை மாற்று வாரியத்திலுள்ள வீடுகளில் septic tank, குடிநீர்க் குழாய் போன்ற வசதிகள் சரியாக

இல்லையென்று தொடர்ந்து புகார் செய்யப்பட்டு வருகிறது. இதுசம்பந்தமாகவும் துறை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நந்தனம் பகுதியில் C.I.T. நகரில் Model House Road, Model House Lane ஆகியவற்றில் கட்டப்பட்டுள்ள அரசுக் குடியிருப்பு வீடுகளைக் குடியிருப்பவர்களுக்கு உரிமையாக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வீட்டு வசதித் துறையின் மூலம் மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் மட்டுமே அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு அரசுத் துறையில் பணி புரிபவர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதுபோல பேரூராட்சிப் பகுதிகளிலும் வீட்டுவசதித் துறை மூலமாகக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நகர்ப்புற வளர்ச்சி. இது மிகவும் முக்கியமாகப் பார்க்கப்பட வேண்டிய விஷயம். ஒவ்வோராண்டும் மக்கள் கிராமங்களை விட்டு நகரங்களைத் தேடி வந்து கொண்டிருக்கின்றார்கள். நகரமயம் ஏன் வேகப்படுகிறது என்றால் கிராமப்புறங்களில் வாழக்கூடிய மனிதனுடைய தேவைகள் நிறைவேற்றப்படுவதில்லை. மனிதனின் தேவை கிராமப்புறங்களில் நிறைவேற்றப்படாத காரணத்தால், நகரங்களிலாவது நிறைவேற்றப்படும் என்பதால் நகரங்களுக்கு மக்கள் படையெடுத்து வருகிறார்கள். நகர்ப்புறங்களுக்குச் சாதாரண மக்கள் பிழைப்பைத் தேடி வருவதோடு மட்டுமல்லாது, ஏற்கெனவே உறுதிசெய்யப்பட்ட தொழிலாளர்களும் தங்கள் வாழ்க்கையை மேலும் மேம்படுத்திக் கொள்வதற்காக வருகிறார்கள். எனவே நகர்ப்புறங்களுக்கு வரும் மக்களின் வாழ்க்கை முறையை ஒழுங்குபடுத்துவதிலும் குடியிருப்புகள் மற்றும் சுகாதார வசதிகளைச் செய்து கொடுப்பதிலும் புதிய சுமைகள் ஏற்பட்டாலும் அதைச் சரி செய்வதில் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேராவூரணி தொகுதி, பேராவூரணி, தாலுகா தலைநகரம். அங்கே பல்வேறு அரசு அலுவலர்கள் உள்ளனர். அங்கு அலுவலர்கள் குடியிருக்க வீட்டு வசதித் துறையின் மூலம் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.



**திரு. கே. தங்கமணி:** குடியிருப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன். அதற்கான இடம் அங்கு இருப்பதால் அதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். சில கோரிக்கைகள் வந்திருக்கின்றன.

முற்பகல் 11-55

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பேராவூரணியில் இருக்கும் இடத்தை அரசுக்கு மாற்றித் தந்தால், அதைக் கட்டித் தருவதற்கான நடவடிக்கையை வீட்டு வசதி வாரியம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. தங்கமணி:** அமைச்சரவர்களுக்கு நன்றி. அதேபோல பரமக்குடி நகரில் அரசு அலுவலர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டுமென்ற கோரிக்கை என்னிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வீட்டுவசதித் துறையில் இருக்கும் ஊழியர்களுக்கு G.O. 174-ன் அடிப்படையில் சலுகை வழங்கப்பட வேண்டுமென்பதையும் இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நகர்ப்புற வளர்ச்சி. இன்றைக்கு நகர்ப்புற வளர்ச்சியில் முதலாவதாக சுற்றுப்புறச் சூழல், இயற்கை வளங்கள், விளைநிலங்கள் பாதிக்காத வண்ணம் அந்தந்த நகரத்தினுடைய வளர்ச்சியை ஒழுங்குபடுத்தவேண்டும். இரண்டாம்தர, மூன்றாம்தர நகரங்களின் வளர்ச்சிக்காக, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, சாலை வசதி, வடிகால் வசதி மற்றும் குடியிருப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும்.

வேலைவாய்ப்புகள் நிறைந்த துணை நகரங்களை ஏற்படுத்தி, அதன் வாயிலாக பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமிழகத்தினுடைய நகர்ப்புற வளர்ச்சியை மேலும் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** திரு. செங்கை சிவம்.

***திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த மானியத்தை வரவேற்று, ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

குடிசை மாற்று வாரியம், 1970-ல் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் தமிழகத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டு, இன்றுவரையிலே அதன் மூலம் 66,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் சென்னையிலே ஆட்சேபணை இல்லாத இடங்களில் இருக்கக்கூடிய குடிசைகளை அகற்றி, கல் நாராலான ஓடுகளினால் இன்றைக்கு வீடுகள் அமைக்கப்படுவது—குறிப்பாக கடந்த ஆண்டு 8 ஆயிரம் வீடுகள், 5 கோடி ரூபாயிலே கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன—மிகவும் வரவேற்கத்தக்கது. அதைப்போல மீதியிருக்கின்ற 42 ஆயிரம் வீடுகளை, இரண்டு ஆண்டுகளில் 52 கோடி ரூபாய் செலவில் கட்ட உத்தரவிட்டிருப்பதையும், குறிப்பாக எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, அமைச்சரவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கனிவோடு, கல் நார் ஓடுகளால் கட்டப்பட இருக்கின்ற வீடுகளைச் சுற்றி கற்சுவர்களும், கதவுகளும், ஜன்னல்களும் வைக்க இருப்பதை நான் மிகவும் வரவேற்கிறேன்.

அதேநேரத்திலே ஒக்கியம்-துரைப்பாக்கத்தில் மின்சாரப் பாதையிலே அமைக்கப்பட்டிருக்கின்ற குடிசைகளையெல்லாம் அகற்றி, அங்கே 3 ஆயிரம் வீடுகளைக் கட்டுவதற்காக 37.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன்.

அதுமட்டுமல்ல. இந்தத் துறை தொடங்கிய காலத்திலிருந்து கடந்த இரண்டு ஆண்டுகாலமாக 3 ஆயிரம் வீடுகள் ஒவ்வொரு ஆண்டும் கட்டப்பட்டு வருகின்றன. அந்த வீடுகளையெல்லாம் கட்டுவதற்காக இந்தத் துறையில் 150 பொறியாளர்கள் இன்றைக்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் துறையினுடைய மூலப் பணியே அந்தப் பணிதான். ஆயிரம் விளக்குப் பகுதியில் சுதந்திரா நகர்; சைதாப்பேட்டையிலே நாகாத்தாள் திட்டம்; அண்ணா நகர்ப் பகுதியிலே அம்பேத்கர் நகர்; மயிலாப்பூர் பகுதியிலே சிங்காரவேலர் நகர்; பெரம்பூர் பகுதியிலே வியாசர்பாடி; ஆர்.கே. நகரிலே காரேசன் நகர்; இதுபோன்ற இடங்களில் இந்த ஆண்டு 3000 வீடுகளைக் கட்டுவதற்கு, இவற்றை எல்லாம் ஆய்வு செய்து, இதற்கான நிர்வாக ஒப்புதல் பெற்று, 'HUDCO'-விடம் இருந்து நிதி உதவியும் பெற்று, இந்தத் திட்டம் நிறைவேறுகின்ற நிலையில், இந்த நிதி நிலை அறிக்கையிலே அதற்கும் நிதி ஒதுக்கப்படவில்லை. குறிப்பாக என்னுடைய தொகுதியில், பெரம்பூர் வியாசர்பாடியில் உள்ள வீடுகள் புதியதாகக் கட்டப்படுகின்ற வீடுகள் அல்ல; அவை ஏற்கெனவே



1971-லே கட்டப்பட்ட வீடுகள். அவை இடிந்து போகின்ற நிலையில் இருப்பதால், அவற்றை இடித்துவிட்டு, புதியதாக 210 வீடுகள் இப்போது கட்டப்பட இருக்கின்றன. ஆகவே நான் அருள்கூர்ந்து தமிழக முதல்வரவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்வது, சென்னை மக்களின் நலன் கருதி, நீங்கள் கனிவோடு இதைக் கவனித்து, கொஞ்சம் குறைத்தாவது—3000 வீடுகள் என்று இல்லாவிட்டாலும்கூட—இந்தத் திட்டங்களையாவது நீங்கள் செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நண்பகல் 12-00

குறிப்பாக குடிசை மாற்று வாரியத்திலே சில கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். மூர்த்திங்கையர் தெரு, புதிய திரு.வி.க. நகர், போன்ற பகுதிகளையெல்லாம் size and service என்ற அடிப்படையிலே நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு அங்கேயே குடிசையிலே குடியிருப்பவர்களுக்கு அபிவிருத்தி செய்து நிலங்கள் அளந்து கொடுத்து அவர்களுக்குப் பட்டா வழங்க இருக்கிறது. ஆனால் அவற்றிற்கும்கூட CMDA-ல் அனுமதி கிடைக்கவில்லை. ஆனால் ஒரு தனியார், Real Estate நடத்துபவர் சென்றால் உடனடியாக எப்படி அனுமதி கிடைக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. அரசுத் துறையிலே பல ஆண்டுகாலமாக அனுமதி வழங்கப்படாமல், இவற்றிற்குப் பட்டா வழங்க முடியாமல் ஏழை எளிய மக்கள் இப்போது கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவற்றையும் அருள்கூர்ந்து கவனிக்க வேண்டும். அதேபோல கோயிலுக்குச் சொந்தமான கோயில் நிலங்களிலே 50 ஆண்டுகாலத்திற்கு மேலே, இன்றைக்கு வீடுகட்டிக் கொண்டிருக்கிறார்கள். Endowment நிலத்திலே வீடுகட்டியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க முடியாமல் இருக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்திலே போட்ட சட்டத்தினால் இன்றைக்கு அவற்றை வழங்க முடியாமல் இருக்கிறது. அந்த இடங்களிலே எல்லாவிதமான அபிவிருத்திகளும் செய்யப்பட்டும்—குறிப்பாக, சேமத்தம்மன் காலனி, முனியப்ப நாயக்கன் தெரு போன்ற இடங்களிலே எல்லாம்—இப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கிறது. அதையும் அரசு அருள்கூர்ந்து கவனித்து இந்து அறநிலையத் துறை, குடிசை மாற்று வாரியத்திற்கு அந்த இடத்தை அளித்து அவைகளுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று நான் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் மட்டுமல்லாது சென்னையில் மாண்புமிகு முதலமைச்சர் தொகுதி உட்பட பல

பகுதிகளிலே இந்த நிலை இருக்கிறது என்பதை இந்தநேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வை. சிவபுண்ணியம் தலைமை]

வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள், காலி மனைகள் போன்றவற்றைப் பெற்ற ஒதுக்கீடுதாரர்கள் இப்போது பணம் கட்டினாலும், 5 ஆண்டுகளுக்குப் பிறகுதான் sale deed வழங்குகிற நிலை இருந்தது. கிரயத் தொகை முழுவதும் கட்டிமுடித்த உடனே sale deed-களை உடனடியாக வழங்குவதற்கு உத்தரவிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். குறிப்பாக பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம் அனைவராலும் இப்போது தமிழகத்திலே வரவேற்கப்படுகிறது. சமீபத்திலே 4-2-1999 அன்று சென்னையிலே நடைபெற்ற தேசிய வீட்டுவசதி இணையங்களுடைய மாநாட்டில் சமத்துவபுர திட்டத்தை அனைத்து மாநிலங்களிலிருந்தும் வந்த தலைவர்கள் எல்லாம் பெரிதும் பாராட்டினார்கள். இந்தத் திட்டத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள அவர்கள் விழைகிறார்கள். ஆக, அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை இப்போது அறிமுகப்படுத்திய தமிழக முதல்வர் அவர்களை நான் மனதார, உளமார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய வீட்டுவசதித் துறையினுடைய இயக்குநர் நிவேதி பீஹரன், ஐ.ஏ.எஸ். அவர்கள் சமீபத்திலே 15-3-1999 அன்று ஆய்வு நடத்தினார்கள். அந்த ஆய்வில், 2 மில்லியன் வீடுகள் கட்டும் இந்திய அரசினுடைய திட்டத்தில் தமிழகத்திற்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிற 1.5 இலட்ச வீடுகளை தமிழகம் பல்வேறு துறைகளில், அதாவது தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், வீட்டுவசதித் துறை, குடிசை மாற்று வாரியம் போன்ற இப்படிப்பட்ட பல்வேறு துறைகளின் மூலமாக உண்மையிலே சொல்லப்போனால் இந்த இலக்கை இப்போது அடைந்திருக்கிறது என்று அவர்கள் நற்சான்றிதழ் வழங்கியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன்.

அப்படிப்பட்ட நிலையில் இப்போது தமிழகத்தினுடைய வீட்டுவசதித் துறை சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. சமீபத்திலே தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தினுடைய பேரவைக் கூட்டம் நடைபெற்றது. HUDCO, HDFC, L.I.C. போன்றவை எல்லாம் இணைந்து அல்லது வீட்டுவசதிச் சங்கத்தின் மூலமாக வீடு கட்டுவதற்கு 15. இலட்ச ரூபாய் கடனாகத் தனியாருக்கு



வழங்குகிறார்கள். ஆனால் நம்முடைய வீட்டுவசதித் துறை மட்டும் வீடுகட்ட, புதிய வீடு வாங்க 5 இலட்சம் ரூபாய் கடன் இப்போது வழங்கிக் கொண்டிருக்கிறது. இந்தநேரத்திலே அந்தப் பேரவைக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவுகளை நான் அருள்கூர்ந்து அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவந்து இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முக்கியமான ஒன்று. ஒரேயொரு கோரிக்கையை வைத்து முடித்துக் கொள்கிறேன். 5 இலட்சத்தை 10 இலட்ச ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும். ஆகவே நகர்ப்புறங்களில் 4 இலட்ச ரூபாயை 7 இலட்சமாகவும், அதேபோல L.I.G.-க்கு உள்ள 70 ஆயிரத்தை, 1 இலட்சமாகவும், M.I.G.-க்கு உள்ள 1 இலட்சத்து 20 ஆயிரத்தை 2 இலட்சமாகவும் நீங்கள் உயர்த்தித் தர வேண்டுமென்று இந்தநேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். சென்னையிலே நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சர்மா நகர், திரு.வி.க. நகர் போன்ற பகுதிகளில் உள்ள நலிந்த தொழிலாளர்களுக்கு 9,600 ரூபாய்க்கு பட்டா வழங்கினார்கள்; அந்த வீடுகளுக்குப் பட்டா வழங்கப்பட்டது. ஆனால் பத்திரப் பதிவுகள் இன்றைக்கும் செய்து தரப்படவில்லை. அதனாலே மக்கள் இப்போது பெரிதும் அவதிக்குள்ளாகிறார்கள். ஆகவே பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்களும், வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களும் கனிவோடு அதை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுவசதித் துறைக்கு ஒரேயொரு வேண்டுகோள். இப்போது பல்வேறு திட்டங்களின் மூலமாக ஆங்காங்கே கட்டப்பட்டிருக்கிற இடங்களை—அதாவது சாலைகள் மற்றும் கழிவுநீர்க் குழாய்கள் போன்றவற்றை—அந்தந்தத் துறைகளுக்கு, மாநகராட்சிக்கு Metro-விற்கு நீங்கள் வழங்கிவிட வேண்டும். இன்னும் பல இடங்களில் வழங்காமல் உள்ளதால், அந்த இடங்கள் அபிவிருத்தி செய்யப்படாமல் இருக்கின்றன.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நகராட்சிகளில், மாநகராட்சிகளில் கட்டப்பட்டு இருக்கின்ற இடங்களில் உள்ள அந்தச் சாலைகளை எல்லாம் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள், பணம் கேட்டுள்ளதன் காரணமாக சிறிது காலதாமதம் ஆகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இதற்கு மக்கள் என்ன செய்வார்கள்? பயனாளிகள் என்ன பாவம் செய்தார்கள்? ஓர் அரசுத் துறைக்கும் மற்றொரு அரசுத் துறைக்கும் இடையில் ஏற்படுகிற பிரச்சினை. ஆகவே இதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், உடனடியாக அந்த இடத்திலே அபிவிருத்தித் திட்டங்களை அந்தந்தத் துறைகளே ஏற்க, சம்பந்தப்பட்ட துறைகளினுடைய அமைச்சர்களோடு நம்முடைய அமைச்சர் கலந்துபேசி தீர்க்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டு, இந்த மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** திரு. அ.ல. தங்கவேல்.

**திரு. அ.ல. தங்கவேல்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைகளுக்கான மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1996 ஆம் ஆண்டு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னால் நம்முடைய வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் இன்றைக்கு இந்தத் துறை நேர்மையாகவும் நாணயமாகவும் செயல்பட்டு வருகிறது. இது அனைவராலும் பாராட்டக்கூடிய ஒன்றாகும்.

கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டுள்ளபடி ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்னும் திட்டம்—வசதி படைத்தவர்கள் மட்டுமே சொந்தமாக வீடு கட்டி வாழும் நிலைமாறி—நடுத்தர மக்களும் ஏழையெளியவர்களும் தங்களுக்கென சொந்தமாக வீடு கட்டிக்கொள்ள வழிகோலும் என்பதால் இந்த நிலை அனைவருக்கும் மகிழ்ச்சியளிக்கின்ற நிலையாகும். இந்தத் துறை அனைத்துத் தரப்பினருக்கும் தேவையான வீட்டு வசதியை அளிப்பதற்காக—வீடுகள், வீட்டுமனைகள், வீடுகட்ட கடன் வசதி மற்றும் தகுந்த தொழில்நுட்பத்தை வழங்கிவருவது எல்லோராலும் பாராட்டக்கூடிய ஒன்றாகும்.

நம்முடைய முதல்வர் அவர்கள் 1996-லே முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னால் 'சொன்னதைச் செய்வோம்,



செய்வதைத்தான் சொல்வோம்' என்கின்ற உன்னதக் கோட்பாட்டின்படி கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தியதன் மூலமாக அனைத்து வீட்டுவசதிச் சங்கங்களின் சிறப்பான சேவையினால், பல இலட்சக்கணக்கான நகர மக்களும், கிராமப்புற ஏழையெளிய மக்களும், தங்களுக்கென சொந்தமாக வீடுகள் கட்டி வருவதை கண்கூடாகக் காணமுடிகிறது.

1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி தமிழகத்திலே 125 இலட்சம் குடியிருப்புகளில் மக்கள் வசித்து வருவதாகவும், வருகின்ற 2011 ஆம் ஆண்டில் 175 இலட்சம் குடியிருப்புகள் தேவை என்கிற நிலையில் நம்முடைய அரசு, வாரியத்தின் சார்பாகக் கட்டுகின்ற வீடுகளை நல்ல காற்றோட்டம் உள்ள இடத்தில், சாக்கடை வசதி, சாலை வசதி போன்றவைகளுடன் அமைத்துத் தர வேண்டுமென இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஊரகப் பகுதிகளில் வாழும் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்கள் குறைந்த செலவில் வீடுகளைக் கட்டிக்கொள்ளத் தேவையான கட்டடப் பொருட்களை, மாவட்ட கட்டட மையங்களின் மூலம் அளித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பொருட்கள் அனைத்தையும் நல்ல தரமான பொருட்களாக வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் சேலம் மாநகரைப் பொறுத்தவரை வீட்டுவசதி வாரியத்தின் சார்பாக நிறைய வீடுகள் கட்டப்படுகின்றன. இவை அனைத்தையும் விரைவில் கட்டி முடித்து, பொதுமக்கள் பயன்படுத்துகின்ற முறையில் ஏற்பாடுகளைச் செய்து தரக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் சேலம் புறநகர்ப் பகுதிகளிலும் நிறைய வீடுகளைக் கட்டினால், அரசுப் பணியாளர்கள், வணிகர்கள், தனியார் நிறுவனத்தில் பணியாற்றுபவர்கள் அனைவரும் இந்த வீடுகளைப் பெற வாய்ப்படைவார்கள்.

Lay-out approval நகர ஊரமைப்பு இயக்குநர் அலுவலகத்தில் கடந்த 10 ஆண்டுகளாக செய்யப்படுகிறது. இதனால் பொதுமக்களுக்கு வீண் அலைச்சலும், காலதாமதமும் ஏற்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்துகூட Lay-out approval-க்கு சென்னை சென்று வர உள்ளதைத் தவிர்த்து, 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தபடி 8 மண்டல இயக்குநர்களுக்கு அதிகாரத்தை வழங்கினால், பொதுமக்களுக்கு நல்ல உபயோகமாக இருக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளூர் திட்டக் குழுமம், எட்டு வீடுகளுக்கு மேற்பட்ட பலமாடி வீடுகள்—apartments—கட்ட நகர ஊரமைப்பு இயக்குநருக்கு அனுப்புகிறது. கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமங்கள் போல் முழு அதிகாரம் படைத்த அமைப்புகளாகும். ஆகவே பலமாடி வீடுகள்—apartments—கட்ட கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்களுக்கு அதிகாரம் வழங்க நமது அரசை தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

எங்கள் சேலத்திற்கு மட்டும் (மணியடிக்கப்பெற்றது) முழுமைத் திட்டம் இன்னும் தயார் செய்யப்படவில்லை. விரைவாக சேலத்திற்கும் முழுமைத் திட்டம் தயார் செய்து, அபிவிருத்தி செய்ய அன்புடன் கேட்டுககொள்கிறேன்.

கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களும் மற்ற கூட்டுறவுச் சங்கங்களைப்போல, நகைக் கடன், வாகனக் கடன், சிறு தொழில் கடன் வழங்க வழிவகை செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

புதியதாக சேலம் மாநகராட்சியில் சேர்க்கப்பட்டுள்ள கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க, சென்ற ஆண்டே திட்டங்கள் போடப்பட்டு நாளதுவரையில் நிறைவேற்றப்படாமல் உள்ளது. எனவே போர்க்கால அடிப்படையில் புதியதாக சேர்க்கப்பட்டுள்ள கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கட்டப்பட்ட அடுக்குமாடிக் கட்டடங்கள், வசித்து வரும் மக்களுக்கு வாடகைக்காக விடப்பட்டுள்ளன. நிலுவையில் உள்ள வாடகை பாக்கியைப் பெற்றுக்கொண்டு. அவற்றை குடியிருப்போருக்கே சொந்தமாகத் தந்துவிட்டால் நல்லது. காரணம் அந்த வீடுகள் பழுதடைந்தால் அரசாங்கமே செப்பனிடுவதைத் தவிர்க்கவும், அரசுப் பணம் விரயமாவதைத் தவிர்க்கவும் இம்முறை வழிவகை செய்யும்.

எனது தொகுதியில் தேசிய நெடுஞ்சாலைத் துறைக்குச் சம்பந்தப்பட்ட நெத்திமேடு-சங்ககிரி சாலையிலிருந்து செவ்வாய்ப்பேட்டை-லாரி ஸ்டாண்டு-லீ பஜார்-மூன்று சாலைவரை செல்லும் பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, செப்பனிட்டு தார்ச் சாலையைப் புதுப்பித்துத் தரவும், Lorry stand டிலிருந்து நரசிம்மன் சாலை வழியாக இளம்பிள்ளை வரை செல்லும் பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, செப்பனிட்டு தார்ச் சாலையை புதுப்பித்துத் தரவும், ஜங்ஷன் மெயின் ரோடிலிருந்து அழகாபுரம்புதூர்-பாறைக்காடு வழியாக சேலம் மத்திய சிறை Superintendent பங்களா ஓரமாகச் சென்று ஏற்காடு நெடுஞ்சாலையை இணைக்கும் பாதையில் வரட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டி செப்பனிட்டு தார்ச் சாலையாக்கித் தரவும், அஸ்தம்பட்டியிலிருந்து ஜங்ஷன் வரை, செல்லும் பாதையை இருவழிப் பாதையாக மாற்றித் தரவும், சேலம் புதுப்பேருந்து நிலையம் அருகே செல்லும் பாதையில் பொதுமக்கள் செல்ல சுரங்கப் பாதை அமைத்துக் கொடுக்குமாறும் தங்களின் மூலம் நமது அரசை கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



அதேபோல சேலம் மாநகர் ஐந்து ரோட்டில் மக்கள் கூட்டம் அதிகமாக இருப்பதால்—வாகனப் பெருக்கம் அதிகமாய் உள்ளதால்—சுரங்கப்பாதை அமைத்துத் தரவும், சேலம் வள்ளுவர் சிலை அருகே சுரங்கப்பாதை அமைத்துக் கொடுக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** பேசி முடித்துவிடுங்கள், நேரம் ஆகிவிட்டது.

**திரு. அ.ல. தங்கவேல்:** ஏற்கெனவே கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கேட்டுக்கொண்டபடி, எனது தொகுதி செட்டிச்சாவடிப் பகுதியில் குரும்பப்பட்டியில் ஏற்காடு அடிவாரப் பகுதியிலே 500 ஏக்கர் பரப்பளவில் ஏரி ஒன்றும், கள்ளக்குறிச்சி-மன்னார்பாளையம் கற்பகம் கிராமத்தில் ஏற்காடு அடிவாரப் பகுதியிலே சுமார் 500 ஏக்கர் பரப்பளவிலே ஏரி ஒன்றும் கட்டித் தந்தால் ஏற்காட்டிலிருந்து மழைக்காலங்களில் பெருக்கெடுத்து வரும் வெள்ளநீரைத் தேக்கி நிறுத்தி, அப்பகுதிகளில் நிலத்தடி நீர் ஆதாரங்கள் நிலைக்கவும், வெள்ளப் பெருக்கினால சேலம் மாநகரில் ஏற்படும் வெள்ளச் சேதாரங்களைத் தவிர்க்கவும் பயன்படும் என்பதைத் தங்கள் மூலம் நமது அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து இவற்றைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. அ.ல. தங்கவேல்:** எனது தொகுதியில் கோரிமேட்டிலிருந்து-கோம்பைப்பட்டி வழியாக விநாயகம்பட்டி-உயிரியல் பூங்கா-தமிழ்நாடு

மாக்னசைட் தொழிற்சாலை-குரும்பப்பட்டி வழியாக டேனீஸ்பேட்டை வரை செல்ல, நெடுஞ்சாலைத் துறை மூலம் சாலை அமைத்துக் கொடுக்க ஆவன செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சேலத்திலே கடந்த ஆண்டில், குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக, நிறைய அடுக்குமாடி வீடுகளைக் கட்ட அனுமதி வழங்கிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** அடுத்து, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Chairman Sir, I thank you very much for giving me this opportunity to speak on the Housing Demand for the year 1999-2000 on behalf of the Janata Dal. "A House for each family" scheme is a good scheme and the Government must take firm action and fix up some period for giving a house for each family and the houses should be given during that period. I hope that the Hon. Minister who is young and energetic will do his best to see that a house for each family is given in his tenure.

To promote housing, the Government have announced schemes for providing houses and house sites besides giving financial assistance and all other facilities to construct more houses. As per the 1991 census, 125 lakh houses have already been constructed at that time and by the year 2011, we need 250 lakh houses. I do not know what is the plan that this Government is having to Construct 250 lakh houses. I request the Hon. Minister to have a concrete plan to see that the target is achieved.

Regarding provision of houses for all sections of people, namely H.I.G., M.I.G., L.I.G. and houses for Economically Weaker Sections, the Government is doing a lot of good work.

Coming to the other points, Sir, in order to construct houses according to the requirements and design and according to the economic status of the people the Government is giving developed plots. It is really a welcome feature. When the Hon. Minister came to Hosur with his Secretary, I requested him at that time to kindly do that. He was kind enough to give



developed plots to construct houses according to the peoples' plans and economic status. I thank the Hon. Minister for the same and I come to understand that the work has already been started to improve the lands for 3000 plots, meant mostly for the weaker sections.

*பிற்பகல் 12-15*

Hosur is an industrial area and a lot of poor people and industrial workers are living there. The cost of the land also must be lesser. Then only they will be able to purchase the land. So, I request that the weaker sections should be given land at a lesser cost so that their houses could come up nicely.

When industries were started in Hosur every industrialist was telling that there was no infrastructure facility, there was no road, there was no house, there was no water. How Could We come and live? — Now I am very happy to see many houses in Hosur industrial complex. I cannot say it is sufficient; but we have some degree of self sufficiency and a lot of other people have also constructed houses. Now people say that the Housing Board has done excellent work for housing purposes in Hosur.

The Board has also done a lot of good work for redressal of public grievances. Those who have grievances can approach the Housing Board and get their grievances redressed. The simplification of procedure for issue of sale deed without waiting for five years and receiving full payment before the completion of five years is also a good decision.

Recruitment of 25 to 50 private consultants for the Tamil Nadu Housing Board is a very good scheme and we can take the ideas of private consultants also.

Coming to Slum Clearance in Chennai, I am very happy that this Government is doing a lot of good work for the clearance of slums in Chennai; but at the same time I request you to see that it is extended to other towns of the State because in a lot of places there are slums. I, therefore, request the Hon. Minister to see that it is extended to other towns in the State.

Regarding replacement of asbestos sheets instead of coconut leaves for the huts, really it is an excellent scheme. You are doing an excellent work.

Asbestos is fire proof and this scheme should be extended to the entire State. I have seen a lot of places and even if you go far South, invariably 50% of the houses are constructed with coconut leaves and it is most dangerous for the people who live in it. Even if there is a small fire hundreds of houses will be destroyed. So, I request the Hon. Minister to see that in his tenure at least, the coconut leaves are replaced with asbestos sheets. I request the Hon. Minister to examine whether it is possible after consulting the Hon. Chief Minister.

At the same time, I thank the Hon. Minister for constructing 176 M.I.G. Houses and over 22 H.I.G. houses in Hosur at a cost of Rs. 423 lakhs. In addition, you have mentioned about Co-operative Housing Society in the State and the Rural Housing Society and about the Periyar Memorial Samathuvapuram Scheme for construction of nearly 1794 houses in the State by spending nearly Rs. 1.59 crores. (The Gong was sounded.) I will finish within two minutes, Sir. This is also a good scheme.

You have now introduced Rural Housing Corporation. Actually, in the towns, people are having a lot of money and they can construct houses of their own but in the rural areas you must see that cheap housing is also introduced and houses should be given to the rural people.

*பிற்பகல் 12-20*

Lot of houses have been constructed in poramboke lands where there is no objection, Sir. If the Housing Minister and the Revenue Minister sit together......

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**THIRU B. VENKATASAMY:** Within one minute, I will finish. I request you to see that the houses constructed in poramboke lands are given pattas. Preference should be given to the land owners. Land owners are giving land to construct houses. You are acquiring land from them. But you are not giving even a single house or single plot to them. This is not fair.

நாங்கள் நிலம் கொடுத்தோம், எங்களுக்கு வீடு இல்லை, எங்களுடைய நிலமும் போய்விட்டது, வீடும் இல்லை என்று சொல்லுகிறார்கள்.



Therefore I request you to examine that. Some people have given surplus lands. If they want it back and if it is not used, it should be given back to them. I request that all these things should be done.

I thank the Hon. Chairman for giving me this opportunity. Thank you very much.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டப் பேரவையிலே நடைபெறும் 1999-2000 ஆண்டுக்கான கோரிக்கை எண் 32 வீட்டுவசதி, கோரிக்கை எண் 33 நகர்ப்புற வசதி குறித்த மானியக் கோரிக்கைகள்மீது இந்திய தேசிய முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை இம்மாமன்றத்தில் எடுத்து வைக்க முன்வருகின்றேன்.

வானத்திலே பறக்கும் பறவைக்குக் கூடுண்டு; முயல்களுக்குப் புதருண்டு; புலி, சிங்கங்களுக்குக் குகையுண்டு. மனிதராய்ப் பிறந்த நமக்கு அடிப்படைத் தேவையான உணவு, உடை, இருப்பிடம் போன்ற அத்தியாவசியத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றை அடைய உருவாக்கப்படுவதே கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களாகும். 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற முதுமொழிக்கேற்ப குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற திட்டத்தை கழக அரசு உருவாக்கி இன்று அதனை செயல்படுத்தி வருகிறது.

'செய்வதைச் சொல்வோம், சொல்வதைச் செய்வோம்' என்று சூளுரைத்த தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் கலைஞருடைய நல்லாட்சியிலே — கூட்டுறவுத் தேர்தல்களை எல்லாம் முறையாக நடத்தி முடித்து, மாவட்ட, மாநிலத்தில் உள்ள இணையத்திற்கும் தேர்தல்களை நடத்தி முடித்து நல்லாட்சி நடத்திவரும் — மாண்புமிகு கலைஞருடைய அமைச்சரவையில் இத்துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்று திறம்படச் செயலாற்றி வருகின்ற வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஆண்டு என்னுடைய தொகுதிக்கு இரண்டு கூட்டுறவுச் சங்கங்களை வழங்கி பெருமை சேர்த்திருக்கிறார்கள். தமிழகத்தில் உள்ள கிராமப் பிரதம கூட்டுறவுச் சங்கங்கள், நகர,

பேரூராட்சி கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை முறையாக நடத்தி, மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தல்களை எல்லாம் நடத்தி முடித்து, மாநில அளவிலே இணையத்திற்கும் தேர்தலை நடத்தி முடித்து, இயக்குநர்களையும் தேர்ந்தெடுத்துள்ளீர்கள். முதலாவதாக கலைஞருடைய ஆட்சியில் இவ்விணையத்திற்குத் தலைவராக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. செங்கை சிவம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர் அந்தப் பொறுப்பை ஏற்ற பிறகு சிறந்த முறையில் நிர்வாகம் திறம்பட நடந்து வருகிறது என்பதை எண்ணி என்னுடைய நல்வாழ்த்துக்களைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த கால ஆட்சியில் இணையத்திற்கு தேர்தல் நடத்தப்படவில்லை. அது தனி அதிகாரியால் நடத்தப்பட்டு உரிய கடன் உதவித் தொகையை சங்கங்கள் பெறுவதற்கு காலதாமதம் ஏற்பட்டது. அது தற்போது துரிதமாக செயல்பட்டு வருகிறது என்பதைப் பயனாளிகளுடைய விண்ணப்பங்கள் மூலமாக நாங்கள் அறியும்போது மகிழ்ச்சியளிப்பதாக இருக்கிறது. தறபோது 30 தினங்களுக்குள் இந்தக் கடன் உதவி கிடைப்பதற்கான வழிவகையை இந்த இணையம் செய்து தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

சங்க விதிமுறைகளுக்கு ஒப்ப, முறையாக கோப்புகள் தயார் செய்யப்பட்டு, சரிபார்த்து அனுப்பப்படுகின்ற நேரத்திலே அது C.S.R., D.R. மற்றும் கூட்டுறவுப் பதிவாளர் அளவில் சென்றுவர வேண்டியுள்ளது. இவ்வாறு சென்று வருவதால் காலதாமதம் ஏற்படுகிறது. அவ்வாறு இல்லாமல், நேரடியாக இணையத்தின் மூலமாகவே இங்கிருந்து பெற்றுக்கொள்வதற்கு மாண்புமிகு இணையத்தினுடைய தலைவர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் வழிவகை செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கடன் உதவி அளிப்பதிலே, முதல் தவணை கொடுத்த பிறகு, இரண்டாவது, மூன்றாவது தவணைக் கடன் தொகை அளிப்பதிலே சற்றுக் காலதாமதம் ஏற்படுகிறது. அதுவும் விரைவாகக் கிடைத்திட வழிவகை செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். நகர்ப்புறப் பகுதிகளில் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் சில இணையத்துடன் இணைக்கப்படாமல் செயல்பட்டு வருகின்றன. அந்தச் சங்கங்களையும் இதனோடு இணைத்து செயல்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, First Drawal போட்டுவிடுகிறார்கள். Second Drawal, Third Drawal போடுவதில் தாமதம் ஏற்படுகிறது என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்துள்ளார். மார்ச் 1999 முடிய, கடந்த 10 ஆம் தேதி வரையில் அனைத்து இனங்களுக்கும் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது.

*பிற்பகல் 12-25*

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இணையத்தினுடைய தலைவராகப் பொறுப்பேற்ற பின்னால் ஓரளவு எங்களுக்குச் சரியாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இருந்தபோதிலும், மீண்டும் அதை விரைவுபடுத்துவதற்காக நினைவுபடுத்துகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிரதம கூட்டுறவுச் சங்கங்கள் இணையத்தில் வைத்திருக்கும் வைப்பு நிதிக்கு சற்று கூடுதலான வட்டித் தொகை வழங்கிட ஆவன செய்ய வேண்டுமாய் இந்தநேரத்திலே கனிவோடு கேட்டுக்கொள்கிறேன். பிரதம கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் மற்றும் மாவட்ட கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களுக்கு இணையத்தால் வழங்கப்படும் விளிம்புத் தொகை ஒரு சதவிகிதம் என்பதை இரண்டு சதவிகிதமாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் இது, நீண்ட நெடுங்காலமாக உள்ள விகிதாச்சாரம் ஆகும். தற்போது சங்கங்களுக்கு கட்டட வாடகை, சம்பளச் செலவு, நிர்வாகச் செலவுகள் என பலவகையில் கூடுதலாகி இருக்கின்றன. கடந்த ஆண்டு இதே மானியக் கோரிக்கையின்போதும், நானும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் என்ற முறையில், இதனை எடுத்து விளக்கிப் பேசியுள்ளேன். இணையத்தின் தலைவர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கலந்துபேசி இதனை நடப்பு ஆண்டிலேயே உயர்த்திக் கொடுத்திட வேண்டுமாய் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கழக ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னால், கிராமிய பிரதம சங்கங்கள் மூலமாக ஒரு இலட்சமும், நகர, தாலுகா சங்கங்கள் மூலமாக ரூ. 4 இலட்சமும் வீடு கட்ட கடன் வழங்கி வருகின்றீர்கள். தற்போது சிமெண்ட், கம்பி, கட்டுமானக் கூலி போன்றவற்றின் விலைவாசி உயர்ந்திருக்கின்ற காரணத்தால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே கிராம பிரதம சங்கங்கள் மூலமாக ஆறு

இலட்சம் ரூபாயாகவும், நகர தாலுகா சங்கங்கள் மூலமாக 7 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தித்தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல பழுதுபார்க்கின்ற செலவுகளையும் அதிகப்படுத்தித்தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஆரூண் ரஷீத் அவர்கள் கூறியதைப்போல, சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த வங்கிகளிலே கடன் பெறுவதற்கு, வட்டியில்லாக் கடனாக—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வட்டியில்லாக் கடனாக—7 இலட்சம் ரூபாய் வழங்கிட வேண்டுமாய், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

* **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற இந்தக் கருத்தைக் கேட்டு, இனி சட்டமன்ற உறுப்பினர்கள் இப்படிப்பட்ட இணையத்திற்குத் தலைவராக வரக்கூடாது என்று பொதுமக்கள் சொல்கின்ற நிலைமை ஏற்படும். எனவே பொதுமக்களோடு சட்டமன்ற உறுப்பினர்களை வேறுவிதமாகப் புரிவோடு நடத்தக்கூடிய ஒரு தனி முறையை இப்படிப்பட்ட அமைப்புகளில் ஏற்படுத்தக்கூடாது என்பது பொது நியாயம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இந்த நிதியை, வங்கிகள், HUDCO போன்றவர்களிடமிருந்து பெற்றுத்தான் இணையத்திலிருந்து உறுப்பினர்களுக்கு கடன் வழங்கப்படுகிறதே தவிர, அரசு மானியமாகவோ அல்லது கடனாகவோ வழங்கவில்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, Point of Order.....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** இல்லை, உட்காருங்கள். உறுப்பினர் பேசட்டும். Point of Order வேண்டாம். உறுப்பினர் பேசுவதற்கு ஒதுக்கிய நேரம் முடிவடைய இருக்கிறது. திரு. முகம்மது இஸ்மாயில், தொடர்ந்து பேசுங்கள்.



**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய அவை முன்னவர் அவர்கள் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்கு நன்றியைக் கூறிக் கொள்கிறேன். மஹாராஷ்டிரா போன்ற மற்ற மாநிலங்களிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இதுபோன்ற கடனுதவி வழங்கப்பட்டு வருவதாகக் கருதுகிறேன். ஆகவே அரசு பரிசீலனை செய்தால் நலமாக இருக்கும் என்ற கருத்தினை மட்டும் இந்தநேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நலிவடைந்த சங்கங்களைப் பட்டியலிட்டு, அவற்றை வரைமுறைப்படுத்தி, சிறப்பாகச் செயல்பட ஆவன செய்ய வேண்டும். காரணம் கடந்த கால ஆட்சியில் தேவைக்கு அதிகமான ஆட்களைப் பணியில் அமர்த்தியதன் காரணமாக.... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இதுமாதிரியான சங்கங்களைத் தணிக்கை செய்து கூடுதலாக உள்ள ஆட்களை காலியாக உள்ள வேறு சங்கங்களுக்கு மாற்றி நலிவடைந்த சங்கங்களைச் சிறப்பாகச் செயல்படுத்த அரசும் இணையமும் ஆவன செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மாநிலம் முழுவதும் உள்ள வீட்டுவசதிச் சங்கங்களில் பணியாற்றும் செயலாளர்களுக்கு ஒரேவிதமான ஊதியம் கிடைத்திட அரசு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந.பூ. இராமஜெயம்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** நீங்கள் பேசுவதற்கு ஒதுக்கிய நேரம் முடிவடைந்துவிட்டது. மூன்று நிமிடங்கள் அதிகமாகவே பேசியிருக்கிறீர்கள். திரு. ந.பூ. இராமஜெயம்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, .......

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** நான் அடுத்த உறுப்பினரைப் பேசுவதற்கு அழைத்துவிட்டேன். திரு. ந.பூ. இராமஜெயம், பேசுங்கள்.

*பிற்பகல் 12-30*

**திரு. ந.பூ. இராமஜெயம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே பேசுகிற வாய்ப்பினை நல்கிய தங்களுக்கும், மாமன்றத்தில் பேசுகின்ற ஒரு தகுதியை உருவாக்கித் தந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு .கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நேரத்தின் அருமை கருதி என்னுடைய கோரிக்கைகள் ஒன்றிரண்டை மட்டும் கூறுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன். எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் வீட்டுவசதி, நகர்ப்புற வசதி இவைகளைப் பற்றி எல்லாம் அதனுடைய சிறப்புக்களையும், தேவைகளையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். 'உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோர், உடை கொடுத்தோர் மானம் காத்தோர், உறைவிடம் கொடுத்தோர் வாழ்வளித்தோர்' என்ற கூற்றிற்கேற்ப இந்த மூன்றாவது பிரச்சினையான உறைவிடத்தில் வீட்டுவசதித் துறை பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி இருக்கிறது. குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற அடிப்படையில் உயர்ந்த நோக்கத்தோடு பல்வேறு திட்டங்களைச் செய்து வருவதைப் பாராட்டுகின்றேன்.

அதேபோன்று மக்கள் குறை தீர்க்கும் முறையைப் பொறுத்தவரையில் 1996 ஆம் ஆண்டு மக்கள் குறைகளைத் தீர்ப்பதற்காக கிட்டத்தட்ட 6700 விண்ணப்பங்களை நேரடியாகப் பெற்று அதில் ஏறத்தாழ 6054 மனுக்கள்மீது தக்க நடவடிக்கை எடுத்தது பாராட்டப்பட வேண்டியது. அதேபோன்று முழுத் தொகையும் கொடுத்தவுடனே பத்திரத்தை இடத்திற்கே சென்று கொடுப்பதென்பது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய ஒன்று. இன்னும் பல திட்டங்களை வாரியம் செய்து வருவது பாராட்டப்பட வேண்டியது மட்டுமல்லாமல் அதற்காக நன்றி தெரிவிக்கவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே துறையின் சார்பாக வாரா வாரம் சந்தித்து அனைத்து மக்களுடைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்கிறார்கள். அதை இன்னும் கொஞ்சம் விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் சென்னையிலே வாழுகின்ற மக்களிலே



கிட்டத்தட்ட 35% மக்கள் குடிசை வாழ் மக்களாக இருக்கிறார்கள். அதிலே 50% மக்கள் மிகவும் நெரிசலான பகுதியிலே வாழ்வதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்' என்ற உயர்ந்த நோக்கத்தோடு கலைஞர் அவர்கள் 1970 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியத்தைக் கண்டார்கள். குடிசை மாற்று வாரியத்தின் மூலம் ஏழை மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இருக்கின்ற இடங்களிலேயே அடுக்குமாடிக் குடியிருப்பு, மனை ஒதுக்கீடு, மாற்று இடம் அளித்தல் போன்றவற்றின் மூலமாக குடிசையிலே வாழ்கின்ற மக்கள் மேன்மையுறுவதற்காக பல திட்டங்களை அறிவித்து, கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய்க்கு மேலே செலவிட்டு தமிழகத்திலே 66,000 வீடுகளை—குடியிருப்புகளைக்—கட்டித் தந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட குடியிருப்புகளில் பழுது பார்க்கின்ற நிலை கடந்த காலங்களில் இல்லாத காரணத்தால் தொடர்ந்து பழுது பார்க்கின்ற பணிக்காக மிகவும் அதிகமான நிதியினை ஒதுக்கித் தரவேண்டும் என்று இந்தநேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இருக்கின்ற இடங்களிலேயே அந்த மக்கள் வாழ வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு கல்நார் வீடுகளைக் கட்டி அந்த இடத்திலேயே அந்த மக்கள் வாழ வகை செய்திருக்கிறார்கள். அதிலே ஒரு சிறிய பிரச்சினை. கட்டப்படுகின்ற அந்தக் கல்நார் வீடுகளை ஒதுக்குவது யார் என்ற நிலைமை இருக்கிறது. வருவாய்த் துறையா அல்லது குடிசை மாற்று வாரியமா என்ற பிரச்சினை இருக்கின்ற காரணத்தால் எங்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகளுக்கு அது இடைஞ்சலாக இருக்கிறது. எனவே துறையே அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்னும் அந்தத் துறையிலே வீடுகளைப் பராமரிப்பதற்காக பல கோடி ரூபாயை ஆண்டாண்டுதோறும் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள். என்றாலும்கூட பூரணமாக, முழுமையாக அந்தப் பணி முடியாமல் இருக்கின்ற காரணத்தினால் மீண்டும் இந்த ஆண்டு அதிகமான நிதியை ஒதுக்கித் தரவேண்டும் என்று இந்தநேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. ந.பூ. இராமஜெயம்:** இருக்கின்ற பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் நேரமின்மை காரணமாகக் கொடுத்துவிட்டு, ஒரே ஒரு பிரச்சினையை நான் இந்தநேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். M.U.D.P. திட்டத்தின்கீழ், முத்திரைத் தீர்வைக்கான சலுகைகள் பெறுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கிட்டத்தட்ட பலகோடி ரூபாய் அளவிற்கு வரிச் சலுகை அளித்து, அந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். என்றாலும்கூட, இந்தத் திட்டத்திலே முழுமையாக அனைவரும் பயன்பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. காரணம் குடிசை மாற்று வாரியம் நிலமாற்றம் செய்யப்படவில்லை என்ற காரணத்தினால், உடனடியாக அதற்கு கிரயப் பத்திரம் கொடுக்கவில்லை. எனவே அதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

இங்கே எனக்கு முன்னால் உரையாற்றிய திரு. செங்கை சிவம் அவர்கள் கூறியதைப்போல, கோயில் இடங்களில் குடியிருப்பவர்களுக்கு அந்த நிலங்களை உரிமையாக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். அதேபோன்று மிக முக்கிய பிரச்சினை. எங்களைப் போன்ற சென்னை நகரத்திலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்டுள்ளது. எதிர்காலத் திட்டங்களை நல்ல எண்ணங்களோடு நல்லது செய்ய வேண்டும் என்பதற்காக, ஆற்றுக் கரையோரங்களில் இருக்கிற மக்களை அப்புறப்படுத்துவதாகக் கூறி மிகப்பெரிய திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அங்கே செல்லுகின்ற அதிகாரிகள், அளவிற்கு அதிகமாக அந்த மக்களிடத்திலே ஓர் அச்சத்தை உருவாக்குகிறவகையில் இன்னும் 2, 3 நாட்களில் அரசு உங்களை அந்த இடத்திலிருந்து காலி செய்துவிடும் என்ற அடிப்படையிலே சொல்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாற்றுக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் அந்தப் பகுதிக்குச் சென்று ஆறுதலையும் கூறி வந்திருக்கிறார்கள். ஆனால் அந்த இடத்திற்கு அங்குள்ள மக்கள் இடையூறாக இருக்க விரும்பவில்லை. அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அங்குள்ள மக்கள் பூரண ஒத்துழைப்பைக் கொடுப்பதாக இருக்கிறார்கள். எனவே தேவைக்கு வேண்டிய இடத்தை மட்டும் எடுத்துக்கொண்டு, மற்ற இடங்களை அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்குச் சொந்தமாக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** திரு. இரா. மூக்கப்பன்.

**திரு. இரா. மூக்கப்பன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு, நன்றி தெரிவித்து, அவர்களை வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

பொருளாதாரத்திலே நலிவுற்ற, கிராமப்புறங்களிலே வசிக்கும் ஏழையெளியவர்களுக்கு 'ஒரு குடும்பம் ஒரு வீடு' என்ற தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, தமிழ்நாடு வீட்டுவசதி இணையத்தின் சார்பில் வட்ட கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் மூலமாக' 1996-97 ஆம் ஆண்டு, 9,700 ரூபாய் அரசுக் கடனாகவும், 1,600 ரூபாய் மானியமாகவும் கொடுக்கப்பட்டதை, 1998-99 ஆம் ஆண்டு முதல் 12,000 ரூபாயாக உயர்த்தி, அரசு மானியமாக ரூ.2000-மும், பயனீட்டாளர்கள் ரூ.2,000-மும் சேர்த்து மொத்தம் 16,000 ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது இன்றைக்கு அரசின் சார்பிலே தொகுப்பு வீடுகள் கட்டுவது என்றாலும்கூட, ரூ.32,000-த்திலிருந்து ரூ. 35,000 வரை கொடுக்கப்படுவதால், கிராமங்களிலே ஏறி இருக்கின்ற விலைவாசியின் அடிப்படையில், ஓட்டு வீடுகள்தான் அந்தப் பணத்திலே கட்ட முடிகிறது. எனவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட, தொகுப்பு வீடுகளை எல்லாம் ஓட்டு வீடுகளாகக் கட்டக் கூடாது; Concrete வீடுகளாகத்தான் கட்ட வேண்டுமென்று அறிவித்து, அந்த முறையிலே இப்போது நடைபெற்று கொண்டிருப்பதால், இந்தத் தொகையைச் சற்று உயர்த்தி கிராமப்புறங்களிலே உள்ளவர்களுக்கெல்லாம் பயனளிக்கின்ற வகையிலே மானியத்தோடு கூடிய கடனாக 25,000 ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அந்த அளவுக்குக் கொடுத்தால்கூட, வீடுகட்டுவதற்கு மிகவும் சிரமமான சூழ்நிலை இருக்கிறது. எனவே இந்தத் தொகையை ரூ.25,000-ஆக உயர்த்தித் தருவதோடு, அரசு மானியமும் அதற்கு வழங்க வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் வட்ட கூட்டுறவுச் சங்கத்திற்கு கிட்டத்தட்ட 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருப்பதால், ஓர் ஆண்டுக்கு 150 பேர்களுக்குத்தான் கடன் கொடுக்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவே அதைக் கொஞ்சம் கூடுதலாக்கி—அதிக கிராமங்கள் உள்ளதால்—ஓர்

ஆண்டுக்கு 500 பேர்களுக்காவது கடன் வழங்க அனுமதிக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோலவே நகர்ப்புறங்களில் உள்ள வீட்டுவசதிச் சங்கங்களின் மூலம் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் முதல் 5 இலட்சம் ரூபாய் வரை கடன் கொடுப்பதைப்போல, இந்த வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின்மூலம், பக்கத்திலே, நகர்ப்புறங்களையொட்டி இருக்கிற கிராமங்களுக்கும் கடன் கொடுப்பதற்கு—5 கிலோ மீட்டர், 10 கிலோ மீட்டர் தூரத்திற்குள் இருப்பதற்கும்—வழிவகை செய்து கொடுக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே என்னுடைய சின்னசேலம் தொகுதியைச் சேர்ந்த கச்சரபாளையத்தில் சென்ற மாதம் கிட்டத்தட்ட 60 வீடுகள் தீயினால் எரிந்துவிட்டன. அந்தக் கச்சரபாளையம் என்பது, வடக்கரனந்தல் பேரூராட்சியைச் சார்ந்த கிராமங்களாக இருந்திருந்தால், தொகுப்பு வீடுகள் வழங்க முடியும். ஆனால் பேரூராட்சியாக இருப்பதால், அங்கே இருக்கின்ற அக்ராபாளையம் காலனியில் இருக்கின்ற மக்கள் எல்லாம் வீடுகள் இல்லாமல்—அவர்கள் சாலை மறியல் எல்லாம் செய்து—இப்போது அதே வீட்டிலேயே திறந்த வெளியிலேயே குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம் சிறப்பு முன்னுரிமை அடிப்படையிலே 60 வீடுகளுக்கு மானியத்தோடு கடன் வழங்க வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

மேலும் தற்போது மாவட்டத் தலைநகரங்களிலே செயல்படுத்தப்பட்டு வரும், அடுக்கு மாடி வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் திட்டத்தை விரிவுபடுத்தி கள்ளக்குறிச்சி போன்ற கோட்டத் தலைநகரங்களிலும் அரசு ஊழியர்களுக்கு வாடகைக்கு வீடுகளைக் கொடுக்கும் திட்டத்தின் அடிப்படையில் குடியிருப்புகளை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை-2 என்று இருந்ததை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறப்பு விழா செய்கின்ற நேரத்திலே கோமுகி சர்க்கரை ஆலை என்று பெயரிட்டுப் பேசுகின்ற நேரத்திலே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள்



எல்லாம் வேலை பெற வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக இந்தச் சர்க்கரை ஆலையிலே பணியமர்த்தப்படுவார்கள் என்ற உறுதியைக்கூட தெரிவித்தார்கள். ஆனால் இன்று வரை கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலைக்கு இடம் கொடுத்தவர்களில் 10 பேருக்கு மட்டும் வேலை கிடைத்திருக்கிறது. வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக பட்டியல் பெறப்பட்டு கிட்டத்தட்ட ஓராண்டுக் காலம் ஆகியும்கூட இன்னமும் யாருக்கும் வேலை கிடைக்கவில்லை. எனவே கள்ளக்குறிச்சி பகுதியிலே இருக்கின்ற படித்தவர்களுக்கு எப்படியாவது வேலை கொடுப்பதற்கான வாய்ப்பினை உருவாக்கிட வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். தினக்கூலி அடிப்படையிலே இருப்பவர்களைக்கூட திருப்பத்தூர் செங்கல்வராயன் சர்க்கரை ஆலையிலிருந்தும் சேலத்திலேயிருந்தும் 61 பேரை எடுத்திருக்கிறார்கள். மேலும் இதுபோல மற்ற ஆலைகளிலிருந்தும் 55 பேரை எடுத்திருக்கிறார்கள். மொத்தமாக 116 பேர்களைப் போட்டு இருக்கிறார்கள். அந்த ஆலையில் மொத்தமாகப் போடப்பட வேண்டியவர்கள் 452 பேர். தற்சமயம் அனுமதிக்கப்பட்டவர்கள் 384 பேர் இருக்கிறார்கள். எனவே வேறு ஆலைகளிலேயிருந்து வந்தவர்களையெல்லாம் அந்தந்தப் பகுதிகளுக்கே அனுப்பிவிட்டு கள்ளக்குறிச்சிப் பகுதியிலே இருப்பவர்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக பெறப்பட்ட அந்தப் பட்டியலின் மூலம் வேலை கொடுக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. மூக்கப்பன்:** அதுபோல பாக்கம் பாளையிலே ஓர் அணைக்கட்டப்படவேண்டும். அங்கே வெள்ளாறு வருகிறது. அந்த வெள்ளாற்றிலே இருந்த அணை வெள்ளைக்காரன் காலத்திலே கட்டப்பட்டது. இப்போது உடைந்து போயிருக்கிற அந்த அணையைக் கட்டி, கடலூர் மாவட்டத்தில் உள்ள திட்டக்குடி வட்டத்திலும், விழுப்புரம் மாவட்டத்திலே இருக்கின்ற கள்ளக்குறிச்சி வட்டத்திலும் கிட்டத்தட்ட 30 ஏரிகள் பயன்படுகின்ற வகையில் உள்ள அந்தத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கோமுகி அணையிலேயிருந்து உபரியாக வருகின்ற நீர் சின்னசேலம் ஏரி வரை வருகின்றது. அந்த வாய்க்கால் மூலம் வருவதற்கு ரூ. 74

இலட்சம் செலவில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சின்னசேலம் ஒன்றியத்தைச் சேர்ந்த கீழ்க்குப்பத்தில் ஒரு புறக்காவல் நிலையம் இருக்கிறது. அதற்குப் போதிய கட்டட வசதியெல்லாம் இருக்கிறது. எனவே அந்தபுறக் காவல் நிலையத்தை முழுக்காவல் நிலையமாக தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று நகர்ப்புற வளர்ச்சி பற்றி ஏராளமான பிரச்சினைகளை இங்கே பேச வேண்டும் என்றிருக்கிறேன். இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்களும் வந்துவிட்டார்கள். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் குடிசைகளையெல்லாம் எடுக்கப் போகிறோம் என்ற மிகப் பெரிய பிரச்சினை இருக்கிறது. பக்கிங்காம் கால்வாய், கூவம் நதி, அடையாறு, ஓட்டேரி–நல்லா போன்ற பகுதிகளிலுள்ள குடிசைவாசிகள் எல்லாம் நாள்தோறும் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அந்தப் பக்கம் போகவே முடியவில்லை. அந்தப் பக்கம் போகும்போது மறித்துக்கொள்கிறார்கள். எங்களுடைய கோரிக்கையை கேட்டுக்கொண்டு போங்கள் என்று சொல்கிறார்கள். இதைப்பற்றி கொஞ்சம் விரிவாக, இந்த அவையிலே எனக்குத் தெரிந்த கருத்தைச் சொல்ல வேண்டுமென்று நான் கருதுகிறேன். பக்கிங்காம் கால்வாய் பகுதி முழுவதையும் போய்ப் பார்த்தேன். பக்கிங்காம் கால்வாய் கரையிலே இருப்பவர்கள் 50, 60 ஆண்டுகாலமாக, அவர்களே சொந்தமாக உழைத்துச் சேர்த்த பணத்தைக்கொண்டு வீட்டைக் கட்டி நல்லமுறையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பக்கிங்காம் கால்வாய்க்கு அவர்கள் எந்தவித இடைஞ்சலும் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் பக்கத்தில் இடத்தை சேர்த்து வைத்திருந்தாலும், அதை விட்டுவிடவும் தயாராக இருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் சென்னையை சிங்காரச் சென்னையாக ஆக்க வேண்டுமென்று உறுதி அளித்து அதற்காக பெரும் பணத்தைச் செலவு செய்து இதுபோன்ற பகுதிகளை எல்லாம் சுத்தப்படுத்தப் போகிறோம் என்று தெரிவித்துள்ளது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முதன்முதலாக 1971 ஆம் ஆண்டு—ஒரு



பெரிய நல்ல திட்டத்தை, குடிசைவாசிகளுக்கு ஒரு நல்ல வாழ்வைக் கொடுக்க வேண்டுமென்று—குடிசைமாற்று வாரியத்தை ஏற்படுத்தினார்கள். அன்று கிட்டத்தட்ட 2 இலட்சம் குடிசைவாசிகள் இந்த நகரத்திலே இருந்தார்கள். 2 இலட்சம் பேருக்கு வீடுகளும் கட்டிக் கொடுத்தார்கள். இன்றைக்கு 1971-க்குப் பிறகு 1999 ஆம் ஆண்டிலும் அதே 2 இலட்சம் குடிசைவாசிகள் இன்று இந்த நகரத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அது ஏன்? அதுபற்றி பெரிய கணக்கை எடுக்க வேண்டும். காரணம் குடிசைவாசிகள் இந்த இடத்தை விட்டுப் போனபிறகு மறுபடியும், மறுபடியும் ஏன் குடிசைகள் வருகின்றன என்பதை நாம் கண்காணிக்க வேண்டும்.

*பிற்பகல் 12-45*

இப்போது குறிப்பாக பக்கிங்காம் கால்வாயில் குடியிருக்கிறவர்களுக்கெல்லாம் 20, 30 கிலோ மீட்டருக்கு அப்பால் வீடு கட்டிக் கொடுக்க அரசு திட்டம் போட்டிருக்கிறது. அவர்களுடைய நிலையைப் பார்த்தால் அங்கேயே அவர்கள் வீட்டோடு சேர்ந்து தொழில் செய்து கொண்டு இருக்கிறார்கள். சிறிய சிறிய தொழில்களைச் செய்கிறார்கள். அவர்களை எல்லாம் 20 கிலோ மீட்டருக்கு அப்பால் கொண்டு போக வேண்டும் என்று சொன்னால், அவர்கள் வாழ்க்கையில் மிகப் பெரிய துயரமான சூழ்நிலை ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான் நம்முடைய அரசிடம் பணிவோடு என்ன சொல்கிறேன் என்று சொன்னால், அந்த இடங்களை நீங்கள் சுத்தப்படுத்த வேண்டும்; அதில் படகு விட வேண்டும் என்ற கருத்து தேவையில்லை என்பது என்னுடைய கருத்து. காரணம் பக்கிங்காம் கால்வாய், அதேபோல கூவம் ஆறு இதெல்லாம் இன்றைக்கு மிக அதிக அசுத்தத்தோடு இருப்பதற்குக் காரணம் அங்கேயிருக்கிற குடிசைவாசிகள் அல்ல என்பதை நாம் உணர வேண்டும். நம்முடைய நகரத்தில் இருக்கின்ற [illegible] கால்களிலிருந்து வருகின்ற அசுத்த[illegible] தண்ணீர், சாக்கடைத் தண்ணீர் அத்தனையும் கால்வாய்களிலே போய்க் கொண்டிருக்கிறது; அந்த ஆறுகளிலே போய்க் கொண்டிருக்கிறது. ஒரு கணக்குப்படி இன்று சாக்கடை போகிறது என்று சொன்னால், அதிலே 95 சதவிகிதம் நகரத்திலே இருக்கின்ற அசுத்தங்கள்; அதேபோல பெரிய, பெரிய அலுவலகங்களில் இருக்கின்ற அசுத்தங்கள்—அதாவது பொது மருத்துவமனை இருக்கிறது, அதேபோல பல்கலைக்கழகம் இருக்கிறது—இதுபோன்று நம்முடைய மிகப் பெரிய அரசு

அலுவலகங்கள் ஏற்படுத்துகின்ற கழிவுகள் அனைத்தும் இந்த ஆறுகளிலேதான் நுழைந்து போய்க்கொண்டிருக்கிறது. இதையெல்லாம் சுத்தப்படுத்த. எந்தவிதமான ஏற்பாடுகளையும் யாரும் செய்யவில்லை.

இங்கே நான் இன்னொன்றைக்கூடக் கேட்பேன்.' படகு இப்போது ஒன்றும் தேவையில்லை. ஏன் என்றால் - படகு விட வேண்டும்—படகு எப்போது படகு விட வேண்டும் என்றால் சாக்கடைத் தண்ணீரைச் சுத்தப்படுத்திய பிறகு மேலும் சாக்கடைத் தண்ணீரை, இந்தக் கால்வாய்களில் போகாமல் தடுத்துவிட்டாலே மழைக்காலங்களிலே மழைத் தண்ணீராலேயே அது சுத்தமாகிவிடும். பிறகு நாம் எதை வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். இதை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஏன் என்றால் அங்கே இருக்கின்ற 2 இலட்சம் குடிசைவாசிகளுடைய வாழ்க்கையில் ஒரு மிகப் பெரிய துயரத்தை ஏற்படுத்துவதைப் போன்ற சூழ்நிலை ஏற்படும் என்பதால் நம்முடைய அரசு இதைப் பரிவோடு கவனிக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. அப்படியே சில இடங்களில் தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டால் - உதாரணமாக, கூவம் நதியில் இரயில் விடுவதற்கு இடம் எடுக்கிறார்கள். இரயில் விடுகின்றபோது அதை எடுத்தாக வேண்டிய ஒரு கட்டாய நிலை ஏற்படுகிறது—அப்போதும்கூட அவர்களை 20, 30 கிலோ மீட்டருக்கு அப்பால் அனுப்பக்கூடாது. காரணம் நகரத்திலேயே ஏராளமான இடங்கள், பல ஆக்கிரமிப்புக்கு ஆளாகியிருக்கின்றன. அதேபோல, நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் பல அரசு அலுவலகங்கள் அவர்களுடைய பாதுகாப்பில் இருந்து கொண்டு இருக்கின்றன. அதையெல்லாம் எடுத்து, இந்தக் குடிசைவாசிகளுக்குக் கொடுக்கின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.

அதற்கு அடுத்தபடியாக நம்முடைய குடிசை மாற்று வாரியத் திட்டத்தில் கட்டிய ஏராளமான வீடுகள் அனைத்தும் இன்று குடிசைவாசிகளுக்கே உரிமை ஆக்கப்பட்டு விட்டன. அதிலே சில குறைபாடுகள் இருக்கின்றன. 1956 ஆம் ஆண்டு முதன் முதலாக தலைவர் காமராஜர் காலத்தில் ஏற்பட்ட C.I.T. நகரில் கட்டிய வீடுகளையும் குடிசைகளாகக் கருதி அவர்களுக்கும் அதைக் கொடுக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே



சென்ற ஆண்டு இந்தக் கோரிக்கையை நாங்கள் இந்த அவையிலே வைத்தோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 'அவர்கள் எல்லாம் வசதி படைத்தவர்கள். அவர்களுக்காக நீங்கள் கேட்க வேண்டாம்' என்று சொன்னார்கள். ஆனால் அவை இரண்டு வகைகளாக இருக்கின்றன. Housing Board-லேயே குடியிருப்பவர்களில் வசதி உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் இந்த C.I.T. நகரில் இருப்பவர்கள் உண்மையிலேயே ஏழைகள். அவர்களுக்கு மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1956 ஆம் ஆண்டு, சென்னை நகரத்திலே உருவாக்கப்பட்ட அந்தப் பகுதிகளிலெல்லாம் இன்று யார் யார் குடியிருக்கிறார்களோ, அவர்களே அதைச் சொந்தம் ஆக்கிக் கொள்ளலாம் என்றும், அப்படிச் சொந்தம் ஆக்கிக்கொள்ளும் நேரத்திலே பதிவுக் கட்டணம் எவ்வளவு செலுத்த வேண்டும் என்றும் பிரச்சினை வந்தபோது-குறிப்பாக, பதிவாளர்களெல்லாம் Market Value-தான் நீங்கள் செலுத்த வேண்டுமென்று சொன்னபோது—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிவுக் கட்டணம் 5,000 ரூபாய் செலுத்தினால் போதும், அவர்கள் பதிவு செய்துகொள்ளலாம் என்றும் ஆணை பிறப்பித்து அண்ணா நகர் போன்ற பகுதிகளிலே உள்ள அந்த இடங்களெல்லாம் பதிவாகி இருக்கின்றன என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நான் சொல்வது, அதாவது ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். திரு. ஜெயராமன், நிர்வாகப் பொறியாளர், கோட்டம்-2, சென்னை-5, குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்குக் கடிதம் எழுதியிருக்கிறார். 'தற்போது அனைத்து ஆதாரங்களின்படியும் இந்த மனைகளும் குடியிருப்புகளும் வீட்டுவசதி வாரியத்தின் கட்டுப்பாட்டில்தான் உள்ளன. இவை குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு மாற்றப்படவில்லை. எனவே இவரது கோரிக்கையை வீட்டுவசதி வாரியத்திற்கு அனுப்பலாம்' என்று. அதாவது 1956-ல், கட்டப்பட்ட C.I.T. நகர் பகுதியிலேயிருக்கிற இடத்தைப்பற்றி நான் சொல்கிறேன். City Improvement Trust என்று அந்தக் காலத்திலே இருந்தது. அதில் சில ஏழைகள் இருக்கிறார்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தது, இந்த ஆண்டு வெள்ளத்தின்போது வைகை அணையிலிருந்து ஒரு இலட்சம் கன அடி தண்ணீர், வெள்ளம் போல் திறந்து விடப்பட்டதன் காரணமாக வைகைப் பகுதியிலே இருக்கின்ற எல்லா வீடுகளும், கரையோரத்திலே இருக்கிற வீடுகளெல்லாம் இன்று மிகப் பெரிய அளவுக்கு பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன. அதுவும் நம்முடைய அக்காள் திருமதி பொன்னம்மாள் அவர்களுடைய தொகுதியில் - நான்கூடச் சென்று பார்த்தேன் - ஒரு ஊர், சித்தர்நத்தம் என்ற ஒரு பஞ்சாயத்து முழுமையாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுவிட்டது. அந்த வீடுகளுக்கெல்லாம் பாதி மானியத் திட்டத்திலாவது வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

அதேபோல இராமநாதபுரம் நகரத்தில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் இரகுமான்கான் அவர்களுடைய தொகுதியில் வெள்ளத்தால் 2000 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களெல்லாம் பல பிரச்சினைகளுக்காக—அங்கேயெல்லாம் ஜாதிக் கலவரங்கள் அடிக்கடி வரும்—ஊர்களிலே குடியிருக்க முடியாமல் நகரத்திற்கு ஓடி வந்து சொந்தமாகவே வீடுகட்டி நல்லமுறையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வெள்ளம் அவர்களுடைய வீடுகளை 3 மாதகாலம் வரையாவது சூழ்ந்து கொள்கிறது. அதையெல்லாம் நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டும்.

பிறகு, சென்னையிலே சாக்கடை சுத்திகரிப்பு நிலையங்கள், 4 இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அதிலே பெருங்குடியில் உள்ள சுத்திகரிப்பு நிலையம் 5 ஆண்டுகாலமாக வேலை செய்யவில்லை. நெசப்பாக்கம், கோயம்பேடு, மைலாப்பூர் ஆகிய பகுதிகளிலேகூட மூன்றில் ஒரு பங்கு சாக்கடை நீரைத்தான் சுத்திகரிக்கிறார்கள். மற்றதையெல்லாம் அப்படியே கால்வாயில் விட்டுவிடுகிறார்கள். இதையெல்லாம் சரி செய்ய வேண்டும்.

மறைமலைநகரைப்பற்றி, இங்கேகூட நேற்று சொன்னார்கள். மறைமலைநகரில் 12 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமும் M.M.D.A.வினரும் வீடு கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினர் 2,000 ரூபாய் Stamp Duty கட்டினால் உங்களுக்கு வீட்டை உரிமையாக்கி விடுகிறோம் என்று சொல்கிறார்களாம். ஆனால், இப்போது C.M.D.A.-வினர் 40,000 ரூபாய் கொடுத்தால்தான் உங்களுக்கு உரிமையை மாற்றிக் கொடுக்க முடியும்



என்று சொல்வதாக ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மதுரையில் எல்லீஸ் நகர்ப் பகுதியில் 25, 30 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட வீடுகள் உள்ளன. பணமெல்லாம் கட்டியாகிவிட்டது. ஆனால் அதற்கு இன்னும் Sale Deed போட்டுக் கொடுக்க மறுக்கிறார்கள் என்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்ற காரணத்தினால்தான் Sale Deed கொடுக்க முடியவில்லை. நீதிமன்ற வழக்கு முடிந்தபின் அதற்கான விலை நிர்ணயம் செய்யப்பட்டவுடன் Sale Deeds வழங்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** வழக்குப் போட்டு 25 வருடங்கள் ஆகிவிட்டன. வழக்கு இருக்கிறது, வழக்கு இருக்கிறது என்று சொல்லிக்கொண்டே இதைக் காலம் கடத்தக் கூடாது. ஆகவே உடனடியாக நம்முடைய அரசு, சம்பந்தப்பட்ட வழக்குகளையெல்லாம் முடித்து, அதற்கு நீதி வழங்குகின்ற வகையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்துச் சொல்லி உடனடியாக Sale Deed-வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. எ. தெய்வநாயகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Point of order கிட்டத்தட்ட 60 விழுக்காடு வழக்குகள் முடிந்துவிட்டன. இருப்பது 30, 35 விழுக்காடுகள்தான். வழக்குகள் முடிந்த நேர்வுகளிலாவது Sale Deed -களைக் கொடுத்தால் நலமாக இருக்கும். ஏனென்றால் கலைஞர் ஆட்சியிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றினார்கள். இப்போது கலைஞர் ஆட்சியிலே முடியவேண்டியதிருக்கிறது.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குகள் முடிந்த பகுதிகளுக்கெல்லாம் இன்றைக்கு தனியாக Sale Deed கொடுப்பதற்காக—சென்னையிலே இன்றைக்கு 450 கொடுக்கப்பட்டிருக்கிறது.—ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நாலும் செயலாளரும் சென்று ஆங்காங்கே வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவை வழங்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-55*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** Stamp Duty-யிலே தகராறு என்று சொல்கிறார்கள். வழக்கு ஒன்றும் இல்லையாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எல்லாம் தவறான தகவல். மதுரையைப்பற்றித் சொல்லும்போது தகவலைச் சரியாகச் சொல்ல வேண்டும். மதுரை மத்திய தொகுதி சட்டமன்ற உறுப்பினரை நான் பல முறை கேட்டிருக்கிறேன். அங்கே இருப்பவர்களையெல்லாம் கூட்டி கூட்டம் வைத்து நீங்கள் அதிகாரிகளைக் கூப்பிடுங்கள். அந்தக் கூட்டத்திற்கு நானும் வருகிறேன் என்று சொன்னேன். அந்த ஏற்பாட்டைச் செய்யட்டும். உடனடியாக மற்ற ஏற்பாடுகளை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அடுத்ததாக, அரசுக்குச் சொந்தமான வாடகைக் குடியிருப்பு வீடுகளை—வீடுகள் காலியாக இருந்தும்கூட முறையாகப் பதிவு செய்தும்—பல மாதங்கள் கழித்தும் ஒதுக்கீடு செய்யாமல் இருப்பது வேதனைக்குரியது என்று ஒருவர் கடிதம் எழுதியிருக்கிறார். அதாவது வீட்டைக் காலி செய்துவிடுகிறார்கள். பிறகு 6 மாதம், 1 வருடம்கூட அந்த வீட்டை காலியாகவே வைத்திருந்து, பிறகு யாராவது ஒருவருக்கு அந்த வீட்டைக் கொடுக்கிறபோது அந்த ஒரு வருட வாடகையையும் வாங்குபவருடைய தலையிலே வைத்துவிடுகிறார்கள். ஒன்று, உடனடியாக வீடு காலியானவுடனே இன்னொருவருக்குக் கொடுத்துவிடவேண்டும். அல்லது காலியாக இருக்கிற காலங்களுக்கான அந்த வீட்டின் வாடகையை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த இரண்டில் ஒன்றைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகை வீடுகள் குறித்து நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்தால், அதைப் போடக்கூடாது என்று தடையாணை கொடுத்துவிடுகிறார்கள். அப்படிப்பட்டவைகள்தான் காலம் தாழ்த்தி ஒதுக்கீடு செய்யப்படுகிறதே தவிர, வேறு எந்தவகையிலும் காலம் தாழ்த்தி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பக்கிங்காம் கால்வாயின் ஓரத்திலே — குறிப்பு கொடுத்திருக்கிறார்கள்—காந்தி நகர், கஸ்தூரிபாய் நகர், இந்திரா



நகர், ரங்கநாதபுரம் 1 மற்றும் 2, பாரதி நகர், ஔவை நகர், வெங்கடேசபுரம், இளங்கோ நகர், பாலவாக்கம் கிழக்கு, மேற்கு, நீலாங்கரை கிழக்கு, மேற்கு, துரைப்பாக்கம் கணேஷ் நகர், துரைப்பாக்கம் பாண்டியன் நகர், பெருந்தலைவர் காமராஜர் நகர், கணபதி நகர், மயிலாப்பூர் நகர் என்று இப்படிப்பட்ட இடங்களில் 10 ஆயிரம் வீடுகளில் 1 இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதிகள் குறித்து முழுமையாக, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அவர்களுக்கெல்லாம் அங்கேயே குடியிருக்கிற ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக காலையிலே ஒரு பிரச்சினை வந்தது. நம்முடைய மாண்புமிகு சொக்கர் அவர்கள்கூடச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். பொதுவாக நான் என்ன சொல்கிறேன் என்றால் சென்னை நகரம் நாள்தோறும் வளர்ந்துகொண்டிருக்கிற நகரம். திடீரென்று நமக்குத் தண்ணீர் வறட்சி ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது? எனவே தண்ணீர் தேங்கி இருக்கக்கூடிய பகுதிகளை, அவர்கள் சொல்லுகின்ற ஏரிகள், போன்றவைகளை எல்லாம் வீடுகளாக ஆக்கிவிட்டோம் என்றால், அப்புறம் எங்கேதான் தண்ணீருக்காகப் போவது? நிலத்தடி நீரே இல்லாத ஒரு சூழ்நிலை உருவாகக்கூடாது. ஆகவே, இதையெல்லாம் மறுபரிசீலனை செய்து ஏரிகளாக இருக்கும் இடங்கள் ஏரிகளாகவே காப்பாற்றப்பட வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்று எங்களை வழி நடத்தி என்னை இந்தப் பெருமைமிக்க பேரவையில் நான்காவது முறையாக 1999-2000 ஆண்டிற்கான வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கின்ற வாய்ப்பினை வழங்கியமைக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கும், தங்களுக்கும், இந்தப் பேரவைக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விடிவிளக்கு பெரியாரின் அருமைத் தொண்டர், ஆழ்ந்த பெரும் அறிவு கொண்ட அண்ணாவின் அருமைத் தம்பி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் இன்றைக்குப் பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகிறது. "நீரின்றி அமையாது உலகு" என்பதுபோல "வாழும் மனிதனுக்கு வீடின்றி அமையாது வாழ்வு" என்று சொல்லும்படியான சூழ்நிலையில் "குடும்பத்திற்கு ஒரு வீடு" எனும் குறிக்கோளைத் தன்னகத்தே கொண்டு அந்தக் குறிக்கோளை அடைவதற்குத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதல்பேரில் அயராமல் உழைத்துவரும் துறைதான் வீட்டுவசதித் துறை.

மாடி வீடா? கூட கோபுரங்களா? முடியுமா நம்மால்? என ஏக்கப் பெருமூச்சு விட்டு ஏங்கிக் கிடந்த மக்களின் கண்களில் ஒளி உமிழ முடியும், செய்து காட்டுவோம் என குடில் தந்து விளக்கேற்றிய மாண்பினைத் தந்த பெருமையெல்லாம் சமத்துவபுரம் கண்ட சமுதாயச் சிற்பி, மத நல்லிணக்கம் காணும் இனமான அரிமா, அரசியல் வானில் யுகப் புரட்சி கண்ட அரசியல் ஞானி, முதல்வர் கலைஞர் அவர்களின் பொன்னான நல்லாட்சியில் இந்நாட்டு மக்கள் ஏற்றம் புல கண்டு எழில் பீடுநடை போடுவதை எண்ணி எண்ணிப் போற்றுகிறார்கள்.

பிற்பகல் 1-00

அளப்பரிய வரலாற்றுச் சாதனைகளைப் படைத்து வரும் முதல்வர் கலைஞர் அவர்களின் உன்னத ஆட்சியில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையில் உள்ளடங்கிய வீட்டுவசதி வாரியம், குடிசை மாற்று வாரியம், கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள், தமிழ்நாடு வீட்டுவசதி இணையம், ஊரக வீட்டுவசதிக் கழகம், கட்டட மையங்கள், நகர் ஊரமைப்புத் துறை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகியன மிகுந்த முனைப்போடும் சுறுசுறுப்போடும் இயங்கி வருகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

'ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு' என்கிற உன்னதச் குறிக்கோளை எய்திட திட்டங்கள் பல தீட்டி முனைப்போடு செயலாற்றி வரும் வீட்டுவசதி வாரியம், 1970-71-ல் ரூபாய் 4.83 கோடி முதலீட்டிலிருந்து தற்போது ரூபாய் 270 கோடி முதலீடாகப் படிப்படியாக உயர்ந்து 1998-99 முடிய 3 இலட்சத்து 69 ஆயிரத்து 19 குடியிருப்புகளை உருவாக்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



கி.பி. 2011-ல் சுமார் 175 இலட்சம் வீடுகள் தேவையென்று கணக்கிடப்பட்டுள்ளதை உணர்ந்து எல்லோருக்கும் வீட்டு வசதி அளிக்க வேண்டுமென்ற உன்னதக் குறிக்கோளை அடைய, போதிய நிதி ஆதாரங்களைத் திரட்டி, தேவையான குடியிருப்பு வசதிகளைப் பெருக்கி, மக்களுக்கு அந்த வசதிகளை முறையாக வழங்க நடவடிக்கை எடுத்து வருவதுடன் தேசிய வீட்டுவசதிக் கொள்கை வலியுறுத்தலுக்கேற்ப பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான திட்டங்களைச் செயல்படுத்திட தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பல்வேறு மனை மேம்பாடு மற்றும் நில வங்கித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

ஒவ்வொரு திங்கட்கிழமையும் நடத்தப்படும் மக்கள் குறை தீர்க்கும் நாட்களில் இதுவரை 6,700 மனுக்கள் பெறப்பட்டு 6,054 மனுக்கள்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் விற்பனைப் பத்திரங்கள் பெற இருந்த நிபந்தனைகளை நீக்கி விற்பனைப் பத்திரங்களை வழங்கும் முறையினை எளிதாக்கி இந்த அரசு ஆணை பிறப்பித்தது ஒதுக்கீடுதாரர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரிய அறிவுரைகளுக்கேற்ப, வாரியம் தனது செயல்பாடுகளை, கொள்கை ரீதியாகவும், தற்காலத்திற்கு ஏற்பவும் மாற்றி அமைப்பதற்காக ஆலோசனை நிறுவனம் ஒன்றை அமைத்துள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களாட்சி நிர்வாகக் கோட்பாடுகள் மற்றும் பொறுப்புணர்வு ஆகிய இரண்டும் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் மிக முக்கியக் கொள்கைகளாகும். இதன் அடிப்படையில் வீட்டு வசதிக் கூட்டுறவு இயக்கம் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் ஓர் அடுக்காகவும், மாநில அளவில் கூட்டுறவு வீட்டு வசதி இணையம் ஓர் அடுக்காகவும் ஆக இரண்டு அடுக்கு இயக்கமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் திறம்பட நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

ஆயுள் காப்பீட்டுக் கழகம், ஹட்கோ நிறுவனம், தேசிய வீட்டு வசதி வங்கி, வீட்டு வசதி மேம்பாட்டு நிதிக் கழகம், வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றிலிருந்து நிதியினைப் பெற்று கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்குக் கடன்கள் வழங்கி வரும் தலைமை

அமைப்பாக விளங்கும் வீட்டு வசதி இணையம் தேசிய அளவில் கடனுதவி அளிப்பதில் இந்தியாவிலேயே முதல் இடமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு வீட்டு வசதி இணையம் 1998-99 ஆம் ஆண்டில் ரூபாய் 17 கோடி லாபம் ஈட்டியுள்ளது என்பதையும், 14 விழுக்காடு ஈவுத் தொகை வழங்கியுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமின்றி, ஊரக வீட்டு வசதித் திட்டத்தினைச் செயல்படுத்தி பொருளாதாரத்தில் நலிவுற்றோர்களுக்கு 1998-99 முடிய 373.32 கோடி ரூபாய் நிதியிலிருந்து ஐந்து இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து எழுநூற்றி எழுபது வீடுகள் கட்ட நிதியுதவி அளித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"ஒண்டக் குடிசை இல்லை, உதவி செய்வார் யாருமில்லை, கண்டபடி இங்கே கலங்குகிறோம்" என்று ஏங்கித் தவித்த ஏழை மக்களின் வாட்டம் போக்கிட கோபுரமாய் உயர்ந்தோங்கும் அடுக்கு மாடி வீடுகளைக் கட்டித்தர 1970-ல் இதயம் கமழும் இனிய முதல்வர் கலைஞர் அவர்கள் 'குடிசை மாற்று வாரியம்' கண்டார்கள். குடிசை மாற்று வாரியம் இதுவரை பதினான்கு மாநகர் மற்றும் நகரங்களில் கிட்டத்தட்ட அறுபத்து ஆறாயிரத்து பதினான்கு குடியிருப்புகளை ரூபாய் 98.50 கோடி செலவில் அமைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையின்கீழ் இயங்கிவரும் ஊரகப் பகுதிகளில் உள்ள 33 கட்டட மையங்கள் இதுகாறும் பதினெட்டாயிரத்து நூற்று ஐம்பத்து ஆறு ஊரக இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளதுடன் அப்பயிற்சியின்போது ரூ. 626.47 இலட்சம் மதிப்புள்ள கட்டடப் பொருட்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதையும் கட்டட மையங்கள் மூலம் ரூ. 52.56 கோடி மதிப்புள்ள கட்டுமானப் பணிகள் நடைபெற்றுள்ளன என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த சர்வோதயத் தலைவர் திருமிகு ஜெயப்பிரகாஷ் நாராயணன் அன்றைய மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் பாபு ஜெகஜீவன்ராம் போன்ற மிகப் பெரிய தலைவர்களால் புகழப்பெற்ற மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கண்ட குடிசை மாற்று வாரியம்



போன்று தற்போது ஊரகப் பகுதிகளில் வீட்டு வசதிகளைப் பெருக்க, மேம்படுத்த ஊரக வீட்டு வசதிக் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கழகம் பதிவு செய்யப்பட்டு ஊரகப் பகுதிகளில் பணிகள் விரிவாக்கப்பட்டுள்ளன. மேலும் இக்கழகம் மாவட்டங்களிலுள்ள கட்டட மையங்களை ஒருங்கிணைத்து அவற்றின் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும் உள்ளது. இதன் மூலம் ஊரகப் பகுதிகள் மென்மேலும் உயரவும் வளரவும் வாய்ப்புள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் நகரின் மையங்களில் வசிக்கின்றார்கள். பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உறைவிட வசதிகளை அதிகரிக்க வேண்டியது அரசின் கடமையாக உள்ளது. நிலத்தின் அளவு உயர்வதற்கு வாய்ப்பில்லை. அதேநேரத்தில் தேவைக்கு ஏற்ப உணவு உற்பத்தியினைப் பெருக்க விளை நிலங்களைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையாகும். இவ்விரு கடமைகளை மிகத் தெளிவாக அறிந்து திட்டம் தீட்டி விரைந்து செயல்படுத்திவரும் நகரமைப்புத் துறையின் பங்கு மகத்தானது.

*பிற்பகல் 1-05*

இதுகாறும் பல்லாண்டுகளாக முழுக்க முழுக்க அலுவலர்களைக் கொண்டு இயங்கிவந்த உள்ளூர்த் திட்டக் குழுமங்களும், கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட இந்த அரசு ஆணை பிறப்பித்து, அதன்படி இக்குழுமங்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரும் கி.பி.2011-ல் சென்னை மாநகரம், 70 இலட்சம் மக்களைக் கொண்ட ஒரு பெருநகரமாக உயருமென்பதைக் கருத்திலே கொண்டு, நகர அடிப்படை வசதிகளை மேம்படுத்த பல மேம்பாட்டுத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. நாட்டு மக்களின் வாட்டம் போக்கி, சமதர்ம சமுதாயத்தை மனித நேயத்தோடு வளர்த்திட, 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்ற தாரக மந்திரத்தை உலகறிய அறிவித்து, அதன்படியே நடந்துவரும் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதல்படி, கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிட நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதியுடன் சில புதிய திட்டங்களை இம்மாமன்றத்தில் அறிவிக்க விழைகின்றேன்.

சென்னை முகப்பேர் ஏரி திட்டப் பகுதியில் 114 அடுக்கு மாடி வீடுகள் ரூ.631 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும். சென்னை, ராகவேந்திரா திருமண மண்டபத்திற்கருகில் 48 அடுக்கு மாடி வீடுகள் ரூ.309 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும். சென்னை திருவான்மியூர் விரிவாக்கத்தில், 40 அடுக்கு மாடி வீடுகள் ரூ.493 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை திருவான்மியூர் விரிவாக்கம், வால்மீகி நகரில் 27 அடுக்கு மாடி வீடுகள் நவீன வசதிகளுடன் ரூ.497.53 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அம்பத்தூரில் மேம்படுத்திய மனைகளில் நடுத்தர வருவாயினருக்கு 56 அடுக்கு மாடி வீடுகள் ரூ.207.54 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும். தாம்பரம் புறநகர்ப் பகுதியில் 48 அடுக்கு மாடி வீடுகள் ரூ.211.90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும். கொரட்டூர் புறநகர்ப் பகுதியில் 172 அடுக்கு மாடி வீடுகள் ரூ.595.63 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும். செவ்வாய்ப்பேட்டை பகுதி-2 திட்டப் பகுதியில் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 17 வீடுகளும் நடுத்தர வருவாயினருக்கு 10 வீடுகளும் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினருக்கு 2 வீடுகளும் ஆக 29 வீடுகள் ரூ.127.87 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

சென்னை முகப்பேர் மேற்குப் பகுதியில் 88 அடுக்கு மாடி வீடுகளும், முகப்பேர் கிழக்குப் பகுதியில் 40 அடுக்கு மாடி வீடுகளும் ரூ. 1024 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும். ராணிப்பேட்டை–சிக்கராசபுரத்தில் 46 வீடுகள் ரூ.118 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்படும்.

ஓசூர் பகுதி 6-ல் 198 வீடுகள் ரூ.423 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும். கோவை தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்திற்கு அருகில் உள்ள விளாங்குறிச்சியில் மனை அபிவிருத்தித் திட்டத்தில் 4.'' மனைகள் அபிவிருத்தி செய்யப்படும். இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூ.383 இலட்சமாகும். கோவைக்கு அருகில் உள்ள துடியலூரில் பகுதி 5 திட்டத்தில், இதேபோன்று ரூ.729 இலட்சம் மதிப்பீட்டில் 252 மேம்பாடு செய்யப்பட்ட மனைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கோவில்பட்டியில் ரூ.156 இலட்சம் மதிப்பீட்டில் 268 மேம்பாடு செய்யப்பட்ட மனைகள் வழங்கப்படும்.



காரைக்குடியில் உள்ள கழனிவாசலில் ரூ.210 இலட்சம் மதிப்பீட்டில் 100 வீடுகள் கட்டப்படும். கடலூர் - நத்தம்பட்டில் ரூ.315 இலட்சம் செலவில் 100 வீடுகள் கட்டப்படும். சேலம் மாவட்டம், ஆத்தூர் நரசிம்மபுரம் கிராமத்தில் ரூ.517 இலட்சம் மதிப்பீட்டில் 650 மேம்பாடு செய்யப்பட்ட மனைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாராபுரத்தில் ரூ.336 இலட்சம் மதிப்பீட்டில் எல்லாவித அடிப்படை வசதிகளையும் கொண்ட 180 மேம்பாடு செய்யப்பட்ட மனைகள் வழங்கப்படும்.

முத்தம்பாளையம் பகுதி-3 திட்டத்தில் ரூ. 180 இலட்சம் மதிப்பீட்டில் 30 வீடுகள் கட்டப்படும். ஈரோடு முத்தம்பாளையம் பகுதி5-ல் ரூ.426 இலட்சம் மதிப்பீட்டில் 464 மேம்பாடு செய்யப்பட்ட மனைகள் வழங்கப்படும்.

நடப்பாண்டில் திருவாரூர், பெரம்பலூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில், சேலம், விழுப்புரம், மேட்டூர், திருப்பூர், முத்தம்பாளையம் ஆகிய ஊர்களில் 1,086 அடுக்கு மாடி வீடுகள் ரூ.39.20 கோடி மதிப்பீட்டில், அரசு ஊழியர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கட்டப்படும்.

திருவண்ணாமலை, திருக்குவளை, சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர், கடலாடி ஆகிய இடங்களிலும் அரசு ஊழியர்களுக்கான வாடகைக் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நடப்பாண்டில் நில வங்கித் திட்டத்தின்கீழ் 3,440 மனைகள், 275 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஏற்கெனவே முடிந்துள்ள திட்ட நகரங்களான கோவில்பட்டி, அறந்தாங்கி, கும்பகோணம், எடப்பாடி மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய நகரங்களில், 1,572 மனைகள் மற்றும் 328 வீடுகள், ரூ.16.08 கோடி செலவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் பணிபுரியும் நேரம் குறிப்பாளர்கள், காவலர்கள், தோட்டக்காரர்கள், துப்புரவுப் பணியாளர்கள், மின் வினைஞர்கள், பொருத்துநர்கள், Pump இயக்குபவர்கள் போன்ற பல்வேறு பணி நிலைகளில் பணி வரன்முறைப்படுத்தப்பட்ட வேலை நிதிப்பணியாளர்களில் பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற பணியாளர்கள், "பணி எழுத்தர்களாகப்" பணிமாற்றம் செய்யப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமின்றி, இந்த சர்வதேசப் பெண்கள் ஆண்டையொட்டி, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், பெண்களுடைய முன்னேற்றத்தில் அக்கறை கொண்டிருக்கிற காரணத்தால், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால், அரசுப் பணியில் உள்ள பெண்களுக்காக, தனியே சென்னையில் பெண்கள் விடுதி கட்ட அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட குடிசை மாற்று வாரிய வீடுகளில், சென்னையில் உள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளை ஒதுக்கீடுதாரர்களுக்கே சொந்தமாகக் கிரயம் செய்ய வழிமுறை வகுத்து ஆணை பிறப்பிக்கப்பட்டது போன்று ஏனைய நகரங்களில் உள்ள 9,637 குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளையும் ஒதுக்கீடுதாரர்களுக்கே சொந்தமாகக் கிரயம் வழங்க ஆணை வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்கள் பயன்பெறும் வகையில் இவ்வாண்டு கூட்டுறவு ஊரக வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் ஐம்பதாயிரம் பயனீட்டாளர்களுக்கு ரூ. 70.33 கோடி நிதியுதவியில் ரூ. 10 கோடி அரசு மானியத்துடன் வழங்கப்படும்.

குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு வழங்கப்பட்டு வரும் கடன் தொகையினை ரூ. 70,000-த்திலிருந்து ரூ. 1 இலட்சமாகவும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு வழங்கப்பட்டு வரும் கடன் தொகையினை ரூ. 1 இலட்சத்து 20 ஆயிரத்திலிருந்து ரூ. 2 இலட்சமாகவும் உயர்த்தி, முறையே ஏழாயிரம் வீடுகள், ஐந்தாயிரம் வீடுகள், கட்டுவதற்கு ரூ. 170 கோடி கடன் வழங்கப்படும்.

வீடுகள் விரிவாக்கம் மற்றும் புதுப்பித்தலுக்கு பத்தாயிரம் வீடுகளுக்கு ரூ. 50 கோடி கடன் வழங்கப்படும். தற்போது ஒரு வீட்டிற்கு அதிகபட்சமாக ரூ. ஐம்பதாயிரம் கடனுதவி வழங்குவது, ரூ. ஒரு இலட்சமாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

நகர்ப்புறங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் புதிய வீடுகள் கட்ட வழங்கப்பட்டு வரும் அதிகபட்சக் கடனான ரூ. 4 இலட்சத்தை ரூ. 6 இலட்சமாக உயர்த்தியும், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் புதிய வீடுகள் கட்ட அல்லது கட்டிய வீடுகளை வாங்க தற்போது கடனாக வழங்கப்படும் ரூ. 5 இலட்சத்தை ரூ. 7 இலட்சமாக உயர்த்தியும்



இந்த ஆண்டு முதல் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகர்ப்புறங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் மக்கள் குடியேற்றத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு 1999-2000 ஆண்டு பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு 12,000 வீடுகள் கட்ட, ஒரு வீட்டிற்கு ரூ. 25,000 வீதம் மொத்தம் ரூ. 30 கோடி கடன் வழங்கப்படும்.

இந்த ஆண்டு 22 புதிய நகர்ப்புற வீட்டு வசதிச் சங்கங்கள் பதிவு செய்யப்படும் என்பதையும், கிராமப்புற வீட்டு வசதியைப் பெருக்க, திருக்குவளை, காரியாபட்டி, இலுப்பூர், மணல்மேல்குடி, காட்பாடி, ஆலங்குளம் ஆகிய இடங்களில் புதிய வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஈரோடு மற்றும் வேலூர் மாவட்டங்களில் பீடித் தொழிலாளர்களுக்கு 678 புதிய வீடுகள் கட்டித் தர ஒரு வீட்டிற்கு HUDCO நிறுவனக் கடன் ரூ. 13 ஆயிரமும், அரசு உதவித் தொகை ரூ. 9 ஆயிரமும் வழங்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ. 1.49 கோடி நிதியை அரசு ஒதுக்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான முதலீட்டுத் தொகை ரூ. 438.33 கோடியிலிருந்து ரூ. 686.82 கோடியாக உயர்த்தி 1,04,678 புதிய வீடுகள் கட்ட நிதியுதவி வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழகத்திலேதான் கூட்டுறவு வீட்டு வசதி இணையத்திலே இந்தக் கடன் வழங்கப்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நடப்பு நிதியாண்டில் குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்தைத் தடுக்க ரூ. 27.50 கோடி செலவில் 22,000 குடிசை வீடுகளுக்கு சுற்றுப்புறச் சுவர் மற்றும் கதவுடன் கூடிய கல்நார் தகடுகளாலான கூரைகள் அமைக்கப்படும்.

மைய அரசின் 10-வது நிதிக் குழுவின் சிறப்பு மானிய உதவியுடன் ஒக்கியம்-துரைப்பாக்கம் பகுதியில் சென்னை நகரில் விரைவு இரயில் போக்குவரத்து மற்றும் ஆட்சேபகரமான பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு இந்த ஆண்டு 3,000 குடியிருப்புகள் கட்ட ரூ. 30 கோடி மதிப்பீட்டில் பணம் வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை நகரில் வெள்ள அபாயத்தைத் தடுக்க, கூவம், பக்கிங்காம் கால்வாய் முதலிய நதிகளில் தூர் வாரும் பணி அரசால் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்நதிகளில் தூர் வாருவதற்கு ஏதுவாக ஆற்றோரங்களில் வசிக்கும் 3,000 குடும்பங்களுக்கு மாற்றிடம் அளிப்பதற்காக மாற்றுக் குடியிருப்புத் திட்டத்தை ரூ. 37.50 கோடி செலவில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

நடப்பு நிதியாண்டில் ஒக்கியம்-துரைப்பாக்கம் பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ. 20 கோடி செலவில் 1,500 குடியிருப்புகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆண்டு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் 2,000 புதிய குடியிருப்புகள் கட்ட அரசு பரிசீலிக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குடிசைப் பகுதி சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் குடும்பம் ஒன்றுக்கு ரூ. 2000 வீதம், 30 ஆயிரம் குடும்பங்களுக்கு ரூ. 6 கோடி செலவில் மேம்பாட்டுப் பணிகளான சாலைகள், குடிநீர் வசதி, கழிவு நீர் வெளியேற்றும் வசதி ஆகியவை மேற்கொள்ளப்படும்.

இந்த ஆண்டு குடிசைவாழ் மக்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டப் பணிகளுக்காக ரூ. 94 கோடி செலவிடப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை நகரில் குடிசைப் பகுதிகளில் வாழும் 250 இளைஞர்களுக்கு ரூபாய் 3 இலட்சம் செலவில் பல்வேறு தொழில் பழகுவதற்கான பயிற்சிகள் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கழிஞ்சூர், திரூர், வேளச்சேரி மற்றும் திருவண்ணாமலையில் 253 முன்மாதிரி வீடுகள் ஊரக வீட்டு வசதிக் கழகத்தால் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரக இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கப்படும். மேலும் கட்டடப் பொருட்கள் தயாரித்து, ஊரகப் பகுதியில் கட்டப்படும் வீடுகளுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.



தேனி, திருவாரூர், நாமக்கல், ஆகிய மாவட்டங்களில் புதிய கட்டட மையங்கள் நிறுவப்படும். ஒவ்வொரு கட்டட மையத்திற்கும் ரூபாய் 5 இலட்சம் செலவில் கட்டுமானப் பொருட்கள் தயாரிப்பதற்கென இயந்திரங்கள் வழங்கப்படும்.

நடப்பாண்டில் மாநில அளவிலான கட்டட மையம் ஒன்றையும், ஊரகப் பகுதியில் தாலுகா மட்டத்தில் அரசு நிறுவனம் மூலம் கட்டட மையம் ஒன்றையும் அமைத்திட மத்திய அரசு இன்றைக்கு உத்தரவுகளை வழங்கியிருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உள்ளூர் திட்டக் குழுமப் பகுதிகளுக்கு முழுமைத் திட்டம் புதியதாகத் தயாரிக்கப்படும்.

முழுமைத் திட்டங்கள் புறநகர் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவற்றில் முடிவு செய்யப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நிதியுதவியாக ரூ. 32.80 இலட்சம் வழங்கப்படும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க நகரங்களான பேரூர், குளச்சல், நாகூர், வேளாங்கண்ணி, ஆவுடையார் கோயில், திருமயம், கங்கைகொண்ட சோழபுரம், தரங்கம்பாடி, குற்றாலம், குறிஞ்சிப்பாடி மற்றும் திருநெல்வேலி ஆகிய 11 நகரங்களுக்கு ரூ. 25 இலட்சம் செலவில் பாரம்பரிய நகர மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

குறைந்த அளவே நகர்ப்புற வளர்ச்சி அடைந்துள்ள வட்டங்களான உத்திரமேரூர், அரூர், ஓமலூர், போளூர், அவினாசி, நிலக்கோட்டை, குளித்தலை, பேராவூரணி, வந்தவாசி, திருமயம், மானாமதுரை, விளாத்திகுளம், ஆகிய 12 நகரங்களுக்கு ரூ. 25 இலட்சம் செலவில் மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்படும். நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வெவ்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு 15 நகரங்களுக்கு ரூ. 450 இலட்சம் நிதியுதவி வழங்க அனுமதிக்கப்படும்.

பிற்பகல் 1-15

இராசபாளையம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இரு நகரங்களுக்கு புவி அமைப்பு தகவல் முறை ஏற்படுத்தப்படும். மத்திய அரசால்

மாநில அரசுகளின் சுற்றுக்கு அனுப்பப்பட்டுள்ள வரைவு ஒழுங்கு முறை விதிகளின் அடிப்படையில் "வரைவு பாரம்பரிய நகர ஒழுங்குமுறைச் சட்டம்" தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய இரு மாவட்டங்களுக்கு வரைவு மண்டலத் திட்டங்கள் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நகர ஊரமைப்பு இயக்ககத்தை நவீனப்படுத்தும் வகையில் தமிழகத்தில் உள்ள அனைத்து நகராட்சிகளுக்கும் படிப்படியாக வான்வழிப் புகைப்படங்கள் இந்திய அரசு நிறுவனமான ஐதராபாத்தில் உள்ள தேசிய தொலை உணர்வு மையத்தின் மூலமாகப் பெறப்படும். இதன் தொடக்கமாக இவ்வாண்டில் 3 நகராட்சி நகரங்களுக்கு நகர ஊரமைப்பு நிதியிலிருந்து ரூபாய் 30 இலட்சம் செலவில் வான்வழிப் புகைப்படங்கள் பெற அனுமதி அளிக்கப்படும்.

போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக புறநகர்ப் பேருந்து முனையம் ஒன்றை ஜவஹர்லால் நேரு சாலையை ஒட்டியுள்ள கோயம்பேட்டில் சுமார் ரூ. 90 கோடி செலவில் இந்த அரசு அமைக்க உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இக்குழுமம் வழிகாட்டும் நிறுவனமாகச் செயல்பட்டு சென்னைப் பெருநகர்ப் பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள 250 கிலோ மீட்டர் நீளமுள்ள 8 ஆரச் சாலைகளை ரூ. 212.54 கோடி செலவில் மேம்படுத்தப்படவுள்ளது. மேலும் இக்குழுமம் சென்னைப் பெருநகரில் நீர்வழிகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் ஆகியவற்றை ரூ. 300 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த உள்ளது. பொதுமக்கள் தங்களது வினாவிற்கான விடையை கணினித் திரையில் தங்கள் முன்னிலையிலேயே தெரிந்துகொள்ள ஏதுவாக இக்குழுமத்தால் கணினி முறை ஒன்று நிறுவப்படும்.

நகர்ப்புற குடியிருப்புகளுக்கு தேங்காமல் உள்ள கட்டட வரைபடங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் முறையை விரைவாக்க 'துரித திட்ட அனுமதிமுறை' செயல்படுத்தப்படும்.

தமிழகத்தில் நல்லாட்சியை நடத்திவரும் தலைவர் கலைஞர் அவர்கள் அற்புதமான நிதிநிலை அறிக்கையினை வழங்கியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு நாட்டின் தலைநகரத்திலே நடக்கும் நிலையினைப் பார்த்தால் ஒரு கதைதான் நினைவுக்கு வருகிறது. காட்டிலே உள்ள மிருகங்கள் எல்லாம் ஒன்றுகூடி ஒன்றையொன்று கொன்று குவித்திடும்



கொடுமையை ஒழிக்க வழிவகை என்ன என்று மாநாடு கூட்டின. காட்டு அரசனான சிங்கம், கழுகைப் பார்த்து நாமெல்லாம் கூர்மையான மூக்குகளை ஒழித்துவிட வேண்டுமென்று கூறியது. புலி, யானையைப் பார்த்து வலிமையான தந்தங்களை ஒழித்து விடவேண்டுமென்று கூறியது. யானையோ, புலியைப் பார்த்து கோரமான பற்களையும் கூரான நகங்களையும் ஒழித்துவிட வேண்டுமென்று கூறியது. இப்படி ஒவ்வொரு மிருகமும் எது தன்னிடம் இல்லையோ, எதை வைத்துக்கொண்டு மற்ற மிருகங்களைக் கொல்லுகின்ற வலிமையைப் பெற்றுள்ளதோ அவைகளை ஒழித்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் பேசின. கடைசியாக கரடி எழுந்தது; கனிவுடன் சொன்னது, எல்லாமே ஒழிக்கப்படத்தான் வேண்டும், கூரான நகம், கொடிய பற்கள் உள்ள வாய், நீண்ட கூரிய மூக்கு எல்லாம் ஒழிக்கப்படத்தான் வேண்டும்; கட்டித் தழுவிக்கொள்ளும் முறை மட்டும் ஒழிக்கப்படக்கூடாது என்று கூறியது. கட்டிப்பிடித்தே மற்றதைக் கொல்லும் கரடி, அதுமட்டும் இருக்க வேண்டும், மற்றவை ஒழிய வேண்டும் என்ற கொள்கை உடையது. அந்த ஊழல் கரடி யாரென்பதும், இந்தக் கரடி யாரைக் கட்டிப்பிடிக்கப் போகிறது என்பதையும், கட்டிப் பிடித்தால் அவர்கள் கதி என்னவாகும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களின் யூகத்திற்கே விட்டுவிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கைகளின்மீது தந்த கருத்துக்களை ஆலோசனைகளாக ஏற்றுக்கொள்வதோடு அவர்கள் அள்ளித் தந்த கருத்துக் குவியல்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர், பல்வேறு நல்ல கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பல சிறப்பான கருத்துக்களை வழங்கி இருக்கிறார். அவற்றையெல்லாம் கனிவோடு இந்த அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்கள் ஊரில் அரசு ஊழியர் குடியிருப்புகள் கட்டக் கோரியுள்ளனர். மாவட்டத் தலைமையிடம் மற்றும் வருவாய்க் கோட்டத் தலைமையிடங்களில் மட்டுமே அரசு ஊழியர் குடியிருப்புகள் கட்டுவதை அரசு கொள்கையாகக் கொண்டுள்ளது. தாலுகா தலைமை இடங்களில் குடியிருப்புகளுக்குத் தேவையும், அதற்கான நிலமும்

கிடைத்தால் தனியாகப் பரிசீலிக்கப்படும். மேலும் மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் சிற்றூர் மற்றும் கிராமப்புறங்களில் வீட்டு வசதி வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்டித்தரக் கோரியுள்ள கோரிக்கையும் உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும். இப்போது தமிழக வீட்டு வசதித் துறைதான் இந்தியாவிலே இருக்கின்ற அத்துணை மாநிலங்களையும்விட ஏழை எளிய மக்களுக்காக, இலவச வீடுகளாக, மானியத்தோடு கூடிய வீடுகளாக, மீனவர்களுக்காக, கைத்தறி நெசவாளர்களுக்காக—இப்படிப் பல பிரிவினர்களுக்கு வீடுகளைக் கட்டித் தந்து—அதிக அளவு வீடுகளைக் கட்டித்தரக்கூடிய மாநிலம், நம்முடைய மாநிலம்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்த வெட்டுத் தீர்மானங்களின் மூலம் சுட்டிக்காட்டியவைகளைப் பரிசீலித்து, உரிய வகையில் பதில் அளித்துள்ளேன என்று கருதுகிறேன். எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் எனது பதிலுரையை ஏற்று, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தாலே ஆவடிக்குப் பக்கத்திலே இருக்கிற பருத்திப்பட்டு, வீரராகவபுரம், செம்பரம்பாக்கம் ஆகிய பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளாக ஆக்கிக் கொடுக்கப்படும் என்று இரண்டு ஆண்டுகளாக அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். நில ஆர்ஜிதம் செய்வதாகச் சொல்லி அடிக்கடி வந்து நிலத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டம் இந்த ஆண்டாவது செயல்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 1-20

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிலத்தை எடுப்பதற்கு 4(1) Notice வழங்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து 6(1) Notice வழங்கப்பட்டு வருவாய்த் துறை மூலம் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**HON. SPEAKER:** Thiru Gnanasekaran, you are getting up every day, every time; sit down. விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.



**கோரிக்கை எண் 32—வீட்டு வசதி**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 32—வீட்டு வசதி. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.104,35,36,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

## கோரிக்கை எண் 33—நகர்ப்பகுதி வளர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 33—நகர்ப் பகுதி வளர்ச்சி. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 10,65,62,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் புதன்கிழமை (28-4-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.22 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

148. 1997 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியின் மதிப்பீடுகளுக்கு அனுமதியளித்தல் மற்றும் ஒப்பந்தங்களுக்கு ஏற்பளித்தல் குறித்த பண வரையறைகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 19-3-1998 ஆம் நாளிட்ட 34 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (டி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

130. மானியக் கோரிக்கை எண் 32 - வீட்டுவசதி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

131. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 'குடிமக்கள் உரிமை ஆவணம்' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

132. பதிவாளர், வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களின் 'குடிமக்கள் சாசனம்' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

133. மானியக் கோரிக்கை எண் 33 - நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

134. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் 'குடிமக்கள் சாசனம்' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

135. நகர ஊரமைப்பு இயக்ககத்தின் 'குடிமக்கள் உரிமை ஆவணம்' என்ற புத்தகம், 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

136. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 'குடிமக்களின் சாசனம்' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

137. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்து நான்காவது அறிக்கை, 1998-99.

138. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்து ஐந்தாவது அறிக்கை, 1998-99.



139. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்து ஆறாவது அறிக்கை, 1998-99.

140. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்து ஏழாவது அறிக்கை, 1998-99.

141. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்து எட்டாவது அறிக்கை, 1998-99

# இணைப்பு—I

[389 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## மானியக் கோரிக்கை எண் 32—வீட்டு வசதி

## கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000

### 1. முன்னுரை

1.1 மக்களின் இன்றியமையாத அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உறைவிடத் தேவையினைப் பூர்த்தி செய்வதனைத் தலையாய கடமைகளில் ஒன்றாகக் கருதி இந்த அரசு செயல்படுகிறது.

"ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு" எனும் உன்னதக் குறிக்கோளை எய்த புதிய திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. பெருகிவரும் மக்கள்தொகை மற்றும் வேலைவாய்ப்புத் தேடி நகர்ப்புறங்களுக்குக் குடிபெயரும் மக்களின் வீட்டுவசதி தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதோடு மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப தங்களுக்கென்று சொந்த வீடு அமைத்துக் கொள்ளும் தேவையும் ஆவலும் அதிகரித்து வருகிறது. ஆகவே, அனைத்துத் தரப்பினருக்கும் தேவையான வீட்டுவசதியை அளிப்பதற்காக வீடுகள், வீட்டுமனைகள், வீடு கட்ட நிதி வசதி மற்றும் தகுந்த தொழில்நுட்பத்தையும் வழங்க அரசு வகை செய்கிறது. அனைத்துப் பிரிவினையும் சார்ந்த மக்கள் தங்கள் பொருளாதாரத்திற்கு ஏற்றவாறு குடியிருப்பு இல்லங்களை அமைத்துக் கொள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு ஊரக வீட்டுவசதிக் கழகம் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள், தமிழ்நாடு வீட்டுவசதி இணையம் மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஆகியவை உகந்த திட்டங்களைத் தயாரித்து ஒருங்கிணைந்த முயற்சியோடும் உறுதியோடும் செயல்படுகின்றன.

1.2 1991-ம் ஆண்டு மக்கள்தொகை கணக்குப்படி தமிழகத்தில் 125 இலட்சம் குடியிருப்புகளில் மக்கள் வசிக்கின்றனர். கி.பி.2011 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 175 இலட்சம் குடியிருப்புகள் தேவைப்படும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த இடைவெளியை நிரப்ப கூடுதலாக 2.50 இலட்சம் வீடுகள் தேவைப்படுகின்றன. தேசிய வீட்டுவசதிக் கொள்கையும் இந்த இடைவெளியைப் பூர்த்தி செய்ய வலியுறுத்துகிறது.

[1999 ஏப்ரல் 23

இந்த இலக்கை அடைய அனைத்து நிதி நிறுவனங்களும், வங்கிகளும், கூட்டுறவுச் சங்கங்களும் பெரும் பணி ஆற்றிட வேண்டும். அதிலும் குறிப்பாக கிராமப்புறங்களில் மிக அதிக அளவில் வீட்டு வசதி உருவாக்கப்பட வேண்டும்.

1.3 ஊரகப் பகுதிகளில் வாழும், பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்கள் குறைந்த செலவில் வீடுகளைக் கட்டிக் கொள்ளத் தேவையான கட்டடப் பொருட்களையும், தகுந்த தொழில் நுட்பத்தையும் மாவட்ட "கட்டட மையங்கள்" அளித்து வருகின்றன. பன்னெடுங்காலமாக அங்கீகாரமின்றியும், மாற்று இடங்களில் குடியமர்த்தப்படாமலும் அவல நிலையில் அல்லலுறுகிற குடிசைவாழ் மக்களுக்கு தமிழக அரசு அடிப்படை வசதிகளைப் பெருக்கியும் சுற்றுச் சூழலை மேம்படுத்தியும் தருகிறது. ஆட்சேபகரமான பகுதிகளில் குறிப்பாக, நதிக்கரையிலும், கழிவுநீர்ப் பாதைகளிலும், கால்வாய் ஓரங்களிலும் வாழும் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளை உள்ளடக்கிய அழகிய குடியிருப்புப் பகுதிகள் உருவாக்கி பாதுகாப்பு உரிமை அளிக்கப்படுகிறது.

1.4 இயற்கைச் சீற்றங்களினாலும், தீ விபத்தினாலும் குடிசை வாழ் மக்கள் பாதிக்கப்படுவதை முற்றிலுமாகத் தடுத்திட நிரந்தர நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும், புதிதாக குடிசைகள் ஏற்படாவண்ணம் தடுக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது.

வீட்டுவசதிப் பற்றாக்குறையைப் போக்கிட அரசு நிறுவனங்களோடு, தனியார் நிறுவனங்களையும் வீட்டுவசதித் திட்டங்களைச் செயல்படுத்த பல்வேறு வகையில் ஊக்குவிக்கிறது.

## 2. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

2.1 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பொது மக்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் குடியிருப்புகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட வீட்டு மனைகளை உருவாக்கும் பணிகளை ஆற்றி வருகிறது. சமுதாயத்திலுள்ள உயர் வருவாய் பிரிவினர், நடுத்தர வருவாய் பிரிவினர், குறைந்த வருவாய் பிரிவினர் மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் ஆகியோருக்கு, தேவைக்கு ஏற்ப பல்வேறு வருவாய் பிரிவினருக்கும் வீடுகள்/அடுக்குமாடி வீடுகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட வீட்டு மனைகள் வழங்குவதற்கான பல்வேறு திட்டங்களையும் தீட்டி செயலாற்றி வருகிறது.



1999 ஏப்ரல் 23]

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மக்களின் வாங்கும் திறனுக்கு ஏற்ப அனைத்து சமூக மற்றும் இதர அடிப்படை வசதிகளைக் கொண்ட திட்டங்களைத் தீட்டி வருகிறது. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பல்வேறு மதம், இனம், மொழி மற்றும் வருவாய் பிரிவினர்களின் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பொது மக்கள், அரசு ஊழியர்கள், முன்னாள் இராணுவத்தினர், சுதந்திரப் போராட்ட வீரர், உடல் ஊனமுற்றோர், மொழிப் போராட்ட வீரர், பத்திரிகையாளர்கள், சமூக சேவகர்கள், விதவைகள், ஆதாவற்ற பெண்கள், பிற்பட்ட வகுப்பினர் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் ஆகியோருக்கு குடியிருப்புகள்/மனைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

வீட்டு வசதி வாரியத் திட்டங்கள் "வேற்றுமையில் ஒற்றுமை காண்பது" என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக இருக்கிறது.

### 2.2 வீட்டு வசதி வாரியத்தின் வளர்ச்சி

கடந்த 38 ஆண்டுகளாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தன்னுடைய குறிக்கோளை அடைவதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது, 1970-71 ஆம் ஆண்டில் ரூ.4.83 கோடியாக இருந்த வாரியத்தின் முதலீட்டுச் செலவு, 1999-2000 ஆம் ஆண்டில் ரூபாய் 270 கோடி என்ற அளவில் படிப்படியாக உயர்ந்துள்ளது. வீட்டு வசதி வாரியம் தனது பல்வேறு திட்டங்களின் மூலம் இதுவரை 3,69,019 குடியிருப்புகளை உருவாக்கியுள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மக்களின் வாங்கும் திறனுக்கேற்ப குடியிருப்புகள் உருவாக்குவதோடு மட்டும் அல்லாமல் போதிய வசதிகளுடன் மற்றும் கலை நயத்துடன் கூடிய தரமான வீடுகளை உருவாக்கித் தருகிறது. இத்தகைய திறன் மிக்க திட்டங்களை மேலும் சிறப்பாக்குவதற்குத் தனியார் துறையில் உள்ள கட்டட வல்லுநர்களின் பணிகளையும் பயன்படுத்தி பலவிதமான வடிவமைப்புடனும் மற்றும் கண்கவரும் முகப்புத் தோற்றத்தை ஏற்படுத்தியும் கட்டட வசிப்பிட பரப்பினை முழு அளவில் பயன்படுத்தும் வகையில் குடியிருப்புகளை அமைத்தும் வருகிறது.

### 2.3 வீட்டு வசதி வாரியத்தின் மாறிவரும் செயல்பாடுகள்

தற்போது நடைமுறையில் உள்ள சிக்கல்களை நீக்கி தரமான மற்றும் சமமான பங்கீடு முறைகளையும், குறிப்பாக, வீடற்ற மற்றும்

போதிய வீட்டு வசதி இல்லாத மக்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் பணியினை வீட்டு வசதி வாரியம் எடுத்துக்கொள்ள வேண்டும் என தேசிய வீட்டு வசதிக் கொள்கை வலியுறுத்துவதற்கு ஏற்ப பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான திட்டங்களைச் செயல்படுத்த வாரியம் பல்வேறு மனை மேம்பாட்டு மற்றும் நில வங்கித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. கி.பி. 2011 ஆம் ஆண்டில் சுமார் 175 இலட்சம் குடியிருப்புகள் தேவைப்படுகிறது எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

எல்லோருக்கும் வீட்டு வசதி அளிக்க வேண்டும் என்ற குறிக்கோளை அடைய போதிய நிதி ஆதாரங்களைத் திரட்டி தேவையான குடியிருப்பு வசதிகளைப் பெருக்கி மக்களுக்கு அவ்வசதிகளை முறையாக வழங்குவதே வீட்டு வசதி வாய்ப்பு குறித்த செயல்பாடுகளின் நோக்கமாகும். பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினரின் குடியிருப்புத் தேவைகள், மொத்த குடியிருப்புத் தேவையில் சுமார் 80 விழுக்காடுகள் ஆகும். தனியார் துறைகள் பெரும்பாலும் மத்திய மற்றும் உயர் வருவாய் பிரிவின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலேயே கவனம் செலுத்துகின்றன. குறைந்த வருவாய் பிரிவினரின் தேவைகள் மிகச் சிறிய அளவிலேயே இவர்களால் கவனிக்கப்படுகிறது. எனவே, பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கும் அதிக அளவில் குடியிருப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வது அரசின் கடமையாகிறது.

குறைந்த வருவாய் பிரிவினர் மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு கட்டி முடித்த வீடுகளாகக் கொடுப்பது என்பது எளிதான காரியம் அன்று. மேற்கூறிய காரணங்களால் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினர்களுக்குத் தேவையான மேம்படுத்தப்பட்ட வீட்டு மனைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முக்கியத்துவம் காட்டப்படுகிறது. இதனால், மக்கள் அவர்களுடைய தேவைக்கேற்ப விருப்பிய வடிவமைப்பில் வீடுகளைக் கட்டிக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

## 2.4 பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சித் திட்டங்கள்

வீடுகட்ட நிலம் கிடைப்பது அரிதாக இருப்பதுடன் அல்லாமல் நில எடுப்பு நடவடிக்கை என்பது அதிக காலதாமதம் ஏற்படுகின்ற



மற்றும் கூடுதல் செலவினமாகக் கூடியதாக உள்ளது. எனவே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தனியாரிடமிருந்து நேரடி பேச்சுவார்த்தை மூலமாக நிலங்களைக் கையகப்படுத்த தொடர்ந்து முயற்சி எடுத்து வருகிறது.

இச்சிரமங்களைத் தவிர்க்க தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் நிலப்பங்கீட்டு முறையில் நிலங்களைக் கையகப்படுத்த முயற்சித்தது. இருப்பினும், இத்திட்டத்திற்காக தகவல் கோரி செய்தித்தாள்களில் விளம்பரம் செய்தும் போதிய பலன் கிட்டவில்லை. பொது மக்களின் தேவைக்கேற்ப வீடுகள் மற்றும் வீட்டு மனைகள் தொடர்ந்து கிடைப்பதற்காக "பொது மற்றும் தனியார் கூட்டுத் திட்டம்" என்ற கருத்து தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி தனியார் துறைகளிலுள்ள திறமை மற்றும் அனுபவத்தைப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கூட்டு முயற்சி, 2 அல்லது 3 நபர்கள்/நிறுவனங்கள் (கட்டட அமைப்பாளர்கள்) இணைந்து, இத்திட்டம் முழுமையாக முடிக்கப்பட்டு விற்பனை முடியும் வரை பங்கீடுதாரர்கள் தங்களை முழு அளவில் ஈடுபடுத்திக் கொள்வதாகும். இத்திட்டத்திற்குத் தேவையான நிலம் பங்கீட்டுதாரர்களால் அளிக்கப்படும். அதே நேரத்தில், இத்திட்டத்திற்குத் தேவையான நிதியினை வாரியம் மற்றும் பங்கீட்டுதாரர்கள் 50:50 அடிப்படையில் ஏற்பார்கள். அரசு/சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்/நகர்ப்புற மற்றும் ஊரமைப்பு இயக்ககத்திடமிருந்து பெற வேண்டிய தேவையான ஒப்புதலைப் பெற வாரியமே முழுமையான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளும். திட்டம் மற்றும் வடிவமைப்பில் வாரியமும் பங்குதாரர்களும் சமமாக தங்களை ஈடுபடுத்திக் கொள்வர். மதிப்பீட்டு விலையில் நிலம் மேம்படுத்தப்படுவதிலும் மற்றும் கட்டுமானப் பணிகளிலும் அனைத்துப் பங்குதாரர்களும் ஈடுபடுவர். வாரியம் திட்டச் செயலாக்கம் மற்றும் விற்பனை ஆகியவற்றை கண்காணிக்கும். இருப்பினும், திட்டம் முழுமையும் வீட்டு வசதி வாரியத்தினுடைய ஒட்டுமொத்த கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். மேலும், உபரி நிலங்கள் வைத்துள்ள நிறுவனங்களுடன், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், குடியிருப்புக் கட்டுமானப் பணிகளிலும் மற்றும் வணிக வளாகக் கட்டுமானப் பணிகளிலும் கூட்டு முயற்சி எடுத்துக்கொள்ள உள்ளது.

[1999 ஏப்ரல் 23

### 2.5 மக்கள் குறை களைதல்

வீட்டு வசதி வாரியம் பொது மக்களின் குறைகளைக் களைவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. ஒவ்வொரு திங்கட்கிழமையும் மக்கள் குறை தீர்க்கும் நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஒவ்வொரு கோட்டம், சரகம் மற்றும் தலைமை அலுவலகத்திலும் பொது மக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு மனுதாரருக்குப் பதில் அனுப்பி வைக்கப்படுகிறது. ஜூன் 1996 முதல் குறை தீர்க்கும் நாளில் பெறப்பட்ட 6,700 மனுக்களில் 6,051 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 2.6 விற்பனைப் பத்திரம் வழங்கும் முறையினை எளிதாக்குதல்

சமீபகாலம் வரை விதிகளின்படி ஒதுக்கீடு பெற்ற நாளிலிருந்து 5 ஆண்டுகள் முடிவுற்ற பின்னரே வீடு/அடுக்குமாடிக் குடியிருப்பு/வீட்டு மனைகளுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கப்பட்டது. குத்தகை மற்றும் விற்பனைக்கான ஒப்பந்தப் பத்திரத்தில் வரையறை செய்யப்பட்டுள்ள 5 ஆண்டு காலம் முடிவதற்கு முன்பாக ஒதுக்கீடுதாரர் விற்பனைப் பத்திரம் கோரினால கீழ்க்கண்ட நிபந்தனையின்படி. அதாவது "மேற்கண்ட வீடு/அடுக்கு மாடி வீடு/வீட்டுமனையை 3 ஆண்டு காலத்திற்குள் விற்பனை செய்ய விரும்பினால் அதனை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு விற்பனைப் பத்திரத்தில் குறிக்கப்பட்டுள்ள தொகைக்கே ஒப்படைத்துவிட வேண்டும்" என்ற நிபந்தனையுடன் வழங்கப்பட்டது. இதனால் ஒதுக்கீடுதாரர்கள் பல சிரமங்களைச் சந்திக்க நேரிட்டது. தற்போது, அரசு ஆணை பல்வகை எண் 456, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 1-12-1998-ன்படி மேற்கண்ட நிபந்தனையை அரசு விலக்கியுள்ளது. இதனால் ஒதுக்கீடுதாரர்கள் 5 ஆண்டு காலத்திற்குக் காத்திராமல் கிரயத் தொகையை முழுமையாகச் செலுத்தி முடித்தவுடன் விற்பனைப் பத்திரம் பெறலாம். அத்துடன் வீடு/அடுக்குமாடி வீடு/வீட்டு மனை ஒதுக்கீடு பெற்று நிபந்தனையுடன் கூடிய விற்பனைப் பத்திரம் பெற்றிருந்து, வாங்கிய தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் விற்பனை செய்வதாக இருந்தால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமே மீண்டும் விற்பனை செய்ய வேண்டும் என்ற நிபந்தனையும் நீக்கப்பட்டுள்ளது. இந்த மாறுதல்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒதுக்கீடு பெறுபவர்களுக்கு ஒரு வரப் பிரசாதமாக அமைந்துள்ளது.



1999 ஏப்ரல் 23]

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1999 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை 3,69,019 குடியிருப்புகளைக் கட்டி முடித்துள்ளது. ஒதுக்கீடு செய்யப்பட்ட குடியிருப்புகளில் இதுவரை ஒதுக்கீடு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து 65,177 ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. விற்பனைப் பத்திரங்கள் வழங்குவதைத் துரிதப் படுத்த மார்ச் 1999-ல் தனி நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. ஒதுக்கீட்டிற்கான முழு விலையைச் செலுத்தி, ஒதுக்கீட்டு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, "விற்பனைப் பத்திரங்கள் வழங்குவதற்கான தனி நடவடிக்கை"யின்போது விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இந்தச் சிறப்பு நடவடிக்கை தொடர்ந்து அவ்வப்போது நடத்தப்பட்டு அக்காலங்களில் "விற்பனைப் பத்திரங்கள்" வழங்குவதற்குத் தகுதியான இனங்களில் ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்குவது உறுதிப்படுத்தப்படும்.

### 2.7 தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அமைப்பில் சில மாற்றங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் விருப்பப்படி, வாரியம் தனது செயல்பாடுகளைத் தொழில் ரீதியாகவும், காலத்திற்கேற்பவும் மாற்றி அமைப்பதற்கான ஆலோசனையை வழங்க ஆலோசகர் நியமனம் செய்ய முடிவெடுத்துள்ளது. இதற்கான செய்தித்தாள் விளம்பரத்திற்கு 25 ஆலோசனை நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதில் 6 நிறுவனங்கள் தேர்வுப் பட்டியலில் சேர்க்கப்பட்டு இந்த நிறுவனங்கள் ஒவ்வொன்றின் தொழில் நுட்ப மற்றும் ஆலோசனைச் செலவு விவரங்கள் ஆராயப்பட்டு, இறுதியாக ஆலோசனை நிறுவனம் ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

*இப்பணிக்கான வரையறை விவரங்கள் கீழ்வருமாறு:*

1. வாரியத்தின் தற்போதுள்ள அமைப்பை ஆய்வு செய்து, வாரியத்தின் செயல்பாடுகளை வணிக ரீதியாக்குவதற்கான தேவையைக் காணுதல். ஆலோசகர், தற்போதைய நடைமுறையின் சூழ்நிலைகளைப் பரிசீலித்து, வீட்டு வசதி வாரியத்தின் நோக்கங்களை ஆய்வு செய்தும் அதனை அடைய, தேவையான திட்டம் ஒன்றினை வகுத்தளிப்பது.

2. திட்டங்களுக்குத் தேவையான நிலத்தினை அதிகரிக்க, தனியார் மற்றும் வாரியத்தின் பங்கேற்பை முடிவு செய்வதுடன், நிதியினைத் திரட்டி சொத்துக்களை ஏற்படுத்தவும், அவற்றை நிர்வகிக்கவும் ஆலோசனை வழங்கல்.

3. பிரதான பங்குச் சந்தை மூலம் நிதியினை திரட்டத் தேவையான வாய்ப்புகளையும் வழிமுறைகளையும் காணுதல்.

4. வாரியத்தின் கணக்கீட்டு முறையினை ஆய்வு செய்து, அவற்றை மாற்றுவதற்கான வழிவகைகளுடன் சரியான நிதி சம்பந்தப்பட்ட பட்டியல்களைச் செயல்படுத்தல். நிதி மற்றும் ரொக்கத்தினை கையாளுவதற்கான வழிவகைகளைக் காணுதல்.

5. குடியிருப்புகளுக்கான முழுத்தொகையை வசூலிக்கத் தேவையான விலை நிர்ணயம் செய்யும் கொள்கையைத் தயாரித்தல்.

6. வாரியத்தின் பல்வேறு மட்டங்களில் உள்ள அலுவலர்களின் பொறுப்பு மற்றும் உருவாக்கும் திறன் ஆகியவற்றை ஆய்வு செய்து அவற்றை மாற்றியமைக்கத் தேவையான வழிவகைகளைக் காணுதல்.

7. பல்வேறு நிறுவனங்களுடன் ஒத்துழைத்து அடிப்படை வசதிகளை உருவாக்கத் தேவையான வழிவகைகளைக் காணுதல்.

### 2.8 அரசு ஊழியர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் குடியிருப்புகளை உருவாக்குதல்

அரசால் வழங்கப்பட்ட முன்னுரிமை ஒப்புதல் மற்றும் தேவைகளுக்கேற்ப அறிவிக்கப்படும் இடங்களில் அரசு ஊழியர்களுக்காக வாடகை வீட்டு வசதித் திட்டங்களை அரசுக்காக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நிறைவேற்றி வருகிறது. 1998 - 99 இல் ரூ. 5.57 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலையில் 108 அடுக்கு மாடி வீடுகளும், கரூரில் 54 அடுக்குமாடி வீடுகளும், கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 12.51 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினம், திருவாரூர், தேனி, விழுப்புரம் மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் 120 அடுக்குமாடி வீடுகள் கட்டும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. 1999-2000-ல் புதிய திட்டங்களாக திருவாரூரில் 54 அடுக்கு மாடி வீடுகளும், பெரம்பலூரில் 276 அடுக்குமாடி வீடுகளும், தூத்துக்குடியில் 120 அடுக்குமாடி வீடுகளும், திருநெல்வேலியில் 60 அடுக்கு மாடி வீடுகளும், நாகர்கோயிலில் 102 அடுக்குமாடி வீடுகளும், சேலத்தில் 42 அடுக்குமாடி வீடுகளும், விழுப்புரத்தில் 120 அடுக்கு மாடி வீடுகளும், மேட்டூரில் 60 அடுக்குமாடி





வீடுகளும், திருப்பூரில் 72 அடுக்கு மாடி வீடுகளும் மற்றும் முத்தம்பாளையத்தில் (ஈரோடு) 180 அடுக்கு மாடி வீடுகளும், ஆக மொத்தம் 1086 அடுக்கு மாடி வீடுகள் ரூ. 39.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட உள்ளன.

### 2.9 குடிசை மாற்று குடியிருப்புகள்

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அமைக்கப்படுவதற்கு முன்பு வரை குடிசை மாற்று குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மாநிலம் முழுவதும் கட்டப்பட்டன. மொத்தத்தில் 17,021 குடிசை மாற்று குடியிருப்புகளை வாரியம் கட்டியுள்ளது. இதில் சென்னை நகரத்தில் கட்டப்பட்ட 7,384 குடியிருப்புகள் மட்டும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. தற்போது வெளிமாவட்ட நகரங்களான மதுரை, சேலம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், கடலூர், திருச்சி முதலிய இடங்களில் 9,637 குடிசை மாற்று வீடுகளை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பராமரித்து வருகிறது. 1990 ஆம் ஆண்டில் அரசு ஆணை எண் 897, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 3-8-1990 படி குடிசை மாற்று வீடுகளை மாதத் தவணையில் கிரயத் தொகை செலுத்தி, ஒதுக்கீடுதாரர்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும் திட்டம் அறிவிக்கப்பட்டது. 1997 இல் அரசு அதன் ஆணை எண். 297, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 11-8-1997 இல் இந்த ஒதுக்கீடு முறைகளை எளிமைப்படுத்தி, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள குடியிருப்புகளை கட்டிய ஆண்டினைக் கணக்கில் கொண்டு ஒரே விலையாகச் செலுத்தும்படியும், அப்படிச் செலுத்துபவர்களுக்கு கிரயப் பத்திரமும் வழங்கிட வழி செய்தது. இதே வழிமுறைகளை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள குடிசை மாற்று குடியிருப்புகளுக்கும் பொருந்தும்படி திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி இக்குடியிருப்பிலுள்ளோர் வாடகை நிலுவைத் தொகையுடன் அரசு நிர்ணயிக்கும் குடியிருப்பு விலையைச் செலுத்தினால் அவர்களுக்கு அக்குடியிருப்பினை கிரயம் செய்து கொடுக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த 9,637 குடிசை மாற்றுக் குடியிருப்புகளும் கடந்த 20 முதல் 30 ஆண்டுகளில் கட்டப்பட்டன. பகுதி 2 திட்டத்தின்கீழ் சேலம், மதுரை மற்றும் திருச்சியிலுள்ள குடிசைமாற்றுக் குடியிருப்புகளுக்கு சிறப்புப் பழுதுபார்க்கும் பணிக்காக 1998-99 இல் ரூ.34 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

[1999 ஏப்ரல் 23

### 2.10 பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்களுக்கான திட்டம்

இத்திட்டத்தின்கீழ் வருடாந்திர வருவாய் ரூ.25,200 வரை பெறுகின்ற வீடற்றவர்களுக்கு வீடு கிடைக்க வகை செய்யப்படுகிறது. இக்குடியிருப்புகள் ஒவ்வொன்றிற்கும் அதிகபட்ச விலை ரூ.35,000 ஆகும். இத்திட்டத்தின்படி குடியிருப்புக்கான முழுத் தொகையில் 10 விழுக்காட்டினை முன் பணமாகவும், மீதித் தொகையை 9 விழுக்காடு வட்டியுடன் கூடிய மாதாந்திரத் தவணையாகவும் 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1971-72 ஆம் ஆண்டிலிருந்து பிப்ரவரி 1999 முடிய 1,21,475 குடியிருப்புகளை ரூபாய் 26.43 கோடி செலவில் உருவாக்கியுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் நில வங்கித் திட்டத்தின்கீழ் 3,140 மனைகளை ரூ.275 லட்சம் மதிப்பீட்டில் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.10.1 குறைந்த வருவாய் பிரிவினருக்கான திட்டம்

ஆண்டொன்றிற்கு ரூ.25,201 முதல் ரூ.54,000 வரை வருமானமுள்ள குடும்பத்தினர் பயன் பெறுவதற்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள் ஒவ்வொன்றிற்கும் அதிகபட்ச விலை மதிப்பீடு ரூ.1,00,000 ஆகும். இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும் குடியிருப்பின் முழுத்தொகையில் 30 விழுக்காடு முன் பணமாகவும் மீதித் தொகையை மாதாந்திரத் தவணையாக 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இருப்பினும் ஒதுக்கீடுதாரர்கள் விரும்பினால் 25 விழுக்காடு முன் பணமாகவும் எஞ்சிய தொகையை மாதாந்திரத் தவணையாக 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பிப்ரவரி 1999 முடிய 80,920 குடியிருப்புகளை ரூபாய் 110.52 கோடி செலவில் உருவாக்கியுள்ளது. நடப்பு நிதியாண்டான 1999-2000 இல் 2,979 குடியிருப்புகள் குறைந்த வருவாய் பிரிவினருக்காக இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 6.85 கோடி செலவில் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.10.2 நடுத்தர மற்றும் உயர் வருவாய் பிரிவினர்களுக்கான திட்டம்

நடுத்தர வருவாய் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் ஆண்டொன்றிற்கு ரூ. 54,001 முதல் ரூபாய் 90,000 வரை வருமானமுள்ள



1999 ஏப்ரல் 23]

குடும்பத்தினர் பயன் பெறத் தகுதியுடையவர்கள் ஆவார்கள். குடியிருப்பு விலையில் முழுத்தொகையில் 35 விழுக்காடு முன்பணமாகவும், மீதமுள்ள தொகையை மாதாந்திரத் தவணையாக 10 ஆண்டுகளில் (கட்டுமானக் காலம் 2 ஆண்டுகள் உட்பட) திருப்பிச் செலுத்துமாறு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இருப்பினும் ஒதுக்கீடுதாரர்கள் விரும்பினால் 25 விழுக்காடு முன்பணமாகச் செலுத்தி எஞ்சிய தொகையை மாதாந்திரத் தவணையாக 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் 4,330 குடியிருப்புகள் ரூ.28.71 செலவில் கட்டப்பட உள்ளன.

ரூ.90,000-க்கு மேல் ஆண்டு வருமானம் பெறுகின்றவர்கள் உயர் வருவாய் பிரிவினருக்கான வீட்டுவசதி திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு பெற தகுதி பெறுகின்றனர். குடியிருப்பு விலையின் முழுத் தொகையில் 40 விழுக்காடு முன்பணமாகவும், மீதித் தொகையை மாதாந்திரத் தவணையாக 10 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்துமாறும் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. மேலும், ஒதுக்கீடுதாரர்கள் விரும்பினால் முன்பணமாக 25 விழுக்காடு முன்பணம் செலுத்தி, எஞ்சிய தொகையை மாதாந்திரத் தவணையாக 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தலாம். 1999-2000 ஆண்டில் 3,582 குடியிருப்புகள் ரூபாய் 82.83 கோடி செலவில் உருவாக்கப்படவுள்ளன.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பிப்ரவரி 1999 முடிய நடுத்தர மற்றும் உயர் வருவாய் பிரிவினருக்காக 1,06,045 குடியிருப்புகளை ரூபாய் 808.86 கோடி செலவில் உருவாக்கியுள்ளது.

### 2.11 சிறிய மற்றும் நடுத்தர வீட்டு வசதித் திட்டம்

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களிலிருந்து மக்கள் பெரிய நகரங்களுக்குக் குடிபெயர்வதைத் தடுக்கவும், இந்த நகரங்களில் நிலவி வரும் வீட்டு வசதித் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும், அரசு, இத்திட்டத்தினை மாநிலம் முழுவதுமுள்ள நகரங்களில் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அப்படிப்பட்ட நகரங்களில் நிலவும் வீட்டுவசதித் தேவையைக் கருதி, அங்கு வீட்டுவசதி செய்து கொடுக்க சில நகரங்களைத் தேர்வு செய்துள்ளது. இதுவரை 53 நகரங்களில் ரூ.170.17 கோடி செலவில் 7,040 மனைகளும் 10,550 வீடுகளும்

உருவாக்கப்பட்டுள்ளன. காரைக்குடி, தாராபுரம், தேவகோட்டை, ஒட்டன்சத்திரம், விழுப்புரம், சோளிங்கர், திருநகர் (மதுரை). செங்கல்பட்டு, பெரியநாயக்கன்பாளையம், பெருந்துறை மற்றும் தூத்துக்குடி ஆகிய நகரங்களில் 6,882 மனைகளை மேம்படுத்த மற்றும் 492 வீடுகள் கட்ட ரூ. 57.71 கோடி செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

1999-2000 ஆம் ஆண்டில் ஏற்கெனவே முடிந்துள்ள திட்ட நகரங்களான கோவில்பட்டி, அறந்தாங்கி, கும்பகோணம், எடப்பாடி மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய நகரங்களில் 1,572 மனைகளும் 328 வீடுகளும் ரூ.16.08 கோடி செலவில் தொடங்கப்பட உள்ளன. 42 நகரங்களில் நிலங்களைக் கையகப்படுத்தி வீட்டுவசதித் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

## 2.12 நில வங்கித் திட்டம்

ஹட்கோ நிறுவனம் தனது நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் வீட்டுவசதித் திட்டங்களில் 5 விழுக்காடு நிலப்பகுதியினை வீடற்ற பிரிவினருக்காக ஒதுக்கீடு செய்யுமாறு மாநில அரசு சார்ந்த வீட்டுவசதி நிறுவனங்களைக் கேட்டுக்கொண்டது. இப்பகுதிக்கான நிலத்தின் விலையை மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ள ஏனைய பகுதிகளின் அபிவிருத்தித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள அறிவுறுத்தியது.

இதுவரை, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 43.74 ஹெக்டேர் நிலத்தினை எல்லாவித அடிப்படை வசதிகளுடன் மேம்படுத்தி வீடற்ற மக்களுக்கு பிப்ரவரி 1999 வரை ஒதுக்கீடு செய்துள்ளது. எனவே, தற்போது மீதமுள்ள 52.29 ஹெக்டேர் நிலப்பகுதியில் சுமார் 7,300 மனைகள் வரும் ஆண்டுகளில் மேம்படுத்தப்பட்டு வீடற்ற மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன.

## 2.13 நிதி ஆதாரங்கள்

வாரியத்தால் நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கான நிதி ஆதாரங்கள் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்றன:

1. வீட்டுவசதி மற்றும் நகர அபிவிருத்திக் கழகம்
2. நிதி நிறுவனங்கள் மூலம் அரசினால் வழங்கப்படும் நிதியுதவி





3. வீட்டுவசதி அபிவிருத்தி நிதிக் கழகம்/தேசிய வீட்டுவசதி வங் ஆயுள் காப்பீட்டுக் கழகம்
4. வணிக வங்கிகள்
5. வாரியச் சொத்துக்கள் மூலம் பெறப்படும் வருவாய்
6. பொது மக்களிடமிருந்து பெறப்படும் வைப்பு நிதி

## 2.14 1999-2000 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நடப்பு நிதி ஆண்டில் ரூ. கோடி மதிப்பீட்டில் 15,500 குடியிருப்புகளைக் கட்டி முடிக்கும்.

## 2.15 1999-2000 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ள முக்கி வீட்டுவசதித் திட்டங்கள்

**1. சென்னை முகப்பேரில் உயர் வருவாய் பிரிவினருக்கான அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்**

ஏற்கெனவே செயல்படுத்தப்பட்ட சென்னை, முகப்பேர் ஏரி திட்ட பகுதியில் உயர் வருவாய் பிரிவினருக்காக 114 அடுக்குமாடி வீடு கட்டுவதற்கான திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தி மதிப்பீடு ரூ.631 இலட்சமாகும். இதற்கான நிதியை தேசிய வீட்டுவ வங்கி அளிக்கவுள்ளது.

**2. சென்னை, கோடம்பாக்கத்தில் உயர்வருவாய் பிரிவினருக்கா 48 அடுக்குமாடி வீடுகள் கட்டுதல்**

சென்னை, ராகவேந்திரா கல்யாண மண்டபத்திற்கு அருகாமைய சமீபத்தில் கையகப்படுத்தப்பட்ட 0.22 ஹெக்டேர் நிலப்பரப் உயர்வருவாயினருக்கான 48 அடுக்கு மாடி வீடுகள் கட்டுவத திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான திட்ட மதிப்பீடு ரூ.309 இலட்சமா இதற்கான நிதி உதவியை ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் வீட்டுவ நிதி குழுமத்திடமிருந்து பெறப்படும்.

**3. சென்னை, திருவான்மியூர் விரிவாக்கப் பகுதியில் உயர் வருவ பிரிவினருக்காக 40 அடுக்குமாடி வீடுகள் கட்டுதல்**

சென்னை, திருவான்மியூர் பகுதியில் நிறுவும் வீட்டு வச தேவையைக் கருத்தில் கொண்டு உயர் வருவாய் பிரிவினருக்

[1999 ஏப்ரல் 23

சென்னை, திருவான்மியூர் விரிவாக்கத்தில் 40 அடுக்குமாடி வீடுகள் கட்டுவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.493 இலட்சமாகும்.

இத்திட்டத்திற்கான நிதி வீட்டு வசதி மற்றும் நகர அபிவிருத்திக் கழகத்திடமிருந்து பெறப்பட உள்ளது.

**4. சென்னை, வால்மீகி நகரில் உயர் வருவாய் பிரிவினருக்காக 27 அடுக்குமாடி வீடுகள் கட்டுதல்**

சென்னை, திருவான்மியூர் விரிவாக்கம் வால்மீகி நகரில் உயர் வருவாயினருக்காக 27 அடுக்குமாடி வீடுகள் கட்டுவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

இக்குடியிருப்புகளில் பளிங்கு கற்களால் ஆன தரை மற்றும் மெருகு ஓடுகள் பதித்த குளியலறைகள் போன்ற நவீன வசதி செய்து தரப்படும். இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.497.53 இலட்சமாகும். இத்திட்டம் ஆயுள் காப்பீட்டுக் கழக வீட்டு வசதி நிதிக் குழுமத்திடமிருந்து நிதி உதவி பெற்று கட்டி முடிக்கப்படும்.

**5. அம்பத்தூரில் நடுத்தர வருவாய் பிரிவினருக்காக 56 அடுக்குமாடி வீடுகள் கட்டுதல்**

அம்பத்தூரில் மேம்படுத்திய மனைகளில் நடுத்தர வருவாயினருக்காக 56 அடுக்குமாடி வீடுகள் ரூ.207.54 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளன. இத்திட்டத்திற்கான நிதி உதவி வீட்டு வசதி மற்றும் நகர அபிவிருத்திக் கழகத்திடமிருந்து பெறப்படும்.

**6. தாம்பரம் பகுதியில் உயர் வருவாய் பிரிவினருக்காக 48 அடுக்குமாடி வீடுகள் கட்டுதல்**

தாம்பரம் புறநகர்ப் பகுதியில் ஏற்கெனவே அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள நிலப் பகுதியில் உயர் வருவாயினருக்காக 48 அடுக்குமாடி வீடுகள் கட்டுவதற்காக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.214.90 இலட்சமாகும். இதற்கான நிதி வீட்டு வசதி மற்றும் நகர அபிவிருத்திக் கழகத்திடம் பெறப்படவுள்ளது.



1999 ஏப்ரல் 23]

**7. கொரட்டூரில் உயர் வருவாய் பிரிவினருக்காக 172 அடுக்குமாடி வீடுகள் கட்டுதல்**

கொரட்டூர் புறநகர்ப் பகுதியில் உயர் வருவாயினருக்காக 172 அடுக்கு மாடி வீடுகள் ரூ.595.63 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி உதவியை வீட்டு வசதி மற்றும் நகர அபிவிருத்திக் கழகம் அளிக்க இசைந்துள்ளது. இத்திட்டத்தின் முதல் பகுதியாக 76 உயர் வருவாயினருக்கான அடுக்குமாடி வீடுகள் கட்டப்படும்.

**8. செவ்வாய்ப்பேட்டையில் 59 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளும் 29 வீடுகளும் கட்டுதல்**

செவ்வாய்ப்பேட்டை பகுதி 2 திட்டப் பகுதியில் குறைந்த வருவாயினருக்கு 17 வீடுகளும், நடுத்தர வருவாயினருக்கு 10 வீடுகளும் மற்றும் உயர் வருவாயினருக்கு 2 வீடுகளும் (ஆகமொத்தம் 29 வீடுகள்) மற்றும் குறைந்த வருவாயினருக்கு 41 மனைகளும் நடுத்தர வருவாயினருக்கு 18 மனைகளும் (ஆகமொத்தம் 59 மனைகள்) உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ரூ.127.87 இலட்சம், ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிதிக் குழுமத்திடமிருந்து பெறப்படும்.

**9. சென்னை, முகப்பேர் கிழக்குப் பகுதியில் உயர் வருவாய் பிரிவினருக்கு 40 அடுக்குமாடி வீடுகளும், மேற்குப் பகுதியில் உயர் வருவாய் பிரிவினருக்கு 88 அடுக்குமாடி வீடுகளும் கட்டுதல்**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஏற்கெனவே உள்ள மனையில் முகப்பேர் மேற்குப் பகுதியில் உயர் வருவாய் பிரிவினருக்கான 88 அடுக்குமாடி வீடுகளும், முகப்பேர் கிழக்குப் பகுதியில் 40 உயர் வருவாய் பிரிவினருக்கான அடுக்குமாடி வீடுகளும் கட்டுவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள் பளிங்குத் தரைகளும், பளிங்கு சுவர் ஓடுகளும் கொண்ட நவீன வசதிகள் கொண்டதாக இருக்கும்.

இத்திட்டத்திற்கான தோராய மதிப்பீடு ரூ. 10.24 கோடியாகும்.

**10. சீக்கராசபுரத்தில் (ராணிப்பேட்டை) 46 வீடுகள் கட்டுதல்**

ஏற்கெனவே அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள இப்பகுதியில் நடுத்தர வருவாயினருக்கு 20 வீடுகளும், உயர் வருவாயினருக்கு 26 வீடுகளும்

ஆகமொத்தம் 46 வீடுகள் கட்டுவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.118.00 இலட்சமாகும். வீட்டு வசதி மற்றும் நகர அபிவிருத்திக் கழகத்திடமிருந்து இத்திட்டத்திற்கான நிதியுதவி பெறப்படும்.

**11. ஓசூர் பகுதி 6-ல் 198 வீடுகள் கட்டுதல்**

ஓசூர் பகுதி 6 இல் நடுத்தர வருவாயினருக்கு 176 வீடுகளும் உயர் வருவாயினருக்கு 22 வீடுகளும் ஆகமொத்தம் 198 வீடுகள் கட்டப்படவுள்ளன. இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.423.00 இலட்சமாகும். வீட்டு வசதி மற்றும் நகர அபிவிருத்திக் கழகம் இத்திட்டத்திற்காக நிதியுதவி செய்யும்.

**12. கோயம்புத்தூரில் மனை அபிவிருத்தித் திட்டம்**

கோவை தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்திற்கு அருகிலுள்ள விளாங்குறிச்சியில் மனை அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில் அடிப்படை வசதிகளான தார் சாலைகள், கழிவு நீர் மற்றும் குடிநீர் வசதிகள், மழைநீர் கால்வாய், தெரு விளக்குகள், அங்காடிக்கான இடவசதி, விளையாட்டுத் திடல் மற்றும் ஓய்விடம் முதலியன அடங்கிய 478 மனைகள் அபிவிருத்தி செய்யப்படும். இத்திட்டம் 280 குறைந்த வருவாய் குடும்பங்களும், 150 நடுத்தர வருவாய் குடும்பங்களும் மற்றும் 48 உயர் வருவாய் குடும்பங்களும் ஆகமொத்தம் 478 குடும்பங்கள் பயன்பெறும் திட்டமாகும். இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூ.383 இலட்சமாகும். இதற்கான நிதி உதவி வீட்டு வசதி மற்றும் நகர அபிவிருத்திக் கழகத்திடமிருந்து பெறப்படும்.

**13. கோயம்புத்தூரில் உள்ள துடியலூரில் மனை அபிவிருத்தித் திட்டம்**

கோயம்புத்தூருக்கு அருகில உள்ள துடியலூர் பகுதி 5 திட்டத்தில் எல்லாவித அடிப்படை வசதிகளுடன்கூடிய மனை மேம்படுத்துதல் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில் குறைந்த வருவாயினருக்கு 104 மனைகளும், நடுத்தர வருவாயினருக்கு 99 மனைகளும், உயர் வருவாயினருக்கு 49 மனைகளும் ஆகமொத்தம் 252 மனைகள் மேம்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 729 இலட்சமாகும். இதற்கான நிதி உதவி வீட்டு வசதி மற்றும் நகர அபிவிருத்திக் கழகத்திடமிருந்து பெறப்படும்.



**14. தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டியில் மனை அபிவிருத்தித் திட்டம்**

1999-2000 நிதியாண்டில், கோவில்பட்டியில் குறைந்த வருவாயினருக்கு 120 மனைகளும், நடுத்தர வருவாயினருக்கு 116 மனைகளும் மற்றும் உயர் வருவாயினருக்கு 32 மனைகளும் ஆக மொத்தம் 268 மனைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. எல்லாவித அடிப்படை வசதிகளுடன்கூடிய மனைகள் கொண்ட இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 156 இலட்சமாகும். இத்திட்டத்திற்கான நிதி உதவி வீட்டு வசதி மற்றும் நகர அபிவிருத்திக் கழகத்திடமிருந்து பெறப்படும்.

**15. காரைக்குடியிலுள்ள கழனிவாசல் பகுதியில் 100 வீடுகள் கட்டுதல்**

காரைக்குடியிலுள்ள கழனிவாசல் பகுதியில் ஏற்கெனவே அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள மனைகளில் நகரத்தின் வீட்டு வசதித் தேவையைக் கணக்கில் கொண்டு வீட்டு வசதி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் நடுத்தர வருவாயினருக்கு 84 வீடுகளும் உயர் வருவாயினருக்கு 16 வீடுகளும் ஆகமொத்தம் 100 வீடுகள் கட்டி முடிக்கப்படும். இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.210.00 இலட்சமாகும்.

இதற்கான நிதி உதவி வீட்டு வசதி மற்றும் நகர அபிவிருத்திக் கழகத்திடமிருந்து பெறப்படவுள்ளது.

**16. கடலூரிலுள்ள நத்தம்பட்டில் 100 வீடுகள் கட்டுதல்**

கடலூரிலுள்ள நத்தம்பட்டில் 244 மனைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. கடலூர் நகரத்தின் வீட்டு வசதி தேவையை கருத்தில் கொண்டு, 80 நடுத்தர வருவாய் பிரிவினரும் மற்றும் 20 உயர் வருவாய் பிரிவினரும் பயன்பெறும் வகையில் 100 வீடுகள் மேற்படி மனைகளில் கட்டப்படவுள்ளன. இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.315 இலட்சமாகும். இதற்கான நிதி உதவி வீட்டு வசதி மற்றும் நகர அபிவிருத்திக் கழகத்திடமிருந்து பெறப்படும்.

**17. குடிசைப் பகுதிகள் மேம்படுத்துதல்**

1999-2000 ஆம் ஆண்டில் மதுரை, கோயமுத்தூர் மற்றும் சேலம் நகரங்களில் பழுதடைந்த குடிசை மாற்று குடியிருப்புகளை மேம்படுத்துவதற்காக பகுதி 2 திட்டத்தின்கீழ் ரூ.57.50 இலட்சம் செலவிடப்படும்.

[1999 ஏப்ரல் 23

### 3. கூட்டுறவு வீட்டு வசதி

#### *3.1 வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள்*

தமிழக அரசு ஊரக வீட்டு வசதியை பெருக்குவதில் தொலைநோக்குப் பார்வையோடு செயல்பட்டு வருகிறது. கி.பி.2011 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் வீட்டு வசதி தேவை 175 இலட்சம் வீடுகள் என மதிப்பீடப்பட்டுள்ளது. இந்தத் தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டு மக்களது வீட்டு வசதி தேவைக்கு இன்றியமையாத முக்கிய பணிகளைச் செய்து வருகின்றன. "ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு" என்கிற அரசின் வீட்டு வசதிக் கொள்கையை செயலாக்குவதில் தமிழ்நாட்டில் உள்ள வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மிக முக்கியமானவை.

வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் பலமுள்ள மற்றும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த இயக்கமாக வளர்ந்துள்ளன. வீட்டு வசதி கூட்டுறவு இயக்கம் கிராமப்புறங்களில் 186 வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களும், நகர்பபுறங்களில் 861 பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களும் ஆகமொத்தம் 1047 கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் ஒரு பக்கமும், உயர்மட்ட அளவில் மாநில கூட்டுறவு வீட்டு வசதி இணையம் பிறிதொன்றாகவும் ஆக இரண்டடுக்கு இயக்கமாக இயங்கி வீடு கட்ட கடன் வசதியையும் மற்றும் திட்டமிட்ட மனைப் பிரிவுகள் அமைத்து அடிப்படை வசதிகள் நிறைந்த வீட்டடி மனைகளையும் உறுப்பினர்களுக்கு வழங்கி வருகின்றது.

#### *3.2 மேலாண்மை*

மக்களாட்சி நிர்வாக கோட்பாடுகள் மற்றும் பொறுப்புணர்வு ஆகிய இரண்டும் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் மிக முக்கியமான கூறுகளாகும. ஏற்கெனவே 941 தொடக்க நிலை கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்டு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்படுகின்றன. கடந்த 22 ஆண்டுகளாக தேர்தல் நடத்தப்படாமலிருந்த மாநில தலைமைக் கூட்டுறவு நிறுவனங்களில், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணைய நிர்வாகக் குழுத் தேர்தல், 1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 23]

#### *3.3 தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம்*

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களுக்குத் தலைமை அமைப்பாக விளங்கும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையமானது சார்புச் சங்கங்களால் இணைக்கப்பட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்ட நிதியுதவி திரட்டித் தருகிறது. தொடக்க நிலை கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மற்றும் மாநில அரசின் பங்கு மூலதன முதலீடுகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், ஹட்கோ நிறுவனம், தேசிய வீட்டு வசதி வங்கி, வீட்டு வசதி மேம்பாட்டு நிதிக் கழகம், வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றிடமிருந்து பெறப்படும் கடன்கள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் நிதி ஆதாரங்களாகும்.

இணைக்கப்பட்ட சார்புச் சங்கங்களுக்கு பிப்ரவரி 1999 வரை 9,57,765 வீடுகள் கட்ட ரூ. 2,229.38 கோடி கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. தேசிய அளவில் கடனுதவி அளிப்பதில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், முதலாவது இடத்தில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றுள்ளது.

#### 3.4 1998-99 இல் வீட்டு வசதி சங்கங்களினால் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

##### *3.4.1 பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான ஊரக வீட்டு வசதித் திட்டம்*

கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை எளியோரது வீட்டு வசதி தேவையினைச் சீராக நிறைவு செய்வதை உறுதி செய்யும் பொருட்டு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், 1978-79 ஆம் ஆண்டிலிருந்து ஊரக வீட்டு வசதி திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி புதிய வீடு கட்ட ஒரு வீட்டிற்கு ரூ.2,000 அரசு மானியத்துடன் சமவெளிப் பகுதியில் ரூ.10,000-மும் மலைப் பிரதேசங்களில் ரூ.12,000-மும் ஹட்கோ நிறுவன நிதியுதவி மூலம் கடன் வழங்கப்படுகிறது. மேலும் பயனீட்டாளர் ஒவ்வொருவரும் தங்களது சொந்த பங்களிப்பாக ரூ.2,000 முதலீடு செய்யவும் இத்திட்டம் வகை செய்கிறது. திட்ட ஆரம்ப காலத்திலிருந்து இது வரை இத்திட்டத்தின்கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மக்களுக்கு மொத்தம் ரூ.373.32 கோடி நிதியுதவி வழங்கப்பட்டு 5,94,770 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதில் 1998-1999 ஆம் ஆண்டில் 45,000

[1999 ஏப்ரல் 23

பயனாளிகள் தெரிந்தெடுக்கப்பட்டு பகுதித் தொகையாக ரூ.17.17 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இதைத் தவிர முந்தைய ஆண்டுகளில் கட்டப்பட்ட வீடுகள் பழுதுபார்த்தல், புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற பணிகளை 56,930 வீடுகளில் மேற்கொள்ள ரூ.37.27 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**3.4.2 கிராமப்புறங்களில் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம்**

கிராமப்புறங்களில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மூலம் புதிய வீடுகள் கட்ட குறைந்த வருவாய் பிரிவினருக்கு வீட்டு வசதிக் கடன் ரூ.55,000-லிருந்து ரூ.70,000 ஆகவும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கு ரூ.80,000-லிருந்து 1,20,000 ஆகவும் 1998-99 ஆம் ஆண்டில் உயர்த்தி வழங்கப்பட்டது.

இத்திட்டத் தொடக்கத்திலிருந்து இதுவரை 46,218 வீடுகள் கட்டி முடிக்க ரூ.200.23 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் நிதி ஆண்டில் மட்டும் குறைந்த வருவாய் பிரிவில் 4,842 வீடுகளும், நடுத்தர வருவாய் பிரிவில் 2,189 வீடுகளும், கட்ட முறையே ரூ.26.23 கோடி மற்றும் ரூ.18.01 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**3.4.3 நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம்**

1998-99 ஆம் நிதி ஆண்டில் 20,610 நகர்ப்புற பயனீட்டாளர்களுக்குப் புதிய வீடுகள் கட்ட ரூ.309.31 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. மாநில கூட்டுறவு வீட்டு வசதி இணையம் இந்த ஆண்டில் பணியிலும், நிதியுதவியிலும் குறிக்கோளை மிஞ்சியுள்ளது. நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மூலம் நகர்ப்புறங்களில் இதுவரை 2,47,092 வீடுகள் கட்ட ரூ.1,611.54 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

நகர்ப்புறங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் வீட்டு வசதி கூட்டுறவு சங்கங்கள் மூலம், புதிய வீடுகள் கட்ட வழங்கப்பட்டு வந்த அதிகபட்ச கடனான ரூ.2 லட்சத்தை, ரூ.4 இலட்சமாகவும், இதே போன்று மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் புதிய வீடு கட்ட அல்லது கட்டப்பட்ட தளவீடு மற்றும் வீட்டினை விலைக்கு வாங்க வழங்கப்பட்ட கடன் ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 லட்சமாகவும், 1998-99 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 23]

**3.4.4 பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம்**

சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் பொருட்டு, சமத்துவபுரம் திட்டத்திற்கு, வீட்டின் கட்டுமானச் செலவு, அரசு உதவித் தொகையைக் காட்டிலும் அதிகரிக்கின்ற நேர்வுகளுக்கு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் தொடக்கநிலை கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மூலம் கடனுதவி அளித்து வருகிறது. 1998-99 ஆம் நிதியாண்டில் 1,794 வீடுகள் கட்ட ரூ.1.59 கோடி கடனுதவி அளிக்கப்பட்டது.

**3.4.5 வீடுகள் புதுப்பித்தல் மற்றும் விரிவாக்கம்**

பழைய வீடுகளை புதுப்பிக்கவும் மற்றும் விரிவாக்கம் செய்யவும், ஹட்கோ நிறுவன நிதியுதவியுடன் ஒரு வீட்டிற்கு அதிகபட்சமாக ரூ.50,000 வீதம் கடனுதவி வழங்கும் புதிய திட்டம், 1998-99 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முன்னோடி திட்டத்தின் மூலம் 1998-99 ஆம் நிதி ஆண்டில் ரூ.10 கோடி கடன் வழங்கப்பட்டது.

**3.4.6 நகர்ப்புற நலிவுற்றோருக்கான திட்டம்**

நகரப்பகுதி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் பொருளாதாரத்தில் நலிவுற்ற 12,000 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள ரூ.30 கோடி கடன் வழங்கப்பட்டது.

## 3.5 1999-2000ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

1. பொருளாதாரத்தில் நலிவுற்ற ஊரகப் பகுதி மக்களது வீட்டு வசதி தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு 1999-2000 ஆம் நிதி ஆண்டில் 50,000 புதிய பயனீட்டாளர்கள் பயனடையும் வகையில் ரூ.70.33 கோடி நிதியுதவி வழங்கப்படும், இத்திட்டம் ஹட்கோ நிறுவனக் கடன், அரசு உதவித் தொகை மற்றும் பயனீட்டாளர்களது பங்களிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இதில் அரசு மானியம் மட்டும் ரூ.10 கோடி ஆகும்.

2. 1999-2000ஆம் ஆண்டு முதல் கிராமப்புறங்களில் உள்ள குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான கடனுதவியை ரூ.70,000-லிருந்து ரூ.1,00,000 ஆகவும் மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான கடனுதவியை ரூ.1,20,000-லிருந்து ரூ.2,00,000 என்ற அளவில் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

3. இதன் அடிப்படையில் குறைந்த வருவாய் பிரிவினருக்கு 1999-2000ஆம் ஆண்டில் 7,000 வீடுகள் கட்டுவதற்கும், நடுத்தர வருவாய் பிரிவினருக்கு 5,000 வீடுகள் கட்டுவதற்கும் கடனுதவி அளித்து, கிராமப்புறங்களில் வீட்டு வசதியைப் பெருக்கும் நோக்கோடு இந்த ஆண்டுக்கு ரூ.170 கோடி கடன் வழங்கப்படும்.

4. பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டத்தில் கட்டப்படும் வீடுகளுக்கு 1999-2000ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.15 கோடி வழங்கப்படும்.

5. வீடுகள் விரிவாக்கம் மற்றும் புதுப்பிக்கும் பணிகளுக்கு 1999-2000 ஆம் நிதி ஆண்டில் 10,000 வீடுகளுக்கு வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ.50 கோடி கடனுதவி அளிக்கப்படும்.

6. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், நகர்ப்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 1999-2000 ஆம் ஆண்டில் 20,000 வீடுகள் கட்ட ரூ.350 கோடி கடனுதவி அளிக்கப்படும்.

7. நகர்ப்புறங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் மக்கள் குடியேற்றத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு 1999-2000 ஆம் ஆண்டு பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு 12,000 வீடுகள் கட்ட, ஒரு வீட்டிற்கு ரூ.25,000 வீதம் மொத்தம் ரூ.30 கோடி கடன் வழங்கப்படும்.

8. ஈரோடு மற்றும் வேலூர் மாவட்டங்களில் பீடித் தொழிலாளர்களுக்கு 678 புதிய வீடுகள் கட்டித்தர, ஒரு வீட்டிற்கு ஹட்கோ நிறுவனக் கடன் ரூ.13,000-மும் அரசு உதவித் தொகை ரூ. 9,000-மும் வழங்கப்படும். 1999-2000ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ.1.49 கோடி நிதியை அரசு ஒதுக்கியுள்ளது.

9. இவ்வாறு வீட்டு வசதி தேவையினை வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஈடு செய்யும் பொருட்டு, 1999-2000 ஆம் ஆண்டில் வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளுக்கான முதலீட்டுத் தொகை ரூ.138.33 கோடியிலிருந்து ரூ.686.82 கோடியாக உயர்த்தி 1,04,678 புதிய வீடுகள் கட்ட நிதியுதவி அளிக்கப்படும்.

**4. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்**

4.1 ஒவ்வொரு மாநகரம் மற்றும் நகரங்களில் குடிசைப் பகுதிகள் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தினை ஏற்படுத்துகின்றன. நகருக்கு அருகிலுள்ள கிராமங்களிலிருந்து வேலைத்திறனற்ற மக்கள்



வேலைவாய்ப்பிற்காக நகரங்களுக்கு குடிபெயர்தலால் குடிசைப் பகுதிகள் உருவாகின்றன. வேலைத்திறனின்மை மற்றும் போதுமான வருமானம் இல்லாத காரணத்தால் தாங்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகிலேயே இம்மக்கள் வெற்று மனைகளாக உள்ள அரசு புறம்போக்கு மற்றும் தனியார் நிலங்களை ஆக்கிரமித்து குடிசைகள் அமைத்து வாழ்ந்து வருகின்றனர். இக்குடியமைப்புகளில் கழிவு நீர் வெளியேற்றும் வசதியின்மையால் சுகாதாரமற்ற சூழ்நிலையில் வாழ்கின்றனர். பின்னர் இயற்கையான மக்கட்பெருக்கம் மற்றும் கிரமப்புறங்களிலிருந்து தொடர்ந்து குடிபெயர்தல் காரணமாக குடிசைப் பகுதிகள் மேன்மேலும் பரவுகின்றன. ஒரு சிறிய நிலப் பகுதியில் அதிக குடும்பங்கள் வாழ்வதன் காரணமாக பெரும்பான்மையான குடிசைப் பகுதிகள் மிகவும் மக்கள் நெருக்கத்தைக் கொண்டுள்ளன. இயற்கையின் மாறுபட்ட தட்பவெப்ப நிலை, தீ விபத்து மற்றும் வெள்ளம் போன்றவைகளிலிருந்து இக்குடிசைவாழ் குடும்பங்களைப் பாதுகாக்க போதிய அடிப்படை வசதிகளுடன்கூடிய குடியிருப்புகளில் இவர்கள் குடியமர்த்தப்பட வேண்டும். இக்குடியமைப்புத் திட்டத்தினை நிறைவேற்ற தேவைப்படும் அதிக செலவினம் மற்றும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய பராமரிப்புப் பணிகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இக்குடிசைப் பகுதிகளுக்கு குறைந்த காலகட்டத்தில் குறைந்த செலவினத்தில் அதிக குடும்பங்கள் பயன்பெறும் வகையில் தேவையான அடிப்படை வசதிகள் ஒரே தருணத்தில் ஏற்படுத்தித் தருவதும் குடிசைப் பகுதிகள் பிரச்சினைக்கு ஒரு உடனடித் தீர்வாக கருதப்படுகிறது.

ஆட்சேபகரமான பகுதிகளில் குடிசை மாற்றுத் திட்டமோ அல்லது குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டமோ மேற்கொள்ள இயலாததன் காரணமாக ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களை நகருக்கருகே அடிப்படை வசதிகளுடன்கூடிய மாற்றிடங்களில் குடியமர்த்துதல் மிகவும் அவசியமாகிறது. சென்னை, வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வடிகால் திட்டத்தின்கீழ் கூவம் அடையாறு, பக்கிங்காம் கால்வாய் மற்றும் ஓட்டேரி நல்லா கரைகளில் வாழும் குடிசை வாழ் மக்களை அவ்வப்போது ஏற்படும் வெள்ள அபாயத்திலிருந்து பாதுகாக்கவும், நதிகள் மாசுபடுவதைத் தவிர்க்கவும் இக்குடும்பங்கள் மாற்றிடங்களில் குடியமர்த்தப்பட வேண்டியுள்ளன.

குடிசைப் பகுதிகள் நகர ஏழ்மையின் ஒரு வெளிப்பாடாகும். வேலைவாய்ப்பு பயிற்சி, கல்வி, நலவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத் திட்டங்களின் மூலம் வருமானத்தை அதிகரித்து குடிசைவாழ் மக்களின் சமூக நிலையினை உயர்த்தி அவர்களை சுயசார்புள்ளவர்களாக

[1999 ஏப்ரல் 23

மாற்றுவது குடிசைப் பகுதி மாற்று, மேம்பாடு மற்றும் மாற்றிடங்களில் குடியமர்த்துதல் போன்ற திட்டங்களின் உன்னதக் கொள்கையாகும். உரிய காலகட்டத்தில் இதற்கான நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லையெனில் குடிசைப் பகுதிவாழ் மக்களால் ஏற்படும் பிரச்சினைகள் பெருமளவில் வளர்ந்து நகர மேம்பாடு பெரிதும் பாதிக்கப்படும். இந்நிலையில் குடிசைப் பகுதிகளின் பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசின் பங்கு முக்கியத்துவம் பெறுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, குடிசைப் பகுதி மாற்று மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொண்டு இம்மக்களின் அவலநிலையினைப் போக்க, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1970 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

**4.2. குறிக்கோள்கள்:**

1. நகரப் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்படும் மற்றும் அபாயகரமான பகுதிகளில் வாழ்ந்து வரும் குடிசை வாழ் குடும்பங்களை தூய்மையான சுற்றுப்புறச் சூழலுடன் நகருக்கு அருகில் அடிப்படை வசதிகளுடன்கூடிய இடத்தில் மாற்றுக் குடியமர்த்துதல்;

2. தனியார் குடிசைப் பகுதிகளில் வாழ்ந்துவரும் வாடகைதாரர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல்;

3. அனைத்து குடிசைப் பகுதிகளுக்கும் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சாலை, மழைநீர் கால்வாய், பொதுக் கழிப்பிடங்கள், கழிவு நீர் வெளியேற்றும் வசதி மற்றும் தெரு மின் விளக்குகள் அமைத்தல்;

4. குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதுடன் அவர்களின் நிலையினை மேம்படுத்துதல்.

**4.3 குடிசைப் பகுதிகள் பற்றிய கொள்கைகள்**

1. குடிசைப் பகுதிகளில் ஏற்படும் பிரச்சினைகளை சமாளிக்க வேண்டிய அவசரத் தேவையினையும், வரையறுக்கப்பட்டுள்ள நிதி ஆதாரத்தினையும் கருத்திற்கொண்டு குடிசை மாற்று மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டு பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்;

2. குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஓர் உன்னதமான வீட்டினை அவர்கள் செலுத்தும் திறனுக்கேற்ப அமைத்தல்;



1999 ஏப்ரல் 23]

3. குடிசைப் பகுதி வாழ் மக்களை குடிசைப் பகுதி மாற்று மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டு பணிகளில் ஈடுபடுத்துதல்:

4. கள மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கேற்றவாறு அமைந்து உள்ள குடிசைப் பகுதிகளைத் தேர்வு செய்து அவற்றில் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் அமைத்தல்.

5. நகரப் பகுதிகளில் சுகாதாரமற்ற நெரிசலான இடங்களில் அமைந்துள்ள குடிசைப் பகுதிகளை மாற்றி அவ்விடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்;

6. மாடிக் குடியிருப்புகள் அல்லது கள மேம்பாட்டுப் பணிகள் அமைக்க இயலாத இடங்களில் மேம்படுத்தப்பட்ட மனைகள் அமைத்து மாற்றுக் குடியமர்த்தும் முறையினைப் பின்பற்றுதல். இந்த அணுகுமுறையின்கீழ் ஏற்படும் மேம்பாட்டுச் செலவினம் குடிசைவாழ் மக்கள் செலுத்தும் திறனுக்கேற்ப நிர்ணயிக்கப்படும்.

**4.3.1. மேற்கண்ட கொள்கைகளைத் திட்டங்களாக வடிவமைக்க தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கீழ்க்காணும் கோட்பாடுகளை கடைபிடித்து வருகிறது.**

1. நகரங்களில் நெரிசல் மிக்க சுகாதாரக் குறைவான பகுதிகளில் குடிசைகளில் வாழும் குடும்பங்களை அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து அவ்விடங்களிலேயே குடியமர்த்துதல்.

2. குடிசைப் பகுதிகள் குறிப்பிடத்தக்க அடிப்படை வசதிகளுடன் மேம்படுத்தப்படுவதுடன் நில உரிமம் வழங்கப்பட்டு அப்பகுதிகள் நல்ல உறைவிடமாக அமைக்கப்படும்.

3. நகரங்களில் மேம்பாட்டுப் பணிகளுக்குரிய இடங்களான, சென்னைத் துரித போக்குவரத்துத் திட்டத் தடங்கள், சாலையின் மருங்குகள், நடைபாதைகள், நீர் நிலைகள் போன்ற இடங்களில் ஆக்கிரமித்துள்ள குடிசைவாழ் குடும்பங்களை நகருக்கு அருகில் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் மாற்றி குடியமர்த்துதல்

அரசின் நிர்வாக இயந்திரமாகச் செயல்படும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் குடிசைப்பகுதிகளுக்கான கொள்கைகளை நிறைவேற்றி வருகிறது இவ்வாரியம். ஒரு தலைவர், ஒரு நிர்வாக இயக்குநர் மற்றும் பல்வேறு அரசுத் துறையினைச் சார்ந்த 10 உறுப்பினர்களைக் கொண்டு நிர்வகிக்கப்படுகிறது. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் நோக்குடன் கீழே கூறப்பட்டுள்ள திட்டங்களை இவ்வாரியம் செயல்படுத்தி வருகிறது :

[1999 ஏப்ரல் 23

**4.3.2 குடிசைப்பகுதி மாற்றுத் திட்டம்**

சென்னை நகரில் மொத்த மக்கட் தொகையில் 35 சதவீதத்திற்கு மேலாக குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் 50 சதவீதத்தினர் நெரிசலான குடிசைப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதிகள் தேவையான குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் இன்றி அமைந்திருப்பதுடன், ஒரு குடிசை இரண்டு அல்லது மூன்று குடும்பங்களால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

இதுபோன்ற குடியமைப்புகள் அடிக்கடி தீ விபத்துகள் மற்றும் பருவகால வெள்ளப் பெருக்கிற்குள்ளாகின்றன. இந்நெரிசலான குடிசைப் பகுதிகளில் கள மேம்பாட்டுப் பணிகள் அமைக்க இயலவில்லை. எனவே, நெரிசலான பகுதிகளில் வாழும் இக்குடும்பங்களை அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து மாற்றி குடியமர்த்த தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது.

போதிய அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிவு நீரகற்றும் வசதி, சாலைகள் மற்றும் தெரு மின் விளக்குகள் அமைத்தல் ஆகியவற்றுடன்கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல் குடிசை மாற்றுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிறது. தகுதி வாய்ந்த குடிசை வாழ் குடும்பங்கள் கணக்கெடுக்கப்பட்டு புகைப்படத்துடன்கூடிய அடையாள அட்டை வழங்கப்படுவதுடன் கட்டுமான காலத்தில் அவர்கள் அருகில் தற்காலிகமான குடிசைகள் அமைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். இதன்மூலம் கிடைக்கும் வெற்று நிலத்தில் போதிய அடிப்படை வசதிகளுடன்கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்படுகின்றன. இவ்வாறு கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் முன்பு அப்பகுதியில் உண்மையாக வாழ்ந்த குடிசைவாழ் மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் அனைத்து குடும்பங்களுக்கும் தேவையான அளவில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 13 விழுக்காடு வட்டியுடன் 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் கடனாக ஹட்கோ நிறுவனத்திடம் இருந்து திட்ட மதிப்பீட்டில் 70 விழுக்காடு நிதி உதவி பெறப்படுகிறது. மீதமுள்ள 30 விழுக்காடு தொகை தமிழக அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. தற்போது ஒரு குடியிருப்பிற்கான கட்டுமான செலவு ரூபாய் ஒரு இலட்சமாகும். இக்குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு முடிந்தவுடன், தற்காலிகமாக குடிசைவாழ் மக்களால்



1999 ஏப்ரல் 23]

அமைக்கப்பட்ட குடிசைகள் அகற்றப்படுவது குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் உறுதி செய்யப்படுகிறது. அடுக்குமாடிக் குடியிருப்புகள் உரிய ஆவண ஆதாரங்கள் கொண்டுள்ள குடிசைவாழ் குடும்பங்களுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ரூ.98.50 கோடி செலவில் 66,014 அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கீழே கூறப்பட்டுள்ள மாநகரங்களிலும் மற்றும் நகரப் பகுதிகளிலும் கட்டியுள்ளது.

| வ.எண் | மாநகர்/ நகரின் பெயர் | கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சென்னை | 59590 |
| 2. | ஈரோடு | 1882 |
| 3. | கும்பகோணம் | 206 |
| 4. | திருச்சி | 927 |
| 5. | மதுரை | 604 |
| 6. | சேலம் | 784 |
| 7. | கோயம்புத்தூர் | 750 |
| 8. | கரூர் | 256 |
| 9. | சங்கரன்கோவில் | 48 |
| 10. | தூத்துக்குடி | 160 |
| 11. | திருநெல்வேலி | 532 |
| 12. | நாகப்பட்டினம் | 117 |
| 13. | தஞ்சாவூர் | 50 |
| 14. | திருப்பூர் | 108 |
| | மொத்தம் | **66014** |

**4.4 நகர குடிசைப் பகுதிகளில் சுற்றுப்புறங்களை மேம்படுத்துதல்**

தமிழ்நாடு அரசு சுற்றுப்புறச் சூழ்நிலையை உரிய கவனத்துடன் வெகுவாக மேம்படுத்துவதை ஓர் உறுதியான கொள்கையாகக் கொண்டுள்ளது. இவை ஒன்றோடொன்று இணைந்து செயல்படுவதற்கு மட்டுமின்றி தனியே அமையவும் இயலாது. இதனைக் கருத்தில் கொண்டு, சுகாதாரமற்ற குடிசைப் பகுதிகளின் பொதுவான சுற்றுப்புற

[1999 ஏப்ரல் 23

சூழ்நிலையினை மேம்படுத்த தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் உத்வேகத்துடன் செயல்படுகிறது. ஓர் இடத்தினை ஒரு நல்ல உறைவிடமாக மாற்ற, உள்ளது உள்ளபடி நிலையில் ஒரு குடும்பத்திற்கு சராசரி செலவினமாக ரூ.2000 வீதம் கீழ்க்காணும் நிலைகளில் அடிப்படை வசதிகள் அமைக்க ஒரு சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

1.10 குடும்பங்களுக்கு ஒரு குளியலறை

2.10 குடும்பங்களுக்கு ஒரு கழிப்பறை

3.20 குடும்பங்களுக்கு ஒரு குடிநீர் குழாய்

4.40 மீட்டர் சாலைக்கு ஒரு தெரு மின் விளக்கு

அரசால் வரவு செலவுத் திட்ட அறிக்கையில் ஒவ்வொரு ஆண்டும், அளிக்கப்படும் நிதியுதவியினைக்கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நகர குடிசைப் பகுதிவாழ் குடும்பங்கள் அனைவருக்கும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தேவையான அடிப்படை வசதிகளை அமைத்தல் இத்திட்டத்தின் நோக்கமாகும். 2,27,000 குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு மேம்பாட்டுப் பணிகள் ரூ.29.34 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

### 4.5 சென்னை மாநகரில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைவாழ் குடும்பங்களை மாற்றிடங்களில் குடியமர்த்துதல்

நாட்டின் நான்காவது மக்கட்தொகை பெருக்கம் நிறைந்த நகரம் சென்னை மாநகரமாகும். நீர் நிலைகளின் கரைகளிலுள்ள வெற்று மனைகள், சாலையின் மருங்குகள் மற்றும் சென்னை பெருநகர் துரித போக்குவரத்துத் திட்டத் தடங்கள் போன்ற இடங்கள் சென்னை நகருக்கு குடிபெயரும் ஏழை குடும்பங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற ஆட்சேபகரமான பகுதிகளில் 69,000 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவ்வுறைவிடங்கள் குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் ஏதுமின்றி, அடிக்கடி ஏற்படும் தீ விபத்துக்களுக்கும் மற்றும் ஆண்டுதோறும் ஏற்படும் வெள்ளத்தின் சீற்றத்திற்கும் உள்ளாகின்றன. இக்குடிசைப் பகுதிகள் அமைந்துள்ள நிலம் மீளப் பெறப்பட்டு நில உரிமைத் துறையின் வருங்கால மேம்பாட்டுப் பணிகளுக்காக நடவடிக்கை மேற்கொள்ள ஒப்படைப்பு செய்யும் பொருட்டு மிகவும் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைவாழ் குடும்பங்களை நகர்ப்புறங்களுக்கு அருகில் மாற்றி குடியமர்த்த ஒரு சிறப்பு திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 23]

நியாயவிலைக் கடை, பால் வழங்கும் நிலையம், சுகாதார நிலையம், பேருந்து நிலையம், பள்ளிகள், சமுதாயக் கூடம், காவல் நிலையம், தீ அணைப்பு நிலையம், வணிக வளாகம், பூங்காக்கள் போன்ற பொது வசதிகளுடன்கூடிய பெருமளவிலான ஒரு வீட்டு வசதி திட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் வெள்ள நீர் தேங்காமலிருக்க திட்டக்களப்பகுதி, 2 மீட்டர் உயரத்திற்கு மண்ணிட்டு நிரப்பப்படுகிறது. சாலைகள், தெரு மின் விளக்குகள், குடிநீர் வசதி, கழிவு நீரகற்றும் அமைப்புகள், இயற்கை வனப்புடைய நிலம் மற்றும் மரக்கன்றுகள் நடுதல் போன்ற தேவையான அடிப்படை வசதிகள் அடங்கிய 150 சதுர அடி கட்டட பரப்பு கொண்ட, இரண்டு அடுக்கு கொண்ட அடிப்படை வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. திட்டப் பணிகள் முடிவுற்றவுடன், சென்னை மாநகரில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைவாழ் குடும்பங்கள் இக்குடியிருப்புகளில் மாற்றி குடியமர்த்தப்படுவர். இத்திட்டத்திற்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் ரூ. 8.91 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### 4.6 வெள்ளக் குறைப்புத் திட்டப் பணிகளின்கீழ் நதிக் கரைகளில் வாழும் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்தல்

சென்னை மாநகரின் குடியிருப்புப் பகுதிகளில் வெள்ள நீர் தேங்குவதைத் தடுக்கவும் நகரிலுள்ள மழைநீர் வடிகால்களில் தூர் வாருதல் மற்றும் அவைகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்காக அரசு ரூ.300.00 கோடி செலவில் பெருமளவிலான ஒரு திட்டத்திற்கு அரசாணை நிலை எண் 321, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 12-8-1998 இல் ஒப்புதல் அளித்துள்ளது. இப்பெருமளவிலான திட்டத்தின் ஒரு பகுதியாக, அடையாறு, கூவம், நகரில் செல்லும் ஆறுகளான ஓட்டேரி கால்வாய் மற்றும் பக்கிங்காம் கால்வாய்களில் தூர் வாரும் பணிகளை நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இத் தூர்வாரும் பணிகளுக்கு இடையூறாக உள்ள குடிசைவாழ் குடும்பங்கள் உடனடியாக அப்புறப்படுத்தப்படின் ஏற்படும் விளைவுகளை கருத்தில்கொண்டு அவர்களை நகருக்கருகில் மாற்றி குடியமர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இக்குடும்பங்களை மாற்றி குடியமர்த்தும் பொருட்டு 3,000 குடியிருப்புகள் ரூ.37.50 கோடி செலவில் கட்ட தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது. இம் மாற்றுக் குடியமர்த்தும் திட்டத்திற்குத் தேவையான வீடுகள் ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதி 2-ன்கீழ் கட்டப்படும்.

[1999 ஏப்ரல் 23

### 4.7 குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு கல்நார் தகடுகளாலான கூரைகள் அமைத்தல்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் நிறைவேற்றப்படும் அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் பயன்கள் குடிசைப் பகுதிவாழ் மக்கள் அனைவருக்கும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் நிதிப் பற்றாக்குறை காரணமாக சென்றடைய இயலவில்லை. சென்னை நகருக்கு குடிபெயரும் குடிசைப் பகுதி வாழ் மக்கள் தங்களுக்கென ஒரு நல்ல வீட்டினை அமைத்துக் கொள்ள இயலாததன் காரணமாக, அவர்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகில் குறைந்த செலவிலான அடிக்கடி தீ விபத்துக்குள்ளாகக் கூடிய கட்டுமானப் பொருட்களைக் கொண்டு அபாயகரமான இடங்களில் நிரந்தரமற்ற வீடுகளை அமைத்தும் மாறுபட்ட தட்பவெப்ப சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டும் வாழ்ந்து வருகின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம் மற்றும் கோவை ஆகிய மாநகரங்களில் வாழும் குடிசைவாழ் குடும்பங்களுக்கு கல்நார் தகடுகளாலான கூரைகள் அமைப்பதற்கு ஏற்படும் செலவினை அரசு ஏற்கும் என அறிவித்துள்ளார்கள். 1998-99ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 7,936 குடும்பங்களுக்கு ரூ.5.00 கோடி செலவில் கல்நார் தகடுகளாலான கூரைகள் அமைக்கும் இத்திட்டப் பணிகளை வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது. இந்தச் செலவினம் அரசின் வரவு-செலவுத் திட்டத்திலிருந்து பெறப்பட்டது.

### 4.8 சென்னை மாநகரில் அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதிகளில் கழிவு நீரகற்றும் அமைப்புகளை மேம்படுத்துதல்

சென்னை நகரில் முன்னர் கட்டப்பட்ட 12 அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதிகளிலுள்ள கழிவு நீரகற்றும் செயல்முறையினை முறைப்படுத்தவும், திட்டப் பகுதிகளில் தூய்மையினை மேம்படுத்தவும், இத்திட்டப் பகுதிகளிலுள்ள கழிவு நீரகற்றும் அமைப்புகளை மாநகர கழிவு நீர் அமைப்புகளுடன் இறுதியாக, அகற்ற இணைக்கவும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் திட்டமிடப்பட்டுள்ளது. பகுதி 2, திட்டத்தின்கீழ் 1998-99ஆம் ஆண்டு இத்திட்டப் பணிகளுக்காக ரூ.70 இலட்சம் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் நடப்பாண்டில் ரூ.70 இலட்சம் செலவிடப்பட்டு திட்டப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.



1999 ஏப்ரல் 23]

### 4.9 சமுதாய வளர்ச்சிப் பணிகள்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தில் சமுதாய வளர்ச்சிப் பிரிவு கீழ்க்கண்ட பணிகளை நிறைவேற்றி வருகின்றது.

1. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டம்
2. சமுதாய வளர்ச்சிக்கு மக்கள் பங்கேற்புடன் திட்டமிடுதல்.
3. இங்கிலாந்து நாட்டின் வான்வழி போக்குவரத்து நிறுவனத்தின் நிதியுதவியுடன் குடிசைப் பகுதிகளில் குடிநீர் மூலமாகப் பரவும் வயிற்றுப் போக்கினைக் கட்டுப்படுத்துதல் மற்றும் சுகாதாரம் பேணுதல்.
4. குழந்தை தொழில்முறை அகற்றும் திட்டம்.
5. உடல்நலம் மற்றும் சுகாதாரம் குறித்த திட்டம்.

### 4.10 வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டம்:

முறையான மற்றும் முறைசாரா பயிற்சிகள் மூலமாக குடிசைப் பகுதிகளில் வாழும் இளைஞர்களின் திறனை மேம்படுத்துதல் இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும். இப்பயிற்சிகள் அரசு, அரசு சாரா மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் இதுவரையில் சுமார் 10,000 இளைஞர்கள் 40 விதமான பயிற்சிகளில் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தினை கணிப்பாய்வு நடத்தியதில் பயிற்றுவிக்கப்பட்ட 70 சதவீதத்தினர் வேலைவாய்ப்பு பெற்று பயனடைந்துள்ளதை வெளிப்படுத்துகிறது.

### 4.11 1999—2000 ஆண்டிற்கான திட்டங்கள்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1999-2000ஆம் ஆண்டில் கீழே கூறப்பட்டுள்ள திட்டங்களை நிறைவேற்ற திட்டமிட்டுள்ளது:

*1. நகர குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள்*

சென்னையிலும் ஏனைய நகரங்களிலும் குடிசைகளில் வாழும் 30,000 குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ.6.00 கோடி செலவில் அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு மின் விளக்குகள், பொதுக் குடிநீர் குழாய்கள் போன்றவைகள் செய்து கொடுக்கப்படும்.

[1999 ஏப்ரல் 23

**2. சென்னை மாநகரில் நதி மற்றும் கால்வாய் பகுதிகளில் வாழும் குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களை மாற்றிடங்களில் குடியமர்த்துதல்**

ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களை மாற்றிடங்களில் குடியமர்த்தும் திட்டத்தின்கீழ் மைய அரசின் பத்தாவது நிதிக் குழுவின் சிறப்பு மானிய உதவியுடன், சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 3,000 வீடுகள் கட்ட பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. சாலைகள், குடிநீர், கழிவு நீரகற்றுதல், போன்ற இதர பொது வசதிகளைக் கொண்டு இத்திட்டம் ஒரு சுய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் திட்டமாக அமைவதுடன், இத்திட்டம் வருங்காலத்தில் நிறைவேற்றப்படும் மாற்றுக் குடியமர்த்தும் திட்டத்திற்கு முன்னோடி திட்டமாக விளங்கும். இதர துறைகளான சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், போக்குவரத்துத் துறை மற்றும் காவல் துறையின் ஒத்துழைப்புடன் இத்திட்டத்தினை நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. பின்னர், கல்வி, நலவாழ்வு மற்றும் சமூக நலத் துறைகளையும் இணைத்து செயல்படுத்தி திட்டத்தினை முழுமைப்படுத்தவும் நிரந்தர திட்டமாக செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 1999-2000ஆம் நிதியாண்டில் ரூ.32.30 கோடி செலவில் 3,500 வீடுகள் கட்டி முடிக்கப்படும்.

**3. நதிக் கரைகளில் வாழும் குடிசைப் பகுதி குடும்பங்களுக்கு வீடுகள் கட்டுதல்**

சென்னை மாநகரின் குடியிருப்புப் பகுதிகளில் வெள்ள நீர் தேங்குவதைத் தடுக்கவும் நகரிலுள்ள மழை நீர் வடிகால்களில் தூர் வாருதல் மற்றும் அவைகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்காக அரசு ரூ.300.00 கோடி செலவில் பெருமளவிலான திட்டத்திற்கு அரசாணை எண் 321 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 12-08-98இல் ஒப்புதல் அளித்துள்ளது. இப்பெருமளவிலான திட்டத்தின் ஒரு பகுதியாக, நகரில் செல்லும் ஆறுகளான அடையாறு, கூவம், ஓட்டேரி கால்வாய் மற்றும் பக்கிங்காம் கால்வாய்களில் தூர் வாரும் பணிகளை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நீர் நிலைகளின் கரைகளில் அமைந்துள்ள குடும்பங்களை மாற்றிக் குடியமர்த்தும் பொருட்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 3,000 வீடுகள் கட்டவும் ரூ.37.50 கோடி செலவிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 23]

**4. குடிசைப் பகுதிவாழ் மக்களுக்கு கல்நார் தகடுகளாலான கூரைகள் அமைத்தல்**

சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் சேலம் மாநகரங்களில் 50,025 குடும்பங்கள் ஆட்சேபணை இல்லாத இடங்களில் குடிசைகளில் வசித்து வருகின்றன. சென்ற ஆண்டு 7,936 குடும்பங்களுக்கு கல்நார் தகடுகளான கூரைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள ஆட்சேபணை இல்லாத பகுதிகளில் வாழும் 42,089 குடும்பங்களுக்கு ரூ.52.60 கோடி செலவில் தீப்பற்றாத கல்நார் தகடுகளாலான கூரை, சுவர் மற்றும் கதவுடன் கூடிய வீடுகள் கட்டப்படும். இத்தகைய வீடுகள் அடுத்து வரும் இரண்டாண்டுகளில் அமைத்துத் தரப்படும். இத்திட்டத்தின்கீழ் 22,000 குடும்பங்களுக்கு ரூ.27.50 கோடி செலவில், இந்த நிதியாண்டில் இத்தகைய வீடுகள் கட்டி முடிக்கப்படும். இத்திட்டப் பணிகளுக்கான செலவினம் அரசால் வழங்கப்படும்.

**5. கழிவு நீரகற்று அமைப்புகளை மேம்படுத்துதல்**

அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளிலுள்ள கழிவு நீரகற்று அமைப்புகளை முறைப்படுத்தும் பொருட்டும், திட்டப் பகுதிகளில் கழிவு நீர் வழிந்து செல்வதைத் தவிர்க்கவும், இதன் காரணமாக நதி நீர் மாசுபடுவதைக் கட்டுப்படுத்தவும், திட்டப் பகுதிகளிலுள்ள கழிவு நீரகற்றும் அமைப்புகளை பகுதி 2 திட்டத்தின்கீழ் ரூ.75.00 இலட்சம் செலவில் 4 அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**6. சமுதாய வளர்ச்சிப் பணிகள்**

1999-2000 ஆண்டுகளில் சென்னை நகரில் குடிசைப் பகுதிகளில் வாழும் 250 இளைஞர்களுக்கு செவிலியர் உதவியாளர், கணினி உதவியாளர், வீட்டு வேலை செய்வோர் மற்றும் சமையல் கலை உதவியாளர்கள், ஆய்வக உதவியாளர்கள், மின் வினைஞர் போன்ற தொழில்நுட்பத் துறைகளில் ரூ.3.00 இலட்சம் செலவில் பயிற்சிகள் அமைக்கப்படும்.

[1999 ஏப்ரல் 23

**5. ஊரக வீட்டு வசதிக் கழகம்**

***5.1*** ஊரகப் பகுதியில் வீட்டு வசதிகளை மேம்படுத்தி, வளர்ச்சி பெறச் செய்யும் நோக்குடன் ஊரக வீட்டு வசதிக் கழகம் என்ற தனி அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இதன் பதிவு அலுவலகம் சென்னை நகரில் இயங்கி வருகிறது. இக்கழகம் 1956 ஆம் ஆண்டு கம்பெனிச் சட்டப் பிரிவு 25 இன் கீழ் 22-01-1999 அன்று பதிவு செய்யப்பட்டது.

***5.2 நோக்கங்கள்***

1. தமிழகத்தில் ஊரகப் பகுதிகளில் வீட்டு வசதி அபிவிருத்தியைப் பெருக்கி குறைந்த செலவில் வீடுகளைக் கட்டும் தொழில்நுட்பத்தினை, கட்டட மையம் மற்றும் ஏனைய தொழில்நுட்ப மையங்களின் மூலம் அறிமுகப்படுத்துதல்.

2. ஊரகப் பகுதி மக்களுக்கு வீடுகட்ட/வீடு வாங்க / மாற்றி அமைக்க நிதி நிறுவனங்களின் மூலம் கடன் ஏற்பாடு செய்து கொடுத்தல்.

3. கட்டுமானப் பொருட்களின் தரத்தினை உயர்த்தவும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மலிவு விலையில் கட்டடப் பொருட்களைத் தயார் செய்திடவும் மற்றும் கட்டுமானப் பொருட்களின் அளவுகளை நிர்ணயம் செய்ய உதவுதல்.

4. ஊரக வீட்டு வசதியை மேம்படுத்த அதனுடன் தொடர்புடைய துறைகளுக்கு உறுதுணையாக இருத்தல், சமூக நிர்வாகக் குழுக்கள், கட்டட மையங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் ஆகியவைகளை அமைத்துத் திறம்படச் செயல்படவைத்தல்.

5. அரசு செயல்படுத்தும் வளர்ச்சித் திட்டங்கள், குறிப்பாக, வீட்டு வசதி மற்றும் சுற்றுப்புறச் சூழல் தொடர்புடைய திட்டங்களைக் குறைந்த செலவில் தரமவாய்ந்த வீடுகள் கட்ட தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல்.

6. மாவட்டங்களில் கட்டட மையங்களை நிறுவி, ஒருங்கிணைந்து அவற்றின் செயல்பாடுகளைத் கண்காணித்தல்.

7. ஊரகப் பகுதிகளில் வாழும் படித்த வேலையில்லா இளைஞர்களுக்கும் மற்றும் உடல் ஊனமுற்றோர்க்கும் ஏற்ற வகையில்



1999 ஏப்ரல் 23]

கட்டட மையத்தின் பயிற்சிப் பிரிவில் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படும். இதில் கட்டடம் கட்டுதல், கம்பி கட்டுதல், கலவை மற்றும் சிமெண்டைப் பயன்படுத்தி முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட நிலைகள், கதவுகள், ஜன்னல்கள், தண்ணீர்த் தொட்டிகள் போன்றவைகள் தயாரிக்க பயிற்சி அளிக்கப்படும்.

***5.3 1998-99 சாதனைகள்***

1. தமிழகத்தில் இயங்கிவரும் 33 கட்டட மையங்களிலுள்ள பயிற்சிப் பிரிவில் 18,156 ஊரக இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியின்போது தயாரிக்கப்பட்ட கட்டடப் பொருட்களின் மதிப்பு ரூ.626.47 இலட்சமாகும்.

2. அனைத்துக் கட்டட மையங்களின் மூலம் ரூ.52.506 கோடி மதிப்புள்ள கட்டுமானப் பணிகள் நடைபெற்றன.

***5.4. 1999-2000 திட்டங்கள்***

1. கழிஞ்சூர், திரூர், வேளச்சேரி மற்றும் திருவண்ணாமலையில் முறையே, 56,120,19 மற்றும் 58 முன்மாதிரி வீடுகளை உருவாக்குவதற்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு விண்ணப்பதாரர்களுக்கு நிதி வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

2. திருவண்ணாமலையில் இயங்கிவரும் கட்டட மையம், மாநில முன்மாதிரி கட்டட மையமாகத் தெரிவு செய்யப்பட்டு ரூ.35 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. அதோடு ஆண்டுதோறும் ஊரக இளைஞர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக ரூ.5 இலட்சம் நிதி உதவி ஒதுக்கப்படும்.

3. தேனி, திருவாரூர், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் புதிய கட்டட மையங்கள் நிறுவுதல். இந்த மூன்று மாவட்டங்களில் கட்டட மையங்களைத் தொடங்க ரூ.20 இலட்சம் ஹட்கோ நிறுவனம் வழங்கும்.

4. ஒவ்வொரு கட்டட மையத்திற்கும் ரூ.5 இலட்சம் செலவில் கட்டுமானப் பொருட்கள் தயாரிப்பதற்குகென எந்திரங்களும், உபகரணங்களும் வாங்குவதற்கென்று நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் கட்டட மையங்களை ஒருங்கிணைக்கவும், கண்காணிக்கவும் ஓர் உயர் அமைப்பாக தமிழ்நாடு ஊரக வீட்டு வசதிக் கழகம் செயல்படும்.

6. கட்டட மையத்தின் உற்பத்திப் பிரிவில் குறைந்த விலையில் தரமான துளையுள்ள கற்காரைக் கற்கள், இணைப்புக் கற்கள், பூயுனிகுலர், செல், கதவுகள், ஜன்னல்கள், நிலைகள் மற்றும் இரும்பு வலைகளுடன் சிமெண்ட் சேர்த்துச் செய்யப்பட்ட தண்ணீர்த் தொட்டிகள் போன்ற கட்டடப் பொருட்கள் தயாரித்து ஊரகப் பகுதியில் உருவாகும் வீடுகளுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

## 6. அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம்

6.1 வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் மாநில அரசு அலுவலர்களுக்கும் மற்றும் இந்திய அரசுப் பணி அலுவலர்களுக்கும் வீடு கட்டும் முன்பணக் கடன் வழங்கும்பொருட்டு முறையே ரூ.4.00 இலட்சம் மற்றும் ரூ.7.50 இலட்சம் உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டது. மேற்படி தொகை கீழ்க்கண்ட இனங்களுக்கு வழங்கப்படுகிறது:—

1. வீட்டுமனை வாங்கி வீடு கட்டுதல்,

2. கட்டுமானப் பணி,

3. தயார்நிலை வீடு (தனியார் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்),

4. விரிவாக்கம்,

5. மேம்படுத்துதல்.

ஏற்கெனவே கட்டப்பட்ட வீட்டினை விரிவாக்கவும் அல்லது மேம்படுத்தவும் ரூ.2.00 இலட்சம் அரசால் கடனாக வழங்கப்படுகிறது. 1998-99 நிதியாண்டில் தலைமைச் செயலக அலுவலர்கள். வீடுகட்டும் முன்பணம் விரைந்து பெற ஏதுவாக, வீடுகட்டும் முன்பணத்தை ஒப்பளிக்கும் முறை பரவலாக்கப்பட்டு உரிய துறைச் செயலாளருக்கு அதனை ஒப்பளிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

6.2 1999-2000ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் வீடு கட்ட முன்பணம் ரூ.82.75 கோடி கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :





| அரசு அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள். | ரூபாய் (கோடியில்) |
|---|---|
| இந்திய அரசுப் பணி அதிகாரிகள் | 2.88 |
| தலைமைச் செயலக ஊழியர்கள் | [illegible].15 |
| பிற அரசு ஊழியர்கள் | 7[illegible].22 |
| ஊராட்சி ஒன்றியப் பணி ஆசிரியர்கள் | 1.50 |
| மொத்தம் | **82.75** |

221195

## 6.3 வீட்டு வசதி மேம்பாட்டு நிறுவனம், இந்தியன் வங்கி வீட்டு வசதி நிறுவனம், கனரா வங்கி வீட்டு வசதி நிறுவனம்

அரசுக் கடன் உடனடியாகக் கிடைக்கப்பெறாத அலுவலர்களுக்கு மேலும் ஊக்கம் அளிக்கும் வகையில் அரசு வீட்டு வசதி மேம்பாட்டு நிறுவனம், கனரா வங்கி, இந்தியன் வங்கி ஆகிய நிதி நிறுவனங்களின் மூலமாக 5 விழுக்காடு வட்டி மானியச் சலுகையோடு நேரடியாக நிதி வழங்கும் திட்டத்தை அரசு கொண்டு வந்தது. இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் இந்நிறுவனங்கள் முறையே ரூ.15 கோடி/ரூ.5 கோடி/ரூ. 5 கோடி கடனுதவி வழங்கியுள்ளன. மேலும், ஹட்கோ நிதி நிறுவனத்திடம் இருந்து வீடுகட்டும் முன்பணமாக ரூ.100 கோடி பெறப்பட்டுள்ளது. இதனை அரசு அலுவலர்களுக்கு வழங்கும் பட்சத்தில், அவர்கள் இக்கடனுக்காகக் காத்திருக்கும் கால அளவு நிச்சயமாகக் குறையும் வாய்ப்புள்ளது.

## 7. இடவசதிக் கட்டுப்பாடு

7.1 குடியிருப்பு மற்றும் குடியிருப்பல்லாத கட்டடங்களை வாடகைக்கு விடுவதை முறைப்படுத்துவது, அவற்றிற்கான வாடகையினைக் கட்டுப்படுத்துவது, நியாயமற்ற முறையில் வீட்டு உரிமையாளர்களால் குடியிருப்பவர்கள் வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல் ஆகிய நோக்கங்களுக்காக தமிழ்நாடு (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம், 1960-இல் இயற்றப்பட்டது.

7.2 இவ்வதிகாரிகளால் இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குபடுத்தக்கூடிய கட்டடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வகைப்படுத்தப்படுகின்றன. பின்னர் இக்கட்டடங்கள் அரசு அலுவலகங்களுக்கும், அலுவலர்களுக்கும்

[1999 ஏப்ரல் 23

குடியிருப்பிற்காக வாடகைக்கு விடப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரிகளால் விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பெற்று, கீழ்க்காணும் சதவீதப்படி ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன:—

1. இடவசதிக் கட்டுப்பாட்டில் உள்ள வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்ட அலுவலர்கள் .. 30%
2. ஒரு மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டத்திற்கு பணிமாற்றம் செய்யப்பட்ட அலுவலர்கள் .. 50%
3. புதிதாகத் திருமணமான அலுவலர்கள் . 10%
4. அரசு விருப்புரிமை ஒதுக்கீடு .. 10%

அரசு அலுவலர்களுக்கு மேற்கூறிய வகைகளில், ஒதுக்கீடு சுழற்சி முறையில் செய்யப்படுகிறது.

7.3 வீட்டு உரிமையாளர்களின் நலன்களையும் கருத்தில் கொள்ளப்பட்டு இச்சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின்கீழ் அவை பாதுகாக்கப்படுகின்றன. வீட்டு உரிமையாளர்களுக்கு உண்மையிலேயே அவரது சொந்த உபயோகத்திற்குத் தேவைப்பட்டாலோ பழுது பார்ப்பதற்கோ அல்லது இடித்துத் திரும்பக் கட்டுவதற்கோ தேவைப்பட்டாலோ இடவசதிக் கட்டுப்பாட்டின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட கட்டடங்கள் விடுவிக்கப்படுகின்றன.

7.4. நியாய வாடகையை அவ்வப்போது உயர்த்துதல் வீட்டு உரிமையாளர் அல்லது குடியிருப்போர் ஆகியோர், விண்ணப்பம் அளித்த நாளிலிருந்து நியாய வாடகையை நிர்ணயித்தல் மற்றும் இதுபோன்ற நடைமுறைப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, இது குறித்து வரப்பெற்ற பல்வகையான முறையீடுகளின் அடிப்படையில் இச்சட்டத்தில் தேவையான திருத்தங்கள் செய்வது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. இதன்பொருட்டு, சில குறிப்பிட்ட மாவட்ட ஆட்சியாளர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் இச்சட்டத்தில் மேற்கொள்ள இருக்கும் மாற்றங்களில் சேர்க்க வேண்டி பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

7.5 இடவசதி கட்டுப்பாட்டுச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட்ட பணியாளர்களது செலவிற்கென 1999-2000ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.17.23 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.



1999 ஏப்ரல் 23]

# இணைப்பு II

[389 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## நகர்ப்பகுதி வளர்ச்சி

## மானியக் கோரிக்கை எண் 33

## கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000

**1. முன்னுரை:**

1.1 மனித சமுதாயத்தின் முக்கியத் தேவையான "உறைவிடங்கள்" நிரந்தரமான தேவைகளாக இருப்பினும், தொடர் மாற்றத்திற்கும் உட்பட்டவைகளாகும். கிராம மக்கள் நகர்ப்புறங்களை நோக்கித் தொடர்ந்து நடைபோட்டுக் கொண்டு இருக்கின்றனர். 1991 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள்தொகை 5.585 கோடி ஆகும். இது நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 6.6 விழுக்காடாக அமைகிறது. தமிழகத்தின் மொத்த மக்கள்தொகையான 5.585 கோடியில் 1.907 கோடி (34.15%) மக்கள், மாநிலத்தின் நகர மையங்களில் வசித்து வருகின்றனர். அதாவது தமிழகத்தில் மூன்றில் ஒரு பங்கு மக்கள், நகர்மையங்களில் வசிக்கின்றனர். மாநிலத்தின் பெருகிவரும் சுகாதார வசதிகளால் சராசரி வாழும் வயது உயர்ந்து கொண்டே செல்லும் சூழ்நிலையில் பெருகிவரும் மக்கள்தொகைக்கு ஏற்ப உறைவிட வசதிகளை அதிகரிக்க வேண்டியது அரசின் கடமையாக உள்ளது. அதே சமயத்தில் இதற்குத் தேவைப்படும் நிலத்தின் அளவு உயர்வதற்கு வாய்ப்பில்லை. தேவைக்கு ஏற்ப உணவு உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு விளைநிலங்களைப் பாதுகாப்பதும் அரசின் கடமையாகும். தமிழகத்தில் நகர் மயமாதல் மிக விரைவாக நிகழ்ந்து கொண்டு இருக்கிறது. நமது நாட்டில் அதிக அளவு நகர்மயமான மாநிலங்களில் மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களுக்கு அடுத்தபடியாக மூன்றாவதாகத் தமிழகம் உள்ளது. 1931-லிருந்து 1991 வரை மாநிலத்தின் நகர்ப்புற மக்கள்தொகை 18 விழுக்காட்டிலிருந்து 34 விழுக்காடாக அதிகரித்து வந்துள்ளது.

1.2 தமிழகத்தின் நகர்ப்புற மக்கள்தொகை (1.907 கோடி) மொத்தம் 469 நகர்மையங்களில் பரவியுள்ளது. 25 முதல்தர நகரங்களில் 96 இலட்சம் மக்கள்தொகையும், இரண்டாம்தர நகரங்களில்

32 இலட்சமும் (17%) மூன்றாம் தர நகரங்களில் 33 இலட்சமும் (17%) மற்றும் நான்காம், ஐந்தாம், ஆறாம்தர நகரங்களில் மொத்தமாக 28.7 இலட்சமும் (16%) ஆக மக்கள்தொகையின் பகிர்மானம் அமைந்துள்ளது. மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி 1971 ஆம் ஆண்டிலிருந்து 1991 ஆம் ஆண்டிற்குள் இரண்டாம்தர நகரங்களின் எண்ணிக்கை 27-லிருந்து 49 ஆகவும், மூன்றாம்தர நகரங்களின் எண்ணிக்கை 78-லிருந்து 108 ஆகவும் உயர்ந்துள்ளது. இரண்டாம்தர மற்றும் மூன்றாம்தர நகரங்கள் 1971-லிருந்து 1991 வரை குறிப்பிடத்தக்க வகையில் உயர்தரத்திற்கு முன்னேறி உள்ளதையே இது குறிக்கிறது.

1.3 55 இலட்சம் மக்கள்தொகையுடைய சென்னை பெருநகர் வளர்ச்சிப் பகுதியுடன் ஐந்து பெரிய நகரங்களான மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகியவை 41.2 இலட்சம் மக்கள்தொகையுடனும் மற்றும் எஞ்சிய முதல் தர நகரங்களுமாகச் சேர்த்து முதல் தர நகரங்கள் மொத்தமுள்ள நகர்ப்புற மக்கள்தொகையில் 50 சதவீதத்தைக் கொண்டுள்ளது. இரண்டாம் தர மற்றும் மூன்றாம் தர நகரங்கள் 34.30 சதவீதத்தைக் கொண்டுள்ளன.

1.4 ஆதலால் முதல் தர, இரண்டாம் தர மற்றும் மூன்றாம் தர நகரங்கள் மட்டுமே மொத்த நகர்ப்புற மக்கள்தொகையில் 84.30 சதவீத மக்கள் தொகையை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இது போன்ற சமனில்லாத வகையில் மக்கள் தொகை பரவியுள்ளதைச் சரி செய்யும் வகையில் 156 இரண்டாம் தர மற்றும் மூன்றாம் தர நகரங்களை மேம்படுத்துவதற்கான திட்டங்களை வகுப்பதில் உயர் முன்னுரிமை அளிக்க வேண்டியது அவசியமாகிறது. இதனால் முதல் தர நகரங்களுக்கு மக்கள் குடிபெயர்வதைக் குறைப்பதற்கு வாய்ப்புள்ளது.

நகரங்களில் மக்கள் நெருக்கம் என்பது இயற்கையான மக்கள்தொகைப் பெருக்கத்தினால் மட்டுமின்றி, கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறப் பகுதிக்கும் மற்றும் சிறிய நகரங்களிலிருந்து பெரிய நகரங்களுக்குமாக நடைபெறும் பெரிய அளவிலான குடி பெயர்தல்களாலும் ஏற்படுகின்றது. அவ்வாறான குடிபெயர்தல்கள் வேலை வாய்ப்பு தேடியும், கல்வி, மருந்தகம், உள்கட்டமைப்பு வசதி தொழில்நுட்பம் மற்றும் இதர புலங்களில் உயர் மற்றும சிறப்பு வசதிகளைத் துய்க்கவும் நடைபெறுகின்றன. பெருநகரங்களில் உள்ள பொருளாதார, தொழில்நுட்ப வசதிகளின் காரணமாக தொழிற்சாலைகள் பெருநகரங்களை ஒட்டியே அமைகின்றன. அதே



சமயத்தில் தேவைக்கும் குறைவான முதலீடு, அடிப்படை வசதிகளைப் பெருக்குவதில் முன்னுரிமை இல்லாமையால் சிறு நகரங்கள் மெதுவாக வளர்வதற்கு மேலும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. ஆதலால் பெரிய நகரங்களில் ஏற்படும் மேலான மக்கள் நெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், இரண்டாம் தர மூன்றாம் தர நகரங்களின் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து வசதி ஆகிய அடிப்படை வசதிகளைப் பெருக்க வேண்டியது அவசியமாகிறது. அதாவது குடிபெயர்பவர்கள் இரண்டாம் தர மற்றும் மூன்றாம் தர நகரங்களுக்கு ஈர்க்கப்பட வேண்டும். ஆதலால், எதிர்கால விரைந்த நகர்மயமாதலைச் சமாளிக்கும் விதமாக, தக்க நகர்ப்புற அபிவிருத்திக்கான வியூகங்களை உருவாக்குவது அவசியமாகும்.

1.6 பின்தங்கிய பகுதிகளுக்குப் போதுமான பொருளாதார மற்றும் அபிவிருத்திக்கான உள்ளீடுகளைக் கிடைக்கச் செய்வதன் மூலமாகப் பெரு நகரங்களுக்கிடையேயுள்ள பரந்து விரிந்த வெளியில் நவீன வசதிகளும் வேலை வாய்ப்புகளும் நிறைந்த துணை நகரங்களை ஏற்படுத்தி அதன் வாயிலாகப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல், நகர்ப்புற அபிவிருத்திக்கான திட்டமிடுதல் ஆகியவற்றை ஒருங்கிணைப்பதை தமிழக அரசு நகர்மய அபிவிருத்திக்கான கொள்கையாகக் கொண்டுள்ளது. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (ஐ.யு.டி.பி) மற்றும் சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான அபிவிருத்தித் திட்டம் (ஐ.டி.எஸ்.எம்.டி) போன்ற திட்டங்களின் வாயிலாக அதிக முதலீட்டுடன் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றி இரண்டாம் மற்றும் மூன்றாம் தர நகரங்களை அபிவிருந்தி செய்வதற்கு தமிழக அரசு முயன்று வருகிறது.

**2. நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள்**

2.1 (அ) பொருளாதார வளர்ச்சிக்கு உந்து விசையாகவும் ஊக்க சக்தியாகவும், செயல்படும் நகர்ப்புற மையங்களைக கண்டறிந்து அதன் மூலம் மக்கள்தொகைப் பெருக்கத்தைச் சமன்படுத்துதல்.

(ஆ) நடைமுறையில் உள்ள போக்குவரத்து சாலைகளை நன்கு பயன்படுத்திக் கொண்டு நகர் வளர்ச்சி வாய்ப்புக்கான வசதிகள் அடங்கிய புதிய நகர் மையங்களை உருவாக்குதல்.

(இ) போக்குவரத்து வசதிகளில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து சீரான வளர்ச்சிக்கு ஏற்றவாறு அவற்றை மாற்றியமைத்தல்.

[1999 ஏப்ரல் 23

(ஈ) கோட்டம் மற்றும் வட்டம் என்ற அளவிலான நகர்ப்புற வட்டங்களிலுள்ள குறைவான நகர்மயமான பகுதிகளைக் கண்டறிந்து நகர் மையங்களாக வளர்ச்சி செய்தல். இதன் வழியாக நகர்ப்புற வசதிகளை கிராம மக்கள் தங்களின் அருகிலேயே பெற்றுக் கொள்ள வகை செய்தல்.

(உ) நகர்ப்புற வளர்ச்சியின் விரைவான வளர்ச்சியினால் சுற்றுப்புறச் சூழல்கள், இயற்கை வளங்கள், விளை நிலங்கள் ஆகியவற்றிற்குப் பாதிப்பு ஏற்படா வண்ணம் பாதுகாத்தல்.

(ஊ) விரைவான நகர்ப்புற வளர்ச்சிக்குத் தேவையான சட்டம், நிதி மற்றும் நிறுவன வழிமுறைகளைக் கண்டறிந்து செயல்படுத்துதல்.

2.2 இவற்றைக் குறிக்கோளாகக் கொண்ட மாநிலத்தின் நகர் மையங்களை அபிவிருத்தி செய்வதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்கான ஆய்வுகளை இவ்வியக்ககம் தொடங்கியுள்ளது. இப்பணியானது பெரிய நகர் மையங்களின் அபிவிருத்தியை ஒழுங்குபடுத்துவதற்கான பல்வேறு திட்டங்கள் தயாரிக்கும் பணிக்கும் கூடுதலாக மேற்கொள்ளப்படுகிறது. இந்த இயக்ககத்தின் பணி மற்றும் அதன் 1999-2000 ஆம் ஆண்டிற்குரிய பணி விவரங்கள் ஆகியவை குறித்து பின்வரும் பகுதிகளில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

## 3. நகர் ஊரமைப்பு இயக்ககம்

*நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் பணி*

3.1 நகர்ப்புறங்களின் திட்டமிட்ட, சீரான வளர்ச்சிக்கு உறுதுணையாகச் செயல்படுவதே இவ்வியக்ககத்தின் முக்கிய குறிக்கோளாகும். தகுந்த நில உபயோக கட்டுப்பாடுகள் மூலமாக மக்கள் குடியிருப்புகளுக்கு தூய்மை மற்றும் ஆரோக்கியமான சுற்றுச்சூழல் வசதி செய்யும் வகையிலும் சட்டபூர்வமான திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்தும் திட்டக் குழுமங்களுக்கு இத்துறை தகுந்த ஆலோசனைகளை வழங்குகிறது.

3.2 முழுமைத் திட்டங்கள், புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவை இந்த இயக்ககத்தினால் தயார் செய்யப்பட்டு அமலாக்கப்படுகின்றன. உள்ளூர்த் திட்டக்



1999 ஏப்ரல் 23]

குழுமங்கள், திட்டங்களை உருவாக்குவதற்கும் செயல்படுத்துவதற்கும் இந்த இயக்ககம் உதவி புரிகின்றது.

### 3.3 முழுமைத் திட்டங்கள்

முழுமைத் திட்டங்கள், சிறிய நகரங்களுக்கும், பெரிய நகரமாக இருப்பின் அந்நகரம் மற்றும் அந்நகரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்காகச் சேர்த்து தயாரிக்கப்படுகின்றன. இத்திட்டம் நிலப்பயன்பாட்டுக் கட்டுப்பாடு, போக்குவரத்துத் திட்டம், அடிப்படை வசதிகள் மற்றும் கூடுதல் மக்கள் தொகையின் தேவைகளுக்கான நிலப்பயன்பாடுகள் ஆகிய விவரங்களுடன் தயார் செய்யப்படுகிறது. நிலப்பயன்பாடுகள் கீழ்க்கண்ட ஆறு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன :

1. குடியிருப்புப் பகுதி.
2. வணிகப் பகுதி.
3. பொது உபயோகப் பகுதி.
4. கல்விப் பகுதி.
5. தொழிற் பகுதி.
6. வேளாண்மைப் பகுதி.

இதுகாறும் 110 நகரங்களுக்கு முழுமைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 3.4 புது நகர் வளர்ச்சித் திட்டங்கள்

தொழில் மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் பெற்ற புதியதாக வளர்ச்சி அடைந்துவரும் பகுதிகளுக்கு இவ்வகைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதுகாறும் ஐந்து நகரங்களுக்கு புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அவை 1. மாமல்லபுரம், 2. குறிச்சி, 3. சித்தோடு, 4. மதுரைப் பல்கலைநகர், 5. ஓசூர். இந்த ஐந்து திட்டங்களும் 1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களாகும்.

### 3.5 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள்

முழுமைத் திட்டத்தின் அடுத்தகட்டமாக வேகமான வளர்ச்சிக்கு மிகுந்த வாய்ப்புள்ள நகரங்களின் பகுதிகளுக்கு விரிவு அபிவிருத்தித்

[1999 ஏப்ரல் 23

திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதுகாறும் 1575 விரிவு அபிவிருத்தித் திட்டங்களை அறிவிக்கை செய்துள்ளதில் வரைவு நிலை, இணக்கம் அளிக்கப்பட்ட நிலை மற்றும் ஒப்புதல் வழங்கப்பட்ட நிலை என வெவ்வேறு நிலைகளில் இத்திட்டங்கள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

### 3.6 ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

உள்ளாட்சிகளின் வருவாயைப் பெருக்கும் நோக்கத்தில் பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள் மற்றும் வார, தினசரி சந்தைகள் போன்ற வருவாய் ஈட்டும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சிறிய நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கும் ஒரு திட்டத்திற்கு ரூ. 30 இலட்சம் வீதம் மாநில அரசின் உதவியால் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் கடைகள் கட்டுதல், தினசரி அங்காடி கட்டுதல், பேருந்து நிலையம் அமைத்தல் மற்றும் சாலைகள் அமைத்தல் ஆகிய பணிகளுக்கு கும்பகோணம், திருப்பூர், வாணியம்பாடி நகராட்சிகளுக்கும், மல்லூர், கண்ணமங்கலம், அரிமளம், விக்ரவாண்டி, கள்ளக்குடி, எஸ்கண்ணனூர், அன்னூர், கருமாண்டிசெல்லிபாளையம், நாகவல்லி, சென்னிமலை, மோகனூர், சோழவந்தான், பனங்குடி, வைத்தீஸ்வரன்கோயில், அம்மாபேட்டை, பூதபாண்டி ஆகிய பேரூராட்சிகளுக்கும் ஆக மொத்தம் 19 நகரங்களுக்கு ரூ.417.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### 3.7 நகர் ஊரமைப்பு இயக்ககம் செயல்படுத்தும் சிறப்புத் திட்டங்கள்

முழுமைத் திட்டங்கள், புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்களில் குறிப்பிட்டுள்ள சாலைகளை அமைத்தல் மற்றும் பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள் ஆகியவற்றைப் பராமரித்தல்.

(அ) கோபிசெட்டிப்பாளையம், தூத்துக்குடி, தேனி அல்லி நகரம், விருதுநகர், சிவகாசி ஆகிய நகராட்சிகளுக்கும் மற்றும் கும்மிடிப்பூண்டி பேரூராட்சிக்கும் ஆக மொத்தம் 6 நகரங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் அமைத்தல் மற்றும் இதர பொது வசதிகளை ஏற்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு கடந்த 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 94 இலட்சத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் இந்த நிதியாண்டில் (1999-2000) தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



1999 ஏப்ரல் 23]

(ஆ) பொதுவாக பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் வருவாய் குறைவு காரணமாக உள்ளாட்சிகளால் முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை. பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்களை மேம்படுத்துவதற்காக ரூ.125 இலட்சம் உள்ளாட்சிகளுக்கு மானியமாக வழங்கப்படுகிறது. இம்மானியத்தைப் பெறுவதற்கு முன்பாக மானியத் தொகைக்கு இணையான தொகையை அந்தந்த உள்ளாட்சிகள், அந்தந்தப் பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் மேம்பாட்டிற்காகச் செலவிட்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது. இதுகாறும் சேலம், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, கடலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, நாகர்கோவில், பட்டுக்கோட்டை, திருநெல்வேலி மற்றும் திருப்பத்தூர் (வேலூர்) ஆகிய 11 நகரங்கள் இத்திட்டத்தின்கீழ் மானியம் பெற்றுள்ளன. இத்திட்டம் 1999-2000 ஆம் ஆண்டிலும் தொடரப்படவுள்ளது.

### 3.8 வான்வழிப் புகைப்படங்கள் மூலமாக நகர வரைபடங்கள் தயாரித்தல்

திட்டமிடுதலுக்கான விவரங்களைத் திரட்டுவதற்கு ஏதுவாக நவீன நுட்பம் வாய்ந்த வான்வழிப் புகைப்படங்களைப் பல்வேறு நகர்ப்புறங்களுக்கான வரைபடங்கள் தயாரிப்பதற்கும், திட்டமிடுதல் பணிகளிலும் இவ்வியக்ககம் பயன்படுத்தி வருகிறது. 30 நகரங்களுக்கு இந்த இயக்ககம் வான்வழிப் புகைப்படங்கள் தயாரித்துள்ளது. மற்றுமொரு தனித் திட்டத்தின் வாயிலாக நீலகிரி மாவட்டத்திற்கும் வான்வழிப் புகைப்படங்கள் பெறப்பட்டுள்ளன. இப்புகைப்படங்களைப் பயன்படுத்தி விரிவான நில உபயோகத் திட்டங்களை இவ்வியககம் தற்போது தயாரித்து வருகிறது.

### 3.9 கடற்கரை மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்

கடற்கரைக் காடுகள் (சதுப்பு நிலக் காடுகள்), பவளப் பாறைகள் மற்றும் இயற்கை எழில்மிக்க பகுதிகள் போன்றவற்றையும் கடற்கரைப் பகுதிகளின் மிக எழில்மிக்க சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வகையிலும் இம்மாநிலத்திற்கான கடற்கரை மேலாண்மைத் திட்டங்களைத் தயாரிக்கும் பணியில் இவ்வியக்ககம் ஈடுபட்டுள்ளது. இத்திட்டமானது இந்திய அரசின் கடற்கரைப் பகுதி ஒழுங்குமுறைத் திட்டம் மற்றும் வழிமுறைகளிலும் மேம்படுத்தப்பட்ட திட்டமாக அமைந்துள்ளது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட திட்டங்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு கொள்கை அளவில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மத்திய அரசு தனது

பெருங்கடலியல் நிறுவனம் மற்றும் இந்தியா தொல்பொருள் ஆய்வு நிறுவனம் ஆகியவற்றினைக் கலந்தாலோசித்து இத்திட்டங்களில் சில திருத்தங்களைப் பரிந்துரை செய்துள்ளது.

**3.10 போக்குவரத்து செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டம்**

போக்குவரத்து பிரச்சினைக்குரிய பகுதிகளைக் கண்டறிந்து நகர்ப்புறங்களில் அவற்றைக் களைவதற்கான தீர்வுகளை உருவாக்கும் விதமாக ரூ.38.59 இலட்சம் செலவில் பல்லவன் போக்குவரத்து ஆலோசனை மற்றும் சேவை மையத்தின் உதவியுடன் 38 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான போக்குவரத்து செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டங்களையும், 5 பெரு நகரங்களுக்கு (மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி) முழுமையான போக்குவரத்து ஆய்வுத் திட்டங்களையும் தயாரிக்கும் பணியில் இவ்வியக்ககம் ஈடுபட்டு வருகிறது.

**4. 1999-2000 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்**

*4.1* நகர்ப்புறப் பகுதிகளில் ஒழுங்குபடுத்தப்பட்ட முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அனைத்து உள்ளூர்த் திட்டக் குழுமப் பகுதிகளுக்கும் முழுமைத் திட்டங்கள் தயாரிப்பதிலும், உடனடியாக அபிவிருத்தி அடைய ஏதுவான நல்ல வாய்ப்பும் வளமும் உடைய பகுதிகளுக்கு விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிப்பதிலும் இவ்வியக்ககம் நன்கு கவனம் செலுத்தி வந்துள்ளது. பல சமயங்களில் முழுமைத் திட்டங்களையும் விரிவு அபிவிருத்தித் திட்டங்களையும் செயல்படுத்துவதில் பொது மக்களிடமிருந்தும் தொழில் முனைவோர்களிடமிருந்தும் பெறப்படும் பல்வேறு கோரிக்கைகளால் சில நடைமுறைச் சிக்கல்கள் எழுகின்றன என்பதை இவ்வியக்ககம் அனுபவரீதியாக அறிந்துள்ளது. அதனால் ஐந்து வருடங்களுக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டங்கள், பத்தாண்டுகளுக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவற்றை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என இவ்வியக்ககம் இலக்கிட்டுள்ளது. 1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டமும் அதற்கு வழிவகை செய்கிறது. 60 முழுமைத் திட்டங்களும் 500 விரிவு அபிவிருத்தித் திட்டங்களும் அத்தகைய பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளத்தக்க ஆயத்த நிலையில் உள்ளன. முழுமைத் திட்டங்கள் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்களை மறுபரிசீலனை செய்யும் போது துறை வல்லுநர்களையும், உள்ளாட்சிமன்ற உறுப்பினர்களையும் கலந்தாலோசிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் 5 உள்ளூர்த் திட்டக்குழுமப் பகுதிகளுக்கு புதியதாக முழுமைத் திட்டங்கள் தயாரிக்கவும், 5 உள்ளூர்த் திட்டக்குழுமப் பகுதிகளுக்கு ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டுள்ள முழுமைத் திட்டங்களை மறுபரிசீலனை செய்வதற்கும், மேலும் 50 விரிவு அபிவிருத்தித் திட்டங்களை புதியதாக தயாரிக்கவும், ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள 50 விரிவு அபிவிருத்தித் திட்டங்களை மறு பரிசீலனை செய்வதற்கும், பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.



*4.2* புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்துதல்.

புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள முன்மொழிவுகளைச் செயல்படுத்தும் வகையில் அந்தந்த புதுநகர் வளர்ச்சிக் குழுமங்களுக்கும், உள்ளூர்த் திட்டக் குழுமங்களுக்கும், அரசு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. இந்நிதியாண்டில் ரூ.32.80 இலட்சம் நிதியுதவியில் இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. இவை அப்பகுதிகளின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமையும் என்பது திண்ணம்.

**4.3 பாரம்பரியமிக்க நகர் வளர்ச்சித் திட்டம்**

நமது பாரம்பரியமிக்க நகரங்களில் திட்டமில்லா நகர்மயமாதலால், சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதை நன்கு உணர்ந்த மாநில அரசு அத்தகைய 38 நகரங்களைக் கண்டறிந்து பாரம்பரிய நகரங்களாக அறிவிப்பு செய்துள்ளது. அதன் தொடர் நடவடிக்கையாக பாரம்பரிய நகரங்களை அழகுபடுத்துவதற்கான அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல், நினைவுச் சின்னங்களில் அவற்றைப் பேணும் வகையில் கட்டுப்பாடுகளை விதித்தல், வசதிகளை ஏற்படுத்துதல், வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதிகளைப் பேணிப் பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1997-98 ஆம் ஆண்டில் 11 நகரங்களுக்கு அபிவிருத்தித் திட்டங்களும், 1998-99 ஆம் ஆண்டில் மேலும் 11 நகரங்களுக்கு அபிவிருத்தித் திட்டங்களும் முறையே ரூ.25 இலட்சம் நிதியுதவியில் தயாரிக்கப்பட்டுள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட 11 நகரங்களுக்கு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட உள்ளன.

[1999 ஏப்ரல் 23

1. பேரூர்
2. குளச்சல்
3. நாகூர்
4. வேளாங்கன்னி
5. ஆவுடையார்கோவில்
6. திருமயம்
7. கங்கைகொண்ட சோழபுரம்
8. தரங்கம்பாடி
9. குற்றாலம்
10. குறிஞ்சிப்பாடி
11. திருநெல்வேலி

இந்த அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கும் பணி ரூ. 25 இலட்சம் செலவில் இந்த நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

### 4.4 நகர்மயமாதல் குறைவாக உள்ள வட்டங்களில் அமைந்துள்ள நடுத்தர நகரங்களின் மேம்பாட்டுத் திட்டம்

நகர்ப்புற வளர்ச்சிக்கான பயன்கள்குறித்த ஆய்வுகளின் நன்மைகளைப் பரவலாக்கும் நோக்கத்துடன் நகர்ப்புறப் பகுதிகள் இல்லாத வட்டங்களைத் தேர்வு செய்து அவற்றிற்கு நகர்ப்புற வசதிகளை ஏற்படுத்துவதில் இவ்வியக்ககம் ஈடுபட்டுள்ளது. இதுபோன்ற 21 வட்டங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளில் தயாரிக்கப்பட்டன. நடுத்தர நகரமாக மேம்படுத்தத் தகுந்த மையங்களைத் தேர்ந்தெடுத்தல், தேவைப்படும் முதலீடு, தேவையான உள்கட்டமைப்பு வசதியின் அளவு ஆகியவற்றை இத்திட்டம் துல்லியமாகக் கணித்து நடைமுறைப்படுத்துகிறது. இதே போன்று கீழ்க்காணும் 12 வட்டங்களுக்கும் ரூ. 20 இலட்சம் செலவில் 1999-2000 ஆம் ஆண்டில் அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படும்:



1999 ஏப்ரல் 23]

| | | |
|---|---|---|
| 1. உத்திரமேரூர் | - | காஞ்சிபுரம் மாவட்டம் |
| 2. அரூர் | - | தருமபுரி மாவட்டம் |
| 3. ஓமலூர் | - | சேலம் மாவட்டம் |
| 4. போளூர் | - | திருவண்ணாமலை மாவட்டம் |
| 5. அவினாசி | - | கோவை மாவட்டம் |
| 6. நிலக்கோட்டை | - | திண்டுக்கல் மாவட்டம் |
| 7. குளித்தலை | - | கரூர் மாவட்டம் |
| 8. பேராவூரணி | - | தஞ்சாவூர் மாவட்டம் |
| 9. வந்தவாசி | - | திருவண்ணாமலை மாவட்டம் |
| 10. திருமயம் | - | புதுக்கோட்டை மாவட்டம் |
| 11. மானாமதுரை | - | சிவகங்கை மாவட்டம் |
| 12. 'விளாத்திகுளம் | - | தூத்துக்குடி மாவட்டம் |

### 4.5 ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி

நகர்ப்புற உள்கட்டமைப்பு வசதிகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் 1999--2000 ஆம் ஆண்டில் ஒரு நகர்ப்புற பகுதி திட்டத்திற்கு ரூ. 30 இலட்சம் என்ற அளவில் 15 நகரங்களுக்கு மொத்தம் ரூ. 450 இலட்சம் கடனுதவியாக உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட உள்ளது. இத்திட்டம் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களும் பயனடையும் வண்ணம் அமையும்.

### 4.6 நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்களுக்கான புவியமைப்பு தகவல் முறை

1998-99 ஆம் ஆண்டில் காரைக்குடி மற்றும் திண்டிவனம் ஆகிய இரண்டு நகரங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிப்பதில் நவீன தொழில்நுட்ப வசதிகளான புவியமைப்பு தகவல் முறை மற்றும் வான்வழிப் புகைப்படங்கள் ஆகியன பயன்படுத்த வழிவகை செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் நிலங்களின் நில அளவை எண்கள், நில உரிமை, மண் தர வகைப்பாடு, மக்கள் நெருக்கம் மற்றும் நில சம்பந்தமான இதர விவரங்களை வெவ்வேறு தகவல் அடுக்குகளாக வைத்து தேவைப்படும் வரைபடங்களுக்கேற்ப பயன்படுத்தப்படும். மேலும் இம்மாதிரியான அபிவிருத்தித் திட்டங்கள் 1999-2000 ஆம்

ஆண்டில் இராஜபாளையம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இரு நகரங்களுக்கும் தயாரிக்கப்படும்.

## 4.7 மாதிரி பாரம்பரியச் சட்டம்

கலாச்சாரத் தொன்மை, சமய முக்கியத்துவம் மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க பழம்பெருமை வாய்ந்த கட்டடங்களையும் அதனைச் சுற்றியுள்ள இடங்களையும் பேணிப் பாதுகாக்கும்வகையில் ஒரு சட்டம் இயற்ற அரசு மிக விருப்பம் கொண்டுள்ளது. பாரம்பரியமிக்க கட்டடங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களை உள்ளடக்கிய நகரங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் 38 நகரங்களுக்கு இவ்வியக்ககத்தால் தயாரிக்கப்படுவதுடன் மத்திய அரசு இப்பொருள் சம்பந்தமாக அனுப்பியுள்ள வரைவு ஒழுங்குமுறை விதிகளை அடிப்படையாகக் கொண்டு மாநிலத்திற்கும் தனியே ஒரு சட்டம் இயற்றும் வகையில் மாதிரி பாரம்பரியச் சட்டம் இவ்வியக்ககத்தால் 1999-2000 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட உள்ளது.

## 4.8 முழுமைத் திட்டங்கள் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்களைக் கணினிமயமாக்குதல்

திட்டமிடுதலில் நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்துவது, விரைவான மற்றும் திறன்வாய்ந்த திட்டமிடுதலுக்கு வழி வகுக்கிறது. அதனால் முழுமைத் திட்டங்களையும், விரிவு அபிவிருத்தித் திட்டங்களையும் 1999-2000 ஆம் ஆண்டில் கணினிமயப்படுத்துவதற்கு இவ்வியக்ககம் திட்டமிட்டுள்ளது. கணினி வரைபடங்கள் எதிர்காலத்தில் அனைத்து நகரங்களுக்கும் புவியமைப்பு தகவல் முறையை விரிவுபடுத்தும்போது மிகப் பயனுள்ளதாக அமையும். உரிய கணினி வன்பொருட்களைக் கொண்டு மின் துடிப்புகள் நிலையிலுள்ள பல வரைபடங்களிலிருந்து எண்ணிலடங்கா நகல்களை எளிதில் பெற இயலும். பொதுமக்கள் வரைபடங்களின் நகல்களைக் கோரும் போதெல்லாம் அவர்களுக்கு எளிதில் நகல்கள் வழங்க இம்முறை மிகவும் பயனுள்ளதாக இருக்கும். வரைபடங்களை கணினி மயமாக்குவதற்குத் தேவையான வன்பொருட்கள் மற்றும் மென் பொருட்கள் வாங்குவதற்காக 1998-99 பகுதி 2 திட்டத்தின்கீழ் ரூ. 20 இலட்சம் அரசு அளித்துள்ளது. உரிய வன்பொருட்கள், மென் பொருட்கள் வாங்கிய பின்னர், வரைபடங்கள் கணினிமயமாக்குதல் மேற்கொள்ளப்படும்.



## 4.9 காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கான மண்டலத் திட்டங்கள்

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்குட்பட்ட பகுதி ஏறத்தாழ முழுமையாக நகர்மயமாக்கப்பட்டுவிட்டது. மேலும், அப்பகுதியைத் தாண்டியும் நகர்மயமாக்குதல் விரைவாக விரிவடைந்து வருகிறது. காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய இரு மாவட்டங்கள்தான் சென்னை பெருநகர் வளர்ச்சிப் பகுதியை அடுத்து அமைந்துள்ளன. சென்னை பெருநகர் வளர்ச்சிப் பகுதியின் அருகில் அமைந்துள்ள இடங்களில் நடைபெறும் விரைவான நகர்மயமாதல் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதன்பொருட்டு இவ்விரு மாவட்டங்களுக்கான மண்டலத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியது ஓர் உடனடித் தேவையாகும். ஆதலால் 1999-2000 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய இரு மாவட்டங்களுக்கான மண்டல வரைவுத் திட்டங்கள் தயாரிக்கும் பணியினை இவ்வியக்ககம் மேற்கொண்டுள்ளது.

## 4.10 வான்வழிப் புகைப்படங்கள் பெறுதல்

உலக வங்கித் திட்டமான தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின் தொழில்நுட்ப உதவியைக் கொண்டு, ஏற்கெனவே 30 நகரங்களுக்கு வான்வழிப் புகைப்படங்களை இவ்வியக்ககம் பெற்றுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் இந்திய அரசின் நகர் ஊரமைப்புக் கழகத்தால் இவ்வியக்ககத்திற்கு வான்வழிப் புகைப்படங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட வரைபடங்கள் மேலும் ஐந்து நகரங்களுக்குத் தயாரித்தளிக்கப்பட்டுள்ளன. இந்த வான்வழிப் புகைப்படங்கள் நில உபயோக வரைபடங்கள் தயாரிப்பதற்குப் பயன்படுகின்றன. எஞ்சியுள்ள நகரங்களுக்கும் வான்வழிப் புகைப்படங்கள் தயாரிப்பது மிகவும் இன்றியமையாததாகும். அதனால் நகர் ஊரமைப்பு வாரிய நிதியுதவியுடன் ரூ. 30 இலட்சம் செலவில் மூன்று நகராட்சிகளுக்கான வான்வழிப் புகைப்படங்களைப் பெறும் பணியை 1999-2000 ஆம் ஆண்டில் இவ்வியக்ககம் மேற்கொள்ள உள்ளது. இந்திய அரசு நிறுவனமான ஐதராபாத்தில் உள்ள தேசியத் தொலை உணர்வு மையத்தின் மூலமாக வான்வழிப் புகைப்படங்கள் எடுக்கும் பணி நடைபெறும். ஏற்கெனவே இவ்வியக்ககத்தின்வசம் உள்ள வான்வழிப் புகைப்படங்களிலிருந்து வரைபடங்கள் தயாரிக்கும் பணியினையும் இவ்வியக்ககம் மேற்கொள்ளும். அவ்வரைபடங்கள் எதிர்காலத்தில் அந்தந்த நகரங்களுக்குரிய புவியியல் தகவல்களைப் பெறுவதற்கும் மற்றும் இதர திட்டப் பணிகளுக்கும் மிகவும் பயன்படும்.

[1999 ஏப்ரல் 23

**சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்**

சென்னை ஒரு பெருநகரமாகவும், அதன் மக்கள்தொகை 2011 ஆம் ஆண்டில் 70 இலட்சமாக உயருமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. தீவிர நகர்மயமாக்கலின் விளைவாக நகர வசதிகள் மற்றும் சமூக நலன்கள் வெகுவாகக் குறைந்து வருகின்றன. நகர அடிப்படை வசதிகளை மேம்படுத்தும்பொருட்டு அரசு, பின்வரும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது:

**6. திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம்-II**

சென்னை கடற்கரை முதல் திருமயிலை வரையிலான முதற்கட்ட திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் 1997 ஆம் ஆண்டில் முடிவுற்று, இரண்டாம் கட்டமாக திருமயிலை முதல் வேளச்சேரி வரையிலான 10.6 கி.மீ. நீள இரயில் பாதை ரூபாய் 733 கோடி மதிப்பீட்டுச் செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. திருமயிலை முதல் திரைப்பட நகர் வரையிலான 6.5 கி.மீ. நீளத்திற்கு இரயில்வே துறையினால் கட்டுமானப் பணிகள் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை, 1996-97 மற்றும் 1997-98ஆம் நிதியாண்டுகளில் தமிழக அரசு ரூபாய் 100 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. சென்னை கடற்கரை - தாம்பரம் புறநகர் இரயில் பாதைக்கு சிறந்த இணைப்பு வசதி ஏற்படுத்தவும், இத்திட்டத்தை பரங்கிமலை புறநகர் இரயில் நிலையம் வரை நீட்டிக்கவும் அரசு தீர்மானித்துள்ளது. இத்திட்ட செயல்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளுக்காக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒரு வழிகாட்டும் நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது.

**7. வெளிவட்டச் சாலை**

சென்னை பெருநகர எல்லைக்கு வெளியேயுள்ள பகுதிகளில் நகர அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக வண்டலூர் முதல் மீஞ்சூர் வரை 62 கி.மீ. தூரத்திற்கு, துரித இரயில் போக்குவரத்து வசதியுடன், குறுக்கிடும் ஐந்து முக்கிய சாலைகளின் சந்திப்புகள் பரிமாற்ற வசதிகளுடன் ரூபாய் 317 கோடி செலவில் (1995 ஆம் ஆண்டின் விலைகளின்படி) ஒரு வெளிவட்டச் சாலை அமைக்கப்படவுள்ளது. இயக்கி ஒப்படைத்தல் எனும் கோட்பாட்டின்படி போக்குவரத்துப் பகுதிகளை ஒட்டினாற்போல் உள்ள பகுதிகளை வணிகத்தன்மை பயனுக்காக எட்டு வருடங்களில் இத்திட்டம்



1999 ஏப்ரல் 23]

செயல்படுத்தப்படும். திட்டமிடப்பட்டுள்ள 122 மீ. மொத்த அகலமுள்ள வெளிவட்டச் சாலையில் 67 மீ. அகலத்தில் இருவழிப் போக்குவரத்துச் சாலையும், அதில் ஆறு வழிப்பாதையும் மற்றும் இரண்டு பக்கப் பாதையும் அமைக்கப்படும். மேலும், 55 மீ. அகலத்தில் சாலையை ஒட்டி இருபுறமும் பொது உபயோகம் மற்றும் வணிகத்தன்மை பயனுக்காகவும், இதன் மையத்தில் 30 மீ. அகலத்திற்கு எதிர்காலத்தில் துரித இரயில் பாதை அமைக்கவும் ஒதுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக தெற்கு நீள் நெடுஞ்சாலையிலிருந்து சென்னை - திருவள்ளூர் நெடுஞ்சாலை வரை 29.20 கி.மீ. நீளத்திற்குச் சாலை அமைக்கத் தேவையான நிலங்கள் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது. இத்திட்டத்தின் தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக் கூறுகள், மூலதன திரட்டு மற்றும் செயல்படுத்தும் திட்டமுறைகள் ஆகிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**8. கோயம்பேட்டில் சென்னை புறநகர் பேருந்து முனையம்**

சென்னையில் தற்போது இயங்கிவரும் பேருந்து முனையங்களான எஸ்பளனேட், எம்.யூ.சி., பேசின்பாலம் மற்றும் பிராட்வே ஆகிய இடங்களில் நிலவிவரும் போக்குவரத்து நெரிசல்களைக் குறைப்பதற்காக புறநகர் பேருந்து முனையம் ஒன்றை நகரத்தை ஒட்டியுள்ள கோயம்பேட்டில் அமைத்திட அரசு உத்தேசித்துள்ளது. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், வழிகாட்டும் நிறுவனம் என்பதால் விரிவான கட்டடம் மற்றும் சிறந்த பொறியியல் வடிவமைப்பினைத் தயாரிக்க ரைட்ஸ் என்னும் மத்திய அரசு நிறுவனத்தை ஆலோசனை நிறுவனமாக ரூபாய் 96 இலட்சம் மதிப்பீட்டில் நவம்பர் 1997-ல் நியமித்து மேற்கண்ட பணிகளை மதிப்பீடு செய்வதற்கு ஒரு மதிப்பீட்டுக் குழுவை அரசு நியமித்துள்ளது. கட்டுமானப் பணிகள் ஏப்ரல்/மே மாதத்தில் தொடங்கப்பட இத்திட்டத்திற்கான வடிவமைப்புகள், விரிவான மதிப்பீடுகள் இறுதி செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. புறநகர் பேருந்து முனைய கட்டுமானத்திற்கு மட்டும் ரூபாய் 50 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுவிட்டது. இதைத்தவிர நிலம் மற்றும் இதரச் செலவுகளுக்காக தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் மற்றும் வங்கிகளிடம் நிதியுதவி பெறப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கான செயற்குறிப்புகள் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து பெறப்பட்டு தனியே ஆணைகள் வெளியிடப்படும்.

[1999 ஏப்ரல் 23

## 9. ஆரச் சாலைகளின் மேம்பாட்டுப் பணி

சென்னைப் பெருநகரப் பகுதிக்குள் 250 கி.மீ. நீளமுள்ள கீழ்க்காணும் எட்டு பிரதான சாலைகளை ரூபாய் 212.54 கோடி செலவில் இரண்டு ஆண்டுகளில் மேம்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. அவைகளாவன:

1) சென்னை - மகாபலிபுரம் சாலை

2) வாலாஜாபாத் - முடிச்சூர் - தாம்பரம், மேடவாக்கம் - சோழிங்கநல்லூர் - குடிமியாண்டிதோப்பு

3) சென்னை - வண்டலூர் - கேளம்பாக்கம் சாலை

4) புதுவயல் - பெரியபாளையம் - தாமரைப்பாக்கம் - தின்னனூர் - கொரட்டூர் சாலை

5) செங்குன்றம் - திருவள்ளூர் சாலை

6) செங்குன்றம் - ஆவடி - பூந்தமல்லி சாலை, குன்றத்தூர் - பல்லாவரம் இணையும் புது மகாபலிபுரம் சாலை

7) கோடம்பாக்கம் - ஸ்ரீபெரும்புதூர் சாலை

8) சென்னை - மகாபலிபுரம் சாலை (வழி) கேளம்பாக்கம் - கோவளம்

இத்திட்டத்திற்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் வழிகாட்டும் நிறுவனமாகத் தெரிவு செய்யப்பட்டு, இதற்கான நிதியினை வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனம் மூலமாகப் பெற அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இக்கடனை வட்டியுடன் திருப்பிச் செலுத்த ஒவ்வொரு ஆண்டும் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்ய அரசு இசைந்துள்ளது. இப்பணிகள் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு நெடுஞ்சாலைத் துறை மூலமாகச் செயல்படுத்தப்படும்.

## 10. போக்குவரத்து செயல்முறைத் திட்டம்

பல்வேறு போக்குவரத்துத் திட்டங்களை மேம்படுத்த ரூபாய் 556 கோடி செலவிலான போக்குவரத்து செயல்முறைத் திட்டத்தை மூன்று ஆண்டுகளுக்குள் செயல்படுத்த அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.



1999 ஏப்ரல் 23]

பல்வேறு போக்குவரத்துத் திட்டங்களான சாலைச் சந்திப்புகளை மேம்படுத்துதல், வழிமுறைப்படுத்தல், சமிக்ஞைகள் அமைத்தல், பாதசாரிகள் சுரங்கப்பாதை, தெரு விளக்குகள் போன்றவை சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறை மற்றும் மாநகரக் காவல் துறைகளால், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து கடனுதவி பெற்று நடைமுறைப்படுத்தப்படும். திட்ட முன்னேற்றத்தைக் கண்காணிக்க உயர் மட்டக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. திட்ட நடைமுறை முழுவதையும் கண்காணிக்க சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இத்திட்டத்தின் வழிகாட்டும் நிறுவனமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் நிதியாண்டில் சென்னை மாநாகராட்சி கீழ்க்காணும் பத்து சிறிய மேம்பாலங்கள் அமைக்கும் பணியினை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது:

1) அடையாறு - பலகைவாராவதி பாலம் சாலை

2) புற்றுநோய் நிறுவனம் - சர்தார் பட்டேல் சாலை - காந்தி மண்டபம் சாலை

3) சங்கீத வித்வ சபை - டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை - டி.டி.கே. சாலை

4) டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை - இராயப்பேட்டை நெடுஞ்சாலை

5) ஆழ்வார்பேட்டை - டி.டி.கே. சாலை - சர். சி.பி. ராமசாமி சாலை

6) இராயப்பேட்டை மருத்துவமனை-இராயப்பேட்டை நெடுஞ்சாலை - பீட்டர்ஸ் சாலை

7) அருங்காட்சியகம் - பாந்தியன் சாலை - காசா மேஜர் சாலை

8) டவுட்டன் - புரசவாக்கம் நெடுஞ்சாலை - அண்டர்ஸ் சாலை

9) சத்தியம் திரையரங்கம் - பீட்டர்ஸ் சாலை - கான்ரான் ஸ்மித் சாலை

10) பெரம்பூர் - பேப்பர் மில்ஸ் சாலை - பெரம்பூர் இரயில் நிலையம்

இத்துடன் நகரில் கீழ்க்கண்ட பன்னிரெண்டு இடங்களில் சமிக்ஞைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது:

1) இராயப்பேட்டை நெடுஞ்சாலை - லாயிட்ஸ் சாலை சந்திப்பு

2) வாலாஜா சாலை - திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை சந்திப்பு

3) தென் மேற்கு போக் சாலை - வி. என். சாலை சந்திப்பு

4) டாக்டர் நாயர் சாலை - தியாகராய சாலை சந்திப்பு மற்றும் தணிகாசலம் சாலை சந்திப்பு

5) சின்னமலை

6) சர்தார் பட்டேல் சாலை - வேளச்சேரி சாலை சந்திப்பு

7) வள்ளலார் நகர் சந்திப்பு

8) பர்னபி சாலை - ஈ.வெ.ரா. சாலை சந்திப்பு

9) பிளவர்ஸ் சாலை - ஈ.வெ.ரா. சாலை சந்திப்பு

10) கெங்குரெட்டி சுரங்கப்பாதை-ஈ.வெ.ரா. சாலை சந்திப்பு

11) ஜி.எஸ்.டி. முதல் பிரதான சாலை-அண்ணா சாலை சந்திப்பு

12) மத்திய கைலாஷ் சந்திப்பு.

### 11. பரங்கிமலை - பூவிருந்தமல்லி சாலை மேம்பாட்டு பணி

10 கி.மீ. நீளத்தில் பரங்கிமலை - பூவிருந்தவல்லி சாலையை ரூ. 9.02 கோடி மதிப்பீட்டில் இரண்டு ஆண்டுகளில் மேம்பாடு செய்ய தமிழக அரசு நெடுஞ்சாலைத் துறைக்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் வழிகாட்டும் நிறுவனமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனம் ஆகியவைகளிடமிருந்து இத்திட்டத்திற்கான நிதியுதவியினை பெற்றுத் தரும். அசலும் வட்டியும் சேர்த்து மேற்கண்ட நிதி நிறுவனங்களுக்கு திருப்பிச் செலுத்தும் பொறுப்பினை தமிழக அரசு ஏற்றுக்கொள்ள இசைந்துள்ளது.





### 12. துணிவகைகள் அங்காடி வளாகம்

1,700 கடைகள் உள்ளடக்கிய, துணி வகைகளுக்கான அங்காடி வளாகம் சுமார் ரூபாய் 19.5 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனங்களின் கடனுதவியுடன் கோயம்பேட்டில் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான உருவரைப்படம் மற்றும் திட்டச் செலவுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நான்கு வருடங்களில் இத்திட்டம் முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### 13. சென்னை பூகோள தகவல் அமைப்பு

நகர வளர்ச்சிக்குத் தேவையான முடிவை பூகோள அமைப்பின்படி எடுப்பதற்காக, அண்ணா பல்கலைக்கழகத்தின் மூலம், நிலம் மேலாண்மை சம்பந்தமான தகவல் அமைப்புப் பற்றி, திருமயிலை பகுதிக்கான சிறிய அளவிலான மாதிரி ஆய்வை, ஏனைய நிறுவனங்களான சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் சென்னை தொலைபேசித் துறை போன்ற நிறுவனங்களின் உதவியோடு ஆவண அமைப்பை உருவாக்கி, நில உபயோகம், மனைப் பிரிவுகளின் விபரம், மின் இணைப்பு மற்றும் தொலைபேசிக் கம்பி அமைப்பு, குடிநீர் மற்றும் கழிவுநீர் விவரம் போன்ற விவரங்கள் சேகரித்து கணிப்பொறி மூலம் பெற இந்த ஆய்வறிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசு 1998-99 ஆம் ஆண்டின் இரண்டாம் பகுதி புதிய திட்டமாக ஒப்புதலளித்து ரூபாய் 16.50 இலட்சங்கள் வரவு-செலவுத் திட்டத்தில் மறுபடியும் நேரிடாத மானிய உதவியாகவும் இதற்கிணையான செலவினை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஏற்றுக்கொள்ளவும் அரசு ஆணையிட்டுள்ளது. இதற்குத் தேவையான கணிப்பொறிகளைப் பெற இத்திட்டத்தின் வழிகாட்டும் நிறுவனமான சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### 14. சென்னைப் பெருநகரின் நீர்வழிகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் மேம்பாட்டுத் திட்டம்

சென்னைப் பெருநகரின் நீர் வழிகள் மற்றும் சென்னை நகரத்தின் மழைநீர் வடிகால்களை மேம்படுத்த தமிழக அரசு ரூபாய் 300 கோடிக்கான திட்ட மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் அளித்துள்ளது. இதில்

ரூபாய் 255 கோடி நீர்வழிகளின் மேம்பாடு மற்றும் நீர்வழிகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கும் குடிசைகளை அகற்றி, அக்குடிசைகளில் வாழ்வோருக்கு குடி மறு சீரமைப்பிற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூபாய் 45 கோடி மழைநீர் வடிகால் மேம்பாட்டுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. நீர்வழிகளை மேம்படுத்தும் பணியானது தேவையான இடங்களில் தூர்வாருதல், கால்வாய் அமைப்பைச் சீர் செய்தல், வெள்ளத்தடுப்புச் சுவர்கள்/கரைகள் அமைத்தல், பழுதடைந்த கரைப் பகுதிகளைச் சீரமைத்தல், கரைகளில் மரம் வளர்த்தல் போன்ற பணிகளை பொதுப் பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் செயல்படுத்தும். சென்னை மாநகராட்சி, நகரின் மழைநீர் வடிகால்களை மேம்படுத்துவதும், அவற்றைச் சீரமைப்பதும், புதிதாக வடிகால்களை அமைப்பதும் மற்றும் இதர பணிகளைச் செயல்படுத்தும். இத்திட்டத்திற்காகக் கடனுதவியை வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து பெற்றுத்தர சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பணிக்கப்பட்டுள்ளது. பொதுப்பணித் துறையாலும் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தாலும் நிறைவேற்றப்படும் பணிகளுக்கான கடனை அரசே வட்டியுடன் திருப்பிச் செலுத்தும். மழைநீர் வடிகால் மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்காகப் பெறப்படும் கடனை சென்னை மாநகராட்சி திரும்பச் செலுத்தும். நீர்வழிகளின் ஓரம் வாழ்ந்துவரும் குடிசைவாழ் மக்களின் மறு குடிபெயர்ப்பு மற்றும் மறுவாழ்விற்கு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ரூபாய் 37.50 கோடி செலவில் ஒரு திட்டத்தைத் தயாரித்துச் செயல்படுத்த உள்ளது. பக்கிங்காம் கால்வாய், குசஸ்தலையார் ஆறு, கூவம் ஆறு, அடையாறு ஆறு, வேளச்சேரி கால்வாய், விருகம்பாக்கம்-அரும்பாக்கம் கால்வாய் போன்ற நீர்வழிகளுக்கான திட்ட அறிக்கை இத்திட்டத்திற்காக அமைக்கப்பட்ட தொழில்நுட்பக் கமிட்டியின் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. பொதுப்பணித் துறை சமர்ப்பித்த திட்ட அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு மூன்று தொகுப்புகளாகப் பிரித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்திடம் ரூபாய் 209.56 கோடி கடனாகப் பெற மனு செய்துள்ளது. இத்திட்டப் பணிகள் ஏப்ரல்/மே 1999-ல் தொடங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 15. பள்ளிக்கரணையில் பேருந்து மற்றும் சரக்கு ஊர்தி முனையம்

சென்னை நகரத்தின் வாகன நெரிசலைக் குறைக்க மூன்று பேருந்து மற்றும் சரக்கு ஊர்தி முனையங்கள் நகர்ப்புறத்தையொட்டிய



வெளிப்புறத்திலும் மற்றும் பெரிய ஆரச் சாலைகள் அருகிலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பள்ளிக்கரணையில் சுமார் 44 ஏக்கர் நிலம், இம்முனையத்திற்காக நகரத்தின் தென்பகுதியில் இருந்து வரும் பேருந்து மற்றும் சரக்கு ஊர்திகளுக்கென, தேர்ந்தெடுத்துள்ளது. மேலும், இந்த இடம் வேளச்சேரி - தாம்பரம் சாலை மற்றும் உத்தேசித்த 200 அடி அகலம் கொண்ட சென்னைப் பெருநகரச் சாலை அபிவிருத்திச் சாலையை ஒட்டி அமைந்துள்ளது. மாதவரத்தில் அபிவிருத்தி செய்த சரக்கு ஊர்தி வளாகம் 1996-ல் சரக்கு ஊர்தி உரிமையாளர்களுக்கு ஒதுக்கப்பட்டது. ஒரு முனைப்பு உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டு அரசாங்க நிலத்தின் உரிமையை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு மாற்றிக் கொடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 16. மறைமலைநகர் துணை நகரத்தின் வளர்ச்சித் திட்டம்

மறைமலைநகர் 3,000 ஏக்கர் நிலப்பரப்பில் 20 ஆண்டு கால அளவிற்குள் ஒரு இலட்சம் மக்கள்தொகை கொண்ட பகுதியாக ரூ.31 கோடி மதிப்பீட்டில் 1974 முதல் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. இதுவரை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், 1400 ஏக்கர் நிலத்தை அபிவிருத்தி செய்து, 2,217 குடியிருப்பு மனைகளையும் 363 தொழிற்சாலை மனைகளையும் வளர்ச்சி செய்ததோடு, 2,032 வீடுகளையும் அனைத்து வருவாய்ப் பிரிவினர்களுக்காகவும் கட்டி ஒதுக்கீடு செய்துள்ளது. சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பில் உணவகம், வணிக வளாகம், பள்ளி, கல்லூரி, குடியிருப்புப் பகுதி, அலுவலக வளாகம் இவைகளை உள்ளடக்கிய நகர மையம் ஒன்றை அபிவிருத்தி செய்துள்ளது. வீடு மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் மற்றும் வங்கிகளின் நிதி உதவியுடன் 1999-2000-ம் நிதியாண்டில் குடியிருப்பு மற்றும் தொழிற்சாலைக்காகப் பணிகள் தொடர்ந்து நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

## 17. சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான விரிவான வளர்ச்சித் திட்டங்கள்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமப் பகுதியின் வளர்ச்சி தற்போது சட்டபூர்வமாக அமலில் உள்ள முதலாவது முழுமைத் திட்டத்தின்கீழ் செம்மைப்படுத்தப்பட்டு 50 திட்ட அலகுப் பகுதிகளுக்கு விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயார் செய்து அரசு அங்கீகாரம் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது. அரசு மீதமுள்ள 320 பகுதிகளுக்கு

விரிவு வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்க ரூபாய் 10 இலட்சத்தை வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்து செப்டம்பர் 1996-ல் ஒப்புதல் அளித்துள்ளது. சென்னைப் பெருநகர எல்லைக்குள் ஏற்படும் தீவிர அபிவிருத்தியை வரைமுறைப்படுத்தும் முகமாக சென்னை மாநகரின் விரிவாக்கப் பகுதிகளுக்கும், சுற்றிலுமுள்ள பேரூராட்சிகளுக்கும் முதற்கட்டமாக 26 விரிவு வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கவும், இரண்டாம் கட்டமாக 31 விரிவு வளர்ச்சித் திட்டங்கள் சென்னைப் பெருநகரில் உள்ள நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளுக்குத் தயாரிக்கவும் குழுமம் நவம்பர் 1997-ல் தீர்மானித்துள்ளது. மேற்கூறிய விரிவு வளர்ச்சித் திட்டங்களின் தயாரிப்பு பல்வேறு நிலைகளில் உள்ளன.

## 18. நகர்ப்புற வளர்ச்சிக் கண்காட்சிக் கூடம்

அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கோட்பாட்டை பொது மக்களும் மாணவச் சமுதாயமும் அறிந்து கொண்டு பயன்படத்தக்க வகையில் பெரியார் அறிவியல் தொழிநுட்ப மையம் கோட்டூர்புரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த மையத்திற்கு நாளொன்றுக்கு சுமார் 2,000 பார்வையாளர்கள் வருகை தருகிறார்கள். பொதுமக்களிடையே நகர்ப்புற வளர்ச்சித் துறையில் ஆர்வத்தையும், விழிப்புணர்வையும் உருவாக்கவும், அறிந்து கொள்ளவும் காட்சிகள் மற்றும் காட்சிப் பொருள்களை உள்ளடக்கிய நகர்ப்புற வளர்ச்சிக் கூடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நகர்ப்புற வளர்ச்சிக் கண்காட்சிக் கூடம், வீட்டுவசதி, தொழில், போக்குவரத்து மேலாண்மை மற்றும் தொலைத் தொடர்பு, குடிநீர் அமைப்பு, துப்புறவு, கழிவு நீர் வெளியேற்றுதல், சுகாதாரம், மாசுக்கட்டுப்பாடு மற்றும் வருங்காலச் சென்னை போன்ற எட்டுப் பிரிவுகளை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்படுகிறது. கோட்டூர்புரம், பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளாகத்தில் நகர்ப்புற வளர்ச்சிக் கண்காட்சிக் கூடம் ஒன்றை அரசு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னைக் குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றுதல் வாரியம், சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், நகர் ஊரமைப்பு இயக்ககம் போன்ற துறைகளோடு சேர்ந்து அக்டோபர் 1998-ல் அமைத்து ஒவ்வொரு நிறுவனமும் தலா ரூபாய் 5 இலட்சம் தொகையை பெரியார் தொழில்நுட்ப மையத்திற்குச் செலுத்த வேண்டப்பட்டுள்ளது. இதற்காக மாதிரிகளை உருவாக்கி காட்சிகள் மூலம் வெளிப்படுத்த ஓர் அலுவலகக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.



V211,31N
N99.75.2

## 19. முக்கியமான சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் பெட்டக ஊர்தி முனையம் பற்றிய ஆய்வறிக்கை

சென்னைப் பெருநகரில் உள்ள பெரிய/முக்கியச் சாலைகளை அகலப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை, புதிய உத்திகளைக் கையாண்டு ஆராய்ந்து அரசாங்கத்திற்கு ஒரு வருட காலத்திற்குள் ரூ.10 இலட்சம் செலவில் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இத்திட்டத்திற்கு அரசால் 1997-98 ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இறுதி அறிக்கை இந்நிதியாண்டில் அரசிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

## 20. திரளான துரித போக்குவரத்துத் திட்ட இரயில் நிலையப் பகுதி அபிவிருத்தி

திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலை - 1 சென்னை கடற்கரையிலிருந்து திருமயிலை வரையிலான 8.55 கி.மீ. தொலைவிற்கு முடிக்கப்பட்டு, திட்ட நிலை-2 வளர்ச்சியில் திருமயிலை முதல் வேளச்சேரி வரையில் இந்த மேல் பகுதியை உபயோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. விரிவான ஆய்வு மூலம் தற்போது திருமயிலையில் வணிக உபயோகத்திற்கென தளப் பரப்புக் குறியீட்டின்படி தோராயமாக 1,73,800 சதுர அடி அதிகமாக அபிவிருத்தி செய்யலாம் என கணக்கிடப்பட்டுள்ளது. கலந்தறிதற்குரிய திட்ட அமைப்பாளர்கள், கட்டடக் கலைஞர்கள், பொறியாளர்கள் மற்றும் கலந்தறிதற்குரிய நிறுவனங்கள் ஆகியோரைக் தெரிவு செய்து பட்டியலிடும் பணி நடை பெற்று வருகிறது.

## 21. திரள் துரித இரயில் போக்குவரத்து திட்டப் பாதை அருகில் அபிவிருத்தி ஆய்வு

திரள் துரித இரயில் போக்குவரத்துப் பாதையை முழுமையாகப் பயன்படுத்தத் தேவையான அளவு போக்குவரத்தை உயர்த்த வேண்டும் எனவே, இப்பாதையின் இருமருங்கும் ஒரு கிலோமீட்டர் அளவிற்கு குடியிருப்பு பணி இடங்கள், வியாபார மையங்கள் பொழுதுபோக்கு மையங்கள் போன்றவற்றை மேம்படுத்த ஒரு விரிவான ஆய்வு செய்ய அரசு முடிவு செய்துள்ளது. இந்த ஆய்விற்காக 1999-2000 ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், பகுதி இரண்டு திட்டத்தின்கீழ், ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒஒ

221195

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

## தவணைத்தாள்.

சே. எண் : 221195        ப. எண் :

| வழங்கிய நாள் (1) | திரும்பிய நாள் (2) | வழங்கிய நாள் (1) | திரும்பிய நாள் (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |